

ஆகாயமும்
பூமியுமாய்...
சு.சமுத்திரம்

# ஆகாயமும் பூமியுமாய்...

சு. சமுத்திரம்

ஏகலைவன் பதிப்பகம்

9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.
✆ : 4917594

தலைப்பு : ஆகாயமும் பூமியுமாய்...
(சிறுகதைத் தொகுப்பு)

பதிப்பு : முதல் பதிப்பு, டிசம்பர் - 1999

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 40.00


பக்கங்கள் : 184

வெளியீடு : ஏகலைவன் பதிப்பகம்,
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.
✆ : 4917594

முகப்போவியம் : ஜமால்

ஒளி அச்சு : ஏகலைவன், சென்னை - 41.

அச்சு : பி.கே. ஆப்செட் பிரஸ்,
சென்னை - 600 013.



மண்ணுலகதனில் உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தைக்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்.

- வள்ளலார்

# வாசிப்புக்கு முன்னே...

இது, எனது பதினேழாவது சிறுகதை தொகுப்பு மட்டுமல்ல... மற்ற தொகுப்புக்களிலிருந்து முழுமையாக மாறுபட்ட தொகுப்பு. என்னுள் இளம் வயதிலிருந்தே எழுந்த ஒரு ஆன்மிகத் தேடலை, வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு முயற்சி. இந்தத் தொகுப்பு எனது வழக்கமான வாசகத் தோழர்களுக்கு சிறிது அதிர்ச்சியைக் கொடுக்குமோ என்றுகூட அஞ்சுகிறேன். காரணம், இதிலுள்ள கதைகள் அத்தனையிலும் என்னுள் இன்னொரு பக்கமான ஆன்மீக அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால், நான் அடித்தள மக்களைப் பற்றி இனிமேல் எழுதப்போவதில்லை என்று பொருள் அல்ல. இந்தத் தேடல் முயற்சி அடித்தள மக்களைப் பற்றிய என் எழுத்தை வலுப்படுத்தும் என்று நம்புகிறேன்.

### பிள்ளைப் பிராயம்

சிறுவயதிலிருந்தே, உங்களுக்கும் எழுந்திருப்பதைப் போல் எனக்கும் குழந்தைத்தனமான ஒரு ஆன்மீகத் தேடல் ஏற்பட்டது. எனது அய்யா வழித் தாத்தாவும், அம்மா வழித் தாத்தாவும் காளியம்மா சாமியாடிகள். இவர்கள், இப்போதைய "நைட்டி" மாதிரியான அங்கியை கழுத்து முதல் பாதம் வரை அணிந்து கொண்டும், கையில் வளையல்களை போட்டுக் கொண்டும், சிலரைப் பயமுறுத்தியும், பலரை பரவசப்படுத்தியும், மேளதாளங்களுக்கு ஏற்ப அல்லது வில்லுப்பாட்டாளியின் இசைக்கு ஏற்ப, தீப்பந்தங்களை பிடித்துக் கொண்டு ஆடுவதை பார்த்திருக்கிறேன். என் கரங்களில், இவர்களுக்கு காணிக்கையாக வந்த மிட்டாய்களையும், மொறுக்கு களையும், பயித்தம் பருப்பையும், காளிமார்க் சோடாவையும் என் கையில் திணித்ததும், மிட்டாய் வகையறாக்களை தின்றுவிட்டு அவர்கள் கொடுத்த பாதி சோடாவை குடித்ததும் இன்னும் நினைவில் பசுமையாக உள்ளது. ஆனாலும், இவர்கள் இருவரும் தலை வெட்டப்பட்ட "கிடாய்"யின் ரத்தத்தை தூக்கிக் குடித்தது என்னுள் ஒரு பயங்கரமான நினைவாகப் பதிந்துள்ளது.

கோவில் கொடைகளுக்குப் பிறகு, நானும், இதரச் சிறுவர்களும், வாதமடக்கிக் கம்பை வளைத்து வில்லாக்கி, வில்லுப்பாட்டு

பாடியிருக்கிறோம். வில்லுப்பாட்டாளி வெற்றிக்குமார் அவர்கள் ராமபிரான் கதையையும், முத்துப்பட்டன் கதையையும் பாடும்போது சிலிர்த்து போயிருக்கிறேன். எங்கள் ஊருக்கு அருகேயுள்ள மலையனூரில் பாவைக் கூத்து நாடகம், மாதக் கணக்கில் நடந்ததை நாள் தவறாது பார்த்திருக்கிறேன். பெரும்பாலும் இவை ராமாயணக் காட்சிகள். இன்னும் மனதில் பதிந்து நிற்பவை.

### வழியனுப்பு

இந்த அனுபவங்களுக்குப் பிறகு, ஊர்க் கச்சேரியிலும், பெரிய விட்டுத் திண்ணைகளிலும், நல்லதங்காள் கதை, பஞ்சபாண்டவர் வனவாசம் போன்றவற்றை, ராகம் போட்டு பாடியிருக்கிறேன். என்னைச் சுற்றி ஒரு பெரிய கூட்டமே இருக்கும். எல்லா கிராமங்களையும் போல, எங்கள் கிராமத்திலும் ஒரு பழக்கம். சில பெரியவர்கள் மரணப் படுக்கையில் கிடக்கும்போது அவர்களுக்கு உயிர் உடனடியாய் பிரியாது. அவரது சொக்காரர்கள் எனப்படும் பங்காளிகளுக்கோ, இவரது ஈமக்காரியத்தில் கலந்து கொள்ளாமல் வயல் வேலைக்குப் போக முடியாது. இந்த அன்றாடம் காய்ச்சிகளின் பிரச்சனையை ஒரு முடிவுக்கு கொண்டுவர, நோய்வாய்ப் பட்டிருக்கும் பெரியவரின் தலைமாட்டிலிருந்து, தர்மர் சொர்க்கத்திற்கு போன கதையை ராகம் போட்டு படிக்கவேண்டும். தயவுசெய்து நம்புங்கள். தர்மர் சொர்க்கத்திற்கு போய்விட்டார் என்ற உடனேயே இந்தப் பெரியவர்களின் மூச்சு அடங்கிப்போகும். நானும், பல பெரியவர்கள் தலைமாட்டில் உட்கார்ந்து இத்தகைய சொர்க்கப் பாடல்களை பாடி, பலரை வழியனுப்பி வைத்திருக்கிறேன்.

இந்த கோவில்களையும், பாடல்களையும் தாண்டி, எள்ளுப்பொடி, தோசையுடன் என் பாட்டியோடு குற்றாலம் போயிருக்கிறேன். அங்கே உள்ள குற்றால நாதரான சுயம்பு லிங்கத்தை ஒப்புக்கு கையெடுத்து கும்பிட்டதோடு சரி. அப்போது எனக்கு, என் குலதெய்வமான உதிரமாடனே இந்த சுயம்பு லிங்கத்தை விடப் பெரியவன்.

### கல்லூரிக் காலத்தில்...

கல்லூரிப் படிப்பு கிராமத்துத் தேவதைகளையும், ஆறுகால பூஜைக்குரிய மேட்டுக்குடி தெய்வங்களையும் மறக்க வைத்தது.

இன்னும் சொல்லப் போனால் ரத்தம் குடிக்கும் கிராமத்துத் தேவதைகளை, அறவே வெறுத்தேன்.

என்றாலும், கல்லூரியில் படிக்கும்போது ஒரு கட்டத்திலேயே தேங்கிப்போன சில சித்தர்களோடு, எனக்கு பழக்கம் ஏற்பட்டது. இதனால், நம்மை மீறிய அதீத சக்திகள் பல்வேறு கூறுகளாக இருக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இந்த அதீத சக்திகள்கூட எதிர்வரும் 21-ம் நூற்றாண்டில், விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படலாம். இப்போதே, நமது உயிரணுவில் உள்ள 23 குரோமோசோம்களில் நான்கு கோடியே பத்து இலட்சத்திற்கும் அதிகமான கேரக்டர்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்த குரோமோசோம்களை, அணுவை பிளப்பதுபோல், பிளக்க முடியும் என்று கருதப்படுகிறது. இந்த கேரக்டர்கள் எனப்படும் இயல்புகள் நமது முன்னோர்கள் வழியாக நமக்கு வந்திருக்கும் பல்வேறு விதமான நடத்தைகள், உணர்வுகள், உளப்பாங்குகள் ஆகியவற்றின் பதிவுகளாகவும், இயற்கையின் வழங்கும் மனிதப் பரிணாம வளர்ச்சிப் பதிவுகளாகவும் இருக்கலாம்.

## பிறப்பும் இறப்பும்

பிறப்பு என்பது ஒரு மர்மம் இல்லை. இதேபோல் இறப்பும் ஒரு மர்மம் இல்லை. ஆனால், இந்த இரண்டிற்கும் இடையே ஒரு மர்மம் உள்ளது. இதனால்தான், "ஒரு தாய், பால் குடிக்கும் தனது குழந்தையை ஒரு முலையிலிருந்து, இன்னொரு முலைக்கு மாற்றும் இடைவெளியே மரணம்" என்றார் மகாகவி தாகூர். மரணத்திற்குப் பிறகு எதாவது நிகழுமா? அல்லது நிகழாதா? அப்படி நிகழ்ந்தால் அது எப்படி இருக்கும்? என்று நினைப்பதே ஒரு ஆன்மீகத் தேடல்தான். கண்டவர் விண்டதில்லை; விண்டவர் கண்டதில்லை என்பதால், ஒவ்வொருவரும் தனக்கு ஏற்படப்போகும் மரணத்திற்குப் பின்னான புதிரை கண்டறிய முயற்சிக்கின்றனர். சக்தியை மாற்ற முடியுமே, தவிர அழிக்க முடியாது என்பது விஞ்ஞான விதி. இது மனித உடலுக்கும், அதன் இயக்கத்திற்கும் பொருத்தமாகக்கூட இருக்கலாம்.

இந்தப் பின்னணியில் என்னுடைய கதைகளை வாசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எந்தக் கால கட்டத்தில் எழுதினேன் என்பதையும் நினைவில் வைத்துக்

கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த உலகம் உண்மை. இங்குள்ள மக்கள் உண்மை. இவர்களின் தலைவிதியை சமூக அமைப்புதான் தீர்மானிக்கும்; தீர்மானிக்க வேண்டும் என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஆகையால், இவை என் இயல்பான முற்போக்கு எழுத்திற்கு முரணனானது அல்ல என்று நம்புகிறேன். எனது ஆன்மீகத் தேடல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதும் போலித்தனமற்ற ஒரு முற்போக்கு முயற்சி என்றே கருதுகிறேன்.

**பெரியவர் கே.எம். அவர்களின் பார்வையில்...**

இன்னும் எனக்கு நன்றாகவே நினைவிருக்கிறது. பத்து பனிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கூட்டம், என்னை செம்மலரில் வார்த்தெடுத்த பெரியவர் கே.எம். முத்தையா தலைமையில் நடைபெற்றது. நானும் பேச்சாளனாக அழைக்கப்பட்டேன். பேசுவதற்கு முன்பு திருவண்ணாமலை கோவிலுக்குச் சென்று, நெற்றியில் குங்குமத்துடன் வந்தேன். உடனே கேம்.எம். அவர்கள் சூதுவாது இல்லாமல், 'நெற்றியில் என்ன ரத்தம்' என்று கேட்டார். நான் விளக்கினேன். அவர், உடனே "இது உங்கள் தனிநபர் உரிமை" என்றார் பெருந் தன்மையாக. இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், நான் நினைத்திருந்தால் முகம் கழுவி குங்குமத்தை அழித்துவிட்டு, கோயில் குளத்திற்குப் போகாத அந்த கூட்டத்திற்கு போயிருக்கலாம். அந்தப் போலித்தனம் எனக்கு அப்போதும் கிடையாது, இப்போதும் கிடையாது.

சிவபெருமான் காளை வாகனத்தில் அமர்ந்திருப்பது. விஷ்ணு கருடனில் பறப்பது. முருகன்மயிலில் ஆடுவது. கன்னிமேரி மீது பரிசுத்த ஆவி படர்ந்தது போன்ற புராண நம்பிக்கைகளை நான் நம்பவில்லை. அதேசமயம் ஆலயங்களும், சர்ச்சுகளும், மசூதிகளும், குருதுவாராக்களும், தியானங்களும், யோகங்களும், ஒரு புதிர் கணக்கிற்கு விடையாக இருக்கலாம். "அல்ஜீப்ரா" கணக்கில், ஒரு பொருளின் விலையை "எக்ஸ்" என்றும், அதோடு சேர்ந்து வாங்கப் பட்ட இன்னொரு பொருளின் விலையை "ஒய்" என்றும் வைத்துக் கொண்டு, அந்தப் பொருள்களின் தனித்தனி விலையை கண்டு பிடிப்பது போன்றது இந்த ஆலய வகையறாக்கள். இன்னும்

எளிமையாக சொல்லப்போனால் ஒரு சாதாரண பெண்ணிற்கு தொலைக்காட்சியின் விஞ்ஞான சூட்சமம் தெரியாது. அதே சமயம் ரிமோட் கண்ட்ரோல் கருவியில், 'இந்த' நம்பரை அழுத்தினால் 'அந்த' தொலைக்காட்சி நிகழ்ச்சி வரும் என்று தெரியும். அந்தத்தாய் எப்படி தாத்பரியங்கள் தடங்கல் ஆகாமல் காட்சிகளை பார்ப்பது போன்றதுதான், எனக்கு ஆன்மீகத் தேடலில் கிடைக்கும் இனிமையும், எளிமையும். இதை விளக்கித்தான் விட்டுக் கணக்கும் ஆகாயக் கணக்கும் என்ற சிறுகதையை எழுதினேன்.

நான் தேடுவது ஆன்மீகத் தேடலா அல்லது ஒரு விதமான மனோ மாயையா, என்பது எனக்கே இன்னும் பிடிபடவில்லை. ஆகையால்தான் பனிப்போர் என்ற சிறுகதையை முதல் கதையாக பதிவு செய்திருக்கிறேன்.

### சு.பொ. அகத்தியலிங்கமும், திலீப்குமாரும்...

பெரும்பாலும் இந்தக் கதைகள் பல்வேறு காலக் கட்டங்களில் ஒரு மாறுதலுக்காக எழுதப்பட்டவை. இவற்றிற்கு அடிப்படை பெரும்பாலும் எனது ஆன்மீக அனுபவங்களே. சதங்கையில் வெளியான விட்டுக் கணக்கும் ஆகாயக் கணக்கும் என்ற சிறுகதையை படித்த சீரிய எழுத்தாளர் திலீப்குமார் அவர்கள், அந்த கதையை பாராட்டியதோடு, இதைப் போன்ற வித்தியாசமான கதைகளை ஒரு தொகுப்பாக கொண்டு வரவேண்டும் என்று பரிந்துரைத்தார். அந்த பரிந்துரைப்பின் வெளிப்பாடே இந்த சிறுகதைத் தொகுப்பு.

ஆன்மீகத் தளத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம் ஏற்படலாம். ஏற்படாமலும் இருக்கலாம். இத்தகைய தனிப்பட்ட அனுபவங்களை, வாசகர்கள் மீது அப்படியே சுமத்துவது நியாயம் அல்ல. சிலசமயம் அனுபவங்கள் மூடநம்பிக்கைகள் போல் தோன்றும். ஒருவேளை அப்படி கூட இருக்கலாம். ஆகையால், இந்தத் தொகுப்பில் தள்ள வேண்டியவை, கொள்ள வேண்டியவை ஆகியவை பற்றி பரிந்துரைக்கும்படி எனது பல்லாண்டு கால இனிய தோழரும், தீக்கதிர் பொறுப்பாசிரியருமான தோழர் சு.போ. அகத்தியலிங்கம் அவர்களிடம் இந்தத் தொகுப்பை கொப்புக் குழைகளோடு கொடுத்தேன். அவர் எவற்றை எல்லாம் வெட்டும்படி கோடிட்டு காட்டினாரோ அவற்றில் சுமார் 90 சதவித பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொண்டேன்.

### கண் முன்னாலேயே

அதேசமயம் அவர் எடுக்கச் சொன்ன மூன்று கதைகளில் ஒன்றான ரசவாதம் என்கிற கதையை மட்டும் எடுக்கவில்லை. காரணம் ஒரு காலம்வரை, செம்பு உலோகத்தை தங்கமாக, மாற்றுவதை, சித்தர் பாணியில் ரசவாதம் என்பார்கள். எனக்குத் தெரிந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பு, இதே சென்னையில் ஒருவர் செம்புக் கட்டியை, தங்கக் கட்டியாக மாற்றுவதற்கு சாமியார் சாமியாராக அலைந்து, இறுதியில் மனநோய்க்கு ஆளானார். பல சித்த நூல்களை ஓரளவு படித்த எனக்கு ரசவாதம் என்பது, ராமர் பிள்ளையின் மூலிகைப் பெட்ரோல் போன்றது. திரவப் பொருளான பாதரசத்தின் மீது ஒரு மூலிகைச் சாறை ஊற்றி அதை மணியாக்கி காட்டியதையும் கண்டிருக்கிறேன். "ஆடுகின்ற அரவுமீது ஒடு ரசம் வார்த்து" என்ற ஒரு வரியை ஒரு நவீன சித்தர் என்னிடம் பாடிக் காட்டினார். பொருள் கேட்டபோது, போடா "பொ" என்றார்.

அன்று காளியம்மா சாமியாடி ஆட்டுக்கடாய் ரத்தத்தை குடிப்பதை பக்திப் பரவசத்தோடு பார்த்த நான், இன்றோ எல்லாவற்றிற்கும் மூலமாக வள்ளலார் சொல்லும் அருட்பெருஞ்ஜோதி - அதாவது இந்த பிரபஞ்சத்தையே ஆராதிக்கும் கட்டத்திற்கு வந்திருக்கிறேன். நாளை, எந்த கட்டத்திற்குப் போகப் போகிறேனோ? காரணம், ஆன்மீகத் தேடல்களும், விஞ்ஞான மெய்ப்பாடுகளை சார்ந்தே நிற்கின்றன. அதே சமயம் மக்களா? கடவுளா? என்ற கட்டாயம் ஏற்பட்டால் நான் மக்கள் பக்கம். என்றாலும் கடவுள் என்ற தத்துவத்திற்கும், வேர்வை சிந்தும் அப்பாவி பாட்டாளி வர்க்கத்திற்கும் எந்த மாறுபாடும் இல்லை என்றே கருதுகிறேன்.

இந்தத் தொகுப்பில் வராத ஒரு கருத்தையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள கடடைப்பட்டிருக்கிறனே். மேட்டுக்குடி, தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்களை ஆடு, கோழி பலியிடுதல், சாமியாடுதல், தீ மிதித்தல் போன்ற பாமரச் செயல்களில் வரலாற்று ரீதியாக ஒருவித வஞ்சனையோடு ஈடுபடுத்தி இருக்கிறது. கோவில்களில் ஆடு, கோழி, பன்றி முதலியவற்றை வெட்டி கிராமத்துத் தேவதைகளுக்கு, ரத்தமும்-சோறுமாக படைக்கும் இந்த வகை மக்கள், சண்டை என்று வந்தாலும் தங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் ஆடு, கோழி, பன்றியை வெட்டுவது போல வெட்டிக்

கொள்கிறார்கள். இதனால்தான் முதல்வர் **கலைஞர்** அவர்கள் தீ மிதிப்பது காட்டுமிராண்டித் தனம் என்று குறிப்பிட்டார். உடனே, மதவாதிகள் வெகுண்டெழுந்ததை அறிவோம். இவர்களுக்கு இந்த மக்கள் ஆன்மீகத் தளத்தின் மேலெழாமல் அப்படியே அடிமண்டியாக கிடக்கவேண்டும் என்கிற ஆசை. இவர்களின் இந்த ஆசையை நிராசையாக்க வேண்டியது நமது கடமை. நமது மக்களை இத்தகைய பக்தி வெளிப்பாடுகளான பைத்தியக்காரத் தனங்களில் இருந்து விடுவித்தாக வேண்டும். இதற்காகத்தான் வள்ளலார் மக்கள் நேயப் பேரவை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். இது வளர்ந்து வளர்ந்து மக்கள் மத்தியில் செயல்படுவதற்கு வாசகர்கள் வாய்ச்சொல் அருளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொகுப்பு சிறப்பாக வந்திருந்தால் அதற்கு தோழர்கள் அகத்தியலிங்கமும், திலீப்குமாரும் பொறுப்பாவார்கள். தவறாக வந்திருந்தால் அதற்குப் பொறுப்பு நான்; நான் மட்டுமே.

இந்தத் தொகுப்புக்கு சிறப்பான முகப்போவியம் வரைந்த ஓவியர் ஜமாலுக்கும், இதை செம்மையாக அச்சிட்டுக் கொடுத்த பதிப்புச் செம்மல் முனைவர் சா. மெய்யப்பன் அவர்களுக்கும், அவரது பதிப்பகத்தின் நிர்வாகிகளான திருவாளர்கள் சோமு, குருமூர்த்தி உள்ளிட்ட தோழர்களுக்கும், என்னை விடாமல் நிலைநிறுத்தும் வாசகப் பெருமக்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

தோழமையுடன்,

சு. சமுத்திரம்

# உள்ளடக்கம்


1. பனிப்போர் ........................................ 1
2. திடப்பட்டவள் ........................................ 12
3. ரசவாதம் ........................................ 20
4. தோன்றாத் துணை ........................................ 28
5. ஆகாயமும் பூமியுமாய்... ........................................ 41
6. பக்த கேடிகள் ........................................ 56
7. அப்பரும்-அப்பாவும் ........................................ 71
8. வாடாத பயிர் ........................................ 84
9. நித்திய பாலன் ........................................ 99
10. அன்னையை மறைத்த சிலை ........................................ 116
11. உபதேசம் ........................................ 126
12. அம்மாவைத் தேடி... ........................................ 134
13. வீட்டுக் கணக்கும்... ஆகாயக் கணக்கும்... ........................................ 140
14. ஒன்றிப்பு ........................................ 159

# பனிப்போர்

அன்று இரவு, எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காரணம், என்னவென்றும் சொல்லத் தெரியவில்லை

இப்போது தூக்கத்திற்கே என்னைப் பிடிக்கிறது. ஆனால் எனக்குத்தான் இந்தத் தூக்கத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை. தூங்கக்கூடாது என்று ஒரு எண்ணம் தூக்கத்தின் மீது ஒரு எரிச்சல். என்ன வந்தது எனக்கு?

இந்தப் பூமியில் விழுந்த அந்த நாளிலிருந்து, இதோ இப்போது எழுந்து நிற்கும் இந்த நாள் வரை நானும் தூக்கமும் கடும் சினேகிதர்கள். கடும் சிநேகிதம் கண்ணைக் கெடுக்கும் என்பது போல் ஆகிவிட்டதா? தூங்குகிற ஒரு காரியத்தை மட்டும்தான் நான் உருப்படியாய் செய்ததாய் அந்தக் காலத்தில் அம்மாவும், இந்தக் காலத்தில் 'அவளும்' சொன்னதுண்டு, சொல்வதுண்டு; அடர்ந்த முடியும் படர்ந்த முகமும், சர்க்கரை வள்ளிக்கிழங்கின் நிறமும் கொண்ட என் அம்மா, காதுகளில் பாம்படங்கள் ஊஞ்சலாட பள்ளிக்கூட மணியடிக்கிற சப்தம் கேட்டு என்னை உசுப்புவாள். பிறகு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் ஊற்றுவாள். அப்படியும் நான் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு, தன் முந்தானையால் என் முகத்தைத் துடைத்து விடுவாள்.

அம்மா சொல்லித்தான் பொழுது விடிவது எனக்குத் தெரியும். ஆனாலும், சின்ன வயசிலேயே நிரந்தரத் தூக்கமான என் அம்மாவை நினைக்கும்போதெல்லாம்,

இடம் தெரியாத ஒரு இடத்திலிருந்து, உருவம் தெரியாத ஒரு சுகச் சோகமான தென்றல் முகத்தை வருடிக் கொடுக்கிறது. கண்களை ஈரப்படுத்துகிறது. இதை ஒரு தடவை என்னுடைய சைக்யாட்ரிஸ்ட் மைத்துனரிடம் விளையாட்டாகச் சொன்னபோது, அவனோ, "அம்மாவின் பிரிவு உங்கள் அடி மனதில் தேங்கி உங்களுக்கு 'ஃபீலிங்க் ஆப் இன்செக்கூரிட்டி' - அதாவது பயப்பிரமையை ஏற்படுத்தியிருக்கிறது" என்றான். நான் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே, அவனை பயமுறுத்துவது போல் பார்ப்பேன். பக்கத்தின் நின்ற மனைவிகூட 'இவரா பயப்படுறவரு?..... நம்ம பயமுறுத்தாம இருந்தா சரிதான்' என்றாள்.

இந்தக் கடந்த கால நினைப்போடு நின்ற எனக்கு, தலை தரையில் விழுவது போல் துடித்தது: தூங்க வேண்டுமென்று உடல் தன்னை வளைத்துக் கொண்டது. ஆனால், உள்ளமோ தூங்கக்கூடாது என்று என்னுள்ளே சொல்லிச் சொல்லி உடம்பை நிமிர்த்தியது.

படுத்த உடனே, தூங்கக்கூடியவன் நான். என் மனைவி கூட 'ராமாயணத்துல ராமபிரான் வில்ல ஒடிச்சதுதான் தெரியும். எடுத்தது தெரியாதுன்'னு கம்பன் சொன்னது மாதிரி 'நீங்க தூங்குறதுதான் தெரியுது. படுக்கையில விழுகிறது தெரியல. என்ன ஜென்மமோ' என்பாள். நான் தூக்கத்தில் புரள்வதை தப்பாக நினைத்துக்கொண்டு, 'நான் ஒன்றும் தப்பான அர்த்தத்துல சொல்லலே' என்று தோளில் கையைப் போட்டுக் கொண்டு அவள் சொல்வது லேசாய் ஒலிக்கும். ஆனாலும் இந்த தூக்க சுகத்தை விட, அந்த 'சுகம்' எனக்கு பெரிதாய் பட்டதில்லை. அதை ஈடுகட்ட பகலில் அவளிடம் பல்லைக் காட்டுவேன். அவள் பார்க்கும் பார்வையிலேயே வாயை மூடிக்கொள்வேன். இல்லையானால் அந்தப் பற்களை அவளே கிள்ளியெறிந்து வெளியே போட்டிருப்பாள். அப்படிப்பட்ட எனக்கு,

இன்றைக்கு தூக்கம் வந்தாலும் அதை வரவிடக்கூடாது என்று ஒரு வைராக்கியம். காரணம் என்னவாக இருக்கும்?

அந்தப் படுக்கையறையில் அப்படியே அசைவற்றிருந்த நான், அந்த அமாவசை இருட்டில் மங்கிய பச்சை பல்பின் ஒளி, அவள் சிவப்பு முகத்தில் சிந்தி ஒரு அதிசய கலவை நிறத்தை - சிவப்பு வட்டத்திற்கு பச்சை வேலி போட்டது போல் காட்டியதுண்டு. சில வேளைகளில், என் மனைவி என் காதுகளை திருகி, கண்ணிமைகளை நிமிர்த்தி, இறுதியில் மூக்கையும் வாயையும் தனது உள்ளங்கையால் ஒரு சேர அடைத்து என்னை விழிக்கச் செய்து, முகத்தில் முகம் போடுவாள். அந்த மாதிரி அத்திப்பூ சந்தப்பங்களில் அவள், அழகு தேவதைய்ாய் தோன்றுவாள். அவளின் பிரிந்த உதடுகள் அற்புதத் புன்னகையோடு கோடு காட்டும். ஆனால், இப்போது தூங்கிக் கொண்டிருக்கும் அவளைப் பார்க்க என்னவோ போலிருந்தது. செத்துப் போனவள் போல், வாய் பிளந்திருந்தது. ஒரு காலை செங்குத்தாய் தூக்கி, மறுகாலை, முப்பது டிகிரியில் சாய்த்து அசிங்கம் அசிங்கமாய்..... அதுவும் உருமி மேளம் மாதிரியான குறட்டை..... என் பார்வை கூட தாளமாட்டாது மார்பகத்தை முந்தானையால் மூடிக் கொள்கிறவள், இப்போது..... இதையெல்லாம் சொல்லப் படாது.... அவள் திருக்கோலத்தை இந்தத் தூக்கம் அலங்கோலமாக்கி விட்டது. தூக்கம் உயிரினத்தை மூச்சை முடிக்காமலே, பிணமாக்கும், எமதூதன். வருவதை உரைக்கும் ஆருடம். இந்தத் தூக்கம் எனக்கு வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

நான் படுக்கை அறையிலிருந்து வெளிப்பட்டேன். கூடத்தில் அங்குமிங்குமாய் நடமாடினேன். பிறகு எதிர்த்திசையில் சுவரோடு சுவராக இருந்த அதே நிறத்தில், இருந்த கதவை தள்ளிக்கொண்டு, உள்ளே போனேன். அங்கே என் மகள் 'பிளஸ் டூ' மீனா, மேவாயையும் முன்

தலையையும் படுக்கையில் மறைத்து குப்புறக் கிடக்கிறாள் பாவாடை தாவணியானாலும், சர்வார்கமீஸானாலும் சரி, தன்னாலேயே அவை அழகுபடுகின்றன என்ற தோரணை காட்டும் அவள், இப்போது இரு கண்களிலும் ஊளை பிரள, உதட்டோரங்களின் இரு பக்கமும் எச்சில் கோடுகள் செதில் செதிலாக அருவருப்பாய் கிடக்கிறாள் அவள் பக்கத்துப் படுக்கையில் படுத்திருக்கும் எனது மகன் முள்ளம்பன்றி மாதிரி உடம்பைச் சுருக்கிக் கொண்டு கிடக்கிறான். மூக்கு ஒழுகிறது..... ஏறும்போதும் இறங்கும் போதும் ஒவ்வொரு படியாய் துள்ளிக் குதிக்கும் என் மகன் பல திரைப் படங்களைப் பார்த்ததாலோ என்னவோ, ஸ்லோமோஷனில் ஓடுவது போல் நடந்தும், நடப்பது போல் ஓடியும் அழகு காட்டும், என் மகனை இந்தக் தூக்கம் இப்படி தற்காலிக பிணமாக்கிவிட்டது.

என்னால் தாள முடியவில்லை. அவர்களை எழுப்பி விடப்போனேன். மகள், மகனையும், மகன் மகளையும் தூக்கத் தொல்லைகளாக நினைத்து கண்களை மூடிக் கொண்டே ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டார்கள். அவர்களை அந்தக் கோலத்தில் பார்க்க மனமில்லாமல், வெளியே பால்கனி பக்கம் வந்தேன். மார்பளவு உயர்ந்த இரும்பு கிராதிகளின் மேல் உடம்பு வளைத்துப் போட்டுக் கொண்டு அந்த தெருவை கீழ் நோக்கி பார்த்தேன். ஒரே இருள் மயம். தெருவோர கார்ப்பரேஷன் விளக்குகள் எலும்புக்கூட்டிற்கு மேல் கண்ணாடித் தோல் போர்த்தப் பட்டு லேசு லேசான வெள்ளையாய் தோன்றின. ஆனாலும், அவற்றையும் தூக்கம் பிடித்துக் கொண்டது. உள்ளே ஒளியில்லை. வெளியே வியாபித்த இருட்டுக்கு அது பயந்து விட்டது. எல்லாம் இந்தத் தூக்கமே காரணம். தூங்காமைதான் ஆன்மாவுக்கு அழகு சேர்ப்பது.

எனக்(கு) ஏனோ அங்கு நிலவிய இருள் பிடித்தது. இருளா அல்லது இருட்டா? இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. பகலின் நிழல், இருள்; சூரியனின் சடலம் இருட்டு. எதுவோ.... எனக்கு இந்த இருள் பிடிக்கிறது. இந்த

இருளுக்குள் ஒரு ஒளியைக் காண்கிறேன். நான் தூங்கமாட்டேன். நாம் ஏன் தூங்கக்கூடாது? அசையும் பொருள், அசையாப் பொருள் அத்தனையும் தூங்கும் போது, எதிரே உள்ள வீடுகளை முழுமையாக மறைத்து இருள் மயமாய் தோன்றும் தாவர சங்கமம் அசையும் நிலையிலிருந்து அசையா நிலைக்குச் சென்று தூங்கும் போது, நான் ஏன் தூங்கக்கூடாது? ஏனோ? எதுவோ?

நான் லேசாய் பயந்து போனேன். ஆனாலும் 'தூங்காதே, தூங்காதே' என்று என்னுள்ளே ஏதோ ஒன்று சொல்லச் சொல்ல, நானும் எனக்குள்ளே அப்படி திருப்பிச் சொல்லிக் கொண்டேன். கண்களைத் திறந்து வைத்து தூக்கத்தை வழிமறித்தேன்.

அந்த அந்தகார இருளில், நிசப்தமே சப்தமாகியது. புறத்தில் ஏற்பட்ட அசைவின்மை, அகத்தை அசைவித்தது. ஏதோ ஒன்றுடன்-இருளுக்கும் ஒளிக்கும் அப்பாற்பட்ட ஒன்றில் ஐக்கியமானது போன்ற நினைப்பு..... அந்த இருட்டே ஒளியானது போன்ற எண்ணம். தனித்துப் போவதை நினைவூட்டும் தனிமை. அதுவே அங்கும் இங்கும், எங்குமாய், ஏகமாய், அநேகமாய், பிரகாசிக்கிறது. தலையில் உட்பக்கம் ஒரு குகையாகிறது. உச்சியில் ஒரு ஒளி. அந்த ஒளி வெள்ளத்தில் பிரபஞ்சம். நட்சத்திரக் குவியல்கள், அண்ட அடுக்குகள்.... பேரடுக்குள்.... நான் நிரந்தரம் என்ற ஒரு பூரிப்பு..... இருள் ஒளியாகவும், ஒளியை இருளாகவும் பார்த்துப் பழக வேண்டும் என்ற ஒரு தத்துவச் சிந்தனை..... தனிமையிலேயே, ஒரு தனித்துவம். நிரந்தரத்தைப் பற்றிய நினைப்பு. கூடவே ஒரு பயம்...... நான் ஏன் தூங்கக்கூடாது? இப்படி இருப்பதே ஒரு நிரந்தரம் என்றால்..... இது ஒரு நரகமாகாதோ?

எனக்கு லேசாய் பயம் பிடித்தது. வாழ்ந்தது தற்காலிகம். வாழப் போவது நிரந்தரம் என்ற எண்ணம்..... வாழ்வுமில்லை. வாழப் போவதுமில்லை என்ற சிந்தனைச் சிக்கல். அது, உள்ளத்தைப் பின்னப் பின்ன, அந்தப்

பின்னலை பிரிக்கும் முயற்சியாக சிந்தையனையைத் திசை திருப்ப முயற்சித்தேன். எனது அலுவலக தனியறைக்குள் மானசீகமாக நுழைந்தேன். அன்று பகலில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. நான் என் அறைக்குள் நுழையும்போது, வெளியே உள்ள ஊழியர்கள் எனது அறையை உற்றுப் பார்த்து விட்டு என்னைப் பார்க்கிறார்கள். லேசாய் சிரிக்கிறார்கள் நான் உள்ளே நுழைந்தால், நான் மகளாய் நேசிக்கும் என் அந்தரங்க உதவியாளிப் பெண் 'அந்தப் பித்துக்குளி இன்னும் வரலை. அது இருந்தா இப்படிப் பேச முடியுமா' என்று டெலிபோனில் பேசிக்கொண்டிருக்கிறாள். என்னைப் பார்த்ததும் டெலிபோனை தொப்பென்று மேஜையில் போட்டுவிட்டு, பேச்சற்று மூச்சற்று வெளியேறுகிறாள். எனக்கு லேசாய் கோபம் வருகிறது. ஆனாலும் சிரித்துக் கொள்கிறேன். அவளின் அநாகரீகத்திற்கு, நான் அநாகரீகத்திலேயே பதில் அளிக்கக்கூடாது என்று உறுதியாக இருக்கிறேன். அதோடு, சின்ன வயதில் அம்மா என்னை தவிக்கவிட்டுச் சென்ற நாளிலிருந்து இத்தகைய அவமானங்கள் எனக்கு அத்துபடி. ஆனாலும் மனசு ஏனோ கேட்கவில்லை. இந்தச் சமயத்தில் எனது இன்னொரு உதவியாளர் மாரிமுத்து உள்ளே வந்தான். எடுத்த எடுப்பிலேயே என்னைச் செல்லமாக இப்படி திட்டினான்.

"என்ன ஸார் அநியாயம்? உங்க காதுபடவே இந்த பத்தினித்தங்கம் இப்படி பேசிட்டுப் போவுது..... நீங்க, அவளை இன்னும் விட்டு வச்சிருக்கீங்களே..... உங்க இடத்தில் நான் மட்டும் இருந்தால், இந்நேரம் அவள் சீட்டைக் கிழிச்சிருப்பேன். அதைக் கிழிக்கிறதுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கு..... ஒரு வார்த்தை சொல்லுங்க. நான் பார்த்துக்கறேன்.... ஏன் சார் இப்படி சிரிக்கிறீங்க? உங்களுக்கு நீங்களே இப்படி கண்டிப்பா இருக்கிற மாதிரி, பிறத்தியார் கிட்டேயும் கண்டிப்பா இருக்காவிட்டால், அந்தக் கண்டிப்பு ஒரு நடிப்பாயிடும்.

சிறுமை வரும்போதெல்லாம் அப்பப்ப வெடிக்கணும். மனசில இருக்கிற வெடிகளை வாய் வழியா விடணும். இல்லேன்னா ஒரேயடியா வெடிச்சுப் போயிடுவோம்....”

நான் அசட்டையாய் இருப்பதைப் பார்த்துவிட்டு, அவன் போய்விட்டான். அவன் வாய் முனங்கியது. ஒருவேளை, அவள் எனக்கு கேட்கும்படி பேசியதை, இவன் மீண்டும் உறுதிப்படுத்துகிறானோ என்னவோ? மனம் சங்கடப்பட்டது. அனைவரையும் சமமாக பாவிக்கும் என்னைப் பற்றிய அவனது மதிப்பீடு என்னை எனக்குள்ளே தாழ்த்திக் கொண்டே இருந்தது. இப்படித்தான் அம்மா இறந்த சமயத்தில் வாத்தியார் ‘ஏ.சி.சி.ல சேர விரும்புகிறவங்கல்லாம், எழுந்திருங்க’ என்றார். நான் மற்ற மாணவர்களோடு எழுந்தேன். உடனே பக்கத்தில இருந்த டிரில் மாஸ்டர் ‘உன் உடம்பு தாளாது.... உட்காருடா’ என்றார். நான் கூனிக் குறுகி உட்கார்ந்தேன். இப்போது ஏனோ எனக்கு அந்த நினைப்பு வந்தது.

நான் சிறுமை கண்டு தவித்தபோது, கடைநிலை ஊழியனான கண்ணன் உள்ளே வந்தான். நான் முகத்தை கேள்வியாக்கிய போது, ‘ஸார்...... வீட்டிலே சொகமில்லே.... பிள்ளைத்தாய்ச்சி..... சிசேரியன்ல முடியுமோ என்னமோ.... டெலிபோன் வந்தது.... கொஞ்சம் பெர்மிஷன்’ என்று இழுத்தான். உடனே நான் பதைபதைத்து இருக்கையிலிருந்து எழுந்தபடியே ‘உடனே டாக்டரன்டே கட்டிட்டுப்போ..... பணம் தேவையா’ என்று கேட்டுவிட்டு, மீண்டும் அவனைப் பார்த்தபடியே உட்கார்ந்தேன். அவனோ எனக்கு ஒண்ணும் வேணாம் ஸார்.... என் வீட்டுக்காரிக்கு சுகப்பிரசவம் ஆகணும்னு கடவுள வேண்டிக்குங்க.... நீங்க என்ன வேண்டினாலும் அது நடக்கும். போன தடவை என் தம்பிக்கு வந்த இன்டர்வியூ பற்றி உங்ககிட்ட சொன்னேன். நீங்க ஆசீர்வாதம் செய்தீங்க... அதனாலேயே எந்த சிபார்சும் இல்லாமலே அந்த வேலை அவனுக்கு கிடைச்சுது பாருங்க.... நீங்க அனுமான் மாதிரி.... உங்க சக்தி உங்களுக்குத் தெரியாது......

என் அறையை விட்டுப் போகும் அவனை ராமபிரானைப் பார்ப்பது போல் பார்த்தேன். என்னுள்ளே ஒரு பூரிப்பு.... ஆமாம்..... எனக்குள்ளும் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. என் வாயிலிருந்து வருபவை எல்லாம் பலிக்கின்றன என்று பல நண்பர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனக்கு தியானம் சிறிது பழக்கம்... மூன்றாவது கிராஸ் தெருவில் மூலையில் ஒரு குடிசை. அங்கே ஒரு சாமியார். குடிசை சாமியர் என்பதால் கோபுரக்காரர்கள் பார்வைபடாதவர்.

ஒரு நாள் மனைவியைக் காணவில்லை என்று அவள் போகாத கோவிலுக்குள் நான் போனபோது, அந்த சாமியாரைப் பார்த்து சிரித்து ஒரு வணக்கம் போட்டேன். உடனே அவர், எனக்கு ஒரு தியான முறையைச் சொல்லிக் கொடுத்தார். ஒலியை உருவகப்படுத்தி, வாய், தொண்டை, இருதயம், ஈரல், தொப்புள், ஆசனவாய், முதுகுத்தண்டு, பின்தலை, நெந்றி, காதுகள், கண்கள், மூக்கு முனைகள் வழியாய் கொண்டு செலுத்தி உச்சந்தலைக்கு உட்புறம் ஜோதி மயமாய் நிறுத்தி தரிசனம் காண வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார். அதற்குக் கை மாறாக பத்து ரூபாய் கொடுத்தபோது, 'நீ எனக்கு தருவது சந்தோஷம்.... நான் உனக்கு தருவது மகிழ்ச்சி. மகிழ்ச்சிக்கு சந்தோஷம் ஈடாகாது' என்று சொல்லிவிட்டு, அந்தப் பத்து ரூபாயை சந்தோஷமாகவோ, மகிழ்ச்சியாகவோ வாங்கிக் கொண்டார்.

இந்தத் தியான முறையை என் நண்பர் அருண் வீரப்பனிடம் சொன்னபோது, "காலையில் மூன்று மணிக்கும் நாலரை மணிக்கும் இடையேயுள்ளது பிரம்ம முகூர்த்தம். இதில், சரஸ்வதி தேவி மகா விஷ்ணுவுக்கு வீணை வாசிப்பதாக ஐதீகம். இந்தச் சமயத்தில் தியானியுங்கள். ஆனால், அதற்குப் பிறகு தூங்கக்கூடாது: அப்படித் தூங்கினால் உடம்பிலிருந்து வெளியேறு வதற்காகக் கிளம்பும் நோய் நொடிகள் உடம்புக்குள்ளேயே மறு இடங்களில் படிந்து கொள்ளும்" என்றார். ஆனாலும்,

ஆழ்ந்த தியானத்திற்குப் பிறகு என்னால் தூங்காமல் இருக்க முடியவில்லை. இதனால் தியானத்தைக் கைவிட்டேன். இப்போது தியானிக்கலாமா? வேண்டாம். மீண்டும் தூக்கம் வரும். இந்த விழிப்புணர்வே ஒரு தியானம் தான். நான் அணுவினுள் அணு. அண்டத்தின் பேரண்டம். நானே பக்தன். நானே கடவுள்.

நான் பால்கனி தரையில் உட்கார்ந்தேன். எல்லாமே நான் என்றால், எதற்காக தூங்காமல் இருக்கவேண்டும்? இருக்கத்தான் வேண்டும். அதுவே ஞானம். அதுவே மோட்சம். நான் அண்டசராசரங்களை என் தலைக்குள்ளே சுற்றவிட்டேன். நெற்றிப் பொட்டை விசும்பாக்கி, அடி வயிற்றை நிலமாக்கி, கண்ணை அக்னியாக்கி, மூச்சை வாயுவாக்கி, ஆனந்தக் கண்ணீரை நீராக்கி, பஞ்சேந்தியங்களின் ஒட்டு மொத்த உருவாக என்னைப் பாவித்துக் கொண்டேன். திடீரென்று உடுக்கையுடன் சிவன் தோன்றினான். நான் எழுந்து ஒரு காலைத் தூக்கி அங்குமிங்குமாய் ஆட்டினேன். ஊழிக்கூத்தனுக்கேற்ற ஞானக்கூத்து. பிறகு அப்படியே உட்கார்கிறேன். தூங்க வேண்டும் என்ற துவைத நிலையற்று அத்வைதமாக இருக்கிறேன்.

மனைவி என்னை உசுப்புவதை உணர்கிறேன். அவள் படபடப்பாய் பேசுவதைக் கேட்கிறேன். "என்னே இங்க வந்து உட்கார்ந்திருக்கீங்க.... கண்ணெல்லாம் சிவப்பா இருக்கே? ராத்திரி தூங்கலியா? என்னங்க, உங்களைத் தான்.... ஏன் இப்படி பித்துப்பிடிச்சி இருக்கீங்க?"

அவள் சப்தம் கேட்டு, மகனும், மகளும் வருகிறார்கள். நான் உபன்யாசம் செய்வது போல் அமைதியாக பதிலளிக்கிறேன்.

"பயப்படாதேம்மா.... தூக்கம் விழிப்பின் சத்துரு... ஞானத்தின் எதிரி. தூங்காமல் தூங்கும் சுகத்தைக் கற்றுக் கொண்டேன். எனக்குக் கிடைத்த ஞானோதயம் உங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே என் ஆசை.

ஆனாலோ ஆசை கூடாது. புத்தர் மற்றவர்களுக்காக, தனது நிர்வாணத்தை தானே மறுத்ததுபோல்; நான் உங்களுக்காக என் ஆசையை விடாமல் வைத்திருக்கிறேன்."

என் மனைவி அழுவதைப் பார்த்தேன். அவள் விம்மலைக் கேட்டேன். அவள் உள்ளறைக்குள் ஓடினாள். டெலிபோனில் எண்களைச் சுற்றினாள். "சீக்கிரம் வாண்ணா.... சீக்கிரம் வாண்ணா" என்று அழுது கொண்டே அரற்றினாள். பிறகு என்னிடம் மீண்டும் வந்து மகனையும், மகளையும் என் இரண்டு தோள்களிலும் சாத்திக்கொண்டு விம்மினாள்.

இதற்குள், என் டாக்டர்-மைத்துனன் ஒரு காரோடு வந்தான். நன்றாக நடக்கக்கூடிய என்னை, அவனும் அவளும் கைத்தாங்கலாய்ப் படியிறக்கி காருக்குள் திணிக்கிறார்கள். குழந்தைகள் அம்மாவைப் பார்த்தபடியே அழுகின்றன. அவளோ, அக்கம் பக்கம் பார்த்தபடியே கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். கால் மணி நேரத்தில் ஒரு மருத்துவமனையில் தனி அறைக்குள் திணிக்கப்படுகிறேன். ஸ்டெதாஸ்கோப் மாட்டாத ஒரு டாக்டர் என் மைத்துனரிடம் "டிரான்ஸ்குலைஸர் கொடுத்தா சரியாயிடும். அதுல முடியாட்டா ஷாக் ட்ரீட்மெண்ட கொடுக்கலாம்! உங்க ஸிஸ்டருக்கு ஆறுதல் சொல்லுங்க.... அவரை எப்படியும் குணப்படுத்திடலாம்" என்கிறார்.

என்னுள்ளும் ஒரு பயம். நேற்றிரவு முதல் என்னுள் ஏற்பட்டது அந்த கடைநிலை ஊழியன் சொன்னதுபோல் ஞானமா?. அல்லது அந்த அலுவலகப் பெண் சொன்னது போல் பித்துக்குளித்தனமா? ஒரு வேளை ஒருவனுக்கு பைத்தியம் பிடித்தால், அவன் சிந்தனை இப்படித்தான் இருக்குமோ? சிந்தாரிப்பேட்டை ஆறுமுகம், 'நான் கடவுள், நான் கடவுள்' என்று பைத்தியத்தில் புலம்பியது மாதிரி புலம்புகிறேனா? நான் பைத்தியமோ? அதனால் தான் மனைவி இப்படி அழுகிறாளோ? இல்லை..... ஆமாம்.

அவள் அஞ்ஞானி. அப்படித்தான் அழுவாள். நான் பைத்தியம் என்றுதான் நினைப்பாள். ஆனால் நானோ-ஞானி. புத்தனாய் ஆனவன். ரமணரிஷியாய் போனவன். ரமணரைக் கூட பைத்தியம் என்று ஆரம்பக் காலத்தில் அவர் மீது சிறுவர்கள் கல்லெறிந்தார்களாமே? சேஷாத்திரி சுவாமிகளைக் கூட பைத்தியம் என்று போலீஸ் ஸ்டேஷனில் அடைத்தார்களாமே? வள்ளலாரைக்கூட வாய்க்கு வந்தபடி விமர்சித்தார்களாமே? வைகுண்டசாமியைக் கூட சிறையில் போட்டார்களாமே? அவர்களைப் போலத்தான் நானும். நான் பைத்தியமில்லை. ஞானி, ஞானவான். அது சரி... ஞானத்திற்கும் - தூக்கமின்மைக்கும் என்ன சம்பந்தம்? தட்சிணாமூர்த்தி கூட கண்ணை மூடிக்கொண்டு தானே இருக்கிறார்? அனந்த சயனன் கூட பாற்கடலில் அரிதுயில் கொள்கிறானே.... நான் ஏன் தூங்கக்கூடாது? தூங்கக்கூடாது என்று ஏன் அப்படி ஒரு எண்ணம்? ஞானத்திற்கும், தூக்கமின்மைக்கும் என்ன சம்பந்தம்? ஒருவேளை எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ? இல்லை. ஞானம் என்னைப் பற்றிக் கொண்டது..... ஞானமா? பைத்தியமா?.... பைத்தியத்தின் முற்றலா? அல்லது ஞானத்தின் துவக்கமா?

மனைவியின் அழுகைச் சத்தம், என்னை நிமிர்த்துகிறது. அந்த அறை வாசலுக்குள் மாயமாய் மறைந்து போன, டாக்டர், இப்போது ஊசி மருந்தோடு வருகிறார். நடந்ததைக் கேள்விப்பட்டோ என்னமோ, அந்த குடிசைச் சாமியாரும், விபூதிப்பையோடு வருகிறார். இருவரும் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பனிப்போரில் யாருக்கு வெற்றி என்று பார்ப்போம்.

குமுதம் - 1992

# திடப்பட்டவள்

''அக்கா நாளைக்கு ஜான் கல்யாணத்துக்குப் போறீங்களா?" என்று கேட்டார் ஜேசுதாஸ்.

எலிஸபெத், ''நான் குளோரி பிரசவித்ததற்காக அவர்கள் வீட்டுக்குப் பிராத்தனை செய்யப் போக வேண்டும், நீயும் ஜோஸப்பும் கல்யாணத்துக்குப் போயிட்டு வாங்க," என்றாள்.

"அத்தானும் திருச்சியிலயிருந்து கல்யாணத்துக்காக வாறாராம்."

எலிஸபெத் நிமிர்ந்து பார்த்தாள். உதடுகள் துடித்தன. தம்பிக்காரர் அந்த உதடுகள் இதயமாக இயங்குவதைப் புரிந்து கொண்டார்.

சிறிது இடைவெளிக்குப் பிறகு, எலிஸபெத், "ஆமாம். ஜான் அவங்களுக்கு பெரியம்மா பேரன். நானும் வாரேன். நீ அத்தான் பக்கத்திலேயே உட்கார்ந்து, நான், அவங்கள பார்க்கிற வரைக்கும் பிடிச்சி வச்சிருக்கணும்," என்றாள்.

அன்றிரவு அவளுக்குத் தூக்கம் வரவில்லை. காலையில் எழுந்ததும், "ஜான்ஸி! மாமாவுக்கு இடியாப்பம் பிடிக்கும். பிரமாதமா செய்து வை," என்றாள். "ஏய் பேபி, வீட்டை சுத்தமா வைம்மா. ரேடியோ மேல தூசைப் பாரு..... ஹேங்கர உள்ளகொண்டு மாட்டு. நாற்காலியில் கிடக்கிற பாவாடய எடு. அவங்களுக்கு எந்தப் பொருளும் இருக்க

வேண்டிய இடத்துல இருக்கணும். சிதறிப் போறது பிடிக்காது. ஜோஸப்! நீ என் ராஜா இல்லியா... எல்லாத்துட்டயும் தமாஷ் பண்றது மாதிரி அவருக்கிட்ட பேசாத. நீ ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்ல, 'அவங்க' குத்திக்காட்டுறதா நினைக்கப் போறாங்க. இன்னுமா டிரஸ் பண்ற தம்பி? வா நேரம் ஆவுது."

அக்காளும், தம்பியும் நேரத்திற்கு முன்னதாகவே சர்ச்சுக்குக் கிளம்பிப் போய்விட்டார்கள். அங்கிருந்த ஒரு சிலரில் 'அவங்களை'த் தேடினாள். காணவில்லை. "இனிமேல் தான் வருவார். அவங்க முந்தியும் வர மாட்டாங்க. பிந்தியும் வரமாட்டாங்களே."

மணமக்கள் அணி திரண்ட ஊர்வலத்துடன் வந்தார்கள். எல்லோரும் மணமாகப் போகும் ஜோடியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, எலிஸபெத் தன் மாஜி ஜோடியைக் கண்களால் தேடிக் கொண்டிருந்தாள்.

எலிஸபெத், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள். ஐம்பது வயதுவரை சென்னையில் அவள் தந்தை பாதிரியாராக இருந்தவர். அவள் இளம் வயதிலேயே அன்னையை இழந்துவிட்டாள். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு செகண்ட்ரிகிரேட் ஆசிரியர் பயிற்சிக்கும் படித்துவிட்டு, சென்னையிலுள்ள ஒரு பள்ளிக் கூடத்திலேயே வேலை பார்த்தாள். திருச்சியில் தாலுகா அலுவலகத்தில் குமாஸ்தாவாக இருந்த அருளய்யாவிற்கும் அவளுக்கும் திருமணம் நடைபெற்றது.

இருவரும் அன்னியோன்னியமாகத் தான் வாழ்ந்தார்கள். அருளய்யாவும், அவள் தம்பிகளுக்குத் தன்னால் முடிந்த உதவிகளையெல்லாம் அவள் தூண்டுதல் இல்லாமலேயே செய்தார். ஆசிரியையான அவள், அவரிடம் மாணவியாக நடந்து கொண்டாள். குரு சிஷ்யை உறவு. அது ஒரு நாள் கூட, ஆண்டான் - அடிமை உறவாக மாறியது இல்லை.

இப்படி நெருக்கமாகவும், நேசமாகவும் இருந்த அவர்கள் இல்லறம், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, படிப்படியாக நேசத்தை வைத்துக்கொண்டு, அதன் நெருக்கத்தை அழித்துக்கொண்டிருந்தது. இருவருக்கும் இடையே விளையாடிக் களிப்பதற்கு பிள்ளை இல்லை.

இவ்வளவுக்கும் அருளய்யா அவளிடம் வாய்விட்டு 'ஹூம், உன்னால எனக்கு ஒரு குழந்தை தர முடியவில்லையே' என்று நேராகக் கேட்டதில்லை. 'போன வருஷம். கல்யாணமானவனுக்கு இந்த வருஷம் பிள்ளை,' என்று சுற்றுப்புறக்காரனைச் சுட்டிக் காட்டுவார். பின்னர் ஒரு நாள், "நம்ம ஜோஸப் டில்லியில் இருந்து வந்திருக்கான். வழில பாத்தேன். அவனுக்கும் பேர் சொல்ல பிள்ளையில்ல. என்னைப்போல ஆண்மை இல்லாதவன் போலிருக்கு," என்று அவர் சொன்னதை, அவளால் பொறுக்க முடியவில்லை.

அவள் தூரத்து உறவில், ஏழ்மையில் வாடிய இளம்பெண்ணைத் திருச்சபைக்குத் தெரியாமல் மூன்று வருடத்திற்கு முன்பு, தனது ஐம்பது வயது கணவனுக்கு மணமுடித்து வைத்தாள். அருளய்யாவும், அவளுக்காகப் போனால் போகிறது என்று திருமணம் செய்து கொள்வது போல், அவளை மட்டுமல்ல, தன்னையும் ஏமாற்றிக் கொண்டார்.

ஆரம்ப காலத்தில், கணவனை இன்னொருத்தி பகிர்ந்து கொள்கிறாள் என்பதில் எலிஸபெத்திற்குக் கொஞ்சம் பொறாமைதான். ஆனால் அவள் வந்த வேகத்திலேயே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்ததும் எலிஸபெத் அந்தக் குழந்தையை, தான் வைத்துக்கொண்டு, குழந்தைக்காரி கணவனுடன் குதூகலமாய் இருக்க வழி செய்தாள். ஆனால், வழி செய்தவளுக்கு விழி பிதுங்கத் துவங்கியது. 'சக்களத்தி' இரண்டாவது தாரம் மட்டுமல்ல. தரமும் அப்படித்தான் என்பது போல் அவளுக்குப் பட்டது. அவள் பட்டாடைகளை வாங்குவதும், அக்கம் பக்கத்திலே

போய் அரட்டையடிப்பதும், அடிக்கடி சினிமாவுக்குப் போவதும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் பிறரைப் பேசுவதும், கணவனையே அதட்டுவதும் இவளுக்குப் பிடிக்கவில்லை.

தேவாலாயப் பள்ளியில் வாங்குகிற சம்பளத்தைக் கணவரிடம் அப்படியே நோட்டு கசங்காமல் கொடுத்துப் பழகியவள் எலிஸபெத். தம்பி பிள்ளைகளுக்கு, பிறந்த நாட்கள் வரும்போதும், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகள் வரும்போதும், சுமாரான விலையில் பரிசுகள் வாங்குவதற்காக மட்டுமே கட்டியவரிடம் பணம் கேட்பாள். இப்போது, கட்டியவரிடம் பணம் கேட்டால், அவர், இரண்டாவதாகக் கட்டியவளிடம் கேட்டுக் கொள்ளும்படி கைகாட்டி விட்டார்.

என்றாலும், எலிஸபெத் அவளிடம் கேட்டாள். அவளோ 'இனிமே இந்த பழக்கமெல்லாம் கூடாது' என்று கைவிரித்தாள். எலிஸபெத் அருளய்யாவிடம், ஜாடை மாடையாகவும் பண்பாகவும் சொன்னாள். "அவள் சொன்னதில் என்ன தப்பு?" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

எலிஸபெத், மாதச் சம்பளத்தில், ஐம்பது ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டு, மீதியைக் கொடுத்தாள். இதை இளையவள், மூத்தவளின் அன்பில்லாமைக்கும், அவ நம்பிக்கைக்கும் அடையாளம் என்று வாதிட்டாள். அவர், "ஒனக்கு என் மேல நம்பிக்கையில்ல. நான் பெத்த பிள்ளைய ஒன் பிள்ளையா நினைக்கல. இன்னும் தம்பி பிள்ளைங்களையே நினைச்சிக்கிட்டு இருக்கிற. ஒண்ணு, சம்பளம் முழுதையும் கொடுத்து இரு. இல்லன்னா தனியா இரு. அல்லன்னா தம்பிங்கக் கூடப் போயி சேரு," என்றார்.

எலிஸபெத் துவண்டு போனாள். இருபது ஆண்டுகளுக்கு மேலான பந்தம், கேவலம் ஐம்பது ரூபாயில் பரீட்சிக்கப்படுவது கண்டு பரிதவித்தாள். அதே சமயம், பணமில்லாமலேயே தன்னால் பந்தத்துடன் வாழ முடியும்

என்று நிரூபிப்பவள் போல், வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்துவிட்டாள். தம்பிகளும் சரி, தம்பி பிள்ளைகளும் சரி, அவளைக் கண் போல் நேசிக்கிறார்கள். என்றாலும், அவளுக்கு மனம் கேட்கவில்லை. அருளய்யாவின் பந்தத்தை அவளால் விட முடியவில்லை. கடிதம் எழுதினாள். மன்னிக்கும்படி மன்றாடி எழுதினாள். ஆனால் அருளய்யா பழைய அருளய்யாவல்ல. அவர் ஆன்மாவை இளையவள் ஆட்சி செய்கிற காலம். 'குடும்பம் கெட வேண்டும், குழந்தை நல்லமுறையில் வளர்க்கப்படலாகாது என்ற வஞ்ச உணர்வில் வேலையை விட்டுப் போனவள், உறவையும் விட்டுவிட வேண்டியதுதான்' என்று நாலு வரியில் ஒரு கடிதத்தை எழுதிப் போட்டுவிட்டு, இளையவளிடம் 'சபாஷ்' வாங்கிக் கொண்டார். ஆனால் எலிஸபெத்தின் மனத்தில் இன்னும் நம்பிக்கை இருந்தது.

எலிஸபெத்தின் கண்கள் திருமணக் கூடத்தில் கணவனைத் தேடின. எப்படியோ, அருளய்யாவும், அவள் கண்ணில் சிக்கினார். தம்பி ஜோஸப் 'அவங்களுடன்' பேசிக் கொண்டிருக்கிறான். அவங்க பலமாய்த் தலையை பக்கவாட்டில் ஆட்டுறாங்க. ஏன் முகம் இப்படிக் கோபமா இருக்கு?

எலிஸபெத் அப்போதே எழுந்து, அவர் அருகில் போய் உட்காரத் துடிப்பவள் போல் தவித்தாள். மணமகன் மணமகளின் வலது கையைப் பிடித்திருந்தான். ஆராதனை செய்யும் பாதிரியார் சொல்லச் சொல்ல, அவன் திருப்பிச் சொன்னான்.

எலிஸபெத், கணவன் இருந்த இடத்தைப் பார்க்கிறாள். அவரையும், அவள் தம்பியையும் காணவில்லை. இருவரும் ஆலயத்திற்கு வெளியே நின்றார்கள். அருளய்யா தற்செயலாக அவளைப் பார்த்துவிட்டு, முகத்தை வன்முறையாகத் திருப்பிக் கொண்டார். அவளாலும் பார்க்க முடியவில்லை. நீர்த் திவலைகள் பார்வையை மறைத்தன.

'கர்த்தர், இவர்களை சகல ஆசீர்வாதத்தினாலும், கிருபையினாலும் நிரப்பக்கடவர், ஆமென்' என்று மாங்கல்யம் தரித்து, மணமுடிந்த இருவரையும் வாழ்த்தி, பாதிரியார் விவாகத்தைப் பூர்த்தி செய்து வைத்தார். உடனே வேத சங்கீதம் துவங்கியது. எலிஸபெத் மங்கல நன்னாளில், அமங்கலக் கண்ணீரைச் சிந்தக்கூடாது என்று உறுதியோடு வெளியே வந்தாள். தம்பி மட்டும் அங்கே நின்றார். எலிஸபெத்தைப் பார்த்ததும், அவர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு பேசினார்.

"நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் மனசு இளகல. நீ இளையோடிய பிள்ள உருப்படக் கூடாதுன்னு நினைக்கிறவளாம். ஒன் வாடையை வேண்டாமாம். இப்படிச் சொன்ன வ்ாயில குத்தலாமோன்னு நினைச்சேன்."

எலிஸபெத் காதுகளைப் பொத்திக் கொண்டபோது, தம்பி, அக்காவின் தலையைக் கோதி விட்டார்.

"நாங்கல்லாம் இல்லியாக்கா? இந்த மூணு வருஷத்துல, எப்பவாவது ஒன் மனங்கோணும்படியா பேசியிருக்கேனா? அப்படி என்னக்கா பெரிய புருஷன்? அவருக்கு முன்னாலயே நாம ஒண்ணா பிறந்து ஒண்ணா பழகுனவங்க. ஏக்கா அழுவுற? அட வாக்கா. சரிதான். அந்த மனுஷன் கிடக்கான்."

இருவரும் மௌனமாக வீடு நோக்கி நடந்தார்கள்.

"பெரியம்மா!" அவளை ஒரு குரல் அழைத்தது. பக்கத்து ஊரிலிருந்து குளோரியின் மகன், "பெரியம்மா! அக்கா உங்களைப் பிராத்தனைக்கு அழைச்சிட்டு வரச் சொன்னாங்க. குழந்தைக்கு உடம்பு சுரமா கொதிக்குது," என்றான்.

பிராத்தனை! ஊராருக்குப் பிரார்த்திக்கும் நிலையிலா கர்த்தர் அவளை வைத்திருக்கிறார்?

அவள் குமுறினாள். "வருவதற்கில்லை. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது.'

கர்த்தரே! ஊராருக்காப் பிராத்தனை செய்யும் எனக்கு இப்படிப்பட்ட பரிதாப நிலையை ஏற்படுத்திவிட்டீர்களே.....

கர்த்தரையே கேட்டு விடவேண்டும் என்ற தார்மீக கோபம் அவளுக்கு.... தாங்க முடியவில்லை. தாளவும் முடியவில்லை. முன் அறைக்கு வந்து முழங்காலிட்டாள். ஜெப புத்தகத்தில் நினைவுக்கு வந்த வாக்கியங்களைத் தன் சொந்த வாசகங்களோடு சேர்த்துக் கொண்டு தனக்குள்ளேயே கர்த்தரை முன்னிலைப்படுத்திப் பேசினாள்.

"பரலோகத்தில் இருக்கும் எனது பிதாவே! நான், பலநாள், பல்லாண்டு எனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று வேண்டியும், உரக்க சத்தமாய் உமது ஜபத்தைச் சொல்லியும் தேவகிருபை கிட்டவில்லை. இதனால், என் பிரியமானவரை, நான் பிரிய வேண்டியதாயிற்று. கர்த்தாவே! என் இதயம் புல்லைப் போல் வெட்டுண்டு உலர்ந்திருக்கிறது. என் பெரு மூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாமிசத்தோடு ஒட்டிக் கொள்கின்றன. நான் நித்திரை இல்லாமல், வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவிக்கு ஒப்பானேன். நீர் என்னை உயரத் தூக்கி, தாழத் தள்ளியது ஏன்? என் நாட்கள், புகையைப் போல் ஒளியக் காரணமேன்? இதுவரை வருந்தி ஜெபம் செய்த இந்த அடியாள், இப்போது உம்மை வருத்தித் துதிக்கிறேன். நான் உமக்குப் பயந்து உம் வழியில் நடந்து, உம் மகிமையை உணர்ந்து உபதேசம் செய்பவள் என்பது உண்மையானால், நீர் என்னைத் திடப்படுத்த வேண்டும். ஆமென்."

எலிஸபெத் பிரார்த்தனையை முடித்துவிட்டு, நாற்கட்டில் மேலே உட்கார்ந்தாள். குடும்பத்தினர் அனைவரும் அவளை ஆச்சரியமாகவும், அனுதாபமாகவும் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அவள் தம்பி மகன்- கல்லூரிக்காரனான அருண், கையில் ஒரு காகித புத்தகத்துடன் வந்தான். அத்தைக்காரி, மனத்தை மறைப்பதற்காக, அவனிடம் பேச்சுக் கொடுத்தாள்..

"கையில என்னது அருண்?"

"நாவல் அத்தே."

"இதுக்கு பதில பைபிளைப் பார்த்தால், எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பேன்!"

"நீங்க நினைச்சது மாதிரி எல்லா நாவலும் மோசமில்ல ஆன்ட்டி. இது சாமர்ஸெட் மாம் எழுதின 'ஹ்யூமன் பாண்டேஜ்' என்கிற நாவல். இதுல, ஒரு அற்புதமான இடத்த சொல்றேன் கேளுங்க..... பிலிப்ஸ்! ஒரு நொண்டிப் பையன். அங்கஹீனமானதுக்காக வருத்தப்படுற அவனை, தலைமையாசிரியர், தன் அறைக்கு வரவழைத்து 'பிலிப்ஸ் நொண்டிக்காலுக்காக நீ வருத்தப்படலாகாது. உலகத்தின் பாவங்களைச் சுமப்பதற்காக கடவுள் சில நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இந்த மாதிரி உடற்குறைகளையும், இதர கஷ்டங்களையும் பிறரின் பாவ நிவர்த்திக்காக 'கிராஸாக' கொடுக்கிறார். உண்மையில் பிறர் பாவங்களைச் சுமக்க நீயே தகுதியானவன், வலுவானவன் என்று நினைத்து உன்னைத் தேவன் தேர்ந்தெடுத்ததற்கு, நீ பெருமைப்பட வேண்டும். உன் கால், ஊனமுற்ற பிண்டம் அல்ல, ஆண்டவனின் சிலுவையைச் சுமக்கும் பாவ மரிப்பு அங்கம்' என்று சொல்றார். பாத்திங்களா ஆன்ட்டி! எவ்வளவு அருமையாச் சொல்லி யிருக்கிறார். பாருங்க."

எலிஸபெத்திற்கு, திடீரென்று தலையில் ஒரு பொறி விலகி, பிறிதொரு பொறிக்கு வழிவிட்டது போல் தோன்றியது.

"அருண்", என்று தம்பி மகளை அழைத்தாள். "அந்த ஆட்டோ ரிக்ஷாவை கூப்பிடு."

"எங்கே போக வேண்டும் ஆன்ட்டி?"

"பக்கத்து ஊருக்கு. குளோரியின் குழந்தைக்கு உடம்பு சரியில்லையாம்."

குமுதம் – 2.3.1978

# ரசவாதம்

ஊருக்குச் சற்றுத் தொலைவில், தனித்து இருப்பது போல் தோன்றும் முருகக்கோட்டத்தை ஒட்டி இருந்த அந்தக் குடிசை வீட்டின் கதவுகள் மூடப்பட்டருந்தாலும், உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருப்பது வெளியே வெளிச்சமாகத் தெரிந்தது. ஊரில் வயதுப் பெண்களை வைத்திருக்கும் பெற்றோர்களால் 'ஜோஸ்யர்' என்றும், டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளால் 'வைத்தியர்' என்றும், உள்ளூர்ச்சாமியாடிகளால் 'சாமியார்' என்றும், பணக்காரப் பண்ணையார்களால் 'பரதேசிப் பயல்' என்றும், படித்த இளைஞர்களால் 'லூஸ்' என்றும் நினைக்கப்படுபவரான சம்பூர்ணம் -

மாடத்தில் இருந்த ஒரு ஊதாப் பொருளை எடுத்துத் திருப்தியுடன் பார்த்துவிட்டுப் பிறகு அதனருகே இருந்த இன்னோர் ஊதாப் பொருளையும் உற்று நோக்கி விட்டு அருகே இருந்த ஓலைச் சுவடியைப் புரட்டி, குறிப்பிட்ட ஓர் ஏட்டில் உள்ள வாசகத்தை இலேசான குரலில், கனமான ராகத்தில் பாடினார். பிறகு, அந்த இரண்டு ஊதாப் பொருள்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றார். அந்தப் பொருள்களில் ஒன்று செப்புக் களிம்பு. இருபத்தைந்து பைசா எடையுள்ள செம்புக் கட்டியில், இரண்டு நாட்களுக்கு முன்பு குற்றாலத்திலிருந்தபோது எலுமிச்சம் பழச் சாறைப் பிழிந்து வைத்திருந்தார். இப்போது அந்தக் கட்டி தனது சுய நிறமான ஊதா நிறத்தில் லேசாகக் குழைந்தது போல்

களிம்பாக நின்றது. இன்னொன்று மயில் துத்தம். முள்ளம் பன்றி மாதிரி மொர மொரவென்று ,அதுவும் ஊதா நிறத்தில், உற்றுப் பார்க்கும் அவரையே உற்றுப் பார்ப்பது போல் இளித்தது.

சம்பூர்ணம், கீழே உட்கார்ந்து, விபூதிப் பைக்குள் வைத்திருந்த பாதரசத்தை எடுத்துத் தரையில் வைத்தார். அது - தரையில் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. உடனே அவர் மடியில் வைத்திருந்த ஒரு மூலிகை இலையைப் பிழிந்து, அதில் ஊற்றினார். பாதரசம் இப்போது, கோலிக் குண்டு மாதிரி உருண்டு திரண்டு, அப்படியே நின்றது. சம்பூர்ணம், தன்னை மீறிச் சிரித்துக் கொண்டே ஊதா நிறத்தை உள்ளடக்கிய செம்பையும், களிம்பையும் மயில் துத்தத்தையும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டார். இவற்றின் ஊதா நிறத்தைப் போக்கி விட்டால் கிடைக்கும் பொருள் சாதாவாக இருக்காது. அவருக்கு ஆண்டுக் கணக்கில் பணிவிடை செய்த தனது குருவை மிஞ்சிய சிஷ்யனாகி விட்டதில் ஒரு திருப்தி இருக்கும்.

சம்பூர்ணம், கீழே உட்கார்ந்து பைக்குள் வைத்திருந்த மூலிகையை எடுத்து வைத்துக்கொண்டு அந்த ஊதாப் பொருட்களை உட்கார்ந்தபடியே பார்த்தபோது, மயில்சாமி! 'எப்போ சாமி வந்தீங்க?' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

"மயில்சாமி. நீ வந்தது நல்லதாப்போச்சு. இன்றைக்கு ஒண்ணு செய்யப்போறேன். அதுக்கு ஒன்னைத் தவிர வேறே ஆளில்லை. அதாவது வாலை என்ற பாத்திரத்தில் ஒரு மூலிகையைப் போட்டு, வீரம், பூரம் உட்படப் பல சாமான்களைப் போட்டு மூடிக் கமலாக்கினியால் எரிக்கணும். அதாவது, நெருப்பு பூ விரியறது மாதிரி எரியணும். அப்புறம் அதில் வருகிற நீராவியை ஒரு பாட்டிலில் பிடித்து நீராக்கி, அந்த நீரை மயில் துத்தத்தில் வைத்து அரைக்கணும். மயில் துத்தம் காய்ந்த பிறகு, அதை,

அகல் விளக்கில் வைத்துப் புடம் போடணும். மயில் துத்தத்தோட ஊதா நிறம் போயிடும். இதைத்தான் 'துருசு போகும்' என்று பாட்டு சொல்லுது. அப்புறம் இந்த செம்புக் களிம்பை உருக்கினால் வெள்ளையாய் மாறிடும். அதில் இந்த மயில் துத்தத்தை கலந்து, தண்ணீரில் கலந்து விட்டால்!"

"விட்டால்?"

"அதை நீயே பாரு. ஆனால் ஒண்ணு. நான் பொருளாசையால, இதைப் பண்ணல. வன்னியர் மகள் 'பெயர் கொண்டிருக்கும்' மூலிகைன்னு பாட்டு சொல்லுதே அது எதுன்னு இன்னும் யாருக்குமே தெரியாது. என்னோட குருநாதருக்கும் தெரியாது. நான்தான் 'பண்ணைப் பனையைப் பார்ந்திருந்தான்' என்கிற வரியை வன்னியர் மகளோட இணைத்துப் பார்த்தேன். அதன் விளைவாகக் கிடைத்த மூலிகையைப் பாதரசத்துலே சோதிச்சுப் பார்த்தேன். பேஷ்..... இன்னும் நாலு நாளையில் இந்த இரண்டு மேலேயும் இருக்கிற ஊதா நிறம் போய் இன்னொரு நிறம் வரும். அந்த நிறம், என்னோட குருநாதருக்கு, என்னோட நிறத்தைக் காட்டும். மற்றபடி எனக்கு வேற நோக்கம் இல்லை. உனக்கும் இருக்கப்படாது. சொல்றது புரியுதாப்பா?"

"எனக்குப் புரிஞ்சா என்ன.... புரியாட்டா என்ன சாமி... ஒங்க குருநாதர் சொல்றதை நீங்க செய்வியளோ மாட்டியளோ... நீங்க சொல்லுறதை நான் தட்ட மாட்டேன்."

"சரி, ஆரம்பிப்போமா?"

சம்பூர்ணம், அதே கிராமத்தைச் சேர்ந்தவர்தான். ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு இருபத்தைதந்து வயதில் மணமேடை கிடைத்தது. ஆனால், ஐந்தாண்டுகளில் மணமேடையில் சரிபாதியாக இருந்தவள் பிண மேடைக்குப் போன துக்கம் தாங்காது அவரது சொத்துக்களை சகோதரர்களிடம் விட்டு விட்டுக் கோவில் குளங்களைச் சுற்றத் தொடங்கினார்.

குற்றாலத்துக் குருநாதரிடம் வந்து, 'ரசவாதம்' பற்றிப் பேசும் சாமியார்கள் என்பவர்களையும், சம்சாரிகள் என்பவர்களையும் உற்றுக் கவனித்தார்.

ஒருநாள், குருநாதரிடம் 'வட்ட வட்டமாய் வன்னியர் மகளாய் இருக்கிற மூலிகை எது?' என்று கேட்டார். சம்பூர்ணத்தை, ஏற இறங்கப் பார்த்த அந்த எண்பது வயது ஆசிரமக்காரர், 'இது வைத்தியத்துக்குச் சம்பந்தப்படாத மூலிகை. உனக்குத் தெரிய வேண்டிய தேவையில்லாத ஒரு மூலிகை' என்று கடுகடுத்தார். பேச்சுக்கு ஒரு இடைவெளி கொடுத்து 'இனி இதைப் பற்றிக் கேளாதே' என்று ஆணையிட்டார். இதுவே சம்பூர்ணத்துக்கு ஒரு போர் உணர்வை ஏற்படுத்தியது. தானே, அந்த மூலிகையைக் கண்டுபிடித்து, 'ரசவாத' பரீட்சையில் தேறி, குருநாதருக்கே மார்க் போட வேண்டும் என்ற எண்ணம்.

இத்தகைய மனோபாவத்தில் ஊருக்கு வந்த சம்பூர்ணம், ரஸவாத வித்தையைக் கண்டுபிடித்ததைக் காட்சியாக்க நினைத்த சமயத்தில்தான், மயில்சாமி வந்தார். வர வேண்டியவர்தான்.

இருவரும் சேர்ந்து, கண்டுபிடிக்கப்பட்ட மூலிகையையும், இதர மருந்துப் பொருட்களையும் அந்த வீட்டிலேயே இருந்த கமண்டலம் போன்ற பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்தார்கள். கீழே 'கமலாக்கினி....' பாத்திரத்தின் மேல் முனையில், யானையின் தும்பிக்கை போலிருந்த குழாயின் வழியாக வந்த நீராவியை ஒரு சீசாவில் பிடித்துக் குளிர்ந்த நீரில் சீசாவை வைத்தார்கள். நீராவி நீராகியது; பிறகு மயில் துத்தத்தை அந்த நீரில் போட்டுக் கல்வத்தில் அரைத்து வெயிலில் காய வைத்தார்கள். பின்னர், அதை அகல் விளக்குகளில் போட்டு, துணியால் மூடி இறுகக் கட்டினார்கள். அப்புறம் அதைப் 'புடம்' போட்டார்கள்.

அகல் விளக்குகளை விலக்கியபோது மயில்சாமி துள்ளிக் குதித்தார்.

"சாமி.... ஊதா நிறம் போயிட்டது. போயிட்டுது.... எல்லாம் போயிட்டுது...."

"இதுக்குப் பேருதான் சுன்னம். மயில் துத்தத்துல ஊதாவைப் போக்கிவிட்டால் சுன்னம்."

சம்பூர்ணம் சிரித்துக் கொண்டார். மறுநாள், மயில்சாமி, சந்தையிலிருந்து வாங்கிக்கொண்டு வந்திருந்த ஊது உலையில் செம்புக் களிம்பு உருக்கப்பட்டது. அந்தக் களிம்பு குழைந்து நெளிந்து ஊதா நிறத்தில் தவழ்ந்தபோது, சம்பூரணம் அதன் மீது வெள்ளைப் பஸ்பமாக மாறிய மயில் துத்தத்தைப் போட்டுவிட்டு, அந்தக் கலவையைப் பானையில் இருந்த நீரில் போட்டார்.

இருவரும் ஊதா நிறத்தில் காட்சியளித்த அந்த செம்புக் களிம்பையே பார்த்தார்கள். ஊதா நிறம் மாறிக் கொண்டே இருந்தது. படிப்படியாக, கண் முன்னாலேயே கண்ணுக்குத் தெரியாமலேயே மாறிக் கொண்டிருந்தது. இப்போது மயில்சாமியுடன் சம்பூர்ணமும் துள்ளிக் குதித்தார்.

"செம்பு.... தங்கமாய் மாறிட்டு... தங்கமாய் மாறிட்டு.... நினைச்சதைச் சாதிச்சிட்டேன்.... சாதிச்சிட்டேன்...."

"என் பெண்ணுக்கு மட்டும் இப்படி மூணு பவுன் கிடைச்சால், அவள் கல்யாணம் எப்பவோ முடிஞ்சிருக்கும்."

மயில்சாமி தன்னை யறியாமல் சொல்லிவிட்டு, தன்னையறிந்து உதட்டைக் கடித்தார். சம்பூரணம், அவரையே பார்த்தார். பாவம்... பரம ஏழை... இவன் பெண்ணாவது நல்லா வாழணும்.

சம்பூரணம், நீரில் கிடந்த தங்கத்தை எடுத்து மயில்சாமியிடம் நீட்டினார். அவர் வாங்காமலேயே பதறினார். பிறகு, மகளுக்கு ஒரு சங்கிலி போட்டால், கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறு விழும் என்ற எண்ணத்தில் வாங்கிக் கொண்டார், அங்கே நிற்கப் பயந்தவர் போல் வீட்டுக்கு ஓடினார். 'இந்தத் தங்கம் எப்படிச் கிடைச்சுது.... மிராசுதாரர் அருணாசலம் வீட்ல நகை நட்டுத் திருடு போயிட்டுதாம். இந்தத் தங்கம் எப்படிக் கிடைச்சுது?

எனக்கு இப்பவே ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்'. என்று குதித்த மனைவியிடம் தான் திருடன் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டி ரகசியத்தைச் சொல்லி விட்டார் மயில்சாமி. அதே சமயம், 'மத்தவங்க கிட்டச் சொல்லப்படாது' என்றும் சொல்லி விட்டார்.

அந்தத் தங்கக் கட்டியையே பார்த்துக் கொண்டு மயில்சாமியின் மனைவி நின்றபோது, பண்ணையார் அருணாசலத்தின் ஒரு பாதியான - அவரை விட இரு உடம்பு கொண்ட காளியம்மாள், தங்கக் கட்டியையும், அதைக் கெட்டியாகப் பிடித்திருந்தவளையும் நோட்டம் போட்டாள். மயில்சாமியின் மனைவியிடம் 'வயலுக்குச் போய்ச் சீம உரத்தைத் தூவிவிட்டு வாரீயா' என்று சொல்வதற்காக வந்தவள், வந்த சொல்லை வாய்க்குள்ளேயே ஒதுக்கிக் கொண்டு, "எங்க நகைகளை இவ்வளவு சீக்கிரத்துல எப்படிம்மா உருக்க முடிஞ்சுது..... மீதிய எங்க வச்சிருக்க....? அவரு போலீஸ் கிட்டத்தான் போய்க்கிட்டு இருக்காரு..." என்று சொன்னபோது, மயில்சாமியின் மனைவியால், ரகசியத்தை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

சம்பூர்ணம் புறப்பட்டுக் கொண்டிருந்தார். 'வார ஐப்பசில.... கல்யாணத்தை வச்சிடு. நாளைத் தள்ளாதே' என்று மயில்சாமியிடம் அவர் சொல்லிக் கொண்டிருந்த போது, பண்ணையார் அருணாசலம், வீட்டுக் கதவை தள்ளிக் கொண்டு வந்தார்.

"நானும் ஐப்பசில என் பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன். நிச்சயதாம்பூலம் கூட ஆயிடுச்சு. ஒரு பத்து பவுன் நகையாலே நின்னுடப்படாது பாருங்க... இது செம்புக் களிம்பு அரைகிலோ. இது மயில் துத்தநாகம் கால் கிலோ. நீங்க சும்மா அந்த மூலிகையைப் போடணும். அவ்வளவுதான்.... கல்யாணம் முடிஞ்சிடும்."

சம்பூர்ணம், மிரண்டும் தொனியில் பேசிய பண்ணையார் அருணாசலத்தை திடுக்கிட்டுப் பார்த்தார். அவர் பிரித்துக் காட்டிக் கொண்டிருந்த இரண்டு ஊதாப்

பொருட்களையும் அதிர்ந்து பார்த்தார். மோசமான மனுஷன். கள்ள நோட்டு அடிக்கப் பார்த்தவன்...... பக்கத்து வயல் வரப்பை வெட்டுறவன்.

"பணம் படைச்ச நீ, ஆசைப்படறது தப்பு. ஒன் மகள் கல்யாணம் நடக்கும். அவள் தீர்க்காயுசா குழந்தை குட்டிகளோட வாழ்வாள். நான் சொல்றதை நம்பு!"

"நம்புறேன் அய்யா நம்புறேன். அதே மாதிரி, நான் சொல்றதையும் சாமி நம்பணும். என்னோட பத்துப் பவுன் நகை போயிட்டுது. ஐம்பது பவுன் போடுறதா பொறுப்புப் பேசியிருக்கேன். பத்துப் பவுன் காணல. மயில்சாமி என்னோட நகையைத் திருடலன்னு நான் நம்புறதுக்காவது நீங்க பத்துப் பவுனையாவது தங்கமாத் தரணும். இல்லேன்னா இவனைப் போலீசில பிடிச்சுக் கொடுப்பேன். அங்கே இவனோட திருட்டு அம்பலமாகும். இல்லேன்னா ஒங்க குட்டு அம்பலமாகும். கவலைப்படாதீங்க சாமி! நான் யாரு கிட்டயும் சொல்ல மாட்டேன். சரி.. வேலைய ஆரம்பிப்போமா?"

சம்பூர்ணம், தெளிந்து விட்டார். ஆசாமியிடம் இருந்து தப்ப முடியாது. எப்படியாவது சமாளிக்க வேண்டும்!

"சரி... இப்படிவா... சொல்லித்தரேன்!"

"அப்படிச் சொன்னா எப்படிச்சாமி? நீங்க தப்புத் தப்பாச் சொல்ல மாட்டீங்க என்கிறது என்ன நிச்சயம்? நீங்க சத்தியவான். சத்தியம் மீறா தவரு. வாங்க. முருகன் கோவிலுக்குப் போவோம். நான் தேங்காய் பழம் கொண்டு வந்திருக்கேன். தாம்பாளத் தட்டுல ஒரு கற்பூரத்தைக் கொளுத்தறேன். நீங்க 'முருகா!' இவருக்கு அதாவது இந்த அருணாசலத்துச் சத்தியமாய்த் தெரிஞ்சதைத் தான் சொல்லிக் கொடுக்கேன். பொய் சொல்லலேன்னு எதுக்கும் ஒரு பேச்சு பேசிடுங்க!"

சம்பூர்ணம், சத்தியம் செய்து விட்டார். அந்தக் கையோடயே அருணாசலத்துக்குச் சொல்ல வேண்டியதை

எல்லாம் சொல்லிவிட்டு, திரும்பிப் பாராமலே ஓடினார். குருநாதரைப் பார்க்கப் பயம். ஆனாலும் திருக்குறளை நினைத்துக் கொண்டார். "புரை தீர்ந்த பொய்மையை சொன்னதில் தவறில்லை என்ற ஒரு நம்பிக்கை." அதே சமயம் ஒரு பெண்ணின் திருமணம் நின்று போய்விடுமோ என்கிற பச்சாதாபம். நடப்பது நடக்கிறபடி நடக்கட்டும் என்கிற விரக்தி.

சம்பூர்ணம், ஒரு மலையடிவாரத்துக்கருகே போய் உட்கார்ந்தார். மலை உச்சியில் இருந்த முருகன் கோவிலுக்குள் நுழையும் தைரியம் இல்லாமல், மனதுக்குள் புலம்பினார். அப்போது-

பண்ணையார் அருணாசலம் வீட்டில் திருமணவிழா...... மணமகள், உற்றார் உறவினர் புடைசூழ கோவிலுக்கு போகிறாள். அவள் உடம்பில் ஆடை இல்லாத அத்தனை இடங்களிலும் நகை நட்டுக்கள் ஜொலிக்கின்றன. 'இப்போதைக்குப் போதும்' என்று நினைத்து, அருணாசலம் உருவாக்கிய இருபது பவுன் தங்கக்கட்டி மணமகளின் கரங்களில் தங்கக் காப்புகளாக, கழுத்தில் ரெட்டை வடச் சங்கிலியாக மின்னியது. கோவிலுக்குள் நுழையப் போகிற சமயம். மணப்பெண்ணை, கிண்டலும், கேலியுமாக மொய்த்த தோழிகள் திடீரென்று அவளை உற்றுப் பார்க்கிறார்கள். பிறகு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி, அவள் கையைத் தூக்கியும், கழுத்தை வளைத்தும் பார்க்கிறார்கள். அதிர்ச்சியோடு சூள் கொட்டுகிறார்கள்.

மணமகளின் பொன்நிற காப்புகளும், ரெட்டை வடச்சங்கிலியும் திடீரென்று ஊதா நிறத்தில் கண் சிமிட்டின.

கல்கி - 14.10.1979

# தோன்றாத் துணை

வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே, தலைமைக் குமாஸ்தா சொன்ன விவரங்கள் புரியாமல், இன்னொரு பெண் குமாஸ்தாவிடம், சில ஃபைல்களை எடுத்துக் கொண்டுபோய் நின்ற போது, ஏதோ பெயருக்கு அந்தப் பெண் குமாஸ்தா விளக்கினாளே தவிர, அவள் பேசிய தோரணை, 'இனிமேல் என்னை நச்சரிக்காதே' என்பது போலிருந்தது.

இயல்பிலேயே பயந்த சுபாவத்துடன், தாழ்வு மனப்பான்மை கொண்ட வசந்தி, பயத்தினால் திக்கித் திக்கிப் பேசுவதைப் பார்த்து, அலுவலகத்தில் பலர், அவள் வேலை ஏதாவது கேட்டால் 'கோட்டா' செய்தார்களே ஒழிய, சொல்லித் தரவில்லை.

எஸ்.எஸ்.எல்.ஸி.யில் படித்த ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு அவளால் ஃபைல்களில் குறிப்புக்கள் எழுத முடியவில்லை. ஒருநாள் தலைமைக் குமாஸ்தாவே, "ஆமாம்மா... நீ எப்படி எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணினே?" என்று குத்தலாகக் கேட்டார்.

அந்தச் சமயத்தில் இன்னொரு பெண் - வயது நாற்பது இருக்கும் - மிஸஸ் பரிமளம் ராமச்சந்திரன், "இந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.ஸி. அந்த காலத்து இ.எஸ்.எல்.ஸி. கிட்டகூட (எட்டாம் வகுப்பு) நிற்க முடியாது" என்றாள்.

உடனே தலைமைக் குமாஸ்தா, ''அப்படியும் சொல்லிட முடியாது. இந்த வருஷந்தான் என் பொண்ணு எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி இருக்கிறாள். அவள் எழுதுற இங்லீஷ் அவ்வளவு அருமை. எனக்கே புரிய மாட்டாக்கு" என்றார். அவர் பேசிய தோரணை, தன் மகளுக்கு, அந்த அலுவலகத்திலேயே ஒரு வேலை கிடைப்பதற்கு முன்னுரை கூறுவதுபோல் தோன்றியது.

நடுங்கும் கைகளிலேயே, பைலை வைத்துக் கொண்டு நின்ற வசந்தியைப் பொருட்படுத்தாமலே, இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். வசந்தி, தன் இருப்பிடத்திற்கு நகரப் போனாள். அதைப் பார்த்த தலைமைக் குமாஸ்தா, "ஆமா... உன் மனசில என்னதான் நினைச்சிக்கிட்ட? கொஞ்ச நேரம் காத்து நிற்க முடியாதோ? கொண்டா ஃபைலை..." என்று கத்தினார்.

அவரிடம் பேசிக் கொண்டிருந்த நாற்பது வயதுக்காரி, பெரிதாகச் சிரித்தாள். பைல்களில் தலைகளை விட்டுக் கொண்டிருந்த சில குமாஸ்தாக்கள், தத்தம் தலைகளை உயர்த்திவிட்டு பிறகு எதுவுமே நடக்காததுபோல் குனிந்து கொண்டார்கள்.

தலைமைக் குமாஸ்தா மீண்டும் கத்தினார். "ஆமா... எந்த ஸ்கூல்ல படித்தே?"

வசந்தி, ஒரு பெயரைச் சொன்னாள்.

"எஸ்.எஸ்.எல்.ஸிலே எவ்வளவு மார்க் எடுத்தே?"

வசந்தி எடுத்தது குறைவான மார்க். ஆகையால் பதிலளிக்காமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

தலைமை விடவில்லை. "நான் சொல்றது காதுல விழல? எத்தனை மார்க்கு?"

"இருநூற்று எண்பது."

"அதான கேட்டேன். இங்லீஷ்ல எவ்வளவு? அட... சொல்லும்மா. நான் சொல்றது காதுல விழல? சொல்லு."

"முப்பத்தஞ்சு..."

"முப்பத்தஞ்சு கிடைச்சதே ஆச்சரியம். எல்லாம் என் தலையெழுத்து. உங்கள மாதிரி ஆட்களைக் கட்டி மாரடிக்க வேண்டியதிருக்கு. ஒழுங்கா வேலையைக் கத்துக்க. இல்லன்னா மானேஜர்கிட்டச் சொல்லிச் சீட்டைக் கிழிக்க வேண்டியதிருக்கும்."

வசந்திக்குத் தன் குடும்ப நிலையைச் சொல்லி, அப்படி அவர் எதுவும் செய்துவிடக் கூடாது என்று அவரைக் கும்பிட வேண்டும் போலிருந்தது. ஆனால், அவர் பார்த்த பார்வை, அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. பேசாமல், இருப்பிடத்தில் வந்து தொப்பென்று உட்கார்ந்தாள். அன்று இரவு, அவளால் தூங்க முடியவில்லை.

ஒரு வாரம் ஆகியிருக்கும். மானேஜர் அவளைக் கூப்பிட்டு அனுப்பினார். வசந்தி கைகால்கள் நடுங்க, அவர் அறைக்குள் போனாள். இண்டர்வியூ சமயத்தில் சிரித்த முகத்துடன் அவரைப் பார்த்து, அதையே மனத்தில் பதிய வைத்திருந்த வசந்திக்கு, இப்போது மானேஜர் கடுவன் பூனை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருந்தது பயமாக இருந்தது. நாக்கு, பல்லில் ஒட்டிக் கொண்டு வெளியே வர மறுத்தது.

மானேஜர் 'டை'யைச் சரிசெய்து கொண்டே அவளிடம் பேசினார். "நீ இன்னும் ஒர்க்கை பிக்கப் பண்ணலன்னு ஹெட் கிளார்க் சொல்றார். தப்பில்லாம இங்லீஷ்ல ஒரு சென்டன்ஸ்கூட உன்னால எழுத முடியல. பதினைஞ்சு நாள் டயம் கொடுக்கிறேன். அதுக்குள்ளே வேலையைக் கத்துக்க... இல்லன்னா... ஐ அம் ஸாரி. நான் வேற கிளார்க்கைப் போட வேண்டியதிருக்கும்..."

வசந்திக்கு, அவரிடம் எவ்வளவோ பேச வேண்டும் போல் தோன்றியது. 'சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து வருகிறவர்கள், முதலில் அப்படித்தான் இருப்பார்கள்; ஆனால் போகப் போகச் சரியாகிவிடுவார்கள்' என்று

வாதாட வேண்டும் போலிருந்தது. வண்டி இழுத்துக் கஷ்டப்பட்ட அப்பாவும், வடை விற்றுப் பிழைப்பு நடத்தும் அம்மாவும், பள்ளிக்கூடத்திற்குப் போகும் தம்பி, தங்கைகளும்தான் வேலையின் சேர்ந்ததன் மூலம், வீட்டில் பாலும் தேனும் ஆறாய் ஓடப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட வேண்டாம் என்றும் மன்றாட வேண்டும் போலிருந்தது. 'விசுவாசம்' இருந்தால், எந்த வேலையையும் கற்றுக் கொள்ளலாம் என்றும், தனக்குத் திறமை இல்லையென்றாலும் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விசுவாசம் இருக்கிறது என்றும், அவரிடம் அடித்துச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் வாயைத் திறக்க முடியவில்லை. அப்படித் திறந்தால் கண்களில் முட்டி நிற்கும் நீர் கன்னங்களில் விழுந்து காட்டிக் கொடுத்துவிடும் போலிருந்தது. பேசாமல் தலையைக் குனிந்துகொண்டே திரும்பினாள்.

ஒருசில நாட்கள் ஓடின.

அன்றும் வசந்தி, வழக்கம்போல், அலுவலகத்திற்கு, மற்றவர்கள் வருவதற்கு முன்னதாக வந்துவிட்டாள். அவள் நாற்காலியில் ஓர் இளைஞன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, அவள் லேசாகத் தயங்கினாள். அவன் சகஜமாகப் பேசினான்.

''நான்தான் பிரகாஷ். லீவில் போயிருந்தேன். இன்னைக்குத்தான் டியூட்டியில் சேரப் போறேன். நீங்கதான் மிஸ் வசந்தின்னு நினைக்கிறேன். 'அம் ஐ கரெக்ட்?'

வசந்திக்கு, மற்றப் பெண்களைப்போல், 'யு ஆர்' என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால், அவன் 'மிஸ்' என்று சொன்னது அவளுக்குப் பெருமையாகத் தோன்றியது. இதுவரைக்கும் எவரும் அவளை அப்படி அழைத்ததில்லை. அவள், அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். அவன் மீண்டும் பேசினான்.

“அந்த ஹெட்கிளார்க் கிழம் கரிச்சுக் கொட்டுமே? எப்படி சமாளிக்கிறிங்க, மேடம்?”

அவன், ‘மேடம்’ என்று சொன்ன வார்த்தையில், வசந்திக்கு அந்தத் தலைமைக் குமாஸ்தா ஏசும் ஏச்சுக்கள் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அவள், இப்போது சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

“சொல்லுங்க மேடம்... அந்த ஆளு உங்களக் கன்னா பின்னான்னு திட்டியிருப்பானே. பேச மாட்டிங்களா? ‘பெண்ணுக்கழகு மெளனம்’னு பெரியவங்க சொல்லு வாங்க. நீங்க ஏற்கனவே அழகாய் இருக்கிங்க. இதுக்கு மேல அழகு தேவையில்ல. மெளனத்தைக் கலைக்கலாம்...”

இப்போது அவள் சிரித்தே விட்டாள்.

“அவர் என்னைத் திட்டுறது உங்களுக்கு எப்படி தெரியும்?”

“பிரண்ட்ஸ் சொன்னாங்க. டோண்ட் ஒர்ரி. இனிமேல் நான் இருக்கேன். அது, நாட்டாமை ஒண்ணும் பண்ண முடியாது. ஐ ஆம் ஸாரி.... நான் உங்க நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறதை மறந்துட்டேன். கமான், டேக் யுவர் ஸீட் மேடம்...”

வசந்திக்குப் பிறப்பின் பெருமையை இன்றுதான் உணர்ந்ததுபோல் தோன்றியது. அன்றும் வழக்கம்போல், தலைமைக் குமாஸ்தா அவளைக் கரித்துக் கொட்டினார். “ஏம்மா, ‘ப்ளீஸ் இஷ்யு ஆர்டர்’னு எழுதாமல், ‘ப்ளீஸ் ஆர்டர் இஷ்யு’னு எழுதினால் என்ன அர்த்தம்? பழையபடியும், ஏபிஸிடி படிச்சு, இங்லீஷ் கத்துக்க” என்றார் காரமாக.

பிரகாஷால் பொறுக்க முடியவில்லை.

“அந்தப் பொண்ணு பாவம், புதுசு. பக்குவமாச் சொல்லி கொடுக்கிறத விட்டுப்புட்டு, டபாய்ச்சா என்ன ஸார்

அர்த்தம்? நீங்க கூடத்தான் ஐந்து வருஷத்துக்கு முன்னால 'மானேஜிங் டைரக்டர் புறப்பட்டுவிட்டார்'னு சொல்றதுக்காக, 'எம். டி. பாஸ்ட் அவே'ன்னு எழுதினீங்கன்னு மிஸஸ் பரிமளம் ராமச்சந்திரன் சொன்னாங்க'' என்று அடுத்த செக்ஷனுக்கு எட்டும் படியாகக் கேட்டான்.

தலைமைக் குமாஸ்தா பதிலே பேசவில்லை. மிஸஸ் பரிமளம் ராமச்சந்திரன் விக்கித்துப் போனாள். எழுதியது எப்படி உண்மையோ, அப்படி, அவள் பிரகாஷிடம் சொன்னதும் உண்மை.

இப்போது, வசந்திக்குத் தலைமைக் குமாஸ்தாவையே கிண்டல் செய்யவேண்டும்போல் தோன்றியது. என்.ஸி.ஸி. பெண்ணைப்போல், இருக்கையில் வந்து உட்கார்ந்தாள். பிரகாஷ், அவளை எழுத விடவில்லை. அவள் எழுத வேண்டிய ஃபைல்களுக்கு, அவனே குறிப்புக்களை எழுதிக் கொடுத்தான்.

லஞ்ச் வேளையில், அவள் அவனை நன்றியறிதலோடு பார்த்துக் கொண்டே, "அந்தக் கிழத்த நல்லாக் கேட்டிங்க. ஆமா... எம்.டி. பாஸ்ட் அவேன்னு எழுதினால் தப்பா?" என்று கேட்டாள்.

"பாசுடு அவேன்னா இறந்துட்டார்னு அர்த்தம்."

வசந்தி, விழுந்து விழுந்து சிரித்தாள். அவளின் சீரான வெண்முத்துப் பற்களை ரசித்துக் கொண்டே, வசந்தி, உனக்குப் பச்சைப் புடவை எடுப்பாய் இருக்கும்" என்று சொல்லிவிட்டு, அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். அதில், எந்தவிதமான சினக்குறியும் தெரியவில்லை. அதே நேரத்தில், அவன் பேச்சின் நோக்கைப் புரிந்து கொண்ட பாவமும் இல்லை. "என்ன, நான் சொல்றேன். நீ பதிலே சொல்லல?"

இப்போது அவள் பதிலளித்தாள். "அப்போ இந்தப் புடவை நல்லா இல்லியா?"

"உன் சிவந்த உடம்புக்குப் பச்சை நிறம் எடுப்பாய் இருக்கும். அப்புறம் காதில் இருக்கிற கம்மலைத் தூக்கி எறிஞ்சிடு. நல்ல ரிங்கா வாங்கிப் போடு. ஜாக்கெட்ல கை இவ்வளவு நீளமா இருக்கக் கூடாது."

"ஸார், நீங்க எந்த ஸ்டூடியோவிலேயும் மேக்கப் மேனா இருந்திங்களா?" என்று சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

பிரகாஷிற்கு உற்சாகம் ஏற்பட்டது. அவளைத் தொட வேண்டும் போலிருந்தது. ஆசையை அடக்கிக் கொண்டான். விட்டுப் பிடிக்க வேண்டும். முன்பு அவசரப்பட்டதால், கமலாவை அவனால் பிடிக்க முடியாமல் போனது மட்டுமில்லாமல், அவள், அவன் மனைவியிடமே புகார் செய்துவிட்டாள்.

இப்போது, தலைமைக் குமாஸ்தா, அவன் இல்லாத சமயங்களில்தான், அவளைத் திட்டுவார். ஒரு சமயம், அவன் எங்கேயோ, வெளியே போயிருந்தான். வசந்தி, இருக்கையில், கீண்ணீர் வராக் குறையாக இருந்தாள். தலைமைக் குமாஸ்தாவின் 'டோஸ்' நீண்டு கொண்டே இருந்தது. 'நீ எழுதற இங்கிலீஷைச் சொன்னா என் பொண்ணு விழுந்து விழுந்து சிரிக்கிறாள்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில், பிரகாஷ் வந்துவிட்டான்.

"ஏன் ஸார் எப்ப பார்த்தாலும் உங்க பெண்ணை இழுக்கறிங்க? இன்னொரு வேகன்ஸி வராமலா போயிடும்? இந்தப் பெண்ணை நிறுத்திட்டுத்தான் உங்க பெண்ணுக்கு வேலை கொடுக்கணுமா என்ன?" என்று அவன் சொன்ன போது, தலைமைக் குமாஸ்தா தனக்குள்ளேயே முனங்கிக் கொண்டாரே தவிர, அவனுக்கு வெளிப்படையாக விடையளிக்கவில்லை. அவன், மானேஜிங் டேரக்டருக்குத் தூரத்து உறவு. மானேஜரே அவனுக்குப் பயப்படுகிறார். அதோடு, பயல் மொட்டைப் பெட்டிஷன் போடுவதில் சமர்த்தன்.

மாலையில், அலுவலகம் முடிந்ததும், வசந்தி, அவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள். "நீங்க சொல்றதுமாதிரி அந்தக் கிழம் தன்னோட மகள வைக்கிறதுக்காக என்னைத் திறமையில்லாதவள்னு நிரூபிக்கப் பார்க்குமோ?" என்றாள்.

"வசந்தி... இந்த மாதிரி சமாச்சாரங்களை, இந்த மாதிரி இடத்தில நின்று பேசக் கூடாது. வா, அந்த ஓட்டலுக்குப் போவோம். அங்க போய்ப் பேசலாம்."

வசந்தி முதலில் தயங்கினாள். பிறகு, அவன் செய்த உதவிகளுக்கு நன்றி காட்டுவதுபோல், நடந்தாள். 'பேமிலி ரூமிற்குள்' அவன் நுழைந்தான். அவள் கால்கள் தயங்கின.

"இங்க வந்து கலாட்டா பண்ணாதே. ரெண்டு பேரையும் தப்பா நினைப்பாங்க; என்னைப் பார்த்தால் தப்பா நடக்கிறவன் மாதிரி தெரியுதா?" என்றான் சற்றுக் கோபமாக.

வசந்தி, அந்த அறைக்குள் போனாள். அவன் எதிர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். "நான் உன்னிடம் நட்பைத்தான் எதிர்பார்க்கிறேன்- சத்தியமாய் வேற எதையும் எதிர்பார்க்கல" என்று சொன்னது, அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அவர்கள் இருவரும் அடிக்கடி ஓட்டல்களுக்குப் போய் வருவது வாடிக்கையாகிவிட்டது. அவன், அவளுக்கு எதிர்த்தாற்போல் உள்ள நாற்காலியில்தான் உட்காருவான்.

அன்று சம்பள தினம். அவளுக்குச் சம்பளம் கிடைக்கவில்லை.

இருவரும், வழக்கமான ஓட்டலுக்குப் போனார்கள். பிரகாஷ், அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"டோண்ட் ஒர்ரி வசந்தி. ஹெட் ஆபீஸ்ல இருந்து கன்பர்மேஷன் வந்திடும். வெறும் பார்மாலிட்டிதான். மானேஜர் உனக்குக் கொடுத்த வேலையை, அவர்கள் உறுதி செய்து ஆர்டர் போடவேண்டியது அலுவலக விதி. பைலை

எழுத வேண்டிய கிளார்க் லீவுல போயிருப்பான். நான் எதுக்கும் எங்க மாமாவுக்கு (எம்.டி.) நாளைக்கு எழுதுறேன்..."

"நான் இந்த மாதம் நானூறு ரூபாய் வாங்கிட்டு வருவேன் என்கிற தைரியத்துல எங்க அப்பா வண்டி இழுக்கிறத நிறுத்திட்டாரு. இரு நூறு ரூபாய் கடன் இருக்கு. கடன் கொடுத்தவன் மோசமான மனிதன். போன மாசம் பக்கத்து வீட்டுக்காரங்களை மானம் போறமாதிரி பேசிட்டான். பிரகாஷ், வேலை போயிடாதே?"

வசந்தியால் கண்ணீரை அடக்க முடியவில்லை. பிரகாஷ், அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். "அசடே, இதுக்கா அழுவுறே? உனக்கு ரெண்டு மாதச் சம்பளம் சேர்ந்து வரப் போகுது. இந்தா, இருநூறு ரூபாய்... ஏன் யோசிக்கிறே? ஓசியா கொடுக்கல, வட்டி போட்டு வாங்குவேன். நான் ஈட்டிக்காரனைவிட மோசமானவன்."

அவள், லேசாகச் சிரித்தாள். அவன் அவள் கண்களைப் பட்டும் படாமலும் துடைத்துவிட்டான். பிறகு, கைக்குட்டையால் அவள் கன்னங்களைத் துடைத்தான். வசந்தி எச்சரிக்கை அடைந்தவள் போல், 'ஸார்... உங்க மனைவியும், பிள்ளைகளும் காத்திட்டிருப்பாங்க" என்று எழுந்தாள்.

பிரகாஷிற்கு மனச்சாட்சி நெஞ்சில் குத்துவதுபோல் தோன்றியது. குத்தலாகப் பேசுகிறாளே! அவள் கிடைக்காமல் போய் விடுவாளோ! என்றாலும் அவள், அவனை ஒன்றும் சொல்லாதது உற்சாகத்தைக் கொடுத்தது.

இப்போது, அலுவலகத்திற்குள்ளேயே, அவன், அவள் கையைத் தட்டுவதும், சடையைப் பிடித்து இழுப்பதும் சகஜமாகிவிட்டது. அவள் எதிர்ப்பை அதிகமாகக் காட்டவில்லை. அலுவலகத்தில் பலரால் ஒதுக்கப்பட்ட அவளுக்கு, அவன் தைரியம் கொடுத்தான். தாழ்வு மனப்பான்மையில் தவித்த அவளுக்கு, தன்னம்பிக்கை

கொடுத்து, அவள் பெண்மையைப் பேணுகிற அவனது நட்பு நீடிப்பதற்காக இந்தச் சில்லறைத் தொல்லைகளை, அவள் ஒருவிதக் கலக்கத்துடன் தாங்கிக் கொண்டாள். பிரகாஷிற்கு நம்பிக்கை வந்து விட்டது. எப்படியாவது அவளை மகாபலிபுரத்திற்குக் கூட்டுக்கொண்டுபோய் விடலாம்.

தலைமைக் குமாஸ்தா, தனக்குள்ளேயே பொருமினார். அப்பாவிப் பெண்ணை, பெண்களை வஞ்சிக்கும் 'டெக்னிக்' தெரிந்த ஒரு அயோக்கியன் கெடுக்கப் போகிறானே என்று வருந்தினார். இதற்கு முன்பு பல பெண்களை அவன் இப்படி நட்பாக்கி வஞ்சித்திருக்கிறான் என்று அவர் சொல்லத் துடித்தார். அதே நேரத்தில், இந்த 'ஸ்கேண்டல்' பெரியதாகி, மானேஜர் காதுக்கு எட்டி, வசந்திக்குச் சீட்டுக் கிழிந்து, தன் மகளுக்கு வேலை கிடைக்கும் என்று நினைத்தாரோ, அல்லது 'உன்னைப் பார்க்கலங்ற ஆத்திரத்துல பேசுறியா?'ன்னு அவன் திருப்பிக் கேட்டாலும் கேட்பான் என்று பயந்தாரோ தெரியவில்லை. அவர் பேசாமல் இருந்துவிட்டார். மிஸஸ் பரிமளம் ராமச்சந்திரன், ஒரு சமயம் சாடை மாடையாக, 'சிலந்தி வலை பின்னிட்டு, பூச்சியும் விழுந்த மாதிரிதான்' என்று சொன்னாள். வசந்திக்குப் புரியவில்லை; புரிந்துகொண்ட பிரகாஷ், 'மிஸஸ் பரிமளம்! நம்ம வெங்கட் ராமன் இப்போ எங்கே இருக்கார்?" என்று கேட்டு வைத்தான். பரிமளம் பெட்டிப் பாம்பாகிவிட்டாள். வெங்கட்ராமன், அவள் பழைய காதலன்.

ஒருநாள், காலையில் வசந்தி கலவரத்தோடு வந்தாள். அவளுக்காக முன்னதாகவே வந்துவிட்டான் பிரகாஷ்.

"ஏன் வசந்தி... ஒரு மாதிரி இருக்கே?"

"ஏழப் பொண்ணுன்னா என்ன வேணுமானாலும் பேசலாம்னு நினைக்கிறாங்க... பொறுக்கிப்பசங்க..."

"நீ யாரைத் திட்டறே?"

"நானும் பார்த்துக்கிட்டே வாறேன். ஒரு வாரமா, நாலஞ்சு பொறுக்கி பசங்க, நான் ஏறுற பஸ்லயே ஏறுறாங்க. நான் இறங்கற இடத்திலேயே இறங்கறாங்க. கன்னாபின்னான்னு பேசுறாங்க..."

"கண்டுக்காத. கொஞ்ச நாளையில அவங்க போயிடுவாங்க"

அவன் பதில், அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. 'முன்கோப முரடர்... அந்தப் பையன்களைப் போய் உதைப்பார்' என்று நினைத்து, அவள் இதுவரை சொல்லாமல் இருந்தாள்.

"இந்தப் பயல்களுக்கெல்லாம் அக்கா தங்கச்சி கிடையாதா?"

"இந்தக் காலத்துல இதெல்லாம் சகஜம்..."

"உங்களுக்கென்ன...... சொல்லிட்டிங்க... ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணிட்டாங்கன்னா?"

பிரகாஷ் யோசித்தான். என்ன பதிலளிப்பது என்று அவனுக்குப் புரியவில்லை. அவன் மனைவி முருகனைக் கும்பிடுவதும், அவன் அதற்காக கிண்டல் செய்யும் போதெல்லாம் 'கந்தனை நம்பினவங்க கைவிடப் படமாட்டாங்க. குறிப்பாய் பெண்கள் அவனைக் கும்பிடணும். எந்த அயோக்கியனும் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட முடியாது" என்று அடிக்காத குறையாக அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது.

பிரகாஷ், அந்தச் சமயத்தில் ஏதாவது பொருத்தமாகச் சொன்னால்தான், வசந்தியின் சிநேகம் கெட்டியாகும் என்று நினைத்தவன்போல், "பேசாமல் கந்தசாமி கோவிலுக்குப் போ. சாமியை நல்லாக் கும்பிடு. எந்த அயோக்கியனும் உன்கிட்ட வாலாட்ட முடியாது" என்றான்.

"அப்புறம் நாம நாளைக்கு மகாபலிபுரம் போறோம். ஞாபகம் இருக்கா?"

"மறக்கக் கூடிய விஷயமா? ஆனால் பயமாய் இருக்கு..."

"நான் ஜென்டில்மேன். உனக்கு வேண்டான்னா வேண்டாம்."

"நினைச்சிட்டோம். போயிட்டு வந்திடுவோம்... பாரிஸ் பஸ் ஸ்டாண்ட்தானே!"

வசந்திக்கு, திருமணமான அவனுடன் மகாபலிபுரம் போய், மேலும் அதிகச் சலுகைகளை அவன் எடுத்துக் கொள்ள அனுமதிப்பது சரியாகத் தெரியவில்லைதான். வருங்காலக் கணவனுக்குத் துரோகம் இழைக்கிறோமே என்ற எண்ணமும், இன்னொரு பெண்ணின் வாழ்க்கையில் குறுக்கிடுகிறோமே என்ற தவிப்பும், அவள் இதயத்தை மாற்றி மாற்றித் தாக்கின. ஆனால் அவன் நட்பில்லாமல் இருக்க முடியாதுபோல் அவளுக்குத் தோன்றியது. மகாபலிபுரத்தில் அவன் அதிகப்படியான சலுகைகள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. அதேசமயம், தன் குடும்பக் கஷ்டங்களை எல்லாம் சொல்லி அவனிடம் அழ வேண்டும்.

அலுவலகம் முடிந்ததும், அவள் வள்ளலார் பாடிய கந்தசாமி கோவிலுக்குப் போனாள். பலதடவை கோவில்களுக்குப் போயிருந்தாலும், இப்போது தான் முதல் தடவையாக அவளுக்குப் பக்தி, ஒரு பெர்ஸனல் விஷயமாகத் தெரிந்தது. முருகன் அவள் அருகிலேயே இருப்பதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது. அவன், எந்தத் தீங்கையும் அனுமதிக்க மாட்டான் என்று ஒரு நம்பிக்கை பிறந்தது. சுற்று முற்றிலும் மொய்த்த பக்தர்கள் கூட்டத்தில் தானும் ஒரு அங்கம் போலவும், தானே ஒரு மாபெரும் கூட்டம் போலவும் அவளுக்குத் தோன்றியது.

பிரகாஷ், ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் பஸ் நிலையத்தில் அவளுக்காகக் காத்து நின்றான்.

ஆனால் வசந்தி வரவில்லை. வரவே இல்லை.

மறுநாள், அவளை அலுவலகத்தில் பார்த்தபோது, எடுத்த எடுப்பிலேயே, "நேற்று ஏன் வர்ல?" என்றான்.

வசந்தி, அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். "கந்தசாமி கோவிலுக்குப் போனேன்."

"வசந்தி! எப்படியாவது இன்றைக்கு மகாபலிபுரம் போயாகணும்."

"எப்பவும் போக வேண்டாம். பேசாமல் உங்கள் மனைவி பிள்ளைகளோட போய்ட்டு வாங்க."

"அது நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா?"

வசந்தி, அவனுக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், அவனை ஒரு அயோக்கியனைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். பிறகு நிதானமாக நடந்து தனது இருக்கையில் அமர்ந்தாள்.

குமுதம், 12-5-1977

# ஆகாயமும் பூமியுமாய்...

அழகும், ஆபத்தும் அருகருகே இருக்கும் என்பதை அறிவுறுத்துவது போல், அந்தச் சாலையின் ஒரு பக்கம் புதர்களும், பொந்துகளுமாய் மண்டிக் கிடக்க, இன்னொரு பக்கம் மாடிக் கட்டிடங்கள் கூடிப் பேசுவது போல் நெருக்கமாய் நின்றன. அழகுதான் ஆபத்து என்பது போல் எத்தனையோ உயிர்களை விபத்துக்களால் விழுங்கிய அந்தச்சாலை, விசாலத்தோடும், கண்ணைப் பறிக்கும் கறுப்பு நிற வண்ணத்தோடும், மத்தியில் கூம்பு வடிவத்திலான மஞ்சள் வெள்ளை கோடுகள் போட்ட சிமெண்ட் பாளங்களோடும் நிலவொளியில் மின்னியது. இரவு கன்னிமை கழிந்து, பகலென்னும் சேயைப் பிரசவிக்கக் கூவுவதைக் காட்டுவது போல், புதர் பகுதியில் ஆந்தைகள் அலறின.

எதிர்ப்புறத்தில் அமைந்த சிங்காரப் பகுதியில் இதையே எடுத்துக்காட்டுவது போல, இரவுக் காவலர் ஒருவர் பூண்போட்ட கைக்கம்பால் தரையைத் தட்டியபடி விசிலால் ஊதிக் கொண்டிருந்தார். அவர் கையில் வைத்திருந்த விளக்கு அலறுகிற ஆந்தையின் கண்ணைப் போல மின்னியது. ஒரு பகுதியில் நிலவொளியைப் புதர்கள் விழுங்கிக் கொண்டிருந்தன. இன்னொரு பகுதியில் கார்ப்பரேஷன் வெளிச்சத்தை 'கரப்ஷன்' விழுங்கிக் கொண்டிருந்தது ஒன்றில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்கான தடயங்கள். இன்னொன்றில் தெரு

முனையில் வீசியெறியப்பட்ட விஸ்கி வகையறா பாட்டில்கள்.

சிங்காரப் பகுதியிலிருந்து உடலாலும், கூனிக்குறுகிய உருவம் ஒன்று முக்காடு போட்டபடி, சாலையைப் பார்த்து நகர்ந்து கொண்டிருந்தது. நான்கடிக்கு ஒரு தடவை நின்று நின்று, திரும்பிப் பார்த்தபடி, விருப்பத்திற்கு விரோதமாக, ஏதோ ஒரு அசுர சக்தியால் தள்ளப்பட்டது போல் நடந்து கொண்டிருந்தது. தொலைவில் கேட்ட விசில் சத்தம், தனக்காக இருக்குமோ என்று சந்தேகப்பட்டது போல், மரங்களுக்கு மறைவில் நின்று கொண்டது. கையில் ஒரு பை. மெய்யில் பை போன்ற பழுப்படைந்த ஆடை. விளக்கு எரிந்தாலும், எரியாவிட்டாலும் தன் கண்களுக்கு அது ஒன்றுதான் என்பதுபோல், பல்பு போன கம்பத்திற்கு அருகே வரும்போதும் சரி....... அந்த உருவம் தட்டுத் தடுமாறியபடியே திட்டில் ஏறுவது போல் காலை உயரமாய்த் தூக்கி வைத்தபடியே நகர்ந்து கொண்டிருக்க:-

எதிர்ப்புறத்துப் புதர் பகுதியிலிருந்து காலில்தான், கண்ணிருப்பது போல் தலை முடியை முக்காடு போல் சுருட்டி வைத்துக் கொண்டு இன்னொரு உருவம் நடந்து கொண்டிருந்தது. கருவேல மரக்கிளைகளை விலக்கியபடி, பொந்துகளுக்குள் சிக்கிய கால்களை லாவகமாக எடுத்தபடி, கூக்குரலிட்ட ஆந்தைகளை சட்டை செய்யாதபடி, கண்ணுக்கு நேராய்ப் பாய்ந்த வெளவால்களைத் தலையை ஆட்டியே துரத்தியபடி, தலைவிரி கோலமாய்த் தான் நடத்தது.

இரண்டு உருவங்களும் சாலையின் இரு புறத்திலும் நின்றபோது, ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு, சற்று பின்வாங்கப் போயின. புதர் பகுதியில் இருந்து தோன்றிய உருவம், எதிர்ப்புறத்து உருவத்தை அதட்டப் போனது. பிறகு என்ன நினைத்ததோ தெரியவில்லை, அருகில் இருந்த பஸ் ஸ்டாப்பின் சிமெண்ட் பெஞ்சின் முனையில் உட்கார்ந்து கொண்டது. எதிர்த்திசை உருவம், சிறிது

தயங்கியது. சிறிது பின் வாங்கி, பின்னர் மெள்ள மெள்ள முன் வாங்கியது. சாலையின் நடுப்பகுதிக்கு வந்து, கொட்டும் பனியில் எந்தப்பக்கம் போகலாம் என்பதுபோல், அங்குமிங்குமாய்ப் பார்த்தது. நட்டநடு இரவில் கொட்டும் பனியில் - அதுவும் அந்த பஸ் ஸ்டாப் பின் பக்கமாக வந்து, சிமெண்ட் பெஞ்சின் இன்னொரு முனையில் உட்கார்ந்து கொண்டது. அதட்டப் போன புதர் உருவம், அப்படித் செய்யத் தனக்கு அதிகாரமில்லை என்று நினைத்தபடி மெள்ள வினவியது.

"யாரது?"

பதிலில்லை.

"அட.... யாருன்னேன்.... அட ஒன்னத்தான்.... பதில் சொன்னா.... குறைஞ்சா.... பூடுவே.... நீ யாரு.....?"

கேட்கப்பட்ட உருவம், கேட்ட உருவத்தை ஏறிட்டுப் பார்த்தது. சிறிது ஆறுதல் பட்டது. பின்னர் லேசான குரலில் கனத்த வார்த்தைகள் வைத்தது.

"இதே கேள்வியைத் தான்..... நானும் இத்தனை நாளாய் நேக்கு நானே கேட்டுண்டு வந்தேன். அப்போ ஆத்துக்காரர்.... ஜடமுன்னார்.... மாமியார் அசடுன்னனார்.... அப்புறம், பிறந்தாத்துல... நாத்தனார் வாழா வெட்டின்னாள்.... அண்ணா சனியன்னான்.... அவனோட பசங்க கூனி அத்தேன்னான்... இவாள்... அத்தனே பேரும் நான் கேட்காமலே என்னையார்னு சொன்னாள். இவாள் சொன்னதுல, நான் எதுல சேத்தின்னு நேக்குப் புரியல்லே ஒரு வேளை அத்தனையிலும், சேத்தியாய் இருக்கலாம். நான் யாருன்னு நேக்கே தெரியல. அதனாலதான் பகவான்கிட்டே கேக்கலாமுன்னு நம்பி அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுட்டேன்."

புதர் உருவம் சிறிது நேரம் பேச்சற்று, பேசிய உருவத்தைப் பார்த்தது. பிறகு, மெல்ல மெல்ல,

எதிர்முனைக்கு நகர்ந்து அந்த உருவத்திற்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டே பேசியது.

"இது இன்னாடா பேஜாரு..... இந்த எல்லம்மாதான் படாத பாடு படறதா நெனச்சேன். என் கதைதான் ஒன் கதையா. ஐயரம்மாவுக்குக் கூட இந்த நெலமயா? நான் என்னோட ஜாதிலதான் வயசானவங்கள... முண்ட மூதேவின்னு திட்டித் துரத்துவாங்கோன்னு நெனச்சேன்.... கட்சில..... ஒன் இதுலகூட..... அட மாரி.... அடுத்த ஜென்மத்துல பிறந்தா ஒன் குடில பொறக்கணும். அப்போ தான் வயசான காலத்துல நல்லா கீலா முன்னு நெனச்சேனே..."

"லோகத்துல எப்படியோ... நம்மோட தேசத்துல... வயசானவாள், தம்பிடிக்குப் பிரயோசனம் இல்லேன்ன தெரிஞ்சுண்டா அவாள தள்ளி வைக்கிறதுல ஜாதி வித்தியாசம் கிடையாது. நீ, பிராமண குடில ஜென்மம் எடுக்கணும்னு நினைச்சது மாதிரி, நேக்கும் ஒரு ஆசை... அடுத்த ஜென்மத்துல சேரில பிறக்கணுமுன்னு நெனச்சேன். உதைச்சாலும், சேரில அவமானப்படுத்தணும்னு நோக்கம் இருக்காது. உதைப்பான். ஆனா ராத்திரியில 'அம்மா சாப்புடுமான்னு கெஞ்சுவான்'. ஆனா என்னோட 'இதுலே' ஒரு தடவ அசடுன்னு பட்டம் வாங்கிட்டா.... அப்புறம் அந்தப் பேர் வாங்கினவாளுக்கு எவ்வளவு ஆயுள் கெட்டியோ... அந்த அளவு அந்தப் பட்டமும் கெட்டியாய் நிக்கும்."

"நீ வேற... மகாமாயிகிட்டே சேத்துக்கோன்னு கேளு.... இல்லன்னா.... இனிமேல் கஷ்டப்படாம பொறக்கணும்னு கேளு.... ஆனால் சேரில.... பொறக்கணும்னு மட்டும் கேட்காத... கேட்கப்படாது."

"இப்பக் கூடத் தெளிவா சொல்றேன். ஒன் உடம்பில் நானும், என் உடம்புல நீயும் பாயணுமுன்னு பகவான் இப்போது சொன்னகூட சரி, நேக்கு சந்தோஷமாய் இருக்கும்".

"ஆமாம். தெரியாமத்தான் கேக்கேன்? எத்தனை பிராமணத்திங்க என்னை மாதிரி வேண்டாம்..... ஒன்ன மாதிரி இப்டி தெருவுல நிக்கறாங்க? இந்த எல்லாம்மாவுக்குப் பதில் சொல்லு பாக்கலாம்."

"இங்கே தான். தப்பு செய்யுறே... எல்லம்மா.... பிராமண ஜாதி பொண்ணுங்க தெருவுக்கு வராம இருப்பது ஒரு துக்கமான விஷயம். ஒங்கள்ல வயசான கிழம் கூட எல்லாத்தையும் உதறிப் போட்டுட்டு, எப்படியோ பிழைப்பு பண்ண முடியும். ஆனால் எங்க இதுல... என்னை மாதிரி வயசான பெரியவாளும், வயசுலேயே ஆம்படையானப் பறிகொடுத்துடுற விதவைங்களும் வாழாவெட்டி பொண்ணுங்களும், வீட்டுக்குள்ள கிட்டத்தட்ட சிறை வாசம் தான் செய்யணும். லோகத்துல அவாளுக்கு ஒரு வேலையும் தெரியாது. அதனாலே வெளியேற பயம். அதனால் எத்தனையோ ஆத்துல.... இவாளுக்கெல்லாம் சாட்சாத் சிறைவாசந்தான். இவங்களோட நிலைமைக்கும், ஜெயில் வாசத்துக்கும் வித்தியாசம் இருக்குறதா நேக்கு தோணல. ஜெயிலுலயாவது நூறு பேரோட பழகலாம். விதவிதமான குற்றவாளிகளை மாறி மாறிப் பார்க்கலாம். ஆனா இவங்களோட சிறைவாசம் ஒரு சின்ன ரூம். அவாள் பாக்கறதும் ஆயுள் முழுவதும் ஒரே விதமான குற்றவாளிங்கதான். நான் ஒனக்கும் சேர்த்தியா பேசறேன். அடுத்த ஜென்மம் வேண்டாமுன்னு பகவான்கிட்டே கேளு. அப்படியே ஜென்மம் வந்தாலும் என்னோட வம்சத்துல வேண்டாமுன்னு கேளு."

"நீ சொல்றதும் எனக்கு ஒருவகையில... சரிதான் போலத் தெரியுது. ஒங்க இதுல சிறைவாசமுன்னா-எங்க இதுல இந்த மாதிரி பொம்மனாட்டிங்க நெலமை.... வேற மாதிரின்னாலும், விஷயம் ஒண்ணுதான்.... அதாவது கல்... மண்ணை உடைக்கிற கடுங்காவல் தண்டனை.... அப்புறம் அந்தத் தண்டனையில் இருந்து தப்பிக்கறதுக்காக.... கண்கணாத இடத்துக்கும் போற நிலைமை. ஜெயிலுல

இருந்து தப்பறவன்.... போலீஸ்காரங்க கிட்ட மாட்டிக்காம இருக்கறதுக்காக.... எப்படி அலைவானோ, அப்படிப்பட்ட நெலமை... அவங்க குற்றம் செய்துட்டு, அப்படி அலையுற நெலமை..... இவங்க பிறத்தியார் குற்றத்தால விளையுற நெலமை.... சரியா சொன்னே... நீ ஜெயிலுல இருந்து தப்பிச்சுக் கடுங்காவல் தண்டனை கிடைக்குமான்னு பாக்கே... நானு கடுங்காவல் தண்டனியில இருந்து தப்பிச்சு... ஜெயிலு கிடைக்குமான்னு பாக்கேன்."

''என்ன பண்ண முடியும்? நம்மோட உடம்ப மாத்திக்கலாம். ஆனால் உழப்பை மாத்திக்க முடியாதே. அவாள் ஒன்ன அங்கே சேக்க மாட்டா... இவாள் என்னை இங்க... சேக்க மாட்டா. நேக்கு கடுங்காவல் தண்டனையில ஆச இருந்தும் அனுபவமில்ல. எப்படியோ போட்டும்.... ஒன்னோட இது..... திறந்த வெளி ஜெயிலு... என்னோட இது திறக்காத ஜெயிலு... மொத்தத்துல ஜெயிலு ஜெயிலுதான்... சரி ஒன்னோட ராமாயணத்தைச் சொல்லு... நான் அப்புறம் என்னோட பாரதத்தை ஒப்புக்கிறேன்."

தோலுரித்த கருணைக் கிழங்கு போல் தோன்றி தன் வயது மூதாட்டியின் முகத்தையே எல்லம்மா பார்த்தாள். மேலும் சிறிது நெருக்கியடித்து அவள் பக்கமாக உட்கார்ந்து கொண்டாள். சிறிது யோசித்தாள். பிறகு மடமடவென்று புலம்பினாள்.

"நல்ல வேளையா.... கேட்டே.... சாகுறதுக்கு முன்னாடி யாரண்டாயாவது சொல்லிட்டுச் சாகணும்னு நெனச்சேன். மாரிமகமாயி..... வாழத் துவங்குறப்போ இருந்த ஆசையை... முடிக்காட்டியும்.... இப்போ சாகத்துவங்கறப்போ தோணுற ஆசையை முடிக்க ஒன் மூலம் வந்துட்டா."

எல்லம்மா தொடர்ந்தாள்.

''இருபது வயசுல கல்யாணம். மொதல்ல ஒரு பொண்ணு. பிள்ளையாண்டான் பொறக்கணுங்கற ஜோரில்... "அதுவும்" நானுமா, பெத்ததுல, அடுத்தடுத்து

மூணு பொம்மனாட்டிங்க... அஞ்சாவது பிள்ளை... பொண்ணுல, ரெண்ட., மகமாயி வாரிக்கிட்டா... மூணாவதா... ஒரு கஸ்மாலம்... டெல்லிக்கோ... சிங்கப்பூருக்கோ சொல்லாம கொள்ளாம பூட்டான். கட்சி பொண்ணும்... கட்சி பிள்ளயும் தங்குனப்போ... ஆம்புடையான் தங்கல... நாப்பது வயசில.... துள்ளத் துள்ளத் துடிக்கச் செத்துட்டுது. நானு கூலிவேல பாத்து, பிள்ளைங்கள காப்பாத்துனேன். இப்போ மவனுக்கு பல்லாவரத்துல வாட்ச்மேன் வேல... இத்ந வேலய நான் தான் வேலபாக்குற ஒரு வீட்டு ஐயா கிட்ட சொல்லி வாங்கிக் குடுத்தேன். பொண்ண காலுல கையிலே பூட்டி கல்லாணம் பண்ணுனேன். அப்புறம்.... இப்போதான் ராமாயணம் துவங்குது."

எல்லம்மா பெருமூச்சு விட்டதில் அவள் பஸ் ஸ்டாப் சிநேகிதியின் புடவை ஆடியது; வார்த்தைகளைப் பிரசவித்துக் கொண்டே இருந்தது

"ஆறு வீட்ல வேல பார்த்தேன். காலங்காத்தால... பாத்திரம் தேய்க்கணும்.. வீட்டக் கூட்டணும்.... மாசம் வீட்டுக்குப் பதினாலு ரூபா... சாப்பாடு சௌரியம். எந்த வீட்லயாவது கெடச்சுது... இதனால மாசம் நூறு ரூபா குதிரிச்சுது. பிள்ளாண்டான்... அதை எடுத்துக் குடிச்சான். அடடே.... நம்மம பணமே மவனுக்கு எமனாவபடாதுன்னு ஒருநாள்... அவனைத் 'திட்டம்' பண்ணுனேன். அன்னிக்குப் பாத்து ஆம்புடையான் அனுப்புனான்னு கைய சொரிஞ்சிகினு மவள் வந்தாள். அவள் கையில நூறு ரூபா வச்சேன். பிள்ளாண்டான், "இன்னாமே, ஒனக்கு பொண்ணுதான் ஒஸ்தியா... நான் கேட்டால் திட்டுறே... அவள் கேட்டா கொட்டுறேன்னு" சொல்லிட்டு, "என் வீட்ல இருக்காதம்"மன்னு கயித்தப் பிடிச்சு வெளியே தள்ளினான். ஒன்னோட வாரேம்மான்னு மகளண்ட சொன்னேன். அவள் யோசிப்பது போல் தாடையை தூக்கினாள். சரி... கொண்டான் கொடுத்தாங்கிட்ட

வாணாமுன்னு..... வேற இடத்தில தனியா குடிசை போட்டேன். பத்து வருஷமா பணஞ்சேத்தேன். பிள்ளயாண்டானும் பொண்ணும் அவ்வப்போ வந்து... பணம் வாங்கிக்கினு போவாங்க..... நல்லது கெட்டதுக்கு நானும் போவேன். பேத்திங்க... காலுல, கொலுசு போட்டேன். பேரங்க.... கையில மோதிரம் போட்டேன்... ஆனால்..."

"ஆனா..... ஒரு மாசமா உடம்புக்கு முடியல.... அப்போ பாத்துக் கையில இருந்த முந்நூறு ரூபாய வண்டில போய் இஸ்திரி போடுற பாபு.... "கடனா தா, அடுத்த வாரம் தரேன்னான்". குடுத்தேன்... ஓடிட்டான்... உடம்பு சொல்றத கேட்கல்லே... கையில பணமில்ல... வேல பாக்குற வீட்டுக்காரங்க ஒடம்ப குணப்படுத்திட்டு வான்னு கூட சொல்லலே... ஏதோ எனக்கு சலுகை பண்றது மாதிரி "வேற ஆள நீயே சொல்லு.... நாங்க அமர்த்திக்கிறோ'முன்னு சொன்னாங்க... எனக்கும் முடியல.... பிள்ளவூட்டுக்குப் போனேன்.... கையில பணமில்லன்னு தெரிஞ்சுகிட்டான். அதென்னமோ நம்மோட கையில... பணம் இருக்கறதையும் இல்லாததையும்.... நம்ம சொல்லாமலே ஜனங்க தெரிஞ்சுக்கிறாங்க..... சரி எதுல விட்டேன்?"

"மகன் வீட்டுக்குப் போனேன்னே.."

"போனேனா..... அவனும் அவனு சம்சாரமுமாய் "ஒனக்கு யாரு ஒஸ்தியோ அங்க போன்னு கத்தினாங்க..." சொம்மா சொல்லப்படாது.... பிள்ள அடிக்கவர்ல. அடிக்க வந்த சம்சாரத்த தடுக்கல.... அவ்வளவுதான்.... சரின்னு 'ஒஸ்தி' வீட்டுக்கு வந்தேன். அதான் பொண்ணோட வீட்டுக்கு.... 'ஆத்தா ஆத்தா'ன்னு மகள் காலைப் பிடிச்சா. மருமகன் கையைப் பிடிச்சான். இப்படி பிடிச்சப்போ ரெண்டு பேருமா... என்னோட இடுப்புல..... காசுப்பை இல்லாததைப் பாத்துட்டாங்க போல.... ரெண்டு நாளு பேசல. மூணாவது நாளு மூஞ்சு காட்டுனாங்க. அப்போ பாத்து உடம்புக்கு ரொம்ப முடியல. வெளில படுத்தேன். 'ஒஸ்தி' பொண்ணு

வந்து 'ஒண்க்கு தலையணை வேற கேக்காமே'ன்னு சொல்லிக்கினு அதை எடுத்தாள். நான் எழுந்தப்போ.... மருமகன் பாயைச் சுருட்டினான். சுருட்டுனவன் கைய பாத்தேன். அதுல நான் போட்ட மோதிரம்! மகளோட மொகத்தப் பாத்தேன். என்னமாதிரியே மொகம்! இன்னா பண்றது? அப்டியே பொறப்பட்டேன். அவங்க வான்னும் கூப்புடல... போன்னும் பேசல. நானு பாட்டுக்கு நடந்தேன். இப்போ இங்க நிக்கறேன். இனுமே எங்க நிக்கப் போறேனோ.... சரி... என் ராமாயணம் போதும்... ஒன்னோட பாரதத்தைச் சொல்றியா?"

"ஒன்னோட கதை... ராமாயணம்தான். உத்ர காண்டத்துல... சீதே நின்னதுக்கும் நீ இப்போ நிக்கறதுக்கம் வித்யாசமில்ல. காரணம் வேறுதா இருந்தாலும், அவாள் செய்த காரியம் ஒண்ணுதான். ஒன் கஷ்டத்துல.... என் கஷ்டம் பெரிசாத்தோணல.... விட்டுத் தள்ளு."

"அப்டி சொல்லப்படாது... நம்மளால.... சந்தோஷத்தான்... பங்குபூட முடியாட்டியும்.... கஷ்டத்தையாவது பங்கு பூடலாம்... அம்மா!"

"என் பெயர் விசாலம்... சும்மா பெயர் சொல்லிக் கூப்பிடு."

"அது அப்பால... இப்போ ஒன்னோட கதையைப் பிட்டுப்பிட்டு வை"

விசாலம் மாமி, பஸ் ஸ்டாண்ட் தூணோடு துரும்பு போல ஒட்டிக்கொண்டாள். பாதிக் கண்ணை மூடிக்கொண்டாள். இடது காலைத் தூக்கி, பெஞ்சில் வைத்துக் கொண்டு அதன் மேல் மொவாயைச் சாய்த்துக் கொண்டே அரற்றினாள்.

"கழுத கூட, குட்டியாய் ஜனிக்கும் போது, அழகாய்த் தோணும்.... ஆனால் நான் அப்டில்ல. இப்போ எப்டி இருக்கேன்னோ... அப்டித்தான் அப்போவும்

பாக்குறவளுக்கு பட்டேன். அதாவது இதே கூனு... இதே கூம்புன மொகம்... இதே ஓணான் உடம்பு. இன்னும் சொல்லப்போனால்.... இதவிட கோரம்... ஏன்னா இப்போ முன் பல்லு ரெண்டு விழுந்துட்டு.... அப்போ இது ரொம்ப நீண்டு கொஞ்சம் அகோரமாய்த் தோணிச்சுது. அப்படியும் எனக்கு பகவான் மாங்கல்ய பாக்கியம் கொடுக்கத்தான் கொடுத்தான். கிராமத்துல... தோப்பனார் சீர்வரிசையோட தான் என்னைக் குடுத்தார். ஆத்துக்காரர் நான் பிடிக்கலன்னார்..... எப்போ தெரியுமா? ரெண்டு பசங்க பிறந்த பிறகு! அப்போதான்.... அவருக்கும் ஒருத்தி கிடைச்சாள்..... பூஜையை முடிச்ச கையோடேயே எனக்கும் பூஜை கொடுப்பார். சகிச்சிக்கிட்டு இருந்தேன்.

ஆம்புடையான் கிட்டே அடிப்படுறதை அவமானமா நினைக்கல.... ஆனா உடம்பால அவரோட அடிதடிய தாங்கிக்க முடியல.... கிராமத்துல.... தோப்பனார்கிட்ட வந்தேன். சின்ன வீடு. கூடப்பிறந்தவாள் ரெண்டு பேரு.... அண்ணாவும் மன்னியும் சந்தோஷமாயிருக்கட்டு முன்னு.... ஒரு கட்டை வண்டிக்குக் கீழேயே காலத்தக் கழிச்சேன். அப்புறம் தோப்பனார் காலமாகிவிட்டார்.... அம்மா... எப்போவோ சிவலோகம் சேர்ந்துட்டாள். மன்னி கரிச்சுக் கொட்டினாள். 'கரிச்சா வந்து, எல்லாம் கரியாச்சுன்னா... 'ஆம்புடையான்கிட்ட ஒழுங்கா குடித்தனம் பண்ணினால் தானே நோக்கு... கடுகு விலை தெரியும்... இல்லன்னா இவ்வளவு தாளிப்பியா'ன்னு பொறிவாள். பயத்துல பல்லைக் கடிச்சேன். அவளுக்கு மடின்னா எனக்கு நிம்மதி.... சமையல் அறைக்கு வரமாட்டாள் பாரு...."

"இதுக்குள்ள தம்பி பெரிசாயிட்டான். இங்கேதான் வேல.... அவனுக்கு இங்கே வந்து சமையல் செஞ்சுப் போட்டேன். அப்புறமா கல்யாணம் நடந்தது. அவன் ஆத்துக்காரி.... ரொம்ப ரொம்ப நல்லவள்..... என்னை நல்லா வச்சிருந்தாள்..... நிறையும் தெரியல... குறையும் தெரியல... வருஷம் ஆகிக்கிட்டுப் போனது கூட தெரியாம... வருஷம்

நாள் எங்கிறதுல்லாம்... நம்மோட சௌகரியத்துக்காக வச்சிருக்கிறதுதானே... சௌகரியம் இல்லாதவாளுக்கு அதெல்லாம் எதுக்கு? தம்பி செத்த வருஷம் தான் ஞாபகம் வருது. சரி கதைக்கு வரேன்."

விசாலம் மாமி கண்களை மூடியபடியே ஆடாது அசையாது கிடந்தாள். எல்லம்மா ஒரு உலுப்பு உலுக்கிய பிறகே கண் திறக்காமல் வாய் திறந்தாள்.

"தம்பி மகனுக்கு போன வருஷம் கல்யாணம் நடந்துது. அவன் ஆத்துக்காரி வெளில எல்லார்க்கும் நல்லவள். ஆனால் வீட்டுல அவளோட ஆட்டம் மகாமோசம். அவளுக்கு மாமியார் பிடிக்கல..... அவளை நோகடிக்க என்னைத் திட்டுவாள். இரண்டு பேருக்கு தண்டச் சாப்பாடுன்னு குதிப்பாள். 'ஒங்களுக்கு புத்தி இருக்கா'ன்னு என்னைக் கேட்டுக்கொண்டே, மாமியாரை ஓரக்கண்ணால் பார்ப்பாள்..... சரி.. மாமியாரை அவள் நேரடியாய்த் திட்டாமல் இருக்கறதுக்கு.... நாம இருக்கோம். நாமும் போயிட்டா. பாவம், தம்பி ஆத்துக்காரி தவிப்பான்னு பொறுத்துண்டேன். ஆனால், ஒருநாள், அந்தப் பொண்ணு 'இந்த வீட்ல ரெண்டு பேருக்குச் தண்டச்சோறு போட முடியாது. ரெண்டுல ஒருத்தர ஒங்க கிராமத்துல... பெரிப்பாகிட்ட அனுப்புங்க... இப்பவே ரெண்டுல ஒண்ணு தெரியணும்னு குதிச்சாள். தம்பி மகன் என்னை நேருக்கு நேரா பாத்தான். வாய் சொல்லத் தயங்கிவதைக் கண்ணு சொல்லிட்டு... சரி... இவாள் என்னோட ஓரப்படியாள நன்னா வெச்சிகட்டுமுன்னு, இன்னைக்கு ராத்திரியோடு ராத்திரியாய் புறப்பட்டேன், நேக்கு எல்லாமே வெறுமையா.... இருக்கு... தனியாய் வாழ்ந்து பழக்கமில்ல...""

எல்லம்மா, விசாலத்தையே உற்றுப் பார்த்தாள். பிறகு தன்னை அறியாமலே அவள் கையைப் பிடித்து ஆற்றுப் படுத்தியும், ஆறுதல் தேடியும் பேசினாள்.

"அடி ஆத்தே..... இந்தச் சின்னஞ் சிறு உடம்புக்குள்ள எம்மாம் பெரிய கதை நடந்திருக்கு... எப்படியோ நீ

வாழாமல்கெட்டே. நான் வாழ்ந்து கெட்டேன். நாம வாழ்ந்தது வாழ்வுல்ல. சும்மா பொளப்பு. போவட்டும், ஒன்னால என்ன மாதிரி இருக்க முடியாது. இது சேறு கண்ட இடத்ல மிதிச்சு, தண்ணி கண்ட இடத்ல கழுவுன கட்டை. நீ அப்படியில்ல. வா... நானு ஒன்னை ஒன் தம்பி மவன் கிட்டக் கூட்டிக்கினு போய், அவரை நாக்கைப் பிடுங்கிக்கிறாப்போல ரெண்டு கேள்வி கேக்குறேன் கண்டிப்பா சேத்துக்குவான். உம் புறப்படு."

"நானும் இதையே வேற விதமா நெனச்சேன். நான் சமையல்ல நளபாகம் தெரிஞ்சவள். எப்படியோ பிழைச்சுக்குவேன். அதோட, நான் புறப்பட்ட வீடு உறவுன்னாலும் அவாள் ஓரளவு அந்நியாள்தான். ஆனால் ஒன் நிலம அப்படி இல்ல. ஆயிரந்தான் நடந்தாலும், அவள் ஒன் மகள். ஒன்னோட ரத்தம்.... எழுந்திரு எல்லம்மா.... ஒன்னக் கூட்டிடுண்டு போய், ஒன் மகன் கிட்டே விடுறேன். நன்னா நாலு கேள்வி கேக்கறேன். தட்டமாட்டாள். ஏனா பிராமண ஜனங்கள, சேரி ஜனங்க நன்னாப் புரிஞ்சுகிட்ட காலம் இது..... புறப்படுவோமா?"

"வாணாம்மா..... உடைஞ்ச கல்லு ஒட்டாது. நான் கொஞ்சம் வைராக்கியக்காரி."

"நானும் அப்படித்தான். என் பையங்க ரெண்டு பேரும் பெரியாளாகி இப்போ திருச்சில வேல பாக்கறதாய்க் கேள்வி. நான் இங்க இருக்கறத அவாள் தெரிஞ்சுண்டு இருப்பாள். இருந்தாலும் அம்மாவாச்சேன்னு எட்டிப் பாக்கல. போனா, வளத்த கடமைக்கு இல்லாட்டாலும், பெற்ற கடமைக்கு உதவுவாள். ஆனாலும், நேக்கு இஷ்டமில்ல. அம்மான்னு ஒருத்தி இருக்கான்னு நினைக்காத பிள்ளைங்ககிட்ட என்ன வேண்டியிருக்கு!"

"ஒன் பிள்ளைங்கள ஒன்னால மறக்க முடியுதா?"

"இந்த பாரு எல்லம்மா! இந்த மாதிரி எல்லாம் என்னைச் சோதிக்காதே."

"நான் இன்னா சொல்லிட்டேன். என் இப்படிப் பதறுறே.. என் மகன் ஊதச்சான். மகள் துரத்தாமல் துரத்தினாள். அப்டியும் அவங்க மேலே இருக்கிற பாசம் எனிக்கிப் போக மாட்டேங்கு.... பாழாப் போன மனசு கேக்க மாட்டேங்குது. ஒனக்கும் அப்படியான்னு தெரிஞ்சுக்கக் கேட்டேன்."

"என் தம்பி மருமகள் அந்நியம். என்னோட சமையல் அனுபவமும், அவளோட வயசும் ஒண்ணு. கண்டபடி என்னைக் கரிச்சுக் கொட்டறவளானாலும்கூட சின்னஞ்சிறுசு. விட்டுட்டுப் புறப்பட்டுட்டோமேன்னு நேக்கு மனசு கேக்க மாட்டேங்குது. பெத்த பையன்கள எப்படி மறக்க முடியும்? ஆனால் ஒன்னோட மனசும் என்னோட மனசும் யாருக்குப் புரியும்? எதையும் ஆதாயம் இருந்தால்தான் புரிஞ்சுக்கறதுன்னு கங்கணம் கட்டிக்கிட்ட கலியுகமாச்சே இது."

இரு மூதாட்டிகளும் சிறிது நேரம் பேசவில்லை. இருவரும் தத்தம் பிள்ளைகளிடம் சஞ்சரித்தார்கள். புறப்பட்ட இடங்களைத் திரும்பிப் பார்த்தபடியே நெடிய மௌத்தில் சிக்கினார்கள். பிறகு அந்த மௌனப் புதை மண்ணில் இருந்து விடுவட்டவர்களாய், தலைகளைத் திருப்பி, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். விசாலம் ஆகாயத்தையும் பூமியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள். திடீரென்று மெய் சிலிர்க்க எழுந்து நின்று, எல்லம்மாளின் கரங்களைப் பிடித்துக் கொண்டே தாங்க முடியாத வேகத்தில் பேசினாள்.

"இப்ப எனக்கு ஒரு எண்ணம் தோணுது. சிரிக்காமல் கேளு..... பகவான் கிட்ட எனக்கு முத்தி கொடுப்பா..... பிறவியை அறுப்பான்னு கேட்டுப் பிராத்தனை செய்தவள் நான்.... ஆனால் அதுக்கு இப்போத்தான் தகுதி வந்திருக்காப்பல தோணுது..... இந்த க்ஷணத்துல பிள்ளைங்க தோணல. உறவு தோணல. இந்த லோகத்துல இருக்கிற அத்தனை மக்களும் நான் பெத்த பிள்ளைங்களாய் எனக்குத்

தோணுது. இப்படி நினைக்க நினைக்க எவ்வளவு சந்தோஷமாய் இருக்குது தெரியுமா?"

எல்லம்மாக் கிழவி சிறிது நேரம் பேசவில்லை. மேலும் கீழுமாகப் பார்த்தாள். பிறகு விசாலத்தைப் பார்த்துவிட்டுத் துள்ளிக் குதித்தாள். துக்கத்தில் உதித்த ஆனந்தத்தோடு அவளும் கத்தினாள்.

"நமக்குள்ள எவ்வளவு ஒற்றுமை பாரு.... சத்தியமா அடிச்சி சொல்றேன். இதே எண்ணந்தான் எனக்கும் வருது. வாழ்க்கையில எவ்வளவோ நல்லதும் கெட்டதும் அனுபவிச்சோம். இப்போ மிஞ்சி நிக்கறது வெறும் நெனப்புத்தான்.... குடும்பத்துக்குள்ளேயே.... விடுற இந்த நெனப்ப ஏன் பூலோகத்துல விடப்படாதுன்னு நெனச்சேன். மனசுல ஏதோ ஒண்ணு தட்டுப்படுவது போலத் தெரிஞ்சுது. ஆனால் புரியல.... ஒன் பேச்சு புரிய வைச்சுட்டு.... இந்த ரோட்டுல..... அந்தக் காட்ல, போற அத்தனை பேரும் நான் பெற்ற மவனுவ மவளுவன்னு இப்போ நெனச்சுப் பாக்கேன்... எல்லாருமே உறவுன்னு நெனக்கப்போ உபத்திரவமா இருந்த உறவு இதுல கரைஞ்சிடுது. விசாலம்மா.... நெசமாக்காட்டியும் சொல்றேன்..... எனக்கு எவ்வளவு சந்தோஷமாக் கீது தெரியுமா?"

"ஏதோ நம்மோட கர்ம வினையிலும் ஒரு நல்லது நடக்கு. நீ சொன்னப்பல வாழ்வே இறுதியில் ஒரு நெனப்புத்தான். பகவான் கிட்டப் போறதுக்கு.... ஈஸ்வரா இனி மேலும் எங்க மேலே கர்ம வினையை ஏவாதேடா."

"நீ சொல்றதுல்ல கடைச பிடிக்கலம்மா. கர்ம வினைன்னு சொல்லி நாம தாயாய் இருந்து செய்ய முடியா விட்டாலும், நினைக்கக் கூடியதை மறந்துடப்படாது. பாரு... எல்லோரும் என் பிள்ளைங்கன்னு நெனக்கப்போ.... எனக்குக் கர்ம வினை தோணலை.... மனுஷனோட கஸ்மால வினைதான் தோணுது. நம்ம பிள்ளைங்க கூடி வாழ்ற

முறையில ஏதோ ஒரு கோளாறு இருக்காப்பலத் தோணுது. இத இடிச்சு நொறுக்கணும் போல, அதாவது நரிக்கிட்ட இருந்து பிள்ளைக்குப் போராடற ஒரு தாய் மாதிரி எனக்குக் கோபம் வருது."

"நீ கம்யூனிஸ்ட் மாதிரிப் பேசறேடி."

"அப்படின்னா என்னம்மா?"

"அம்மான்னு சொல்லாதே. நான் 'மே' பொடுற மாதிரி நீயும் 'மே'ன்னு போடு. ஏதோ ஒண்ணு கர்ம வினையோ, மனுஷ வினையோ... நாம ரெண்டு பேரும் செல்லாக் காசுங்க. நாம காரியம் செய்ய முடியாது. அதனால நமக்குக் காரணமும் தேவை இல்லை. நாம இந்த ஜனங்களோட தாயின்னு இப்ப ஒரு எண்ணம் வருது பாரு. அத மனசுல அப்படியே பிடிச்சுக்கலாம். மனசுக்குள்ளேயே சொல்லிக்கலாம்."

இரு மூதாட்டிகளும் ஆகாயமும் பூமியுமாய்... ஆனவர்கள் போல, மௌனத்தில் மூழ்கினார்கள்.

கல்கி - 1979

# பக்த கேடிகள்

கிராமத்து முண்டாசு இளைஞர் போல் தோன்றிய-ஒளி வடிவமான ஐயப்பன், தான் அமர்ந்திருந்த புலியை அர்த்தத்துடன் பார்த்தான். அது சிலிர்த்தபோது கோபத்தோடு, முறைத்தான். அவ்வளவுதான் புலிபாய்ச்சல் என்பார்களே- அதை ஐயப்பனுக்கு உணர்த்த ஆசை பட்டதுபோல், அந்த தெய்வப்புலி, தனது ஐயனைச் சுமந்தபடி, சபரிமலையைத் தாண்டிக் குதித்து, காடுமலை தாண்டி, பள்ளத்தாக்குகளுக்கு மேலாப் பாய்ந்து, சமவெளிக்கு மேலாய் சஞ்சரித்து ஏவுகணை போல எகிறிக் கொண்டிருந்தது.

இந்த ஐயப்பன், எந்தச் சமயத்தில் புறப்பட்டாரோ-அந்தச் சமயத்தில், வள்ளிமலையில் குளிர் காய்ந்த முருகன், ஆறுமுகங்களை ஒருமுகமாக்கி மலை உச்சிக்கு ஓடினான். அந்த ஒட்டத்தைப் புரிந்து கொண்ட மயில், இறக்கைகளை ஒய்யாரமாக விரித்து ஹெலிகாப்டர் மாதிரி பாறையில் இறங்கி, அவனை ஓயிலாகப் பார்த்தது. உடனே பாம்பு, மயிலின் பாதத்திற்குள் நுழைந்தது. அச்சப்படக்குரல் எழுப்பும் தெய்வச் சேவல் கால்கள் கொடியாக, அதன் எஞ்சிய மேனி சின்னமாக, முருகன் பக்கம் ஒட்டிக் கொண்டது. வேல் விளங்க வினை தீர்த்தான்; மயில்மேல் ஆசனம் கொள்ளப் போனபோது, வள்ளி, வழிமறிப்பதுபோல் குறுக்காய் நின்றாள். 'மூத்தாளை' மனதுக்குள் திட்டியபடியே, சுடச் சுட கேட்டாள்.

'பிரபு! இதுக்குள்ளே உங்களுக்கு திருப்பரங்குன்றம் ஞாபகம் வந்துட்டுதா? பூலோகத்தில் இளையவள் மீதுதான் கணவனுக்குப் பிரியம். ஆனால் இங்கேயோ......!

முருகனுக்கு, லேசாய் கோபம் வந்தது. மனைவிகள் இல்லாத ஐயப்பன் மீது பொறாமைப் பட்ட படியே, மயிலில் ஏறினான். வள்ளி வையாக் குறையாய் பேசினாள்.

"எனக்குத் தெரியுமே.... திருப்பரங்குன்றம் ஞாபகம் வந்துட்டால் போதுமே.... நீங்கள் என்னைப் பார்த்து..... மோகன புன்னகை இருக்கட்டும்....ஒரு சாதாரணப் புன்னகைக்கூட வராதே..... ஒங்களைச் சொல்லி குற்றமில்லை குற்றவாளி நான்தான்... என் பெயர் விளங்கும் இந்த மலையில்.... உங்களை அடைவதற்காக...... கால்மாட்டில் முளைத்தமரம் தலைமாட்டில் படர.... தலைமாட்டில் முளைத்த மரம் கால்மாட்டில் சாய.... பல்லெல்லாம் பாசியாக தவமிருந்ததேன் பாருங்கள்..... அது தவறுதான்..... தவறேதான்....."

முருகன், தன் விருப்பத்திற்கு மாறாக, வலிந்து ஒரு புன்னகையை வரவழைத்தபடியே பதிலளித்தான்.

'தேவீ! உன் மாமியார் மாதிரியே கோபக்காரியாய் இருக்கிறாயே.... கோபத்தை விட்டுவிடு.... மோனத்தில் நில்.... எந்தத் தவ வலிமையால் என்னை அடைந்தாயோ.... அந்தத் தவத்தைப் பயன்படுத்தி தொலை நோக்காய் பார்..... நான் எங்கே போகிறேன் என்பது ஒனக்குச் சொல்லாமலே புரியும்......'

வள்ளி, மனக் கண்ணை மூடி, ஞானக் கண்ணை திறந்தாள். அச்சத்தை முகத்தில் படரவிட்டபடியே 'வேண்டாம்..... பிரபு.... ஐயப்பன் முரடன்... குடும்பப் பொறுப்பில்லாதவன்... கேளுங்கள் பிரபு..... கேளுங்கள் பிரபு...'. என்று கணவனைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டபடியே, கெஞ்சினாள். மயிலைப் பார்த்து பறக்காதே என்று சமிக்ஞை கூட செய்தாள். ஆனால்

முருகனோ, மீண்டும் ஒரு முறுவலிப்பை முகத்திற்கு கொடுத்தபடியே, அவளைப் பார்த்தான். பிறகு முகம் சுழித்தான். உடம்பை, ஒரு குலுக்கல் குலுக்கியபடியே 'உன் பேச்சைக் கேட்க..... எனக்கு நேரமில்லை. இதோ ஐயப்பன் காட்பாடியைக் தாண்டிவிட்டான்' என்று கத்தினான். வேல் முனையால் பாறையில் கோபமாய் குத்தினான். அதைப் புரிந்து கொண்ட புத்திசாலி மயில், வானுள் பாய்ந்தது. சேவல் கொக்கரித்தது. பாம்பு படமெடுத்தது. வள்ளி எந்த மூத்தாளை எதிரியாகப் பாவித்தாளோ, அந்த மூத்தாளிடம் ஆலோசனை கேட்பதற்காக திருப்பரங்குன்றம் பறந்தாள்.

சிறிது நேரத்தில், ஐயப்பனும், முருகனும், சென்னை நகரில் கடற்கரையோர காமராசர் சாலையில் கடல் நோக்கி நின்ற அந்த கட்டிடத்தைச் சுற்றி வலம் வந்தார்கள். இருவர் முகங்களிலும் ஏளனப் புன்னகை.... இருவர் கண்களிலும் அக்கினித்தாண்டவம்.

ஒருவரை ஒருவர் ஆழப் பார்த்தபடியே, இருவரும், தத்தம் வாகனசகிதமாய், அந்தக் கட்டிடத்தின் மேல்பரப்பில் தரையிறங்கினார்கள்..... ஒருவரை ஒருவர் நோக்கி, ஒப்புக்குச் சிரித்தபோது, இருவரின் வாகனங்களும், அமைச்சர்கள் அல்லது அதிகாரியின் பி ஏக்கள் சாமானியர்களைப் பார்ப்பார்களே அந்த கர்வப் பார்வையை பறிமாறிக் கொண்டன. ஐயப்பனின் புலி முருகனின் மயிலைப் பார்ப்பதை விட்டுவிட்டு, யதேச்சையாய் கண்களை விலக்கியபோது, அவற்றுள் சேவல் தென்பட்டது. 'சைவ' ஐயப்பனிடம் மாட்டிக் கொண்ட அந்தப் புலி, இப்போது சேவலை ருசியோடு பார்த்தது. அந்த அசைவப் பார்வையை அறிந்துகொண்ட மயில், காடுகளில், துஷ்ட மிருகங்களைக் கண்டால், மரமேறி நின்று, மான்களுக்கு அபாயக் குரல் கொடுத்து எச்சரிக்கும் தனது பறவை சாதிக்கு ஏற்றாற்போல், கூக் குரலிட்டது. உடனே சேவல், ஒரே துள்ளாய்த் துள்ளி வேலின் மேல் ஏறி நின்றது. எதிர்பாராத சேவல் செயலால் வேல் முன்னும் பின்னும் ஆடியது.

இதைப் பார்த்த புலிக்கு, வேடனின் ஆயுதம் நினைவுக்கு வந்தது. தெய்வப் புலியாக இருந்தாலும் இப்போது தெருப்புலிபோல் அதாவது சர்க்கஸ் புலிபோல் சைவப் பார்வை காட்டியது.

இந்த வில்லங்க விலங்குகளின் செயல்களை, ஓரக்கண்ணால் பார்த்தபடியே, முருகப்பனும், ஐயப்பனும், காண்டிராக்டரால் கட்டப்பட்ட அந்த மேல்தளத்தின் ஓட்டைகள் வழியாக உள்ளே பார்த்தார்கள். பார்க்கப் பார்க்க, அந்த தெய்வங்களின் கண்களில் பனித்துளிகள்.... கேட்கக் கேட்க, கேட்டதைக் கொடுக்க வேண்டும் என்ற வைராக்கியம்... கீழே நடப்பதை, குனிந்து பார்த்தார்கள். குப்புறப்படுத்தும் பார்த்தார்கள். மகிழ்ச்சி தாங்க முடியாமல் மார்தட்டிக் கொண்டார்கள்.

கீழே தோன்றிய-

அந்த அரை செவ்வக அறைக்குள், சரிபாதியை மூன்று அறைகள் விழுங்கியிருந்தன. பிளைவுட்டால் தடுக்கப்பட்டு.... கண்ணாடியால் அலங்காரம் செய்யப்பட்ட தனியறைகள்... வடக்கு அறையின் இடக்குக் கதவில்-அதாவது கதவை நிலை கொள்ளவைக்கும் இரும்பு வளையம் இல்லாத கதவில், பெருமாள் என்ற பெயர்ப்பலகை..... அவனை மாதிரியே பத்தாண்டுகாலமாக, அதே இடத்தில் ஆணி வைத்து அடிக்கப்பட்டிருந்தது. தெற்கு அறையில் பழனிச்சாமி என்ற பிளாஸ்டிக் எழுத்துக்கள்.... நடுவறையில் நாயகம் என்ற காகித ஒட்டல், இந்த சின்னக் கெஜட்டட் அதிகாரிகளான அஸிஸ்டெண்ட் டைரக்டர்கள் எழுந்தருளும் அறைகளுக்குத் தெற்கே, விசாலமான பெரிய அறை.... புஷ்டோரும், புல்டோரும் கொண்ட பூர்ண அறை, அந்த மூன்று அறைகளும், இன்றைய நாகரிகப் பெண்கள் போல் 'வெளிப்படையாய், தோன்றிய போது, சீனியர் கிளாஸ் ஒன் ஆபிசருக்கான இந்த அறையில் மட்டும், கண்ணாடிச் சுவர்களுக்கு முக்காடு-அதான் ஸ்கிரின் போடப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த அறையின் கதவில்

பெயர்ப் பலகை இல்லை. வேட்டி அல்லது சேலை மடிப்பில் முடிச்சுபோடும் இடுப்புபோல், அந்தப் பலகை பிய்த்தெறியப்பட்டிருந்த தடயங்கள் தெரிந்தன. இந்த அறைகளுக்கு வெளியே- இவை கொடுத்த 'டானா' வளைவிற்குள் கிளார்க்குகள்... கிளார்க்கிகள்... சரி வர்ணனை போதும்... இங்கே நடக்கும் வம்புக்கு வருவோம்.

வடக்கு அறையில், பெருமாள் பெரும் போடு போட்டுக் கொண்டிருந்தார். நாற்பத்தைந்து வயதுக்காரார்.... பம்பைத்தலை.... பளிச்சான சிவப்பர்... இடுப்புக்குக் கீழே கறுப்பு வேட்டி... மோவாய்க்கு கீழே குறுந்தாடி... கழுத்துக்கு மேலே உத்திராட்ச மாலைகள்... சந்தன நெற்றி... குங்கும புருவம்... ஐயப்பன் போட்டோவிற்கு முன்னால் ஊதுவத்தியைக் கொளுத்தினார். பிறகு ஒரு கற்பூரத்தை, சின்னஞ்சிறு குத்து விளக்குத் தீபத்தில் தொட்டார். சூடு பொறுக்க முடியாமல், அதைக் கீழே போட்டார்... பின் தாம்பாளத்தட்டில் இன்னொரு கற்பூரத்தை வைத்து, வத்திப் பெட்டியின் உதவியுடன் நெருப்பிட்டார். கற்பூர ஜோதியை வட்ட வட்டமாக ஆட்டியபடியே...

**"ஜெய ஜெய சுதனே ஐயப்பா**
**ஹரஹர சுதனே ஐயப்பா-என்னை**
**நாடு கடத்தாதே ஐயப்பா-என்**
**நம்பிக்கைக் கெடுக்காதே ஐயப்பா"**

என்று கத்தியபோது, இவரது கோஷ்டியைச் சேர்ந்தவர்களும், பழனிச்சாமிக்குக் கீழே வேலை பார்ப்பவர்களுமான ஊழியர்கள். அந்த அறைக்குள் ஒன்று திரண்டு வந்து, பெருமாளை, ஐயப்பனாக அனுமானித்தது போல், ஐயப்பன் போட்டோவைப் பார்க்காமல், அசல் பெருமாளை நோக்கி 'சாமியே சரணம் ஐயப்பா' கோரஸ் கொடுத்தார்கள்.

இதே இந்தச் சமயத்தில், தெற்கு அறையில் பழனிச்சாமி, முருகனின் பெயிண்டிங் போட்டோவிற்கு

முன்னால், சப்பணம் போட்டபடியே 'வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா' என்று முன் முழக்கமிட, இவரது கோஷ்டியைச் சேர்ந்த பெருமாளின் சபார்டினேட்டுகள், பின் முழக்கமிட்டார்கள்.

இரண்டு அறைகளிலும் பக்திக் குரல்கள், காதுகளைப் பாதிக்கும் குரல்களாக மாறின. பெருமாளைப் போல் பெரிய குரல் வாய்ந்த பழனிச்சாமி மணியடித்தார். இவரும் நாற்பத்தைந்து வயதாகிய கறுப்புக் கம்பீரம்.... ஐயப்பன் ஓசை பெரிதாவதைக் காணச் சகிக்காத பழனிச்சாமி, மணியடித்த கை வலித்ததால் அலுவலக ஊழியர் சுப்பிரமணியத்திடம் அதை நீட்டினார். அவரும் 'மணி' கிடைத்ததுபோல் மணியடித்தார்.... உடனே ஐயப்பன் அறைக்குள் உறுமிமேளம்... பழனிச்சாமி, சக்தி முழுவதைம் வாயுள் திரட்டி 'நான் நம்புவது....' என்று சொல்லி மேற்கொண்டு முடிக்கும் முன்பே, அவன் ஆதரவாளர்கள் 'அரோகரா' என்றார்கள். இதை அப சகுனமாக கருதி, பழனிச்சாமி ஐயப்பனைத் திட்டப் போனார். பெருமாள், முருகனைத் திட்டப் போனார். இருவரும் வெளியே வந்து, ஒருவரை ஒருவர் முறைத்தபடியே, ஆளில்லாத அந்த பெரிய அறையை பொதுப்படையாகவும் சும்மாக் கிடந்த சுழல் நாற்காலியை குறிப்பாகவும் பார்த்தார்கள்.

இதே சமயத்தில்-

கட்டிடத்தின் மேல்பரப்பில் ஓட்டைகள் வழியாய் ஒட்டுக் கேட்ட முருகனும், ஐயப்பனும், தத்தம் பக்தர்களைப் பெருமை பிடிபடாமல் பார்த்தார்கள். முருகன், பக்தன் பழனிச்சாமி கேட்டதை கொடுப்பதற்காக, வலதுகரத்தைத் தூக்கினால், உடனே, ஐயப்பன் தன் பக்தன் பெருமாளின் பெரிய எண்ணம் நிறைவேறுவதற்காக, தனது வலதுக் கையையும் தூக்கினான். உடனே, முருகன், இடக்கரத்தை தூக்கி, ஐயப்பன் வலக்கரம் வழங்கிய வரத்தைப் பறித்தான். ஐயப்பனும்.. அப்படியே செய்தான்.... 'பேலன்ஸ் ஆப் பவர்... வெற்றி தோல்வி இல்லாத கெடுபிடிப்போர்..... இறுதியில் முருகன் முறுவலித்துச் சொன்னான்.

'ஐயப்பா! சண்டையிட்டாலும் நாம் சகோதரர் அன்றோ? பேசாமல் அதோ அந்த ரிசப்ஷன் அறைக்குப் போய் சாவகாசமாய் பேசலாமே?

ஐயப்பனிடம் நயம்பட பதிலளித்தான்.'

'நாம் சகோதரர்கள்தான்... ஆனால் நம் வாகனங்கள் அப்படி அல்லவே... பூலோகத்தில் கார், லாரி டிரைவர்கள், அனைவரும் ஒரே பாட்டாளி வர்க்கம்தான்... ஆனால் ரோட்டில் எதிரும் புதிருமாய் வரும்போது, நாயும் பூனையுமாய் மாறுவதை பார்த்திருக்கிறேன்... இங்கேயோ.... வாகன ஓட்டிகளான நாம் பொறுத்தாலும்... நம் வாகனங்கள் பொறுக்காது... இங்கே ஒரு மகாயுத்தமே! நடக்கும் ஆகையால், ரிசப்ஷன் அறைக்குப் போகாமல் இங்கிருந்து பேசுவதே உசிதம்'

'புரியுது ஐயப்பா.... கீழே ரிசப்ஷன் அறையில் உட்கார்ந்தால், அந்த வழியாக கோவிலுக்குப் போகப் போகும் என் பக்தன் பழனிச்சாமியால் ஆகர்ஷிக்கப் படுவோம் என்று பயப்படுகிறாய்'

''குழந்தையாய் இருக்கும் போதே புலிப்பால் கேட்டவனுக்கு.... புலியையை காட்டிய நானா பயப்படுவேன்? அதோடு உன் பக்தனிடம் ஆகர்ஷிக்கப்பட..... என்ன இருக்கிறது? தோற்றத்தில் இந்த பூனையும் பால் குடிக்குமா?' என்பது மாதிரியான இவன்... போன வருடம்.... ஒரு பொய் பில்..... அதுதான் போகாத ஊருக்குள் போனதாய் எல்.டி.சி. போட்டவன்..... ஒவ்வொரு பைலுக்கும் ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கி..... அந்த லஞ்சத்தில் நூறு ரூபாய் ஒன்றை, உன் உண்டியில் லஞ்சமாய் போடுபவன்.... ஆபிஸ் காரையே..... டாக்ஸியாய் கொள்ளை அடித்தவன்.''

'நிறுத்து ஐயப்பா நிறுத்து.... ஒன் பக்தன் மட்டும் என்னவாம்? இந்த வருடம்... ஒரு அப்பாவிப் பெண்ணிடம் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி..... ஐயாயிரம் ரூபாய் வாங்கியவன்... அவளையும் கெடுத்து.... கிணற்றில் விழச்

செய்தவன்... டைரெக்டர் இவனை இழிவு செய்ததற்காக..... கொதித்தெழுந்து, இவனுக்காக வாதாடிய கருணாந்தத்தின் மீதே டில்லியில் துஷ்பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்ட கயவனாயிற்றே இவ்ன்.... நண்பர்களின் உதவிகளையே, அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் ஆயுதங்களாக்கும் அற்பனாயிற்றே இந்த பெருமாள்'

'ஐயப்பா! இப்போது பிரச்சினை..... நம் பக்தர்களில் எவன் அதிக அயோக்கியன் என்பதல்ல...... அது தெரிந்த கதை... ஊரறிந்த விவகாரம்... இது என்னுடைய பிரிஸ்டிஜ் பிரச்சனை.'

'எனக்கு மட்டும் பிரிஸ்டிஜ் இல்லையோ....'

முருகன் பதிலளித்தான். 'கறுப்புக் சட்டைக் காரர்களால்.... என் சுயமரியாதைக்குச் சவால் விடுக்கப்பட்டுள்ளது.'

'அதற்கு வீரமணியைக் கேள்..... நான் என்ன செய்வேன்'

"நான் வீரமணியின் ஆட்களைச் சொல்லவில்லை..... உன் கறுப்புச் சட்டைக்காரர்களைச் சொல்கிறேன்.. என்னுடைய கோவில் எக்ஸிகியூடிவ் ஆபீஸரே..... என் சந்நிதியில்..... உனக்காக மும்முடி கட்டுகிறான்.... என் பக்தனே 'ஐயப்பா' என்று சொன்னபடியே.... கறுப்பு உடையோடு என்னை அர்ச்சிக்கிறான்...... ஐயப்பன் கொடுப்பதை..... முருகனால் கொடுக்க முடியாது என்ற ஒரு எண்ணம் என் பக்தர்களுக்கே ஏற்பட்டுள்ளது...... இது அப்பட்டமான டிபெக்ஷன்... பாரதத்தில் பொலிடிக்கல் டிபெக்ஷனைத் தடுக்க சட்டம் வந்திருப்பது போல் இந்த தேவலோகத்திலும் ஒரு சட்டம் வரவேண்டும்...."

'இங்கேதான் தப்பு செய்கிறாய் முருகா... சட்டசபை அல்லது பார்லிமெண்டில் ஒரு கட்சியில் மூன்றில் ஒரு பங்கு, பிரித்தால் அது டிபெக்ஷன் அல்ல பிளவு.... கட்சிப்பிளவு... இங்கேயும் நாம் காண்பது டிபெக்ஷன் அல்ல.... பிளவு.... பக்திப் பிளவு..... சவாலிடுகிறேன்.... சட்டம் கொண்டு வரலாமா.....'

'ஐயப்பா.... என் பொறுமையை பலவீனமாய் கருதாதே.... நீ.... திமுக... அதிமுக... தெலுங்கு தேசம் மாதிரி ரீஜினல் பலசாலியாய் இருக்கலாம்.. நானோ தேசிய அந்தஸ்து பெற்றவன்... வங்கத்தில் கார்த்திக்.... சமஸ்கிருதத்தில் சுப்ரமண்யா.....'

'நீ ஒரு சரண்சிங் என்று எனக்குத் தெரியும்..... சொல்வதை நன்றாகக் கேள்.... நான் வம்புக்கு போகமாட்டேன்.... வந்த போரை விடமாட்டேன்.....'

'இந்த முருகன் போருக்குப் போக வேண்டாம்.... போர் முகத்தைக் காட்டினாலே போதும்.... நீ பொடியாவ. ய்......'

'பொடியன் போல் பேசாதே.... விஷ்ணுவின் புத்திசாலித் தனமும்.... சிவனின் போர்க்குணமும் கொண்டவன் நான்.....'

'என் பக்தன் கிருபானந்தவாரியார் பேச்சைக் கேட்டிருக்காயோ.....'

'என்னைப் போற்றும் கேரள வாரியார்கள் மந்திரங்களைக் கேட்கவே எனக்கு நேரமில்லை.. கிருபானந்த வாரியாரைக் கேட்க ஏது நேரம்....'

'அப்படியானால் இன்றே கேள்... வாரியார் காலாட்சேபத்தை நன்றாய் கேள்... முருகன் ஒருவனே ஆண்பிள்ளை.... சிவன் என்ற ஆணின் நெற்றிக் கண்களில் தோன்றிய அவன் ஒருவனே ஆண்பிள்ளை... நாம் எல்லாம் பெண்பிள்ளைகள் என்று அவன் பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பகர்வதைக் கேள்.... நாமெல்லாம் என்பதில் நீயும் அடங்குவாய்... நான் ஒருத்தனே ஆண்பிள்ளை....'

'பெண் விடுதலை பேசும் இந்தக் காலத்தில் மெள்ளப் பேசு முருகா..... கேட்டால் புதுமைப் புரட்சிப் பெண்கள் உன்னையும் என்னையும் விடமாட்டார்கள்... ஏற்கனவே மானுடன் விட்ட ஏவுகணைகளாலும் செயற்கைக் கோள்களாலும் நாம் பறக்க முடியாமல் அல்லாடி வந்திருக்கிறோம்....'

'அதனால்தான் விட்டுக்கொடு.... இல்லையானால்..... நம் இருவருக்கும் மதிப்புக் குறைவு என்கிறேன்....'

"என் பக்தனை என்னால் கைவிட முடியாது முருகா... என் வரம் உன்னாலும்... உன்வரம் என்னாலும் பறி போய்விட்டது... ஆகையால் என் பக்தனுக்கு... அந்த வேலை கிடைக்க ஒரு மானுட வழியை பின்பற்றியிருக்கிறேன்...."

'என்னவாம்..?'

'என் பக்தன் டைரக்டர் ஆவதற்கான பைல் மினிஸ்டர்... செக்கரட்டரி... வரைக்கும் போகவேண்டும் அல்லவா? இந்த இருவர் மனதிலும்... பெருமாளுக்கே பெரிய பதவி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விட்டேன்...ஹா... ஹா.. ஹா....'

'ஆபீஸ் விவகாரம் புரியாத ஐயப்பா... நீ அமைச்சர் மனதில் புகுந்தாய்... நானோ, அவரைவிட பலசாலியான அவனது நேர்முக உதவியாளர் மனதில் புகுந்துள்ளேன்.... நீ ஐ.ஏ.எஸ். செக்ரட்டரி மனதில் புகுந்துள்ளாய்... நானோ அண்டர் செகரட்டாரி... செக்ஷன் ஆபீஸர் அஸிஸ்டெண்ட் மனதுகளில் புகுந்துள்ளேன்.... பாரதத்தை ஆள்பவர்கள் அமைச்சர்களல்ல.... அஸிஸ்டெண்டுகளும்.... நேர்முக உதவியாளர்களுமே... புரியுமா உனக்கு? டைரக்டர் ஆவப்போது என் பக்தன் பழனிச்சாமியே......'

முருகனுக்கும், ஐயப்பனுக்கும் வாயாட்டல் முடிந்து கையாடல் தோன்றப் போனது. ஆறுமுகம், சேவலின் கொக்கரிப்பில் வேலைத் தூக்கினான். மயில் போர்விமானம் போல் பறக்கப்போனது.. உடனே, ஐயப்பன், புலியின் உறுமல் பின்னணியில் சக்கிராயுதத்தை எடுத்தான் உடனே-

கீழே பழனிச்சாமியும், பெருமாளும் ஒருவரை ஒருவர் பாய்ந்து பிடித்தார்கள். அலுவலகர்கள் பிரிந்து, கோஷ்டி பிரிந்து போர் முழக்கம் செய்தார்கள். ஏதோ ஒரு 'மாஸ் ஹிஸ்டீரியா, எல்லோரையும் ஆக்கிரமித்தது.

நாரதமுனி, தேவலோகத்தில் இருந்து அலறிப் புடைத்து, அந்த தெய்வக்குமாரன்களின் முன்னால் தோன்றினார். அவசரத்தில் வீணையையோ அல்லது தம்புராவையோ எடுக்க மறந்து வந்தார்... உச்சி முடியில் பூக் கட்டவும் மறந்து போனார்..... யாரைக் கும்பிடுவது என்று யோசித்தார்... சீனியாரிட்டி பிரச்சினை வரும் என்று பயந்து போனார்.... எப்படியோ இருவருக்கும் பொதுப்படையாக ஜாக்கிரதையாக ஒரு கும்பிடு போடலாமே என்று யோசித்தார்... அப்புறம் கும்பிடு போடலாமே உபதேசியானார்....

'பிரபுக்களே! நீங்கள் இருவரும் போரிட்டால் தேவலோகம் தாங்குமா? பூமி பிழைக்குமா?'

'யார் பிழைத்தால் எனக்கென்ன? முருகா என்று மூன்று நேரமும் என்னைக் கூப்பிடும் பழனிச்சாமி டைரக்டர் ஆகாதவரை..?'

'நாரதா! நீயே.... சொல்... என் பக்தன் பெருமாள், பிள்ளைக் குட்டிக்காரன். அவனுக்கு பிரமோஷன் வரப்போகுது... அதற்காக சென்னையை விட்டு நகர முடியாது.....'

'நாரதா! நான் சொல்வதையும் நீ கேள்... என் பக்தனுக்கும் வரப்போகுது பதவியுயர்வு... இவனும் சின்னஞ்சிறு பிள்ளைகளைக் கொண்டவன்...ஆகையால் இவனே டைரக்டர்.....!'

'பிரபுக்களே! உங்கள் பக்தர்கள் சென்னையை விட்டு நகரக்கூடாது.... அவ்வளவுதானே.....!'

'ஆமாம்....ஆமாமாம்...!'

'அப்படியானால் ஒரு அடிஷனல் டைரக்டர் போஸ்டை உருவாக்கிவிடலாம்..... இதனால்.... இரண்டு பேருமே... சென்னையை விட்டு நகர வேண்டியதில்லை....'

'அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், இப்போது காலி யாக இருக்கும் டைரக்டர் போஸ்ட் பழனிச்சாமிக்கும்...

அடிஷனல் போஸ்ட் ஐயப்ப பக்தனுக்கு பெருமாளுக்கும் கிடைக்கவேண்டும். அடிஷனல் போஸ்ட் என்பது உதவாக்கரை பதவி என்று அர்த்தம்'

'நாரதா! என் பக்தன் பெருமாள் தான் டைரக்டராக வேண்டும் என்பதைவிட..... பழனிச்சாமிக்கு அந்த பதவி கிடைத்து.... அவன் சென்னையில் இருக்கலாகாது என்பதே அவன் ஆசை.... அதை என்னால நிராசையாக்க முடியாது...'

'நாரதா! என் பக்தனும்... அவன் பக்தனைப் போலவே நினைக்கிறான்... எனக்கு இரண்டு கடமை கொடுத்திருக்கிறான்... ஒன்று அவன் சென்னையில்... இந்த டைரக்டர் வேலையில் அமரவேண்டும்.... இன்னொன்று பெருமாள் எந்தச் சாக்கிலும் சென்னையில் இருக்கக்கூடாது.... இந்த இரண்டு லட்சியங்களும் அவனுக்கு இரண்டு கண்கள்... அவற்றை நான் பறிக்க முடியாது....'

நடமாடும் கலாட்டாவான நாரதர், குழம்பிப் போனார். மேல்தள ஓட்டை வழியாக கீழே பார்த்தார்... பின்னர் துள்ளிக் குதித்தபடியே பேசினார்.

'பிரபுக்களே! பெருமாள் அறையையும்... பழனிச்சாமி அறையையும் விட்டுவிட்டு, நடுவறையைப் பாருங்கள்... இவர்கள் வயதை... ஒத்திருந்தாலும்... முடிக்கு டை அடிக்காமலும், முகத்திற்கு ரோஸ் பவுடர் போடாமலும் தோன்றும் நாயத்தை பாருங்கள்! உங்கள் பக்தர்கள் இதோ அடிக்காத குறையாய் வாதாடுகிறார்கள்...... இவர்களைப் பார்க்க வந்த பொதுமக்கள்... எப்படி சலிக்கிறார்கள் பாருங்கள்! ஆனால் இந்த நாயகம்.... தன்னிடம் வருபவர்களிடம், எப்படி இனிமையாய் பேசுகிறான்! பைல்களை தேடி எடுத்து எப்படி குறிப்பெடுக்கிறான்! சம்பந்தப்பட்ட ஊழியரை வரவழைத்து ஆணையிடுகிறான். அதோ தள்ளாடும் கிழவிக்கு எப்படி உதவுகிறான் பாருங்கள்!

நாரதர் இருகுமாரன்களையும் பார்த்து, அவர்களது மௌனச் சம்மதத்தால் உற்சாகப்பட்டு மேலும் தொடர்ந்தார்.

"உங்கள் பக்தர்கள் எவ்வளவு பெரிய போர்ஜரி பேர்வழிகள் என்பது உங்களுக்கே தெரியும்..... ஆனால் நாயகம் என்பவனோ கை சுத்தமானவன்... ஆகையால் உங்களைக் கும்பிட முடியவில்லை. நேர்மையானவன் இதயத்தில்... ஆகையால் உங்களை அங்கே பூஜிக்கவில்லை. மனிதனையும் மரம் செடி கொடிகளையும் நிஜமென்று நம்புகிறான்... இறக்கும்வரை... சேவையே, பக்தி எனக் கருதுகிறான்..... இதனால் பக்தியை சேவையாய் நினைக்கவில்லை."

'ஆனாலும் அவன் நாத்திகன் ஆயிற்றே.'

இப்போது முருகனும், ஐயப்பனும் ஒன்றுபட்டு நாரதர் கருத்தை ஆட்சேபித்தார்கள். ஆட்சேபத்திற்குரியவர் அன்போடு பதிலளித்தார்.

'இருக்கட்டுமே... மக்களிடம் ஈடுபாடு காட்டுகிறானே... அது பூஜையை விட பெரிய பூஜை அல்லவா? அதோ அந்தக் கிழவீ... அவனை எ்ப்படி கையெடுத்துக் கும்பிடுகிறாள் பாருங்கள்! கும்பிடத் தகுதியாக அவன் இருப்பதால்.... அவன் உங்களைக் கும்பிடவில்லை. கண்ணுக்குத் தெரியாத உங்களை... சொந்த லாபத்திற்காக கும்பிடும் உங்கள் பக்தர்களைவிட அவன் மேலானவன் அல்லவா?'

'நீ சொல்வது ஒரு வகையில் சரிதான்... ஆனால் என் பக்தன்... பழனிக்கு மூன்றாண்டுகளுக்கு ... நாக்கில் வேல் குத்தி வருவதாக நேர்த்திக் கடன் செய்திருக்கிறானே....'

'என் பக்தனும்..... சாகும்வரை... சபரிமலைக்கு வருவதாய் வாக்களித்திருக்கானே....'

'டைரக்டர் பதவி கிடைக்கவில்லையானால்... எந்த நாக்கில் வேல் குத்துகிறேன் என்று சொன்னானோ பழனிச்சாமி அவன் தங்களை நாக்கில் நரம்பில்லாமல் திட்டுவான். எந்த சபரிமலைக்கு வருவதாக வாக்களித்திருக்கிறானோ பெருமாள் அவனுக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லையென்றால் ஐயப்பா! நீ பொய்யப்பா! என்று நீங்கள் செய்த பழைய அருட்பாலிப்புகளை மறந்து திட்டுவான். அதோடு இந்த இரண்டு ஆசாமிகளும் உங்களுக்கு வாக்களித்ததுபோல் நடப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? போனவருடம்.... சி.பி.ஐ. வழக்கில் சிக்கிய பழனிச்சாமி.... வழக்கில் விடுபட்டால் தங்களை செந்தூரில் வந்து சந்திப்பதாய் சொன்னான்.... வந்தானா? இதேபோல் இந்த பெருமாள் - போன பிரமோஷனுக்கு சபரிமலை வருவதாக சபதம் செய்தான். வந்தானா?'

'போதும் நாரதா... ரிஷிமூலம்.... நதி மூலம்... பக்த மூலம் பார்க்கக்கூடாது.....'

'நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், பிரபுக்களே! உங்கள் பக்தர்களில் ஒருவனுக்கு டைரக்டர் வேலை கிடைத்தால் உங்களை நினைக்கவே மாட்டான்.. மேலிடத்து ஆட்களுக்கு குட்டி புட்டி கொடுத்ததால் கிடைத்ததாக நினைப்பான்... உங்களால் காட்டும் கற்பூர ஜோதியில் நம்பிக்கை வைப்பதாய் கூறும் இந்த பழனிச்சாமியும்.. பெருமாளும் இப்போதும் மேலிடத்திற்கு பாட்டில்களை கொடுத்து வருகிறார்கள்.... உங்களைப் போற்றும் பாடல்களைவிட அவர்களுக்கு பாட்டில்களில் நம்பிக்கை அதிகம்...'

'கிடைத்தால் மறத்தல். கிடைக்காவிட்டால் திட்டல்' என்ற ஒரே சுயநலக்காரர்கள். இவர்களைவிட, உங்களை நினைக்காத-திட்டாத நாயகம் எவ்வளவோ மேல் இல்லையா? தெய்வங்களாகிய உங்களிடம் போலித்தனம் செய்யும் இவர்களைவிட, மனிதர்களிடம் மெய்யான ஈடுபாடு காட்டும் இந்த நாயகம்... நல்லவன் அல்லவா?

ஊழியர்களை ஒன்று திரட்டி... சங்கம் அமைத்து, அவர்கள் கஷ்ட நஷ்டத்தில் பங்கு கொள்ளும் இந்த விநாயகத்திற்கு எவ்வளவோ வேலைகள்..... பொறுப்புக்கள்..... உங்களைப் பற்றிச் சிந்திக்க அவனுக்கு நேரம் இல்லை. இதை தாங்கள் தப்பாக கருதலாகாது. ஆனால் பக்த கேடிகளோ .....'

'நாரதா! பக்தர்கள் எல்லோரும் அயோக்கியர்கள் என்கிறாய்.... எங்களுக்கு கெட்ட கோபம் வரும்...'

'நான் அப்படிச் சொல்லவில்லை பிரபுக்களே! பக்தர்கள் எல்லோரும் அயோக்கியர்கள் என்று சொல்லவில்லை..' அயோக்கியர்களும் பக்தர்களாய் இருக்கிறார்கள் என்றே கூற வந்தேன், ஆகையால்...'

'போதும் நாரதா.... நீ எங்களையும் நாத்திகர்களாக்கும் முன்னால், அல்லது மானுடன் நாயகத்தின் பக்தர்களாய் மாற்றும் முன்னால் நாங்கள் நட்போடு போகிறோம்....'

'அப்படியானால்.. இந்த டைரக்டர் பதவி....'

'நீயே தீர்மானம் செய்துகொள்ளலாம்.... சரிதானே ஐயப்பா!'

'சரியேதான்... அதோடு இந்த புராண உபன்யாசர்களும் இப்படிப்பட்ட பேர்வழிகளும்தான் நம்மைப் பற்றி கட்டுக்கதைகளை மக்களிடையே பரப்பி நம்மை கொச்சைப் படுத்துகிறார்கள்.' இவர்களிடம் இருந்து நம்மை காப்பாற்றிக்கொள்ள, இந்த மானுடன் நாயகத்தைப் போல் நமக்கென்று ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம்.'

முருகன், சரி என்பதுபோல் தலையாட்டுகிறான். எதிரும் புதிருமாக நின்ற ஐயப்பனும், முருகனும் ஒன்றுபட்டுச் செல்கிறார்கள்.

எப்போதுமே கலகங்களை ஏற்படுத்தும் நாரதர் இப்போது ஒரு கலகத்தைத் தீர்த்து வைத்த திருப்தியோடு சிரிக்கிறார்.

**தாமரை – செப்டம்பர், 1986.**

# அப்பரும்-அப்பாவும்

"நீங்கெல்லாம் எதுக்காக அப்பா சாமி கும்பிடணும்.... தெரியாமத்தான் கேட்கேன்."

அரசாங்கக் கடனில் கட்டப்பட்டதால், 'கடனே' என்று காட்சி காட்டும் சின்னஞ்சிறிய அந்த வீட்டின் விசாலமான முன்புறத்தில், அந்த இடத்தின் ஒரே ஓர் அலங்காரமாய்த் தோன்றும் பூச்செடிகளில் மலர்களைக் கொய்து, கையில் இருந்த பூக்கூடையை அந்த மலர்களாலேயே, பொங்கி வழியவிட்டு, வீட்டுக்குள் வந்த இசக்கியா பிள்ளை ஓர் ஓரமாய் உள்ள பூஜை அறைக்குள் வழக்கமான வேகத்தோடு தான் போகப் போனார். சமையலறையைத் தாண்டி, மகள் இருந்த அறையின் நினைவே இல்லாமல் அகலப் போனவரை, அந்தக் குரல் கட்டிப் போட்டது. டேப்புகளால் பின்னப்பட்ட கட்டிலில், கரங்களைப் பின்னி, அந்தப் பின்னலையே தலையணையாக்கி, குப்புறக் கிடந்த மகளை 'சிவசிவ' என்று மனதுக்குள் ஓலமிட்டு மருண்டபடி பார்த்தார். அடியற்றுக் கிடந்த அவளோ, தோள்களை நிமிர்த்தாமலே கழுத்தை வளைத்து தந்தையையே பார்த்தாள்.

இசக்கியா பிள்ளைக்கு அவள் தனது கழுத்தில் தொங்கும் உத்திராட்ச மாலையையே பார்ப்பதுபோல் தெரிந்தது. அதைப் பறிக்கப்போவது போன்ற பார்வை....

உடனே அவர், மார்பின் முடிவிற்கும், வயிற்றின் தொடக்கத்திற்கும் எல்லைக்கோடான நெஞ்செலும்புக் கூட்டின் இடைவெளியில், ஒற்றை உத்திராட்சக் கொட்டையுடன் முற்றுப்பெற்ற மாலை முனையை ஒரு கையில் பிடித்து, அந்த மாலையைக் கழற்றாமலே சுருட்டிக்கொண்டார். ஒரு கைக்குள்ளேயே மறைத்துக் கொண்டார். இப்போது, அவள் இன்னொரு கையிலுள்ள பூக்கூடையைப் பார்ப்பதுபோல் இருந்தது. கையசையமாலே அந்தக் கூடை ஆடியது. அவள் கண்களே அதை ஆட்டி வைப்பதுபோல் தோன்றியது.

இசக்கியா பிள்ளை, கால்களை அங்குமிங்குமாய்த் தேய்த்தபடி, சிறிதுநேரம் காலடி வட்டத்திற்குள்ளேயே ஒற்றைக்காலில் சுற்றினார். பிறகு அவள் சொன்னதைக் கேட்காததுபோலவும், அவள் பார்த்தது கண்களில் படாதது போலவும், பாவனை செய்தபடியே பூஜை அறை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். மகளின் இன்னொரு கேள்வி அவர் உடம்பைக் குலுக்கியது.

"பூஜை அறை இருக்கறதுக்கு, இந்த வீட்டுக்கு என்ன யோக்கியதை இருக்குது?"

இசக்கியா பிள்ளை, பூஜையறையில் துணிக்கதவு போலான அந்தத் திரைச்சீலையைப் பார்த்தார். ஒரு கையில் திரிசூலமும், மறுகையில் உடுக்குமாய்க் காட்சி காட்டும் அந்தச் சீலையில் பொறித்த திரிபுர சுந்தரியையே பார்த்தார். மகளை மாதிரியே அம்மாவின் முகம். 'ஒன்னைத்தான் பார்க்கிறேன்' என்பது மாதிரியான பிரிந்தும் பிரியாதது போன்ற உதட்டோரச் சிரிப்பு. அழுத்தமான பார்வை. அங்கேயே அப்படியே அசைவற்று நின்றார். 'அம்மா எனக்கு பூஜை செய்ய யோக்கியதை இல்லையாம்மா? சொல்லும்மா!'

அம்மாவே சொல்ல வந்ததுபோல், சமையலறையில் இருந்து, முகத்தில் பவுடர்போல் அப்பிய கோதுமை

மாவோடு காமாட்சி வெளிப்பட்டாள். கணவருக்கு முன்பே காரியம் ஆற்றுபவள் என்பதைக் காட்டுவதுபோல் ஈரத்தலை... நெற்றியை ஒளியடிப்புச் செய்யும் விபூதி.... நெற்றிப் பொட்டை மறைக்கும் பெரிய குங்கும வட்டம்.

காமாட்சி மகளைப் பார்த்து ஓடினாள். ஓரடி துள்ளி, ஈரடி நடந்து மூன்றடியில் நின்ற வண்ணம், மகளையும் அவளைக் கொடுத்தவரையும் மாறி மாறிப் பார்த்தாள். காது வளையங்கள், கட்டிலின் அணிகலன்கள்போல் தோன்றும்படி கட்டில் சட்டத்தில் முகத்தை அழுந்தப் போட்டிருந்த மகளைப் பார்த்தாள். பூஜை அறைக்கு வெளியே நிற்கமுடியாமலும், உள்ளே போகமுடியாமலும் தவிக்கும் கணவரை பார்த்தாள். அவர் பிடித்த பூக்கூடை சரிந்து, மலைமகளுக்கான செம்பருத்தி மலர்களும், கலைமகளுக்கான வெண்பருத்தி மலர்களும் கீழே விழுந்து கிடந்தன. பின்னிக் கிடந்தவை பிரிந்து கிடந்தன. உயரமானாலும், ஒட்டடைக் கம்பின் அழுத்தம்கூட இல்லாமல், பூஞ்சை உடம்போடு பூப்பாரம் சுமக்க முடியாமல் வந்து நின்ற கணவனைப் பார்த்தாள். தாய்மையைக் கண்ணகித் தன்மை விரட்டியதை சாட்சி கூறுவதுபோல், குரலின் முன் பாதியில் கனிவையும், பின்பாதியில் கடுமையையும் கலந்தபடி பேசினாள்.

"ராகுகாலம் வரப்போகுது... நீங்க மொதல்ல உள்ளே போங்க. ஏய் இந்திரா! வாய் ரொம்பத்தான் நீளுது...."

"அவன் கை நீண்டதைக் கேட்கத் துப்பில்லாமல் என் வாயை அடைக்க வந்துட்டிங்களா? பரவாயில்ல... மகளுக்கு ஏத்த அம்மாவாய் இருக்கமுடியாவிட்டாலும், புருஷனுக்கு ஏத்த பெண்டாட்டியாய் இருக்கிறதுல சந்தோஷந்தான்....."

பாயைச் சுருட்டுவதுபோல் தன்னைச் சுருட்டிக் கொண்டு, கட்டிலில் இருந்து எழுந்து,. அந்த அறைக்குள் அங்குமிங்குமாய் சுற்றும் மகளையே காமாட்சி பார்த்தாள். மகளோ, அவளை அங்கீகரிக்காமலே ஒரே சுற்றாய் ஆனவள்போல், பல சுற்றாய்ச் சுற்றினாள்.

தாயும், மகளும் மௌனித்ததை, தடங்கல் தீர்ந்ததாய் நினைத்துக்கொண்டு, இசக்கியா பிள்ளை பூஜையறைக்குள் போனார். திரைச்சீலையை ஒரு பக்கமாய் தள்ளுவதற்கு, மறந்து, அதை இரண்டாய் மடித்து நிலைப்படிக் கம்பியில் சொருகினார். அதில் திரிபுரசுந்தரி காலும் கையும் குறுக்கப்பட்டு குறுகிக் கிடந்தாள்.

பூஜையறைக்குள் வந்த இசக்கியா பிள்ளை, எந்தச் சோதனையிலும் பூஜை நிறுத்தம் ஏற்படக்கூடாது என்று கடுக்கன் போட்ட அப்பா கிராமத்தில் உபதேசித்ததை நினைவுக்கு கொண்டுவந்து அந்த அறையே ஆகாயமும் பூமியும் என்பதுபோல் அண்ணாந்தும், தலை தாழ்த்தியும் பார்த்துக்கொண்டார். அந்த அறை அனைத்தையும் உட்கொண்ட பிரபஞ்ச அறையாய்த் தோன்றியது. வீட்டைக் கட்டும்போது அறுநூறு சதுர அடிக்குள்ளேயே தனியாய் ஒரு பூஜை அறை கூடாது என்றாள் மனைவி. இவர்தான் அவள் காலில் விழாத குறையாக விழுந்தார். அவள் மசியவில்லை.

ஒருநாள் அவள் வெளியூர் போனபோது, மேஸ்திரிக்குக் குடிக்கப் பணம் கொடுத்து, இந்தச் சின்ன அறையைக் கட்டிவிட்டார். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு கடப்பா பளிங்குக் கல்லை வாங்கியும் பொருத்திவிட்டார். அது நட்சத்திரக் குவியல்களைக் காட்டும் ஆகாய நிறத்தில் மின்னிக் கொண்டிருந்தது. இரண்டடி உயரத்தில், ஐந்தடி நீளத்தில், மூன்றடி முன் நோக்கிய அந்தப் பளிங்குக்கல்லில் மூன்று தெய்வப் படங்களைக் கொண்ட ஒரு படம். வலப்பக்கம் சுப்ரமண்யர் ஆலய மூர்த்தியாக ஆதிசேஷ முருகன் பாம்பின்மேல் இருக்கிறார். இடப்பக்கம் உடுப்பி கிருஷ்ணர். நடுப்பக்கம் தர்மஸ்தலா லிங்கம். பக்கவாட்டில் ஒரு பக்கம் அய்யப்பன், மறுபக்கம் திருத்தணி முருகன். இருசுவர் மடிப்புகொண்ட ஒரு மூலையில் மூகாம்பிகை. அம்மாவின் அருகே பிள்ளையார், இன்னொரு மூலையில் பஞ்சமுக அனுமான். அதற்கு அருகே இரு கரத்தில்

வீணையும், ஒரு கரத்தில் உத்திராட்ச மாலையும், மறுகரத்தில் எத்தனையோ மகான்களும், கவிஞர்களும், மாமேதைகளும் படைத்த தத்துவக்கடலை ஓர் ஏட்டுச் சரமாய்க் கொண்ட இன்னொரு கரமும் கொண்ட சரஸ்வதி தேவி.

இசக்கியா பிள்ளை ஒவ்வொரு தெய்வப்படத்தின் முன்னாலும், ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லிக் கொண்டார்.

**ஓம் வக்ரதுண்டாய நம:**
**ஓம் சரவணபவ...**
**ஓம் நமோ நாராயணாய...**
**ஓம் நமசிவாய நம:**
**ஓம் விஸ்வமாதா ஜகத்தாத்ரி...**
**ஓம் சரஸ்வதி தேவி நம:**
**சர்வரோக பாப நிவாரணி நம:**

'**புத்திர் பலம்**' என்று சொல்லிக்கொண்டே பஞ்சமுக அனுமார்மேல் பூச்சூடப்போன இசக்கியா பிள்ளை, கைப்பூவை, ஆஞ்சநேயரின் உச்சந்தலையில் சூட்டியபடி, அந்தக் கையை எடுக்காமலே, வெளியே தாய்க்கும் மகளுக்கும் நடக்கும் வாக்குவதத்தை உற்றுக் கேட்டார்.

"எத்தனை தடவ ஒனக்குச் சொல்றது.... அந்தக் கம்யூட்டர் சென்டர் இல்லாட்டால் இன்னொரு சென்டர். கட்டுன பணம், வீணாச்சேன்னு அப்போவோ நானோ வருத்தப்படுறோமா?"

"ஒங்களுக்கு எப்படிக் கட்டுன பணம் வீணானதிலே வருத்தம் இல்லியோ, அப்படி அந்தப் பிரின்ஸ்பால் பயல் என் கையைப் பிடிச்சு இழுத்ததுலயும் வருத்தமில்லை இல்லியா?"

"துஷ்டனைக் கண்டால் தூர விலகித்தான் ஆகணும். காலம் கலிகாலம்."

"அப்போ இனிமேல் கலியுக வரதான்னு ஆகாயத்தைப் பார்த்துப் பேசாதீங்க!"

"கவலைப்படாதம்மா... நாம் கும்புடுற தெய்வம் அவனைக் கவனிச்சுக்கும்."

"தெய்வமுன்னு இருந்தால் முதல்ல அது ஒங்களைத் தான் கவனிக்கும். எப்படியோ பன்றிக்குட்டி மாதிரி பெத்துப் போட்டுடிங்க! பன்றியாகவே இருக்கச் சொல்றீங்க, ஆனால், என்னால... என்னால."

இசக்கியா பிள்ளைக்கு மகளின் விசும்பல் சத்தமும், அதற்குப் பதிலாக மனைவியின் விக்கல் சத்தமும் கேட்டன. அதன்பிறகு மௌனம். "நீங்களே கேளுங்க. நான் பாடும் பாட்டைக் கேளுங்க" என்று அத்தனை படங்களையும் அனுசரணைக்காய்ப் பார்த்தார். பிறகு பத்மாசனம் போட்டார். அந்தப் பளிங்குக்கல்லின் மத்தியில் படங்களை மறைக்காமல் உள்ள சின்ன குத்துவிளக்கை ஜோதியாக்கினார். 'ராமலிங்காய' என்று சொல்லிக் கொண்டே இதயத்தில் இருந்து, தொண்டைக் குழியில் தெறித்து, காதில் விழுந்த சுயம்பு வார்த்தைகளைத் தனக்குள்ளேயே கேட்டார்.

**"எச்சோதனையும் இயற்றா தெனக்கே...**
**அச்சோ என்றருள் அருட்பெருஞ் ஜோதி."**

இசக்கியா பிள்ளை வள்ளலார் அருளிய அருட்பெருஞ் ஜோதி அகவல் புத்தகத்தை எடுத்தார். திருவடிப் புகழ்ச்சியை ஓதிவிட்டு, அகவலைப் படித்தார். ஐம்பூத இயல்வகை, மண்ணியல், நீரியல், தீயியல், காற்றியல், வெளியியல், அகப்புறம், ஐம்பூதக் கலப்பு, வெளிவகை, அண்டப்பகுதி, கடல்வகை, மலைவளம், வித்தும் விளைவும், ஒற்றுமை, வேற்றுமை, ஆண் பெண் இயல், காத்தருள வேண்டுதல் போன்ற பாக்களைப் பாடல்கள் ஆக்கினார்.

மீண்டும் தாய் மகள் யுத்தம் தொடங்கியதால் அவரால் தொடர முடியவில்லை. காது கொடுத்துக் கேட்டார்.

"ஏதோ நம்ம நல்லகாலம்... தலைக்கு வந்தது தலைப்பாகையோட போனமாதிரி கையைப் பிடிச்சதோட விட்டுட்டானே! நினைத்துப்கூடப் பார்க்க முடியாதது நடந்திருந்தால்..... எப்படியோ அப்பாவோட பூஜா பலன், ஒன்னைக் காப்பாத்திட்டு. ஆண்டவன் அவனுக்குக் கூலி கொடுப்பான். இந்தத் தப்புல தப்பிச்சாலும் அடுத்த தப்புல மாட்டிக்குவான்!"

"ஒரு தப்புச் செய்தால் அந்தத் தப்புக்குன்னு தண்டனை கிடைக்கணும். அப்போதான் அந்தத் தப்பு, அப்புறம் நடக்காது. இன்னும் விவரமாய் விளக்கம் கேட்டால் தப்புச் செய்தவன் நல்லது செய்யும்போது-அந்த நல்லதே தப்பாகி, தண்டனை கிடைக்குமுன்னு சொல்வீங்க. அதனால கெட்டது ரெட்டிப்பாகும். நல்லது ஓடிப்போகுமுன்னு நானும் பதில் சொல்ல வேண்டியது வரும்!"

"சரி, பல்லை விளக்கு. நேத்து ராத்திரியே சாப்பிடலை."

"எப்படிம்மா சாப்பிட முடியும்? லைப்ரரியில் ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு நின்ன என்னை, அந்தப் புத்தகத்தைப் பார்க்கிற சாக்கில், கழுத்தில் முகம் போட்டு அதன்பிறகு ஓடப்போன என்னை கையைப் பிடிச்சு..... அந்தப் பயலை அடக்கவே முடியாதா?"

இசக்கியா பிள்ளையின் காதுகளில் மேற்கொண்டு எந்த வார்த்தையும் விழவில்லை. மாறாக மனைவியின் அழுகைச் சத்தம் கேட்டது. அவர் குள்ளித் குதித்து எழப்போனார். அதற்குள் அவள் சத்தமடங்கி, தைரியப்பட்டது போல் தோன்றியது. மகளும் மறுவார்த்தை பேசாததில் இருந்து, விவகாரம் தீர்ந்துவிட்டதாய் நினைத்து அருட்பா அகவலைப் படிக்கத் தொடங்கினார். ஓதுவார் போலவே தாள லயத்தோடு ஓசை உயிரோடு ஓதிக்கொண்டிருந்தார்.

**"மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு**
**அதம்பெற அடக்கும் அருட்பெரும் ஜோதி."**

மீண்டும் தாய்-மகள் சொற்போர். சொற்போர் என்பதைவிட ஒருவிதமான கெடுபிடிப்போர்.

"போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெயிண்ட கொடுக்கிறதுல என்னம்மா தப்பு?"

"தப்பு கம்ப்ளெய்ண்ட்ல இல்ல! போலீஸ்ல இருக்குது! கோர்ட்ல இருக்குது! இந்தச் சமுதாய அமைப்புல இருக்குது!"

"தட்டிக் கழிக்கணுமுன்னா எதை வேணுமுன்னாலும் தட்டிக் கழிக்கலாம்.'

"ஒனக்கு பட்டறிவு போதாது. அதனாலதான் இப்படிப் பேசுறே! போலீஸ்ல புகார் கொடுத்தால், மொதல்ல அவங்க கேட்கிற கேள்விகளே கற்பழிக்கப்பட்டதைவிடப் பயங்கரமா இருக்கும். உடலுக்குப் பதிலா உள்ளத்தையே கற்பழிச்சுடுவாங்க. அப்படியே அவங்க நடவடிக்கை எடுத்தால்... எடுத்தால்... என்ன, எடுக்கலாம். ஏன்னா, அவங்களுக்கும் பொண்ணுங்க இருக்குமே. அந்தச் சண்டாளப்பயலைக் கைதுசெய்து லாக்கப்புல வைக்கிறதாய் அனுமானம் செய்துக்கோ! இப்படிப்பட்ட வழக்குக்கு, ஜாமீன் கொடுக்கத்தான் கோர்ட் இருக்கே! கோர்ட்டுல அந்தப் பாவிப்பயல் மட்டுமா கூண்டுல நிற்பான். நீயும் நிற்கணுமே...., அவன் வக்கீல், நீதான் அவனை ஒன் வலையில சிக்க வைக்கப் பார்த்தேன்னு கேட்டால்.... இல்லன்னா நீண்ட நாள் பழக்கத்தில் அவன் அப்படிச் செய்தான். அன்றைக்குன்னு ரெண்டுபேர் பார்த்துட்டாங்க. அதனால நீ உல்டா செய்யுறதா அடிச்சுப் பேசுவான். அவன் பொண்டாட்டியும் உன் மேல பழி போடுவாள். இந்த ஏழை தமிழாசிரியை என்ன செய்ய முடியுமம்மா?"

"ஒங்களால் முடியும். மதுரையை எரித்த கண்ணகியைப் பற்றிப் பேசுறதை நிறுத்த முடியும். "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று சூளுரைத்தானாமே

நக்கீரன்-அவனைப் பற்றிப் பாடம் நடத்தாமல் இருக்க முடியும்!"

மனைவியின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்து இசக்கியா பிள்ளை, மீண்டும் நெடிய மௌனம் நிலவியதைக் கண்டார். தெய்வ வழிபாடு, இப்படிப்பட்ட லோகாயத விவகாரங்களால் தடைப்பட்டதற்கு வருந்தி, தோப்புக்கரணம் போட்டுக் கொண்டார். அபிராமி அந்தாதியை எடுத்தார். கம்பெனி சகாக்களுடன் "தெய்வப் பயணம்" மேற்கொண்டபோது வாங்கிய புத்தகம். திருக்கடவூர் அபிராமிதேவியை அபிராமி பட்டர் பாடியதைப் பாடும் போதெல்லாம் அவரது குரல் தழுதழுக்கும். எலும்புருகிப்போகும். உடல் முழுதும் ஜோதியாவது போல் தோன்றும். அந்த அபிராமி பட்டருக்கு வராத துன்பமா? அவர் பட்ட பாட்டில்..... என் பாடு சிறுபாடு...

**"பரிபுரச் சீரடி பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல்**
**திரிபுரச் சுந்தரி; சிந்தூர மேனியள்; தீமை நெஞ்சில்**
**புரிவர வஞ்சரை அஞ்சக்குனி பொருப்பு சிலைக்கை**
**எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து**
**இருந்தவளே"**

இசக்கியா பிள்ளையின் பக்திப் பரவசத்தை தடுத்தது, மீண்டும் தாய்-மகள் யுத்தம்.

"போராடும் முன்னாலேயே தோல்வியை ஒப்புக் கொண்டால் என்னம்மா அர்த்தம்? இன்ஸ்பெக்டர் கிட்டே சொல்லுவோம்! அவர் கேட்கேட்டா அஸிஸ்டெண்ட் கமிஷனர்! அவரும் சரிப்படாட்டா டெப்டி கமிஷனர்! அப்புறம் கமிஷனர்! டைரக்டர் ஜெனரல்! இவங்களாலயும் முடியாவிட்டால் முதலமைச்சர். இல்லாத பொண்ணுங்களை என்ன வேணுமுன்னாலும் செய்யலாமுன்னு நினைக்கிறாங்க பாருங்க! இந்தமாதிரிப் பயல்களை விடப்படாதும்மா!"

"அம்மாவுக்கு ஒன்னைவிட யாரும்மா முக்கியம்? அப்படியே போலீஸ் மூலமாய் கோர்ட்டுக்குப் போய், நீ வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி, தோல்வியை விட மோசம்மமா... ஆமாம்மா... ஒரு பெண்ணோட பேரு நல்லவிதமாக்கூட அடிபடக்கூடாதுன்னு நினைக்கிற சமுதாயம் இது. ஒன் பெயர் பேப்பருல வந்தால், நீ ஒரு போராட்டக்காரின்னு படிக்கிறவன் நினைப்பான். ஆனால், ஒன்னைக் கட்டிக்க வாரவன் அப்படி நினைக்கமாட்டான். நீதான் ஏதோ செய்யக்கூடாத தப்பைச் செய்ததாய் நினைத்து ஓடிப்போயிடுவான். அப்புறம் நீ அந்த மணிமேகலை மாதிரி காலமெல்லாம் கன்னியாய்.... இப்பவாவது புரியுதாம்மா!"

இசக்கியா பிள்ளை, அபிராமி அந்தாதியை அங்கும் இங்குமாய் ஆட்டியபடியே ஒட்டுக் கேட்டார். மகளுக்கு, அம்மா சொல்வது புரிந்துவிட்டதுபோல் தோன்றியது. அவளிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அபிராமிவல்லி 'அவள்' மூலம் அவளுக்கு உபதேசித்து விட்டாள். "அம்மா தாயே! தயவே..... என் மகளுக்கு நல்ல புத்தியைக் கொடு."

இசக்கியா பிள்ளை, அந்த அந்தாதியின் ஒரு பகுதியைப் படித்துவிட்டு, நாளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்காக ஒரு மல்லிகைப்பூவை, படித்த-படிக்காத பக்கங்களுக்கு இடையில் வைத்துவிட்டு, தேவராத் திரட்டை எடுத்து 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டனை' ஞானசம்பந்தரின் கோளறு பதிகத்தில் ஓசைப் பிழையின்றி அட்சர சுத்தமாய்ப் பாடினார். பாடிக் கொண்டே இருந்தார். பிறகு அப்பர் அருளிய பகுதிக்கு வந்தார்.

"நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்."

வெளியே இப்போது அஞ்ச வைப்பது போன்ற வார்த்தைப் பிளிறுகள்..... இந்திரா, ஏதோ ஒரு

நாற்காலியை உடுக்காக்கி, கட்டில்மேல் அடித்தடுத்தி ஒலி எழுப்பி ஊழிக்கூத்தாய்-காளிக் கூத்தாய் சாடிக் கொண்டிருந்தாள்.

''பெண்மைக்குக் களங்கம் வரக்கூடாது என்கிறதுக்காகப் போராடுற என்மேல் களங்கம் நினைக்கிற எந்தப் பயலும் எனக்கு வேண்டாம். கல்யாணம் என்கிறது ஒருத்தனோட சம்மதத்தில் மட்டுமில்லை. ஒருத்தியோட சம்மதத்துலயும் இருக்குது என்கிறதை மறந்துடாதீங்க! அத ஏதோ..... ஒருத்திக்கு ஒருத்தன் கொடுக்கிற சலுகை இல்லே. நல்லவனோட கல்யாணம் நடக்கணும் என்கிறதுக்காக அயோக்கியனுக்கு அஞ்சி, ஒடுங்கி இருக்கப்படாது. அந்தப் பிரின்ஸிபால் பயலுக்குக் கொடுக்கிற பாடத்தைப் பார்த்துட்டு, அவனை மாதிரியான பயல்களெல்லாம் பெட்டிப் பாம்பாய் ஆகணும்!"

"நான் எதுக்குச் சொல்லுதேன்னால்...."

"சத்தியத்தைத் தேடுறதுதான் மெய்யான பக்தின்னு டியூஷனுக்கு வார பிள்ளைங்ககிட்டே காசு வாங்கிட்டுக் கத்த மட்டுந்தான் ஒங்களுக்குத் தெரியுமா? ஒருத்தன், ஒரு பெண்ணோட வரம்பை மீறும்போது, அந்தப் பெண் தன்னோட வரம்பை அடக்கிக்கிட்டு இருக்கறதுதான் தமிழ்க்கற்பா! குப்பையில போடுங்க கொண்டு."

"நீ இப்போதான் இளமையின்...."

''நாலு நாளைக்குள்ளே நான் கிழவியாய் ஆயிட்டேம்மா. சரி. எப்படியோ தொலையுங்க! காலமெல்லாம் நான் கூனிக்குறுகியே கிடக்குறேன்? அவன் தொட்ட இந்தக் கைக்கூட ஏதோ விபத்துல விழுந்துட்டாலும் அவன் தந்த விபத்த என்னால் மறக்க முடியுமா? வலியவனைக் கண்டு அவனோட வம்பையும் பொறுத்துக்கிட்டு மெலியவர் இருக்கிறதுதான் நியாயமுன்னு அநியாயமாய் பேசுறீங்க..... ஓர் அநியாயத்தை

வெளில பேசுறதுகூடத் தப்புன்னால் அது அந்த அநியாயத்துக்கு உடன்போவதாய் ஆகாதா? அதோ அப்பா 'நாமார்க்கும் குடியல்லோ'முன்னு ரொம்பத்தான் கத்துறார். அவருக்கு அதோட அர்த்தம் தெரியாது. தமிழாசிரியையான ஒங்களுக்காவது தெரியுமா! நாமார்க்கும் குடியல்லோமுன்னு... ஓதி..... அப்பர் பாடுவதைக் கொச்சப் படுத்தாண்டாமுன்னு அப்பாகிட்டே போய்ச் சொல்லு. அர்த்தம் தெரியாமல் எந்தப் புனித வரியையும் வாசிக்கிறது அந்தப் புனிதத்தையே அவமதிக்கிறது மாதிரி. கையைத் தானே பிடித்தான்னு, அதுக்குப் பின்னால இருக்கிற ஆணவத்தை, அகந்தையைத் தெரியாமல் இருக்கீங்களே, அதேமாதிரிதான்!"

இசக்கியா பிள்ளையின் கண்ணீர் நாமார்க்கும் குடியல்லாம் வாசகங்களை நனைத்தது. அந்தப் பாடலை, அப்பர் பிரான் பாடிய சூழலை எண்ணிப் பார்த்தார். அப்பரே அங்கு வந்து..... அவரையே ஒரு எதிர் பக்தியாளனாய், தன்னைக் கடலில் கல் கட்டித் தூக்கிப்போட்ட அந்த மன்னனின் மறுவுருவமாய்ப் பார்ப்பதுபோல் தோன்றியது. இந்தப் பாடலின் மெய்யான தாத்பரியம், அவர் இதுவரை யந்திரகதியில் ஓதிவரும் மந்திரங்களுக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுத்தன.

**புத்திர்பலம், யசோர் தைரியம், நிர்ப்பயத்துவம்.....** ஆம், பயம்தான்.... பயப்படவேண்டும். கொத்துதிரி... சூலி திரி குலச ஓங்காரி.... ஆங்காரி... ரீங்காரி போன்ற சொற்கள், புதுப்பொருளைக் கற்பிக்க, சூலாயுதம் மட்டுமல்ல, நாமார்க்கும் என்பது ஓதுவதற்கும், உச்சரிப்பதற்கும் மட்டும் அப்பர் பெருமான் ஆக்கவில்லை.

இசக்கியா பிள்ளை, மகளையே ஒரு துர்க்கையாக அனுமானித்தார். தன்னுள்ளே, ஒரு கடல் பொங்குவதைக் கண்டார். அதிலே திரிசூலமும், உடுக்கும் எழுவதைப்

பார்த்தார். நாமார்க்கும் குடியல்லோம்..... ஆமாம்..... அஞ்சி ஒடுங்கி வாயில்லாப்பூச்சியாய் இருப்பது அப்பர் பிரானை அவமதிப்பதற்கு ஒப்பாகும். சட்டம் என்ற கல்லைக் கட்டி, நீதிமன்றம் என்ற கடலில் போட்டாலும், நாமார்க்கும் குடியல்லோம்.

இசக்கியா பிள்ளை கற்பூரத்தை ஏற்றினார். ஆறுமுகமாய்ச் சுடர்விட்ட ஜோதியை அங்குமிங்குமாய் ஆட்டினார். பிறகு, அதை அப்படியே ஒளிரவிட்டு வெளியே வந்தார். ஒயர் கொடியில் தொங்கிய தேய்க்காத சட்டையைப் போட்டுக்கொண்டே மகளிடம் வந்து, படுத்துக் கிடந்தவளைத் தூக்கி நிறுத்தினார்.

“எழுந்திரும்மா போகலாம்! ஆரம்பம் போலீஸ் ஸ்டேஷன்..... அப்புறம் எதுவரைக்கும் வேணுமுன்னாலும் போகட்டும். ஒன்னை மகளாய் நினைச்சுக் கூப்பிடலே. அம்பாளாய் நினைச்சுக் கூப்பிடுறேன். எழுந்திரு நாமார்க்கும் குடியல்லோம் எழுந்திரும்மா.... ஆமாம் இப்படித்தான் எழுந்து நிற்கணும்.”

கல்கி – 1991

# வாடாத பயிர்

ஊருக்கு அருகே இருந்த ஓடைப்பாலம்..... அங்கே அமர்ந்திருந்த அந்த நால்வரின் உரையாடலுக்கு வரையப்பட்ட ஓவியம்போல், மாலைநேர மஞ்சள் வெயில், பாலத்தில் பாதியும், அவர்கள் வாய்களில் மீதியும் விழுந்து கொண்டிருந்தது. பேச்சுக்கு ஏற்றாற்போல அவர்கள் வாய்கள் 'மஞ்சள் தனமாக' விளங்கின. பாலத்தின் ஒரு ஓரத்தில் ஒரு காலை தூக்கி கையால் விலாவோடு சேர்த்து அணைத்தபடி இருந்த கிருஷ்ணன், தமது இதர சகாக்களைப் பார்த்து ஏதோ ஒரு மூச்சில், "அவன் ரொம்ப சின்னப் பையன்ப்பா... என்னைவிட ஒரு வயசுதான் அதிகம்" என்றார்.

அந்த நாற்பது வயதுக்காரர்களுக்கு அருகே, நெற்றியைப் பிடித்துக்கொண்டிருந்த வாலிபப் பையன் பெருமாள். "அவரோ அல்லது நீரோ சின்னப் பையன்னா, நான் இப்போ எங்க அம்மாகிட்ட பால் குடிச்சிக்கிட்டு இருக்கணும்" என்றான். உடனே, அவனை அடுத்து இருந்த ஐம்பது வயது லட்சுமணன் 'பாலுணர்வு' தெறிக்கும் படியான ஒரு பேச்சை போட்டார். அவர், பேச்சை முடிக்கு முன்னாலேயே, இரண்டுபேர் விழுந்து விழுந்து சிரித்தபோது, சின்னப்பையன்கள் லிஸ்டில் இருந்து விடுபட்டாலும், வாலிப லிஸ்டிற்குள் இன்னும் வராத விடலைப் பையன் ராமன், எழுந்து நின்றே சிரித்தான். கிருஷ்ணன் மாமாவோட பேச்சு அவனுக்குப்

புரிந்துவிட்டதாம்! இனிமேலும் அவனைக் குழந்தையாய் நினைக்கப்படாதாம்.

ஊர் வாயின் கோரை பற்களான இவர்கள், பத்திரிகைகளுக்குத் தக்கபடி கதை எழுதும் எழுத்தாளர் போல், அந்தப் பக்கமாக வந்துபோன பெண்கள் எல்லோரையும் அவர்களின் குடும்பப் பின்னணிக்குத் தகுந்தாற்போல் விமர்சனம் செய்தாகிவிட்டது. ஒரு எளியவனின் மகள் புல்லுக்கட்டு சுமந்து போனபோது, "எதையோ சுமக்க வேண்டிய வயசில.... இதை சுமக்கியம்மா" என்று வெளிப்படையாகவே கேட்டாகிவிட்டது. ஊரான் வீட்டுப் பெண்களைத் தங்கள் வீட்டுச் சங்கதிகள் தெரியாமல் விளாசியாகி விட்டது.

ஒரு மிராசுதாரர் பெண்ணைப் பார்த்ததும் முன்னாலும் பேசாமல், பின்னாலும் பேசாமல் விட்டாகிவிட்டது. ஏனென்பது அவர்களுக்கே தெரியும். அவள் அண்ணன், சண்டை கோழி. மூக்கில் கொத்துவான். அப்பா, அடியாளை வைத்து உதைப்பார். ஆக மொத்தத்தில், இவர்கள் மூஞ்சுகளை அயிரை மீனை உரசுவதுபோல, இந்தப் பாலத்திலேயே வைத்து உரசிவிடுவார்கள். ஆகையால் அந்தப்பெண் போவது வரைக்கும் தலைகளைத் தாழ்த்திக் கொண்ட அந்த வீரர்கள் பிறகு வேறு யாரும் கிடைக்காததால், ஒரு ஆணை விமர்சித்து, அதன் விளைவாய்த் தங்களைத் தாங்களே விமர்சித்துக்கொண்டார்கள்.

சுய விமர்சனம் என்றைக்குமே அலுப்புத் தருவது. அது அவர்களுக்கும் வந்தது. திடீரென்று விடலைப்பையன் கத்தினான்.

"அங்க.... பாருங்க. கேணயன் வேலுச்சாமி வாரான். வாயக்கிளறலாம். நல்லா நேரம் போவும்."

எழுந்திருக்கப்போன லட்சுமணன், இரண்டு கால்களையும் மடித்துப் பாலத்தில் வைத்துக்கொண்டார்.

வாலிபன் பெருமாள் அமர்த்தலாகச் சிரித்தான். தொலைவில் தெரிந்தவன் வருவது வரைக்கும், பொறுக்கமுடியாதவன்போல், 'விடலை' ராமன் பாலத்தின் மீதே எழுந்து நின்றான்.

தொள தொள என்று கட்டுமளவுக்கு கட்டுமானம் இல்லாத நாலு முழ வேட்டி, இடுப்பை விட்டு இறங்கப் போவதுபோல் லூசாக இருக்க, வெற்றிலை எச்சங்கள் நீலச் சட்டைக்கு சிவப்பு ஒட்டுத் துணிகள்போல் தோன்ற, நேராகப் பார்க்கத் தெரியாதவன்போல மேலும் கீழும் பக்கவாட்டிலும் பார்த்தபடி வேல்சாமி வந்து கொண்டிருந்தான். முப்பது வயதிருக்கலாம். அடியும், தலையும் ஒரே மாதிரியான உடலமைப்பு. சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்ற நிறம். துருத்திய கண்கள் அவிழப்போன வேட்டியைக் கட்டவேண்டும் என்ற உணர்வில்லாமலே, அதை வயிற்றுப் பக்கமாக ஒரு கையால் அணைத்துப் பிடித்து, வேல்சாமி 'எக்கி, எக்கி' நடந்தான்.

வேல்சாமியிடம், அவர்கள் பேசவேண்டிய அவசியமில்லை; அவனே பேசினான். பேசும்போது வார்த்தைகள் மெதுவாகவும், எச்சில் வேகமாகவும் அதிமாகவும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. கேணத் தனமாகத்தான் கேட்டான்.

"என்ன இது. பாலத்தில் உட்கார்ந்திட்டியே! நான் வயலுக்குப் போகும்போதும் ஒக்காந்தியே! வரச்சிலயும் இருக்கிய."

கிருஷ்ணன் பௌவ்விய பாவனையோடு பதிலளித்தார்.

"ஏதோ தெரிஞ்சு தெரியாம ஒக்கார்ந்துட்டோம்! நீ என்ன சொன்னாலும் கட்டுப்படுகிறோம்! என்ன செய்யணும்னு சொல்லு!"

"நல்லா இருக்கே நாயம்.... மாமா சொல்லி மருமவன் செய்யணுமா! மருமவஞ் சொல்லி மாமா செய்யணுமா?"

"சரி, மருமவனே! நான் கண்ண மூடிக்கிட்டு ஒண்ணு செய்வேன். நீ அதே காரியத்த கண்ண திறந்துகிட்டே செய்யணும். ஒன்னாலே முடியுமா?"

"என்ன மாமா நீரு? செய்து காட்டும்... செய்யுறேனோ, இல்லியான்னு பாரும்!"

"கண்டிப்பா?"

"கண்டிப்பாவே.... சோளத்தட்டைக்குள்ள ராசாத்தியக் கட்டுறதா வாக்குக் கொடுத்துட்டு அப்புறம் கை விட்டானே மாடக்கண்ணு, அவன் இல்ல நான். ஐயா வேல்சாமி!"

"இது என்னடா புது சமாச்சாரம். எந்த ராசாத்தி? எந்த மாடக்கண்ணு?"

"அவிய கிடக்கட்டும். நீரு சொன்னத செய்யும்!"

"சரி, மாமா தோத்துட்டேன்னு வச்சிக்கிடு. எந்த ராசாத்தி!"

"நீரு மொதல்ல, கண்ண மூடுமுன்னா மூடும்"

கிருஷ்ணன், பாலத்தில் தேங்காய் சிரட்டை மாதிரி இருந்த குழியில் கிடந்த மண்ணை அள்ளி, கண்களை மூடிக்கொண்டு அதை கண்மேல் போட்டார். பிறகு கண்களைத் திறந்து புருவத்தின் மீதும், கன்னங்கள் மீதும் இருந்த மண் துகள்களை துண்டால் துடைத்துவிட்டு கைகளைத் தட்டிக்கொண்டே வேல்சாமியைப் பார்த்தார். அவன் தயங்குவது போலிருந்தது. இப்போது கிருஷ்ணன் விட்ட இடத்தை லட்சுமணன் தொடர்ந்தார்.

"பூ.... இவ்வளவுதான் ஒன் வைராக்கியமா? பெரிய அரிச்சந்திரன்மாதிரி சபதம் போட்ட!"

"யாரு சின்னய்யா... இப்போ மாட்டேன்னது? அதுக்கு வேற ஆளப் பாரும்!"

வேல்சாமி, அவர்களுக்கு எதிரே கீழே உட்கார்ந்தான். இரண்டு கைய நிறைய மண்ணை அள்ளிக்கொண்டான்.

கண்களை அகலமாகத் திறந்து வைக்க கன்னத்துச் சதையை கீழ் நோக்கி இழுத்துக்கொண்டான். நெற்றியை மேல் நோக்கிச் சுழித்துக் கொண்டான். கண்களை சுழலாமல் வைத்துக்கொண்டே, கையில் இருந்த மண்ணை எடுத்து சரஞ்சரமாகப் போட்டான். கண் உறுத்துவதையும் பொருட்படுத்தாமல் சர்வ கட்சிகளும் பயன்படுத்தும் ஒரு அரசியல் கோஷத்தை அடிக்கடி கேட்டுப் பழகிய அவன், "இந்த மண்ணு போதுமா! இன்னும் கொஞ்சம் வேணுமா?" என்றுகூட பேசி, அந்த முயற்சியில் வாய்க்குள்ளும் மண்போனது. கண்கள் திறந்திருந்தாலும் அவனால் பார்க்க முடியவில்லை. வலது கையால், இடது கண்ணையும், இடது சாரிக் கையால், வலது சாரிக் கண்ணையும் அவன் கசக்கிக் கொண்டிருந்தபோது, ஒரு பெண்ணின் குரல், ஆவேசமாக ஒலித்தது.

"ஒருவன் பைத்தியார தர்மர்னா, இப்படியா தூண்டி விடுறது. வெளயாட்டுக்கும் ஒரு வரமுற இல்லியா? ஒங்க அண்ணன் தம்பியள இப்டி பண்ணுனா சம்மதிப்பியளா?"

பாலக்காரர்கள், வேல்சாமியின் தங்கையைத் திடுக்கிட்டுப் பார்த்தார்கள். விளையாட்டு ஜோரில், அவள் வருவதைப் பார்க்காமல் இருந்துவிட்டார்கள். இப்போது இருக்கமுடியாதது போல் நெளிந்தார்கள். தோளில் மண்வெட்டி தொங்க நின்ற அந்தப்பெண், அண்ணனைப் பார்த்து ஆடிப்போனாள். பிறகு அந்த நால்வரையும் நேராகவும், கூராகவும் பார்த்துக்கொண்டே ஆவேச சக்தியாய் அவள் நின்றபோது, வேல்சாமி தங்கையைச் சாடினான்.

"ஆம்பிளைங்க பேசிக்கிட்டு இருக்க இடத்துல... ஒனக்கென்னழா வேல... பேசாம வீட்டுக்குப் போ! போன்னா போழா!"

"நீ ஆம்புளமாதிரி நடக்காமப் போனதால, நான் பொம்பளமாதிரி நடக்க முடியாம இவங்க முன்னால நிக்க

வேண்டியதாப் போச்சு! அய்யா, பெரிய மனுஷமாரே வேணுமுன்னா.... எங்கண்ணனை, ஒங்க கையால கொன்னுடுங்க. ஆனா இப்படிப் பண்ணாதிய! கொன்னுட்டிங்கன்னா எங்களுக்கும் ஒரு கவல முடிஞ்சது மாதிரி இருக்கும்."

வேல்சாமியின் தங்கை போய்விட்டாள். கிருஷ்ணன், துக்கம் விசாரிப்பவர்போல்-

"ஆயிரந்தாலும் இருந்தாலும், ஒரு பொண்ணுக்கு இவ்வளவு வாய் ஆவாது. கூடப்பிறந்த அண்ணனைப் பேசுற பேச்சா இது!"

"அவள வீட்ல போயி என்ன பண்ணுறேன்னு பாருங்க! அங்க விழுவுறது இங்க கேக்கும்படியா அடிக்கப்போறேன்! வேணுமுன்னால் பாருங்க!"

"ஏண்டா! அவளுக்கு கல்யாணம் என்னடா ஆயிட்டு?"

"அம்மா பாத்துக்கிட்டு இருக்கா."

"பேசாம இவன் பெருமாளுக்குக் கட்டலாம்!"

"இவன் பெரிய இடமுல்லா பாப்பான்?"

"அதுக்கு நானாச்சு."

வாலிபப் பையன் பெருமாள் குறுஞ்சிரிப்பாக சிரித்துக் கொண்டே பேசினான்.

"நம்மளால, பழகிப் பார்க்காம கட்டமுடியாது."

"சும்மா துள்ளாதப்பா. இவன் அதுக்கு ஏற்பாடு பண்ணுவான்."

'விடலை' ராமனுக்கு இது அதிகபட்சமாகத் தெரிந்தது. எனக்குன்னாலும் பரவாயில்ல. இந்தப் பெருமாளுக்கா.... சீ. ஒரு குடும்பப் பெண்ணை இப்படியா பேசுறது? அவன் பேச்சை மாற்றினான்.

"அவள் கிடக்காள். முதல்ல நம்ம வேலு மச்சானுக்கு கல்யாணம், கருமாந்திரம் ஏதும் இருக்கான்னு ரேகைப் பாத்துச்சொல்லும்."

வேல்சாமி ஆவலோடு கேட்டான்.

"கிருஷ்ண மாமாவுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமா?"

"இவரைப்பத்தி என்ன மச்சான் நினைச்சே? ஒருவன் இத்தனாம் தேதி சாகணுமுன்னு இவரு சொல்லிட்டா, அத்தனாம் தேதி அவன் சாகாட்டாலும் செத்தவன் மாதிரி தூங்கிக்கிட்டாவது இருப்பான்."

"அடடே, அப்படியா! மாமா.... எனக்கும் பாரு மாமா.... மாமா.... மாமா....!"

வேல்சாமி, ஆவலோடு நீட்டிய கையை, ஐந்து நிமிடம் உற்றுப் பார்ப்பதுபோல் பாவலா செய்த கிருஷ்ணன், பிறகு, 'இது அற்புதமான கைப்பா! இதோ பாரு... வேல் ரேகை. வேல் இருந்தால் ஞானம் வரும். மாப்பிள்ளை ஞானியாகப் போறான்!"

"அப்படின்னா..... இவருக்கு முருகன் அருள் நிறைய இருக்கோ?"

"என்னப்பா அப்படிச் சொல்லிட்டே! இடும்பனுக்குப் பிறகு, நம்ம வேல்சாமிதான் முருகனுக்கு நெருக்கமான தோழன். அடேயப்பா! இவன் மயிலும் வேலும் துணைன்னு சொல்லிட்டா போதும், யாரும் எதுர்ல நிக்கமுடியாது. மாப்பிள்ள; கால தொட்டுக் கும்பிடலாம் போலத் தோணுது.

இவரு கோபமான ஞானி; ஞானமான கோபி; இப்போ தங்கச்சி மேல கோபமாய் இருக்கார்! என்ன பண்ணப் போறாரோ, மாப்பிள்ள, தங்கச்சிய அடியும் வேண்டாங்கல. ஒம்மகிட்ட அடிபட்டால் சூரன் திருந்தினது மாதிரி அவளும் திருந்துவாள். ஆனால், பிரம்ப வச்சு அடியும். கல்ல எடுக்கப்படாது.

வேல்சாமி, கையை மடக்கிக்கொண்டு புறப்பட்டான். இடும்பனுக்கு அடுத்தபடியாக 'முருகன்' தன்னை நேசிப்பதில் அவனுக்கு தாளாத மகிழ்ச்சி. ஊர் மத்தியில் இருந்த முருகன் கோவிலை முதன் முறையாக முழுமையாக ஏறிட்டுப் பார்த்தான். இடும்பன் சிலைக்கு அருகே தானும் இன்னொரு சிலையாக நிற்கவேண்டும் போல் ஒரு எண்ணம் ஏற்பட்டது. உள்ளங்கையைப் பார்த்து, 'வேல் ரேகை' இன்னும் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

முருகன், சூரபத்மனை வதம் செய்ததுபோல் தானும் தங்கையை அடித்து ஆட்கொள்ள வேண்டும் என்று நினைத்தபடி, 'வேலும், மயிலும் துணை' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டே வீட்டை நெருங்கினான்.

வீட்டுக்குள் தங்கை அழுதுகொண்டிருந்தாள். அம்மாக்காரி தன் இளைய மகன் முத்துவின் கைகளைப் பிடித்துக்கொண்டு "கூலி வேலைக்கிப் போய்..... இவள் மாடா உழைச்ச காசுடா.... சாராயத்துக்கு தகாத காசுடா. கடவுளே! நான் என்ன பண்ணுவேன்! இளையவன் கேடியா போயிட்டான்! மூத்தவன் பேடியா போயிட்டானே' என்று புலம்பிக் கொண்டிருந்தாள். முத்து, அம்மாவின் பிடியில் இருந்து கைகளை விடுவித்துக் கொண்டு, அவளைக் கீழே தள்ளப்போனான். இந்த மாதிரி சமயங்களில், "எப்படியும் நாசமாப் போங்க..... எனக்கு வெத்தில பாக்குக்கு வராத காசு.... சாராயத்துக்குப் போவுது," என்று ஒதுங்கி கொள்பவன் வேல்சாமி. ஒரு சமயம் மட்டும் ஒதுங்காமல் இருந்தபோது, தம்பிக்காரன் அம்மா விழ வேண்டிய இடத்தில், அண்ணனைத் தள்ளினான். இப்போதும் முத்து அம்மாவைக் கீழே தள்ளுவதற்காக உடம்பை வளைத்தபோது தங்கைக்காரி தாயைத் தாங்கிப் பிடிக்கக் கையை விரித்தாள். வேல்சாமி சுவரில் தொங்கிய காலண்டரைப் பார்த்தான். அதில் முருகன் படம் வேலோடு நின்றது. வேல்சாமி தனக்குள்ளேயே சொல்லி கொண்டான். 'வேலும் மயிலும் துணை....'

அவ்வளவுதான், அவனுக்குத் தெரியும். ஏதோ பாய்வது மாதிரி பாய்ந்தான்.

முத்து, தான் முன்பு விழவைத்த இடத்தில் விழுந்து கிடந்தான். அவன் வயிற்றில், வேல்சாமியின் கால் இருந்தது. ரூபாய் நோட்டுக்கள் சிதறிக் கிடந்தன. அம்மாவும் மகளும் ஆனந்தமான அதிர்ச்சியில் இருந்து விடுபட்டு பின்னர் நிதர்சனம் புரிந்தவர்களாய் முத்துவை விடும்படி வேல்சாமியை மன்றாடினார்கள். வேல்சாமியும் விட்டான். முத்துவும் நொண்டிக்கொண்டே வெளியே ஓடினான். பிறகு, வேல்சாமி பிரதான எதிரியான தங்கையை அடிக்க ஆயத்தம் செய்தபோது, அவள் "என் தங்க அண்ணாச்சி.... இன்னைக்கிதான் நீ மனுஷனாய் ஆகி இருக்கே" என்று சொல்லி, அவன் கையை எடுத்து முத்தமிட, அடிக்கப்போன வேல்சாமி அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

அன்றிரவு வேல்சாமியால் தூங்க முடியவில்லை. உள்ளங்கையை விரித்து வேல் ரேகை இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். காலண்டர் முருகனை மார்புடன் சேர்த்து அணைத்தபடி, தூங்குவதுபோல் கிடந்தான். ஏதோ ஒரு பரவச உணர்வு உடலெங்கும் பரவியது. ஆகாயத்தில் பறப்பது போன்ற புளகாங்கிதம்..... தன்னுள்ளே, ஏதோ ஒன்று பேசுவது போன்ற ஆனந்தம். தனக்கும், 'எல்லா வல்ல ஏதோ ஒன்றுக்கும்' ஆதியந்தம் அற்ற பந்தம் ஒன்று இருப்பது போன்ற கண்ணோட்டம்.

வேல்சாமிக்கு, தாத்தாவின் நினைவு ஏற்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சூன்யமானவர். அதன் சூட்சமத்தி உணர நினைத்து, தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற நூல்களைப் படித்துக்கொண்டிருந்தவர். அவர் 'மேலே போனபோது' அந்த நூல்களும், மேலே போயின- பரணுக்கு. வேல்சாமிக்கு இப்போது எந்நாளும் இல்லாத ஒரு ஆசை........

தாத்தா படித்த புத்தகங்கள், எப்படித்தான் இருக்கும் என்பதை அறியும் ஆவலில், அவன் நள்ளிரவில் பரணைத் துழாவினான். பல்லி பாசான்களோடு, பல நூல்கள் விழுந்தன. எஸ்.எஸ்.எல்.சி வரைக்கும் படித்து, கல்லூரியில் மாணவர்களின் 'ரேக்கிங்'கால் பாதிக்கப்பட்டு ஊருக்கு ஓடிவந்த இவன் , இப்போது புத்தகங்களை, பயபக்தியோடு எடுத்தான். அவனால் எல்லாவற்றையும் படிக்க முடியவில்லையென்றாலும், புரட்ட முடிந்தது. அப்படிப் புரட்டப் புரட்ட தனக்குள் ஏதோ ஒன்று புரண்டது. ஆன்மாவோ, அடி மனசோ அறியான்.

ஓராண்டு காலம் பாதி தாத்தாவின் புத்தகங்களை படிப்பிலும் பாதி உழைப்பிலும் செலவாயின.

வேல்சாமி வழக்கம்போல் வயலுக்குப் புறப்பட்டான். இரவிலும், அதிகாலையிலும் படித்துப் பார்த்த தாத்தாவின் புத்தகங்கள், அவனுக்குப் புதிய உலகை, அகத்திலும் புறத்திலும் காட்டின. வேல் ரேகையை விழிப்போடு பார்த்துக்கொண்டு, வழியில் முருகன் கோயிலை வாஞ்சையோடு வணங்கிவிட்டு பாலத்தருகே வந்தான். காலங்காத்தாலேயே, மேக்கப்போடு உட்கார்ந்திருந்த அந்த நால்வரையும் நன்றியுடன் நோக்கினான். பழைய கிருஷ்ணன், புதிய வேல்சாமியைப் பார்த்து, "என்ன மாப்பிள்ளை.... போன வருஷம் கைபார்த்தேன் பாரு.... அப்போ இன்னொன்னையும் சொல்ல மறந்துட்டேன். ஒன் கையில் உடுக்கு ரேகையும் இருக்கு. ஒன்னால அநியாயத்த பார்த்துக்கிட்டு இருக்க முடியாது. ஒன் தங்கச்சி இப்போகூட எங்களப் பாத்து ஜாடையா திட்டிக்கிட்டு போனாள். அடிக்கடி அவளை தலையில தட்டி வை மாப்பிள்ள" என்றார்.

வேல்சாமி, எங்கேயோ தொலை தூரத்தைப் பார்ப்பவன் போல் நின்றான். உடனே பெருமாள், 'அவரு நிஷ்டையில் நிக்கார். அதக் கலைக்கப்படாது' என்றான். ராமன், பெருமாளை விலாவில் இடித்தபடி சிரித்தான்.

உடனே லட்சுமணன், 'அவன் நிஷ்டையிலே நிக்கலப்பா.... அதோ அந்த கொழுஞ்சி செடி கருகிப்போய் இருக்கறதை கலக்கத்தோடு பாக்கார். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்னு' ராமலிங்கசுவாமி பாடினார். நம்ம வேல்சாமியும், செடி வாடுவதைப் பார்த்து வாடுறான். தப்பு. அவன்னு சொல்லப்படாது. அவரும் வாடுறார்' என்றான். அப்படிச் சொல்லிவிட்டு, அவன் மற்றவர் களைப் பார்த்து கண்ணடித்துக் கொள்ளவும் தவறவில்லை.

வேல்சாமி, அவர்களிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே நகர்ந்தான். வள்ளலாரின் 'வாடிய பயிரை' நினைக்க நினைக்க, அவனுக்கு அன்பின் வடிவமைப்பு அழகாகத் தெரிந்தது. எவ்வளவு பெரிய பேரன்புப் பாடல். வயலுக்குப் போனவனுக்கு, அங்கே நின்ற தென்னை மரங்களும், பருத்திச் செடிகளும், தும்பைச் செடியும், புல்லும், பூண்டும் உயிர் ஜீவிகளாக, இதுவரை பார்த்தறியா பரம்பொருள் உயிர்ப்புகளாகத் தோன்றின. நகராத ஜீவிகளான செடி கொடிகளும், மரங்களும், விதையாகி, காயாகி, வெடிப்பாகி, வெடித்தது வீழ்ந்து, வெடிக்கப் பட்டது வாழ்ந்து, மானுடத்தைப் போல் வாழ்க்கைப் பிரவாகத்துள் ஆனந்த நர்த்தனம் புரியும் அவை, தன் மேனிக்குள் அணுக்களாய் அவதாரம் கொண்டது போலவும், தானே அந்தத் தாவரங்களின் இலையிலும், பூவிலும் எல்லா இடத்திலும் அணுக்களாய்ப் போனது போலவும் தோன்றியது. தனிப்பெரும் ஜோதியின் கீற்றுக்களான அவற்றுடன் பேசாமல் பேசிக்கொண்டிருந்த வேல்சாமி, சத்தங்கேட்டு நிமிர்ந்தான்.

ராமன், கையில் ஒரு கிளியை வைத்துக்கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தான். அந்தக் கிளி இறக்கைகள் அவன் கையில் சிக்க, கால்களை இறக்கைகள் போல் ஆட்டியது. வேல்சாமி-முன்பு பலருக்குப் பல கிளிகளைப் பிடித்துக்கொடுத்த அதே வேல்சாமி, இப்போது ராமனைப் பார்த்து அழுத்தமாகப் பேசினான். உடுக்கடிக்கும் சிவன்,

அவனைப் உந்துவது போலிருந்தது. பட்டென்று சொன்னான்.

"அந்தக் கிளியை விட்டுடு. அதை முடக்கிப் போட நமக்கு உரிமை இல்ல."

"என்ன மச்சான் நீ! கூண்டுகூட செய்துட்டேன். எப்படி விட முடியும்?"

"நீ விடப்போறியா? இல்ல உன்னை இந்தக் கிணத்துல தூக்கிப் போடணுமா?"

ராமன், சிறிது நகரப்போனான். வேல்சாமி அவனை நெருங்கினான். ராமன் கிளியை விட்டுவிட்டான். அதேசமயம் யோசித்தான். வேல்சாமிக்குப் பைத்தியம் முத்திட்டு... ஊர்ல சொல்லணும்...... உடனே சொல்லணும்.

வேல்சாமியும் யோசித்தான்.

ஒன்றின் அன்பு, இன்னொன்றின் அழிவாகக்கூட ஆகலாமோ! அழிவை ஆட்டிப் படைப்பதும் அன்பு தானே! இதனால்தான் அன்பின் ஊற்றான ஈஸ்வரன் அழிவுக் கடவுளாய் சுடலைப் பொடி பூசுகிறானோ?

வேல்சாமி, அடியோடு மாறிவிட்டான். யாரிடமும் பேசுவதில்லை. இதை, பலர் பைத்தியத்தின் இன்னொரு கட்டம் என்று நினைத்து, அடுத்த உச்சக்கட்டத்தை, ஆவலோடு எதிர்பார்த்தார்கள். வேல்சாமியும், தாத்தாவின் நூல்கள் அனைத்தையும் ஆவலோடு படித்தான். இடும்பனுக்கு அடுத்த படியானவன் என்று சொன்னதாலோ என்னவோ, நூலகம் போய், பல புத்தகங்களை 'இடும்ப வேகத்தில்' படித்தான். நாத்திவாதிகளின் நூல்களையும் படித்து, அவர்களும் சமூகத்தின் மீதிருந்த அன்பாலேயே, கடவுள் மறுப்புத் தத்துவத்தைத் கையாண்டிருக்கிறார்கள் என்று நினைத்தான். எல்லாவற்றையும் ஓரளவு படிக்கப்படிக்க, அவனால் அவற்றை எடை போட முடிந்தது. இதனால் தனக்கென்று, ஒரு ஆன்மீக வடிவத்தையும், சமூக நோக்கையும் அமைக்க முடிந்தது. தாத்தா, முன்பு செய்த பல யோகப் பயிற்சிகளில்

சிலவற்றைச் செய்து பழகினான். மனம் ஒருமைப்பட்டது. அச்சமில்லாத ஒருமை. அக்கிரமங்களுக்கு எதிரான ஒருமை.

சித்திரை விசாகம்...... முருகன் கோவில் முன்னால் தேராகவும், திருவிழாகவும் மக்கள் வெள்ளத்தில் மத்தியில் நின்றது. சிறிது நேரத்தில் பாட்டுக் கச்சேரி. அப்புறம் உபன்யாசம்...... உபன்யாசம் செய்பவர் வந்துவிட்டார். கச்சேரிக்காரர்களைக் காணவில்லை. மக்கள் பொறுமை இன்றி முண்டியடித்தார்கள். பெண்கள் பக்கமாக நின்ற, பழைய சகாக்களும், தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"வேல்சாமிய, மேடையில இழுத்துவிடுவோமோ?"

'அவன் தெளிஞ்சுட்டான். இப்போ நம்மள கண்டா பேசமாட்டக்கான் பாரு!'

"இது பைத்தியம் பிடிக்கிறதுக்கு முன்னால வார தெளிவு! வாங்கப்பா! பயல மேடையில ஏத்தி ஔர வைப்போம்."

அந்த நால்வர் கூட்டம் பெண் ரசனையை உதறிவிட்டு வேல்சாமி பக்கம் வந்தது. கிருஷ்ணன், கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டே, வேல்சாமிக்கு வேண்டுகோள் விடுத்தார்.

'மாமா சொன்னதுமாதிரி....... நீ ஞானியாயிட்டே! மேடையில போயி பேசப்படாதா? எங்களோட அஞ்ஞானத்தைப் போக்கப்படாதா?'

வேல்சாமி, அவர்களை நிமிர்ந்து பார்த்தான். பிறகு எதுவும் பேசாமல், மேடையில் ஏறி, 'மைக்' முன்னால் நின்றான். கூட்டம், ஒரு பைத்தியத்தின் கூத்தை ரசிக்கப் போவதுபோல் சிரித்து, சிரித்து ஒத்திகை பார்த்தது. தங்கைக்காரியும், தம்பி முத்துவும் "அண்ணாச்சி... அண்ணாச்சி" என்று மேடையை நோக்கி ஓடினார்கள்... அவர்களை, சில வேடிக்கைக்காரர்கள் பிடித்துக் கொள்ள அங்கே ஒரு மல்யுத்தமே நடந்து கொண்டிருந்தது.

வேல்சாமி, திருவாசகப் பாடல் ஒன்றை, ஒரு ஓதுவார் மாதிரியே பாடினான். அந்தப் பாட்டின் பரசவத்தில் கூட்டம் அமைதிப்பட்டது. பின்னர் தம்பியும், தங்கையும் நின்ற இடத்திலேயே நிற்கும்படி பேசினான்.

"பெரியவர்களே! தாய்மார்களே!"

"இந்தப் பைத்தியம், எதை உளறப்போகிறதோ என்று நீங்கள் நினைப்பது நியாயந்தான். நான் பைந்தியந்தான். நீங்கள் நினைப்பது மாதிரியான பைத்தியம் அல்ல. ஈஸ்வரனைப் போன்ற பித்தன். சிலுவையில் அறையப்பட்ட இயேசு பீறிட்டு எழுந்தது போன்றவன். ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள்."

கூட்டம் அவனோடு ஒன்றியது. ஆனாலும் தம்பியும், தங்கையும் உயிரை கையில் பிடித்திருப்பது போல் நின்றார்கள். வேல்சாமி, கதை சொன்னான். புராணக்கதை.

"ஒரு காட்டில், ஒரு முனிவர், பாதி மிருகமாகவும், பாதி மனிதனாகவும் வடிவு கொண்டதாகக் கூறப்படும் நரசிம்ம அவதாரத்தை அப்படியே பார்ப்பதற்காக ஆண்டுக் கணக்கில் தவம் இருந்தார். தவம் பலிக்காமல் இருந்த நேரம்.... அந்தச் சமயத்தில், ஒரு வேடன் வேட்டையாட வந்தான். அந்த முனிவரைப் பார்த்து, "சாமி! எதை தேடிக்கிட்டு இங்கே இருக்கிறீக?" என்றான். உடனே அந்த முனிவர், 'நான் ஒரு மிருகத்தை தேடிக் கொண்டிருக்கிறேன்' என்று பதிலளித்தார். உடனே இந்த வேடன் பலமாய் சிரித்து விட்டு, 'எனக்குத் தெரியாத மிருகமா? சொல்லுங்கள். அதைக் கட்டிப் பிடித்து கொண்டு வருகிறேன்' என்கிறான். முனிவரோ, மமதையோடு சிரிக்கிறார். வேடன் மீண்டும் வற்புறுத்துகிறான். உடனே அவர், 'அந்த மிருகம் பாதி மனித வடிவத்திலும், மீதி சிம்ம வடிவத்திலும் இருக்கும். உன்னால் பிடிக்க முடியாது' என்கிறார்."

அந்த வேடன் சிறிது அயர்ந்து போகிறான். ஆனாலும் முனிவரிடம் சபதம் போடுகிறான். 'எப்படியும் இன்று

மாலைக்குள், அந்த மிருகத்தை உங்கள் முன்னால் கொண்டு வந்து காட்டுகிறேன். அப்படி முடியாது, போனால் நெருப்பை வளர்த்து அதில் உயிர் மாய்க்கிறேன்' என்கிறான். வில்லும் அம்புமாய் காட்டுக்குள் சுற்றுகிறான். எல்லா மிருகங்களும் கிடைக்கின்றன. ஆனால் அந்த மிருகத்தை காணவில்லை. இறுதியில் காட்டு விறகில் நெருப்பூட்டி உயிரை மாய்க்கப்போகிற சமயத்தில் -

அந்த நரசிம்ம வடிவம் உறுமிக் கொண்டே, அவனை நெருங்குகிறது. இவன், அதன் கழுத்தை கயிற்றால் கட்டி, முனிவரிடம் இழுத்து வருகிறான். 'இந்த மிருகத்தைப் பாருங்கள் சாமி' என்கிறான். முனிவர் கண் விழிக்கிறார். அவருக்கு மனிதக்குரல் கலந்த ஒரு சிம்மக் கர்ஜனை கேட்கிறது. கயிறும் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் அந்த மிருகத்தைத்தான் பார்க்க முடியவில்லை. உடனே, ஆகாயத்தில் ஒரு அசரீரி குரல்.

''ஏ மூட முனிவனே! இன்னும் நீ, 'நான்' என்ற ஆணவத்தை விடவில்லை. ஆனால், இந்த அப்பாவி வேடனோ, என்னை பிடிப்பதற்காக என்னிடமே ஒன்றி விட்டான். ஆகையால் அவன் அன்புப் பிடிக்குள் அகப்பட்டு விட்டேன். இப்போதுகூட, நீ என் குரலைக் கேட்பது, அவனை நீ பார்த்த புண்ணியத்தால்தான்" என்று ஒலித்துவிட்டு, அந்தக்குரல் முடிகிறது.

வேல்சாமி கூட்டத்தை அங்கம் அங்கமாகவும், ஒட்டு மொத்தமாகவும் பார்க்கிறான். கூட்டமோ மெய் மறந்து அவன் வாயையே பார்க்கிறது. வேல்சாமி தொடர்கிறான்.

"ஆகையால் பெரியோர்களே! இந்த வேடன் கதைதான் என் கதை.'' ''**ஞானம், மூடனுக்கும் வரும். சில மூடர்களாலும் வரும்.**"

**தினமணிக்கதிர் - 1990**

# நித்திய பாலன்

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், டில்லி வரைக்கும் தடம் புரளாமல் ஓடுமா என்ற நியாயமான சந்தேகங்கூடத் தோன்றாமல், முதல் வகுப்புப் பெட்டியில், எனக்குள்ளேயே நான் மூழ்கியிருந்தேன். வெளியே சூட்கோட் போட்ட 'பிளாட்பார' ஆசாமிகள், சம்பந்தப் பட்டவர்களுக்குப் பிரிவுபசார உணர்வுகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்க, சிலர், பல்லவ பஸ்ஸைவிடப் படுவேகமாகப் பறந்து கொண்டிருந்தனர். பேரத்தை மீறிய போர்ட்டர்கள், பேரம் பேசாமல் பெட்டியில் சாமான்களை ஏற்றிவிட்டு போர்ட்டரை 'டபாய்க்கும்' பிரயாணிகள், பிரயாணிகளை டபாய்க்கும் போர்ட்டர்கள், விசில் சத்தங்கள், 'யுவர் அட்டன்ஷன் பிளீஸ்கள்' - ஆகிய எந்த அமர்க்களமும், என் காதில் மோதியிருக்கலாம். ஆனால் மூளையில் மோதவில்லை; இதனால், எனக்கு மூளை இல்லை என்பதல்ல. என் மூளையிலும், அதிலிருந்து புறப்பட்ட, முதுகுத் தண்டிலும், 'உட்செல்', 'வெளிச்செல்' நரம்புகளிலும் இதயத்தின் 'ஆரிக்களிலும்' 'வென்டிரிக்களிலும்', ஒரே ஒரு பையன் மட்டுமே விசுவரூபமாக வியாபித்திருந்தான். மறுநாள் டெல்லிக்குச் சென்றதும், பத்தாண்டு வரை பார்க்கத் துடித்தும், பார்க்க முடியாமல் போன, என் 'மருமான்' ரமேஷைப் பார்க்க வேண்டும். பார்க்காமல், எப்படி இன்னும் ஒன்றரை நாட்கள் இருக்க முடியும் என்ற இயலாமையால் நான் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

நான் டில்லிக்கு, ஜி.டி.யிலேயே போயிருக்கலாம். திங்கட்கிழமை தொடங்கவிருக்கும் கான்பரன்ஸுக்கு, வெள்ளிக்கிழமையே 'தமிழ் நாட்டில்' போக வேண்டியதில்லை. இருந்தாலும், டில்லியில் ஓய்வு கிடைக்கும் ஒவ்வொரு வினாடியையும், சுரேஷுடன் கழித்து, களிக்க வேண்டும் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக, செகரடேரியட் ஆசாமிகளைப் பார்த்து, 'கோட்டாவில்' டிக்கெட் வாங்கிப் புறப்பட்டேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. பத்தாண்டு காலம், அவனைப் பார்க்க வேண்டும் என்று, இப்படிப்பட்ட வேகம், இதுநாள் வரையில் வந்ததில்லை. ரயில் பெட்டியில் ஏறிய பிறகுதான், ரயில் புறப்படாத ஒவ்வொரு விநாடியும், 'நாடியில்லாத' வீண் விநாடியாக எனக்குத் தோன்றியது.

ரயில் புறப்பட்டு விட்டது. 'ஜிக்கு புக்கு' சத்தம் போடாமல், அருமையான ஓசையுடன், பிரயாணிகளைக் குலுக்காமல், அதே சமயம் தன் பாட்டுக்குக் குலுங்கிய வண்ணம் புறப்பட்ட ரயிலை நினைத்ததும், டில்லி ரயில் நிலையத்திலிருந்து பத்தாண்டுகளுக்கு, முன்பு நான் புறப்பட்ட நிகழ்ச்சி, டெலிவிஷன் போல் 'கிளியராக' வந்தது.

பத்தாண்டுகளுக்கு முன்பு-

பாரதத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதாலே என்னவோ, தலைவிரிகோலமாக இருந்த டில்லி நகரில் இருந்து, சென்னைக்கு மாற்றப்பட்ட என்னை, வழியனுப்ப ரமேஷ், அவன் பெற்றோர். 'வயது' வந்த அவன் அக்காள், என் நண்பர்கள்-முதலியோர், ரயில் நிலையத்துக்கு வந்திருந்தார்கள். என் நண்பர்கள் என்னைப் பார்க்காமல், இதர பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'பயல்கள்' என்னை வழியனுப்ப வந்தார்களா அல்லது அந்தச் சாக்கில் முன்பின் அறிமுகமில்லாத பெண்களை வழியனுப்ப வந்தாரகளா என்ற சந்தேகம் எனக்கு வரவில்லை. ரயில் நிலையம் வரைக்கும் எனக்காக

வந்திருக்கலாம். இப்போது என்னை அந்நியன் போலவும், அந்நியமான பெண்களைப் பிரிய மனமில்லாத பிராண சிநேகிதிகள் போலவும் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆராய்ச்சி மாணவியான ரமேஷின் அக்காள், வந்தவர்களில் எவனும் தனக்கு 'மேட்ச்' இல்லை என்பதுபோல், முகத்தைச் சுழித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பெற்றுவிட்டு, அதற்காக இப்போது பிராணனைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பதுபோல், தோன்றிய பெற்றோர், சென்னையில் அவர்களின் சொந்தக்காரர்களிடம் நான் கொடுக்க வேண்டிய 'மோடாக்களைப்' பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, என்னைப் பார்க்கவில்லை.

ஆனால், ரமேஷ் மட்டும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். பத்து வயதுப் பையனான அவனுக்குப் புரிந்ததுபோல் அழுதான். அதே சமயம் புரியாதது போல் தன் மடி மீது உட்கார்ந்திருந்தான். "எப்போ மாமா வருவீங்க?" என்று கேட்டான். நான் வாயைத் திறக்காமல், கண்களைத் துடைப்பதைப் பார்த்துவிட்டு, "எப்பவுமே வர மாட்டேளா" என்று அழுவான். "ஆக்ராவுக்குத்தான் போறேன்.... நாளைக்கு வந்துடுவேன்" என்று நான் சொன்னதும் அவன் இலேசாகச் சிரிப்பான். சொல்லப் போனால், மடியில் இருந்த அவனைப் பார்க்கப் பார்க்க, காய்ச்சாத பால்போல, பூக்காத மொட்டுப் போல, தேயாத சந்தனம் போல, அறியாத புன்னகையின் ஏகபோக வாரிசு போல் தோன்றிய அவனை இன்னம் சில நிமிடங்களில் பிரியப் போகிறோமே என்கிற ஏக்கத்தில் எனக்கே, "ஆக்ராவுக்கே" போகவேண்டியிருக்குமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. (சென்னைக்குக் 'கீழ்ப்பாக்கம்' எப்படியோ, அப்படி, டில்லிக்கு 'ஆக்ரா') ரயிலுக்குப் பச்சை கொடி காட்டியாகிவிட்டது.

அந்தப் பச்சை மதலையை வாங்கிக் கொள்வதற்காக, தந்தைக்காரர் உள்ளே வந்து கைகளை விரித்தார். ஆனால்,

ரமேஷ், பதிலுக்குக் கைவிரிக்கவில்லை. மாறாக, தன் பஞ்சுக் கைகளை என் கழுத்தைச் சுற்றிக் கொண்டு, "மாட்டேன், மாட்டேன்... மாமாவோடத்தான் போவேன்.... போவேன்..." என்று அடம் பிடித்து அழுதபோது, அடம் பிடிக்காமல் அழுத என் கண்ணீர், அவன் முதுகை நனைத்து, அவன் தந்தையின் புறங்கைகளிலும், சிதறியது.

''சீக்கிரம் கல்யாணம்' பண்ணுங்கோ'', ''ஒரு வருஷத்துக்கு ஒரு தடவையாவது வாங்கோ", "தடியா மாமி சொன்னாபோல கல்யாணத்துக்கு ஆசைப்பட்டு, ரயிலி லேயே காதலிச்சுடாதே....'', "மெட்ராஸ் வரும்போது கடிதாசு போடுறேன்..... ஸ்டேஷனுக்கு வா" என்பன போன்ற வார்த்தைகள், அந்தச் சிறுவனுக்கு சந்தேகத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

ரயில் லேசாக நகரத் தொடங்கியது. ரமேஷின் தந்தை வெங்கட்ராமன் பதற்றப் கேட்டார். நானோ, அவனைப் 'பிடித்து'க் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் உயிரோடு செத்துக் கொண்டிருந்தேன். திடீரென்று சினந்த அவன் தந்தை, 'இடியட்.... ஸில்லி' என்று திட்டிக் கொண்டே, அந்தத் திட்டுக்கு தாளம் போடுவதுபோல், அவன் முதுகில் மொத்து மொத்தென்று மொத்தி, அவனை-என் பிரிய ரமேஷை-பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு கீழே இறங்கினார்.

நகரத் தொடங்கிய ரயில், ஓடத் தொடங்கியது. தந்தையின் மார்புக்குள் ஒடுங்கிய ரமேஷ், அவரது கைகளைச் சிறைக் கம்பிகளாக நினைத்து அவற்றை ஒடிக்க நினைத்து, அது முடியாமல் போக, வளைக்க நினைத்தவன் போல், "மாமா! மாமா" என்று கத்திக்கொண்டே, இதுவரை யாராலும் அடிபடாத அப்பாவின் தலையை அடித்தான். திமிறினான். துள்ளினான்; துவண்டான்; மருண்டான். மீண்டும் ''மாமா! மாமா'' என்று மார்பெல்லாம் கண்ணீராகச் கத்தினான். கதறினான்.

ரயில் போகப் போக, அவன் குரல், எனக்குக் குறைவாகக் கேட்டாலும், அவன் கைகால்களை ஆட்டி, நெட்டி, நீட்டிய அன்பின் வெளிப்பாடுகள் மங்கலாக மங்கலாகத் தெரிந்தாலும், ரயில் விலக, விலக, நான் அவனிடம் நெருங்கி, நெருங்கி, பின்பு நெருங்க இடமில்லாமல், அவனுடன் ஐக்கியமாகி விட்டேன். அவன் தந்தை, அவனை அடிப்பதுபோல், தோன்றியது. அடித்தார். அப்போது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. இப்போது நினைத்துப் பார்க்கையில், 'காத்திருக்கும் தந்தையைவிட, நேத்து வந்த அந்நியன்' அவனுக்குப் பெரிசாகப் போன பொறாமையில் அவர் அடித்திருக்கலாம். அப்படி இருந்தாலும் அதில் தப்பில்லை. அந்தப் பையன், எனக்கு அறிமுகமான விதமே அலாதியானது-

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கல்லூரியை முடித்த கையோடு, எனக்கு டில்லியில் வேலை கிடைத்தது. "டில்லிக்கா? டில்லிக்கா?" என்று தாலுகா பரப்பைத் தாண்டாத என் அம்மா, "அய்யோ அம்மா" என்று அழ, அப்பாக்காரர் "மாதா மாதம் பணம் அனுப்பு" என்று உபதேசம் செய்ய, நான் டில்லிக்கு வந்தேன். கரோல் பாக்கில் பார்த்த தமிழர்களை, சிநேகித பாவத்துடன் பார்த்தபோது, அவர்கள் எனக்குக் முகம் கொடுக்க முடியாத அளவுக்கு 'பிஸியாக' இருந்தார்கள். எப்படியோ ஒரு மெஸ்ஸில் இடம் கிடைத்தது. நான், இளிச்சவாயன் என்பதை நான் சொல்லாமலே புரிந்து கொண்ட அந்தத் தென்னிந்திய 'மெஸ்மேன்' என்னை 'பர்ஸாத்தியில்' போட்டார். வறுத்தெடுக்கும் வெயிலில், நான் வாடி வதங்கினேன். அப்போது வாரத்துக்கு இரண்டு நாட்கள் 'ரைஸ் லெஸ் டேஸ்'. அதாவது அரிசி பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட நாட்கள். வேகாத சப்பாத்தி, அழுகிப் போன பூசணிக்காய் 'சப்ஜியோடு' உண்டு உலர்ந்து போன் நான், யாராவது வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிட மாட்டார்களா என்று ஏங்கினேன். அந்தச் சமயத்தில், அலுவலகத்தில் அறிமுகமான ஒரு தமிழர், ஆர்.கே .புரம் வரும்போது,

வீட்டுக்கு வாங்கோ' என்றார். அதாவது, 'அவர் வீட்டுக்கு விசேஷமாக வரவேண்டாமாம்.

அழுகிய பூசணிக்காயால், என் குடல் அழுகும் நிலைக்கு வந்து விட்டதால், வெட்கத்தை விரட்டி விட்டு, தற்செயலாகப் போவது போல், ஆர்.கே. புரத்து நண்பர் வீட்டைக் குறி வைத்து, பஸ் ஏறினேன். முன் எச்சரிக்கையாக, அவரிடம் பலவந்தமாக வாங்கப்பட்ட முகவரியை வைத்துக் கொண்டு தேடினேன். வீடு கிடைத்தது. வீட்டுக்காரர்கள் கிடைக்கவில்லை. 'புத்தா பார்க்' போய் விட்டார்களாம். யாரும் வந்தால், 'வர நாழியாகும்' என்று சொல்லும்படி, சொல்லி விட்டார்களாம்.

என்ன செய்வதென்று புரியாமல், கால் போன போக்கில் நடந்தேன். டில்லி தமிழ்ச் சங்கம் போர்டைப் பார்த்துவிட்டு, படியேறினேன். அங்கு பத்து பதினைந்து பேருக்கு, ஒரு பேச்சாளர், செவிக்குத்தான் உணவளித்துக் கொண்டிருந்தார். என்னை இலக்கிய அபிமானியாக நினைத்து, பதினைந்து வாடிக்கைக்காரர்களும், விழிகளில் நட்பு பாவத்தை ஏற்றியபோது, நான் ஏறிய படிகள் வழியாக இறங்கினேன்.

மீண்டும் கால்போன போக்கில் நடந்தேன். செத்தாலும் சும்மா சாகலாமே தவிர, நம்மால், மெஸ்காரரின் சப்பாத்தியைச் சாப்பிட்டுவிட்டுச் சாக முடியாது. தொந்தவர்கள் தென்படுகிறார்களா என்று நிமிர்ந்து பார்த்தேன் தென்பட்டார்கள். ஆனால் அவர்கள் 'சாப்பிட்டாச்சா' என்று கேட்கவில்லை. அரிசிச் சோறு பற்றிப் பேசவில்லை. நானும் 'சப்பாத்தி ஒத்துக்கல.... பூசணிக்காய் அழுகின பிறகுதான் சமைப்பாங்களோ' என்று ஜாடை மாடையாக கேட்டேன் 'போகச் போகச்' சரியாகிவிடும்! என்றுதான் 'போக்கு' காட்டினார்களே தவிர, நிஜம் சொன்ன வாய்க்கு, அரிசிச்சோறு கிடைக்கவில்லை. இந்த அளவுக்குக் கீழே பிச்சைக் காரனாக மாற, நானும் தயாராக இல்லை.

பழையபடியும் கால்கள், தானாக என்னை இழுத்துக் கொண்டு சென்றன. கால் முன்நோக்க, வயிறு பின்நோக்க, அரிசிச் சோறு ஒன்றை மட்டும் குறியாகக் கொண்ட லட்சிய உந்தலில் நடந்தபோது, ராமகிருஷ்ண புரத்தில் உள்ள, உத்திர சுவாமிமலைக் கோவில், நான் பார்க்காமலே என் கண்ணில் முட்டியது. அப்போது நான் முருக பக்தன் அல்ல; அதேசமயம் முருகனை நினைக்காமலும் இருந்ததில்லை. டில்லியில் மண்டிக் கிடந்த பாகவதர் கிராப், ஹிப்பிகளைப் பார்க்கும்போதெல்லாம், எனக்கு முருகனின் நினைவு வரத்தான் செய்தது.

உத்திரசுவாமி மலையின் அடிவாரத்துக்கு வந்தேன். 45ம் நம்பர் பஸ்ஸைப் பிடித்து, கரோல்பாக் போக நினைத்த எனக்கு, மலையேறி, கோவிலுக்குப் போக வேண்டும் போலிருந்து. பக்தி மட்டும் காரணமல்ல. பிரசாதம் கிடைக்கலாம். அதாவது அரிசிப் பிரசாதம்; தண்ணீரைக் குடித்து வயிற்றைப் பூசணிக்காய் ஆக்கி விட்டால், அன்று அழுகிய பூசணிக்காயை அண்ட வேண்டியதில்லையல்லவா?

முட்டிகளைப் பிடித்துக் கொண்டே, படி ஏறினேன்.

**"அப்பனே ஆறுமுகா!**
**அரிசிச்சோறு கிட்டாதா?**
**சப்பாத்தி தட்டிவிட்டு**
**சாம்பார் சாதம் தந்தாக்கால்**
**சுப்பனே! குப்பனே! - இந்த**
**சுப்பிரமணியன் உன்னடிமை"**

என்று பாதி தமாஷாகவும், பாதி ஸீரியஸாகவும், மனத்துக்குள்ளேயே, நானே கவிதையெழுதி, நானே மொட்டையடித்து, நானே மனத்துக்குள் பாடி, காதுக்குள் கேட்டு, கர்ப்பக் கிரஹத்துக்குள் வந்து, மூலஸ்தானத்துக்குப் போனேன். அங்கேதான், பிரசாதம் கிடைக்கும்! அன்று வெள்ளிக்கிழமை; நல்ல கூட்டம். இன்கிரிமென்டுக்காக வந்தவர்கள், எபிஷியன்ஸி பாரைத்

தாண்ட முடியாமல் தடுக்கியவர்கள், பிரமோஷன் காரர்கள், பிரமோஷனுக்காக, சிபார்சுக்கு வந்தவர்கள் என்ற வகையில் 'பக்த' குழாமின் 'வேல் வேல்.... வெற்றிவேல்' (அதாவது புரபேஷன் முடியட்டும்; பிரமோஷன் வரட்டும்) என்ற முழக்கம். அதனிடையே ஒருசிலர், பற்றற்ற, நிஷ்காமிகளாக, அக்கம் பக்கம் பார்க்காமல் நின்றனர். வேலும் மயிலும் விளங்க, குன்றேறி நின்ற குமரனை, ஊனக் கண்ணை மூடி, ஞானக் கண்ணைத் திறந்தவர்களாய், தன்னை மறந்து, 'தானை' மறந்து தரிசித்தனர். இதை 'என்னை' மறக்காத நான், புரிந்து கொண்டேன். பசி கிள்ளவே, அந்த வேகத்தில், இப்போது நிஜமாகவே, அந்தப் பிச்சாண்டியிடம் (சாம்பார், ரசம் சாதம்) பிச்சை கேட்டு, கைகளைப் பண்டாரம் போல் நீட்டிக் குவித்தேன். திடீரென்று, ஒரு பையன் சிரிப்பது கேட்டு, திரும்பிப் பார்த்தேன். அவன் கழுத்துக்கு உத்திராட்ச மாலையைப் போட்டு, கையில் ஒரு வேலைக் கொடுத்துவிட்டால், அவனையே முருகன் என்று சொல்லலாம். அப்படி ஒரு தோரணை. நெருப்பு ஜ்வாலையின் நிறம்; சந்தனக் குளுமையான கண்கள்; சரவணனைப் போன்ற உடல்வாகு. பார்ப்போரைப் பற்றிலாழ்த்தும் பற்றற்ற கண்கள்.

அந்தப் பையனையே, சிறிது நேரம் கண் கொட்டப் பார்த்துவிட்டு, பிரசாதம் விநியோகிக்கப் படவில்லை என்பது உறுதியானதும், வெறுப்போடு வெளியே வந்தேன். சாதம் கொடுக்காத சண்முகத்தைச் சதமாக நினைக்கக் கூடாது என்ற உணர்வோடு, நடந்த களைப்புத் தீருவதற்காக, வெளியே வந்து உட்கார்ந்த சிறிது நேரத்தில், அதே பையனும், தந்தையும், தாயும், தமக்கையும் புடைசூழ வந்தான். அவர்களைப் பார்த்து ஏதோ சொல்லிவிட்டு, பிறகு என்னைப் பார்த்துவிட்டுச் சிரித்தான். உடனே, அவன் தந்தை "பெரியவங்கள.... அப்படி சொல்லப்படாது" என்று சொல்லிக்கொண்டே, என்னைச் சிநேகித பாவத்துடன் பார்த்துச் சிரித்தார். அதில் அரிசிச்சோற்றின் மணம் வீசியது. அந்த அம்மா வீசிய புன்னகையில், நெய்

வாடை நெருடியது. எழுந்து அவர்களை நெருங்கினேன். பையன் ஏதோ சொல்லப்போனான். அப்பாக்காரர், அவன் வாயைப் பொத்தினார். பின்னர் அவன் வாயிலிருந்து கைகளை விலக்கியபோது அந்தப் பொடியன், என்னைப் பார்த்து நேரடியாகவே கேட்டான்.

"மாமா...! நீங்க... ஒரே கறுப்பா இருக்கேளே.... ஏன்?"

அப்பா இடைமறித்தார்.

"அடிச்சிடுவேன் படுவா.... மாமாவ.... அப்படில்லாம் பேசப்படாது. இவன் கிறுக்கு பய ஸார்.... எக்ஸ்கியூஸ் மீ... தப்பா எடுத்துக்காதீங்கோ.... டேய் மாமாவுக்கு ஸாரி கொடு....."

பையன், எனக்கு 'ஸாரி' கொடுக்கு முன்னதாகவே, ஒரு வேளை கொடுத்தாலும் கொடுத்து விடுவான் என்று பயந்து 'பரவாயில்ல... ஸார்... உண்மையைத்தான் சொல்றான்... நான் நல்ல நிறமாத்தான் ஸார் வந்தேன்... சப்பாத்தி பூசணிக்காய் சாப்பிட்டுச் சாப்பிட்டும் இந்த 'சம்மர்' தாங்க முடியாமயும்.... கறுப்பாய் போயிட்டேன்..." என்றேன்.

பொடியன் விடவில்லை.

"இதுக்கு மேலே... நீங்க... கறுப்பாக முடியாது..... ஏன்னா...."

தந்தைக்காரர் அதட்ட, தமக்கை, அவன் காதைப் பிடித்துத் திருக, பத்து மாதம் சுமந்த மாமி, சிரித்துக் கொண்டே, பையனின் 'சமர்த்தில்' பெருமிதப்பட, கறுப்பனான நான், வெள்ளை வெளேரென்ற தும்பைப்பூ நிறத்தாலான அரிசிச் சாதத்தை நினைத்து, சிரிப்பதுபோல, பாவனை செய்ய, அறிமுகங்கள் தொடங்கின. அவரும்-அதுதான் மிஸ்டர் வேங்கடராமனும், என் சித்தப்பாவும் 'கிளாஸ் மேட்டாம்!' இந்தச் சங்கதி தெரிந்ததும், அவர் 'நீ நான்னு' பேசத் தொடங்கி விட்டார். ஒரு சமயம் 'டா' கூடப் போட்டதாக ஞாபகம். நான்

கோபப்படவில்லை. அன்று வத்தல் குழம்போடு, நெய்யரிசிச் சோறும், உருளைக்கிழங்கு பொரியலும், தந்த அந்த உத்தமர், என்னை 'அட..... அற்பா' என்றிருந்தாலும், செஞ்சோற்றுக் கடனுக்காக, செவிகளைக் கல்லாக்கி கொண்டிருப்பேன்.

கரோலபாக்கிலிருந்து அரிசிச் சோற்றுக்காக ஆர்.கே.புரம் அடிக்கடி போன நான், பின்னர் அந்தப் பையன், ரமேஷைப் பார்ப்பதற்காக மட்டுமே போனேன். அவனும், என்னுடன் ஒட்டிக் கொண்டான். ஓரிரு, தடவை, கரோல்பாக்கிற்கு அவனை அழைத்து வந்தேன். "டாடி..... மாமா....மெஸ்ல... சப்பாத்தியத் தின்னுட்டு.. துப்பினேன்" என்று, அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு , மிஸ்ஸஸ் வேங்கடராமனிடம், என் சித்தப்பாவின் 'கிளாஸ் மேட்' காதைக் கடித்தார். இதற்கிடையே, எனது கடிதத் தூண்டலில் என்னுடைய சித்தப்பாவும், அவருக்கு வாழ்நாளிலே முதன் முதலாகக் கடிதம் போட்டார். நானும், என் பங்குக்கு 'பர்ஸாத்தி' வெயிலின் வெங்கொடுமை சாக்காட்டைப் பற்றி, எவ்வளவு கொடூரமாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவு கொடூரமாகச் சொல்லி விட்டேன்.

நினைத்தது நடந்தது.

நான், கரோல்பாக்கிலிருந்து, ஆர்.கே,புரத்துக்கு அவர்கள் 'குவார்ட்டர்ஸுக்கே' போய்விட்டேன். பிரத்தியோகமாக இருந்த ஓர் அறையைத் தந்தார்கள். வாடகையை அவர்கள் கேட்கவில்லை என்றாலும், நானாகக் கொடுத்தேன். எனக்கு 'வயிறோடு' மானமும் இருந்ததால், நிரந்தரமாகச் சாப்பிட மறுத்து விட்டேன். விசேஷமான நாட்களில் மட்டும், அங்கே சாப்பாடு. வெங்கட்ராமத் தம்பதி ஆச்சாரமான இந்துக்கள். ஆகையால், ஒவ்வொரு மாதத்திலும், விசேஷ நாட்களின் எண்ணிக்கை, விசேஷமில்லாத நாட்களின் எண்ணிக்கையை விட அதிகம். 'மெஸ் பில்' குறைந்தது. என்றாலும் நான் 'ரமேஷுக்கு' அன்பினாலும், நாட்களை கணக்கில் வைத்துக்

கொண்டும் பிஸ்கட் பாக்கெட்டுகளை வாங்கிக் கொடுத்தேன். இறுதியில் சாப்பாட்டுக் கணக்கு மறந்து, அன்புக் கணக்கு மட்டுமே எஞ்சி நின்றது.

ரமேஷ் பள்ளிக்கூடம் செல்லும் நேரம் தவிர, மீதி நேரம் என்னிடமே இருந்தான். என்னிடமே தூங்கினான். நான் அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தேன். அவனை அறிமுகப்படுத்திய உத்திரசுவாமி கோயிலுக்கு அழைத்துப் போவேன். அங்கே, நானும் ஒரு குழந்தையாகி, அந்தக் குழந்தையோடு விளையாடுவேன். அந்தச் சின்னப் பையனின் பெரிய கேள்விகளுக்கு விடை கொடுக்க முடியாமல் திண்டாடிய நாட்களும் உண்டு. குழந்தைகளின் கேள்விகளுக்கு, விடை காண்போர் ஞானியாக மாறலாம் என்பது எவ்வளவு உண்மை! “முருகனுக்கு ஏன் வேல் இருக்கு? முருகனப்..... பாக்காட்டா வாழ முடியாதா மாமா? முருகனைக் கும்பிடாமல்..... இயேசு கிறிஸ்துவ.... நினைக்கிறவங்களும் நல்லா இருக்காங்களே..... ஏன் மாமா? முருகன்..... உலகம் வரதுக்கு முன்பே.... இருக்கான்னு சொல்றேளே அப்படின்னா.... அவன்.... ஏன் பெரியவனா மாறாம.... அப்படியே இருக்கான் மாமா? சின்னப் பையனா இருக்கிற முருகனப் போய் ஏன்.... அப்பா... அப்பான்னு கூப்பிடறேள் மாமா?”

ரமேஷின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காகவே, நான் கந்த புராணத்தையும், அருணகிரி நாதரையும் படித்தேன். எனக்கு முருகனைத் தேடுவதை விட ரமேஷின் கேள்விகளுக்கு பதிலளித்து, அந்தப் பதிலில் அவன் திருப்தியுடன் சிரிப்பதைப் பார்ப்பதில் ஓர் திருப்தி.

ஆன்மிகம் போகட்டும். ‘மெட்டீரியலினியத்திலும்’ இதே திருப்திதான். ‘இந்த பூட்ஸ் வாணாம்....’ என்று அம்மாவிடம் அடம் பிடிக்கும் ரமேஷ், இந்த மாமா.... ‘டோண் பி ஸில்லி. இந்த் பூட்ஸ் இன்னும ஒரு மாதம் வரைக்கும் போடணும்’ என்றால், அவன் இரண்டு மாதம் வரைக்கும் போடுவான். ‘பஸ்ஸில் போக மாட்டேன்......

டாடி ஸ்கூட்டர் லிப்ட் கொடுக்கணும்' என்று அடம் பிடிப்பான். 'ரமேஷ்! என்னோட....... நீ நடந்து வரணும்.... ஸ்கூல்ல விடறேன்' என்றால் எத்தனை தடவையும் எத்தனை நாட்களும் நடப்பான். 'சாதம் வாணாம் போ' என்பவனிடம், இந்த மாமா போனால், சாதம் அவன் வாய்க்குள் தானாகப் போகும்.

இதனால் அந்தக் குடும்பத்துக்கும், எனக்கும் பிரச்சினைகள் ஏற்படாமல் இல்லை.

ஒரு நாள் ரமேஷ் என்னிடம் அழுது கொண்டே வந்தான். "மம்மி.... நீங்க.... சாப்பிட்ட தட்டைக் கழுவலேன்னு டாடிக்கிட்ட திட்டறாங்க' என்று, நான் கேட்காமலே சொன்னான். நான் திடுக்கிட்டேன். இருந்தாலும் அவனை, என்னால் பிரிய முடியாது என்பதால், அவன் அம்மாவின் அந்நியபாவத்தைத் தாங்கிக் கொண்டதோடு, சாப்பிட்ட தட்டையும், ஒரு தடவைக்கு இரு தடவையாவது கழுவினேன். என் செல்ல ரமேஷின், எச்சில் வாயையும், எந்தவிதப் பலனையும் எதிர்பார்க்காமல் கழுவுவேன்.

இன்னொரு நாளும், ரமேஷ் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தான். என் அறைக்குள் வந்து "மாமா..... இந்த புக்க அக்காகிட்ட கொடுக்கப் போனேனா.... மம்மி..... இதை நன்னாப் பிரிச்சுப் பார்த்துட்டு... அதுகிட்ட கொடுக்குது" என்று நிர்மலமாகச் சொன்னான்.

நானும், மாமியின் செயலைப் 'பிரித்து' பார்த்தேன். அவள், சந்தேகப்படுகிறாள். ஒரு தாய் என்ற முறையில், அதைக் குறை கூற நான் விரும்பவில்லை. அதே சமயத்தில், நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ரமேஷின் தமக்கை, பி.ஏ. ஹானர்ஸை முடித்துவிட்டு, 'ஐ.சி.ஆர்.ஐ.'யில் ரிசர்ச் செய்கிறாள். என்றாலும், அவள் முகத்தில் தோன்றும் மாற்றங்களை 'ரிசர்ச்' செய்துகூட கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவுக்கு உணர்ச்சியே இல்லாதவளான

அவளோடு, ஓரிரு முறையேதான் பேசியிருக்கிறேன். ஆனால், அடிக்கடி, தமிழ் வார பத்திரிகைகளை அவளிடம், அவளாகக் கேட்காமல், ரமேஷ் மூலம் கொடுப்பேன். இந்தக் 'கொடுக்கல் வாங்கல்' தவிர, வேறு எந்தவித 'வில்லங்கமும்' இல்லை. நான் உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யத் தெரியாதவன் என்பதோடு, எனக்கும் அவளைவிட அழகான ஓர் அத்தை மகள் காத்திருந்தாள். நான் யோக்கியன். 'டெம்ப்ரரி காதலில் கூட' இறங்கவில்லை. இருந்தாலும், மாமி சந்தேகப்படுகிறாள் என்றால் அது பெரிய விஷயம்.

எனக்கு, அந்த வீடு முள் வீடாகியது. எனினும் அந்த முட்களிடையே இருந்த என் ரமேஷ் ரோஜாவிற்காக, பொறுத்துக் கொண்டேன். ஒரு நாள் அவனிடமே, "அக்காகிட்ட..... ஏதாவது மாமா.... சொல்லச் சொன்னானாடா.... சமத்துக்கண்ணு.... சொல்லுடா ரமேஷ்"என்றே மாமி கேட்டுவிட்டாளாம். ரமேஷ், இதை என்னிடம் சொன்னான்.

இதற்கு மேல் இருப்பதும் அநாகரிகம். இதுவரை, சென்னைக்கு மாற்றலாவதற்கு ரமேஷ் பொருட்டு, நான் இதுவரை எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. இப்போது, நம்மால் பிரச்சினை வேண்டாம் என்று நினைத்து, ஒரு எம்.பி.யிடம் போய் எம்பினேன். சென்னைக்கு டிரான்ஸ்பர் கிடைத்தது. என்னைவிட மாமிதான் அதிக மகிழ்ச்சி அடைந்ததுபோல் தெரிந்தது. "வீட்டில் இருந்தவன் திடீரென்று போகிறானே" என்கிற ஆச்சரிய உணர்வைக் கூட காட்டாத 'ஆராய்ச்சி மகளின்' முகபாவத்தை, விரக்தியாக என்னை பிரியப்போகிற அம்மாக்காரி நினைத்துக் கொண்டாள் போலும்!

சென்னைக்கு வந்த பிறகு, முதல் கடிதம் போட்டேன். இரண்டாவது கடிதம் போட்டேன். பதில் வரவில்லை. 'கலங்காதே ரமேஷ்! மாமா ஒன்னை வந்து பார்ப்பேன்' என்கிற என் கடித வாசகத்தில், ரமேஷ் என்ற

வார்த்தையைச் சந்திரா என்கிற பரிபாஷை அர்த்தத்தில் எழுதியிருப்பதாக, மாமி அனர்த்தப்படுத்தியிருக்கலாம்; ஆகையால் நானும் கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டேன்.

என்றாலும், இந்தப் பத்தாண்டு காலத்திலும், என் ரமேசை நான், எந்த நாளும் மறந்ததில்லை. என் மூத்த மகன், 'அப்பா.... ஒங்களுக்கு.... ரமேஷ்தான் ஒசத்தி. நான் ஒன்கு வேணாம்' என்று அம்மா அடிக்கடி சொல்வதை ஒப்பிக்கும் போது நான் பெருமிதப்படுவேன்.

ரயில் ஆக்ராவுக்கு வந்துவிட்டது. ரமேஷைப் பார்க்கப் போகிறோம், என்ற எதிர்பார்ப்பு ஒரு பைத்தியமாகி, என்னை அங்கேயே உள்ள 'கீழ்ப்பாக்கம் டைப்' ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டிய அளவுக்கு ஆவல் தாங்காமல் ஆடினேன். "ரமேஷ் இன்னைக்கு..... ஸ்கூலுக்கு போகாதடா.... மாமா..... மாமா வாரேண்டா என் வாடாத பூவே.... வற்றாத..... அருவியே...... இருடா... இருடா.... இதோ.... இதோ வர்ரேண்டா....."

டில்லிக்கு வந்ததும், அவசரமாக ரயிலிருந்து இறங்கி, ஒரு ஸ்கூட்டரை (தில்லியில் ஸ்கூட்டர் என்றால் ஆட்டோ ரிக்ஷா) பிடித்துக் கொண்டு, கனாட்பிளேஸில் ஓர் ஓட்டலில் பெட்டி படுக்கையைப் போட்டு விட்டு, முகத்தை மட்டும் கழுவிக் கொண்டு, 'வெயிட்டிங்கில்' நின்ற அதே ஸ்கூட்டரில் ஏறி, ஆர்.கே.புரம் போனேன். பழைய குவார்ட்டர்சில் அவர்களுக்குப் பதிலாக ஒரு சர்தார்ஜி! துடித்துப் போன என்னிடம் சர்தார்ஜி, அவர்களின் முகவரியைக் கொடுத்தார். அதே ஆர்.கே.புரத்தில் தான் இருக்கிறார்கள். ஸ்கூட்டரை அறுபது கிலோ மீட்டருக்குக் கொண்டு போன டிரைவரை மேலும் விரட்டினேன்.

மிஸ்டர். வேங்கடராமன், ஆபிஸ் போய் விட்டார். மாமி மட்டும் இருந்தாள். சொந்த மகனைப் போல், என் கைகளைப் பிடித்துக் கொண்டாள். "எங்கள..... மறக்கலிய...

மறக்கலிய" என்று குரல் தழுதழுக்கச் சொன்னாள். பின்பு அன்போடு பேசினாள். அவள் மகளான ஆராய்ச்சிக் காரிக்கு, நான் எதிர்பார்த்தது போல், திருமணமாகி, குழந்தைகளும் உற்பத்தியாகி விட்டதாம். ஆகையால் இப்போது, மாமியால், என் மீது வைத்திருக்கும் அன்பை, பயமில்லாமல் காட்ட முடிந்தது.

ஆனால் என் கண்கள் மாமியிடம் இல்லை. காதுகள், அவள் பேசுவதைக் கேட்கவில்லை. ரமேஷ்.... என் ரமேஷ்... எங்கே.... எங்கே...?

"மாமி.... ரமேஷ்..... நல்லா இருக்கானா? எங்க போயிருக்கான்? எப்ப வருவான்?"

"டென்னிஸ் ஆடப் போயிருக்கான்..... இப்போ வர்ர நேரந்தான்."

ஒவ்வொரு வினாடியும் இனிய எதிர்பார்ப்புடன் கழிய, நான் வாசலிலேயே விழிகளை விட்டு வைத்தேன்.

ரமேஷ் வந்தான். சைட் பர்ன்... பாகவதர் கிராப். தொளதொள பேண்ட்... லூஸ் சட்டை... கையில் ஒரு சர்தார்ஜி காப்பு... ஆஜானுபாகுவான தோற்றம்: குறுந்தாடி..... தொங்கு மீசை...

ரமேஷ் பெரியவனாயிருப்பான் என்பதை நான் எதிர்பார்த்ததுதான். இருந்தாலும் இவன், என் ரமேஷ் மாதிரி தோன்றவில்லை. என் பத்து வயது ரமேஷ், என்னைப் பார்த்ததும் முகம் மலர்வானே, அந்த மலர்ச்சியை, ரோமங்களும் தாடி மீசைகளுக்குமிடையே இருந்த இந்த ரமேஷின் முகத்தில் கண்டு பிடிக்க முடியவில்லை. என் ரோஜா ரமேஷின் உதடுகளில் தவழுமே புன்னகை, அதை, சிகரெட் குடிப்பதாலோ என்னவோ கறுத்துப் போயிருந்த இந்த உதடுகளில் காண முடியவில்லை.

இருந்தாலும், என்னைப் பாசம் விடவில்லை. 'ரமேஷ்' என்று சொல்லிக் கொண்டே, அவனைப் பழைய ரமேஷாகப் பாவித்துக் கொண்டே கண்ணீர் மல்க, கட்டியணைக்க எழுந்தேன். அப்போது எதேச்சையாக நகர்ந்த ரமேஷ், "இது யாரு மம்மி?" என்றான்.

மம்மியான மாமி விளக்கினாள்:

''நான் அடிக்கடி சொல்வேனே..... அங்கிள்... சுப்ரமணியன்....... அது இவர்தாண்டா....... ஒன்னை எடுத்து வளர்த்தவருடா... ஒனக்கு..... அவருன்னா..... உயிருடா.... அடையாளம் தெரியலையா?"

ரமேஷ், சிறிது யோசித்தான். பின்னர், "யெஸ்..... ஐ.... குட் ரிகலெக்ட்..... ஷேடோ மாதிரி தெரியுது... ஹௌ டுயூடு அங்கிள்" என்று சொல்லிக் கொண்டே என் கையைப் பிடித்துக் குலுக்கினான். பிறகு, "மம்மி.... நான் லைப்ரரி வரைக்கும் போயிட்டு வரேன். ஒரு சேஸ் நாவல் வாங்கிட்டு வரணும்... ஓ.கே..... அங்கிள்..... பை... பை" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

நான், அவன் போவதையே வெறித்துப் பார்த்தேன். அமங்கலமாகச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். என் ரமேஷ், என் பத்து வயது இனிய ரமேஷ் - காணாமல் போய்விட்டான். நிஜமாகவே நிழலாகி விட்டான். அந்தக், குழந்தை பெரியவனாகி விட்டது நியாயம். பெரியவனான நான், குழந்தையானதுதான் தப்பு. மகாத்தப்பு!

மாமி காப்பியுடன் வந்தாள்.

"இந்த குவார்ட்டர்ஸ் நல்லா இருக்கா தம்பி? நீ இருக்கையில.... சின்ன குவார்ட்டர்ஸ்.... இது பியூட்டிஃபுள்.... இஸ் இட் நாட்?"

நான் அர்த்தத்தோடு சொன்னேன்.

"ஆமாம் மாமி. முன்னே இருந்ததைவிட..... இது பெரிய குவார்ட்டர்ஸ்..... ஆனால் எனக்கென்னமோ.... அதான்

பிடிக்குது. குவார்ட்டர்ஸ் பெரிசானதால... எனக்குத் தலையும் புரியல... வாலும் புரியல.... உங்களுக்குத் தெரியாதா, "ஸ்மால் இஸ் பியூட்டிபுள்."

அன்று முழுக்க, அங்கேயே இருக்க நினைத்த நான், மாமியின் அன்பான வற்புறுத்தலையும் பொருட்படுத்தாது, ஏதோ சாக்கு போக்குச் சொல்லி, வெளியே வந்தேன். முன்பு அரிசிச் சோற்றுக்காக, எந்த வேகத்தில் எந்த ஆற்றாமையில் நடந்தேனோ, அதே வேகத்தில் அதே ஆற்றாமையில் நடந்தேன். ஆனால் இப்போது ஏமாற்றம் என் கால்களுக்கு நங்கூரம் பாய்ச்சுவது போலிருந்தது.

இந்த ஏமாற்றம் தாளமுடியாமல் முறையிடுவதற்கோ அல்லது முட்டிக்கொள்வதற்கோ, உத்திரசுவாமி மலைக்கு வேகமாகப் போனேன். ஒருவித உரிமைக் கோபத்தோடு படியேறினேன். பத்து வருடங்களுக்கு முன்பு பார்த்த அதே அதர விரிப்புடன், அந்தச் சிரிப்பின் சக்தியுடன், சித்தி காட்டும் முக்தியுடன், முத்தி காட்டும் மோனத்துடன் முருகன் சிலை காட்சி தருகிறது.

"முருகன்.... உலகம் வரதுக்கு முன்னேயே..... இருக்கான்னு சொல்றேளே, அப்படின்னா.... அவன் ஏன் பெரியவனாகாமல் அப்படியே இருக்கான் மாமா?" என்று அன்று ஓர் ஊனக்குழந்தை கேட்ட கேள்விக்கு, இன்று விடை கிடைத்த ஞானப்பரவசத்தால், கும்பிடக்கூட மறந்தவனாய், நிற்கிறேன்.

**தீபாவளி மலர், கல்கி-1978**

# அன்னையை மறைத்த சிலை

கருவறைச் சுவரின் புறப்பகுதியில் எழுந்த துர்க்கையம்மன் சிலையை, ஏகாம்பரம், அன்று வித்தியாசமாகத்தான் பார்த்தார்.

அவர் கண்களுக்கு, பல்லாண்டு பல்லாண்டாய் சிலையை மறைத்தவள் அந்த மாதா. இப்போதோ அந்த மாதாவை, சிலை மறைத்தது. எந்தத் திசையில் நின்றாலும், அந்தத் திசைநோக்கி அருட்பாவை வீசுவதுபோன்ற அம்மனின் எண்திசைப் பார்வை, இப்போது முகமறியா ஒரு சிற்பியின் கைத்திறனாய் தோன்றியது. ஆணயோ, பெண்ணையோ, உறுப்புக்களை உள்வாங்காமல் மானுடக்கூறாகப் பார்க்கும் மாமனிதப் பார்வைபோல், கற்சிலை என்ற எண்ணமற்று, மானுடத்தைப் பெற்றெடுத்து, அதைப் பிறப்பெடுக்கவும் வைத்த பெருந்தாயாய் தோன்றிய எதிர்ப்பக்கம், இப்போது அவருக்கு ஆய்வுக்குரியதாய்-ஆகிப்போனது. இந்தச் சிலை எந்த நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கும்? கருங்கல்லா..... மாவுக்கல்லா..... சுவர்க்கல்லில் வடிக்கப்பட்டதா அல்லது பொருத்தப் பட்டதா.... முற்சேர்க்கையா... பிற்சேர்க்கையா... துர்க்கை என்றால், பன்னிரெண்டு வயதுச் சிறுமி என்று கதையளப்பார்களே. அந்தக் கதைப்படி இந்தச் சிலையில் அந்த வயது பிரதிபலிக்கிறதா...

ஏகாம்பரம், அந்தச் சிலையை புதிதாய் பார்ப்பதுபோல பார்த்தார். புதுமையாய்ப் பார்த்தார். ஒரு பெண்ணை,

அம்மாவாக பார்த்த பார்வை, இப்போது, அம்மாவை, பெண்ணாகப் பார்ப்பதுபோல் தோன்றியது.

இப்போதெல்லாம், ஏகாம்பரம், ஆண்டுக்கணக்கில் பழகிப்போன இந்தக் கோவில் பக்கமோ, கோவில் உள்ள திசைப்பக்கமோ வருவதில்லை. மெய்யாகவே மழைக்காகத்தான் ஒதுங்கினார். வீட்டுமாடியில் ஞானப் பயிற்சி செய்துவந்தவர். அன்று, ஒரு மாறுதலுக்காய், வெட்ட வெளியில், அதைச்செய்வதற்காக வெளியில் வந்தார். கடற்கரையைப் பார்த்துத்தான் நடந்தார். ஆனாலும் சொல்லாமல் கொள்ளாமல் மழை வந்துவிட்டது. மேகம்கருக்காமல், ஆகாயம் வேர்க்காமல் பருவமற்ற திடீர்மழை. ஒருவகையில் சொல்லப்போனால், அவரைப்போலத்தான்.... நாடாமல் கிடைத்த ஞானம்போல், தேடாமல் வந்த மழை.

மழை பிடித்துக்கொண்டதும், அந்த கோவில் மதில்ச்சுவரையொட்டி கட்டப்பட்ட பூக்கடைக்குள் தலை மறைத்தார். ஓலைச்சிதைவுகள் ஈரக்கசிவோடு, தும்பைப்பூச் சட்டையில் சாம்பல் வண்ணம் பூசியதும் கோபுர வாசலுக்குள் வந்தார். மழைத்தூறல்கள் முகத்தில் அடித்தன. இது அவர் முகத்திற்கோ மூச்சிற்கோ ஏற்றதல்ல. ஆகையால், உள்ளே போனார். வாசலைத் தாண்டியதும் மொட்டையான வெட்டைவெளி அதற்குள், சன்னமான மழைத்தூறல்கள் சாட்டைகளாயின. அடிபொறுக்க முடியாமல் அவர் ஓடினார். வெட்டவெளி கடந்து ஆலயத்தின் வெளிப்பிரகாரத்திற்குள் நுழைந்தார். கூட்டமும் கும்பலுமாய் ஒரே களேபரம் கல்தூண்களில் எழுந்த அனுமனுக்கும் முருகனுக்கும் இடையே நடந்து, நடுநாயகமான வாசல் வழியாய் உட்சுற்றுக்கு வந்துவிட்டார். உள்ளே பார்க்காமல் வெளியே மழையையே பார்த்தபடி நின்றார். அது விடுவதாகத் தெரியவில்லை. எப்படி வந்தாரோ அவருக்கே தெரியாது. இந்த துர்க்கைச் சிலைக்கு முன்னால் வந்துவிட்டார். பழக்க தோசமாக

இருக்கலாம். ஆன்மாவின் துருப்பிடித்த வாசனையாகவும் இருக்கலாம். மூளைக்குக் கட்டுப்படாத மனமோ... மனத்திற்கு கட்டுப்படாத உடலோ. ஏன் வந்தோம் என்பது தெரியாமலேயே எப்படியோ வந்து விட்டார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ராகுகால மாலை நேரந்தான். ஆனாலும் ஆளரவும் இல்லை. செவ்வாய்க் கிழமை பிற்பகலிலும் வெள்ளி முற்பகலிலும் அலை மோதும் கூட்டத்தில் ஒரு ஆள்கூட தலை காட்டவில்லை. சுதந்திர தினத்திற்கு, விடுமுறை விடப்படுவதால், அலுவலகங்களில் அதற்கு முந்திய நாளே அந்தத்தினத்தை கொண்டாடி முடித்து, நாட்டிற்குத் தங்களை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளும் அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதியில் இந்த கோவில் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். தொலைக்காட்சியில் கார்க்கில் கலைநிகச்சி அந்த சமயம்பார்த்து ஒளிப்பரப்பு செய்யப்பட்டதால், வழக்கமாக வரும் பெரியவர்கள் கூட அன்று அம்மனை கைவிட்டார்கள். அனாதியானவள், அனாதையானாள். அன்றைக்கு மட்டும் சிலையானால். கசங்கிப்போன சிவப்பு உடுப்பு... குங்குமம் உலர்ந்து அதன் வட்டத்தைக் காட்டும் நெற்றிக்கல். சருகாய் உதிர்ந்து கொண்டிருக்கும் முன்னைய இளம்பூக்கள். தாயானவள், தன்பிள்ளைகளைக் காண வில்லையென்று வெளியே வந்து எட்டிப்பார்த்து விடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ இருபுறத்து சாளரக்கதவுகளும் ஒன்றாக்கப்பட்டு இருந்தன.

இதுவே, ஏகாம்பரத்திற்கு நல்லதாய்ப் போயிற்று. நடைவழியான அந்த இடம் பொருத்தமாகப்பட்டது. எதிர்புரத்துச் சுவரோடு சுவராய் உட்கார்ந்தார். ஆனாலும் வசதிப்படவில்லை. எதிரே பார்த்தால் துர்க்கைச்சிலை, வலதுபக்கம் பார்த்தால் வள்ளி-தேவானை சகிதமான முருகச்சிலை, இடப்பக்கம் பார்த்தாலோ லிங்கங்கள். இவை அவரது பயிற்சிக்கு ஆகாதவை.

ஏகாம்பரம் எழுந்தார். பின்புறமாய் கைவளைத்து பிட்டத்தில் தூசித்தட்டினார். துர்க்கையம்மன் சிலைக்கு எதிரே, மூன்றடி உயரத்தில் நெடிதாய்ப் போய்க் கொண்டிருந்த அளிப்பாய்த்த திண்ணை இடைவெளியில் ஏறிக்கொண்டார். அம்மன் சிலையைவிட அவரது தலை சிறிது உயரமாக தூக்கி நின்றது. பத்மாசனம் போடுவதா, சித்தாசனம் போடுவதா என்று சிறிதுநேரம் யோசித்தார். இரண்டுமே அவருக்கு கால்வந்த கலை. ஆனாலும், சித்தாசனம் போட்டார். வசதிக்காக மட்டுமல்ல. சித் என்ற வார்த்தை அவருக்கு பிடிபட்ட சொல். அந்த சொல் செயல்வடிவம் பெறவேண்டும். அந்த சித்திற்காகத்தான் இத்தனை முயற்சிகள்.

ஏகாம்பரத்தின் மடித்துப்போட்ட கால்கள் செவ்வகக்கோடுடாய் படர்ந்தன. உச்சந்தலையும், வட்டக்குதமும், நேர்க்கோட்டில் நின்றன. தோளின் முனைகளும், முட்டிக்கால் முனைகளும் அவர் பறக்கப்போவதற்கான இரட்டைச் சிறகுகளாய் தோற்றம் காட்டின. ஏகாம்பரம், தனது குருநாதரை நினைத்துக் கொண்டார். இந்த மழையைப்போல் சொல்லாமல் கொள்ளாமல் வந்த குருநாதர் இவரைவிட, அவர் பதினைந்து வயது சிறியவர். தாடி மீசை உத்திராட்சம் இத்தியாதிகளைக் கொண்ட காவியுடை குருவல்ல. ஆசிரமவாசியுமல்ல. பேண்டும் சிலாக்கும் போட்டவர். சிலசமயங்களில், சட்டையை பேண்டுக்குள் மடித்துப் போட்டு கழுத்தில் டை கூடகட்டுகிறவர். புகழில்லாத ஒரு நிறுவனத்தின் பொறியாளர். தேர்ந்தெடுத்த ஒரு சிலரிடம் மட்டுமே ஆன்மீகத் தொடர்பு வைத்திருப்பவர். கருங்கல், பளிங்காய் ஆக்கப்பட்டது போல் ஆன்ம ஒளியில் மின்னும் கருப்பர்.

ஒரு நண்பர் இவரை அவரிடம் அழைத்துச் சென்றார். கையெடுத்து கும்பிட்ட இவரது கையைப்பிடித்து ‘கிளாட்டு மீட் யு’ என்று குலுக்கினார். அறிமுக

உரையாடல் காலக்கணக்கைத் தாண்டிக்கொண்டிருந்த போது. இவரை கூட்டிவந்தவர் குருநாதரின் காதில் கிசுகிசுத்தார். உடனே நாதரின் முகம் பற்றற்ற வெளிப்பாடானது. தொலைநோக்காய்ப் போனது. இவரை உள்ளுக்குள் தேடுவதுபோல் அவரது கண்ணொளி இவர் உடல்முழுக்கும் உட்புகுந்தது. மகிழ்ச்சியாகத் தலை ஆட்டியபடியே, இந்தப்புதிய சீடர்ருக்காக குருநாதர் ஒரு கண்ணாடித் தம்ளரில் நீரை நிரப்பினார். அதை இவர் கையில் கொடுத்தார். இவர் அந்த நீரைக் குடிக்கப்போன போது அவர் கையசைத்து தடுத்தபடியே 'இது உடல் தாகத்திற்காக அல்ல.... உங்கள் ஆன்ம தாகத்தை தணிப்பதற்காக' என்றார்.

ஏகாம்பரம் புரியாது விழித்தபோது, இவரிடம் அந்த கண்ணாடித் தம்ளரை உற்றுப் பார்க்கச் சொன்னார். நீரைத்தவிர எதுவுமே தென்படவில்லை. உடனே, குருநாதர் ஆணைப்படி, இவர் இடது கை பிடித்த தம்ளரை வலதுகையால் மூடினார். இந்த குருநாதரையே மனதில் நினைத்துக்கொள்ளச் சொன்னார். இரண்டு நிமிடம் கழித்து, தம்ளரை திறந்து பார்க்கச் சொன்னார். பார்த்தால் தம்ளரின் அடிவாரத்தில் சுருள்சுருளாய்-வட்டவட்டமாய், பாக்கு நிறத்தில் இடையிடையே பவளநிற சன்னக்கம்பியை காட்டியபடியே உத்திராட்சமாலை ஒன்று நீரில் மேல்நோக்கி நீந்துகிறது, ஏகாம்பரம் நெஞ்சுருகி, கண்ணுருகி அந்த மாலையையும், குருநாதரையும் மாறிமாறி நோக்கியபடியே, கையெடுத்துக் கும்பிட்ட போது, அந்த மாலையை எடுத்து குருநாதர் இவர் கழுத்தில் சூட்டினார். இவர் உடனே அவர் காலை தொட்டார். அவரோ இவர் மூளையைத் தொட்டார். குருநாதர் அன்று சொன்னது ஒவ்வொரு நாளும் உரத்துக்கேட்டது. 'நீங்கள் இதுவரை கற்றது வீணே, பக்தி செய்தது பாழே. ஆனாலும் கவலைப்படவேண்டாம் இன்று முதல் நீங்கள் புதிய மனிதர். காலபோக்கில் ஞானப்பயிற்சியால் நீங்களே என்னைப்போல் ஒரு சித்தன் ஆகப்போகிறீர்கள்' என்றார்.

ஒரு நல்ல நாளில் குத்துவிளக்கு சாட்சியாக குருநாதர் இவருக்கு ஞானப்பயிசிகளை போதித்தார். கூடவே சில சித்துகளையும் செய்துகாட்டினார். இந்த ஏகாம்பரமும் இவற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

இப்போது ஏகாம்பரம் எதிர்ப்பக்கம் கண்ணில்பட்ட அம்மனை பார்த்து விட்டு வேகவேகமாக கண்மூடினார். குருநாதரை மனதுக்குள் தியானித்தார். குருநாதர், அண்மையில்தான் அகால மரணம் அடைந்தார். அந்த மரணமே இவரை அவருள் உயிர்ப்பித்தது. அவருக்கு அஞ்சலி செலுத்துவது, அவரது பயிற்சிகளை அப்பியாசம் செய்து செய்து அவரைப்போல் ஒரு சித்தர் ஆவதுதான்.

ஏகாம்பரம், குருநாதர் கற்றுக் கொடுத்தது போல், உச்சந்தலையின் உட்பக்கத்தில் இருந்து பிட்டத்தின் அடிவாரம் வரை மானசீகமாக இரண்டு நேர்கோடுகளை போட்டுக்கொண்டார். மூன்றங்குல இடைவெளி கொண்ட ஒளிக்கோடுகள். கல்லூரிக்காலத்தில் கையாண்ட சோதனைக் குழாய் வடிவம் இந்தக்கோடுகளின், அடிவாரத்தை பிட்டத்து அடிவாரம் இட்டுநிரப்பியது. இதனை குருநாதர் 'பிரக்ஞை' என்றார். ஆனாலும் மனம் கேட்டது. பிரக்ஞை என்றால் என்ன? குருநாதர் ஒளிவிளக்குச் காட்சியாய், இதனை விளக்கிக்கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக அவர் வெளியேபோக வேண்டியது வந்துவிட்டது. அதற்குமேல் அவரைப் பார்க்க வாய்ப்பில்லை. வந்துவிட்டார்.

எனவே ஏகாம்பரமே பிரக்ஞை பற்றி சொந்தமாக ஒரு அனுமானத்திற்கு வரவேண்டியதாயிற்று. படித்தவவை அனைத்தையும் நினைத்துப் பார்த்தார். பிரக்ஞை என்பது, இருக்கிறேன், இருக்கிறார்கள், இருக்கின்றன என்ற பிரபஞ்ச உணர்வா? அல்லது இவையில்லை, அவையில்லை என்று தோற்ற மாயையை தூக்கி எறிவதா? சைவத்தில் கூறப்படும், பசுபதிபாச-மறுமை எதிர்பார்ப்பா... அல்லது வைணவம் விளக்கும் அவன் அவள் அது என்ற இம்மை உணர்வா?

புத்த சமண சமயங்கள் கூறும் நிர்மலமா? நிர்குணமா? கல்லில், கழிவு நீக்கி சிலை எடுப்பது போன்ற மாயை நீங்கிய மனோதளமா? உணர்வு நீங்கிய பேருணர்வா? மனதை அசைத்து தான் மட்டும் அசையாமல் நிற்கும் உணர்வு பீடமா? இவற்றில் எதுதான் பிரக்ஞை? 'ஓம்' என்றால் உண்டு என்று ஒரு பொருள் உண்டு. இப்படி சொல்லிச் சொல்லி அண்டகோடிகளும் உண்டு, பிண்டகோடிகளும் உண்டு என்று அனுமானிப்பது தான் பிரக்ஞையா?

ஏகாம்பரம், வழக்கம்போல் சிறிது குழம்பிப்போனார். பட்டறிவு உதவவில்லை ஆனாலும் ஒரு தீர்வுகிடைத்தது. கட்டப்பஞ்சாயத்துத் தீர்வு... ஒளிக்கோடுகளை பிரக்ஞையாக அனுமானிக்கப் போனவர், இப்போது, பிரக்ஞையையே, ஒளியிலான சோதனைக்குழாய் போல் கற்பிதம் செய்துகொண்டார். மீண்டும் குருநாதர் சொன்னதுபோல், இந்தப் பிரக்ஞையயின் அடிவாரத்தில், குண்டளனி சக்தி சூல்கொள்ளும் ஆசன அடிவாரத்தில் மனதைகிடத்த வேண்டும். கண்களில் இருந்து இரண்டு ஒளிக்கோடுகள் பிரக்ஞைக்குழாய் வழியாய் கீழே வந்து மனதை பற்றிக்கொள்வதாக பாவிக்க வேண்டும். பாவித்துக்கொண்டார்.

ஆனால் இந்த மனதை எப்படி உருவகப்படுத்துவது? பிரக்ஞையில் இருந்து எப்படி வேறுபடுத்திப் பார்ப்பது? பிரக்ஞை அசையா மணியென்றால் மனம் அதன் அசையோசையா? அப்போது அசையா மணியை அடிப்பது எது? அது ஆன்மாவா? இந்த மனதை மகிசாசூரவர்த்தனாய் அனுமானிக்கலாமா? அல்லது முயலகனாக கற்பிதம் செய்யலாமா? இங்கே உருவங்கள் வந்துவிடுகின்றனவே... உருவத்தையும் அருவமாக'பார்க்க வேண்டும் என்பதுதானே குருநாதர் ஆணை... போகட்டும். மனம் என்பது புறம் தீர்மானிக்கும் அகமா? அகம் தீர்மானிக்கும் புறமா? இந்த இரண்டின் கலவையா? அல்லது இரண்டு மூலங்களும்

சேர்ந்த மூன்றாவது கூட்டுப்பொருளா? காற்றுபோல், கண்ணுக்குப் புலப்படாத ஒரு பூதமா? அல்லது நெருப்பு போல் எந்த உணர்வையாவது பற்றிக்கொண்டு நிற்பதா? இமயப் பனி மலையில் நீருற்றாய் வெளிப்பட்டு, மலைமுகடுகளில் குழந்தையாய் தத்தித்தத்தி நடந்து, சமவெளியில் பிரவாகமாகவும் கங்கையைப் போல், மூளையில் உதித்து, சுரபித் திரவங்களை கிளைநதிகளாகக் கொண்டு இறுதியில் மரணக்கடலில் சங்கமிக்கும் மகாநதியா?

இப்படி மனதை பல்வேறு உருவகங்களாய் பாவித்துக் கொண்ட ஏகாம்பரம், மேலும் உருவங்களைப் படைக்கப் போனார். இந்தப் படைப்பில் மனம் ஒரு விஷப்பூச்சியாக வந்தது. அப்படியே கற்பித்துக் கொண்டார். ஆனாலும் ஒரு சந்தேகம். மனம் எதிரியல்ல. அனுகூலசத்துரும் அல்ல. இரண்டு கெட்டான். இந்தவகையில் அது ஒரு பிள்ளைப் பூச்சி. இதை, பிரக்ஞை குளவியாய் கொட்டிக்கொட்டி அதனைப்போல் ஆக்க வேண்டும். ஏகாம்பரம் ஆனந்தப் பள்ளு பாடினார். இப்படிப்பட்ட அனுமானம், குருநாதருக்குக்கூட தோன்றியிருக்காது.

ஏகாம்பரம், மனம் என்ற பிள்ளைப்பூச்சியை ஆசனவாயின் அடிவாரத்தில் பிரக்ஞைக் கோடுகளினால் இணைக்கச்செய்தார். கண்களில் தோன்றி இந்த பிரக்ஞைவழியாக வெளிப்பட்ட ஒளிக்கோடுகளால், மனதை கவ்விப்பிடிக்கச்செய்தார். அந்த ஒளிக்கோடுகளால், அடிவாரத்தில் கிடந்த மனதை தூக்கி நாபியில் வைத்தார். மனம் வீறிட்டுக்கத்தியது. தொலைக்காட்சிபோல் பாரடாபார் என்று அவர் முன்னால் பல்வேறு காட்சிகளை ஒளிபரப்பியது. கைவிட்ட காதலியின் துரோகமாய் வெளிப்பட்டது. கைவிடப்பட்ட காதலியின் சாபமாய் சினந்தது. அவமானப்பட்ட சங்கதிகளையும், அவமானப் படுத்தப்பட்ட நிகழ்வுகளையும், பெற்றோரை கை விட்டதையும், பிறப்பித்தவர்கள் தன்னை கைவிட்டதையும்,

தாயோடு சேர்ந்துகொண்டு மனைவியை நோகடித்ததையும், அந்த மனைவி பிள்ளைகளோடு சேர்ந்து கொண்டு தன்னை நோகடிப்பதையும். கொண்டுவந்து போட்டது. மனதை பிடிக்கப்போன ஏகாம்பரம் இப்போது மனதால் பிடிபட்டு அரற்றினார். அதன் நினைவுச் சாம்பல்கள் நீருபூத்த நெருப்பாய் இருப்பது கண்டு கைகளை உதறினார். ஆனாலும் வழக்கப்படியான மனத்தின் கூச்சல் என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு அந்த மனப்பூச்சியை கண்ணொளிக் கோடுகளால் அழுந்தப் பற்றி மார்பு பிரதேசம் வழியாக தொண்டைக்குக் கொண்டுவந்தார். அங்கிருந்து மூக்கின் முனைவழியாக புருவ மத்திக்கு கொண்டுபோய், பின் தலைக்கு திசைதிருப்பி, உச்சந்தலையில் நிலை நாட்டினார். கண்ணொளிக் கோடுகளும், பிரக்ஞைக் கோடுகளும் தனித்தனியே ஒன்றோடு ஒன்றுபட்டு இருவேறு சாய்வுக்கோடுகளாய் முக்கோணமுனையில் சந்தித்துக்கொண்டன. குலவியாய்ப் போன மனம் ஒரு வஸ்துவாகி, உள்உச்சந்தலை முக்கோணத்தின் அடிக் கோடாயிற்று.

இந்தச் சமயத்தில், பரிச்சயப்பட்ட ஒரு குரல் அழுகையாய் ஆவேசமாய் ஒலித்தது. அது ஞான சித்திக்குரல் என்று நினைத்து, ஏகாம்பரம் மெல்லச் சிரித்தார். குருநாதர் சொன்னதுபோல் ஏதோ ஒரு சக்தி தன்னோடு பேசப்போவதாய் அனுமானித்துக்கொண்டு அதற்கு அவர் காதுகொடுத்தார். ஆனாலும் அவர் உடம்பு உலுக்கப்பட்டது. உடனே கண்மூடித்தனமாய் கிடந்த இமைகள் விலகின. கருவிழிகள் பூத்தன. எதிரே அவரது மைத்துனர். இவரது மகனுக்கும் பெண்கொடுத்த சம்பந்தி. குய்யோ முறையோயென்று கதறினார்.

'மோசம்போயுட்டோமே மச்சான்.... உங்க ஒரே மகன்... என்னோட மருமகன்.... லாரில அடிபட்டோ, கார்ல மோதியோ ஆஸ்பத்திரில கிடக்காராம். போலீஸ்காரன், விலாவாரியா சொல்லாம, போனை வைச்சுட்டான்.

ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்லிட்டான் எழுந்திருங்க மச்சான். கடைசில உங்க மகன், என் மகள பூவும் பொட்டு இல்லாம பண்ணிடுவாரோன்னு பயம்மா இருக்கே.'

ஏகாம்பரம், அலறியடித்து எழுந்தார். உச்சி முட்கோணம் மறைந்தது. அந்த மறைவே நெருப்பாகி, அவர் உடம்பை எரித்தது. கண்கள், ஒளிக்கோட்டுத் தடங்கல் களாய் பார்வையை மறைத்தன. அவரது ஒரே மகன். அவனைப் பார்ப்பது தன்னை கண்ணாடியில் பார்ப்பது போலவே இருக்கும்.

ஏகாம்பரம் எழுந்தார். அம்மன் சிலைக்கு எதிரே திருவோடுபோல் இரண்டு கைகளையும் மார்புக்கு முன்னால் நீட்டிக் கொண்டு -

"அம்மா.... அம்மா...." என்று அரற்றினார்.

**கல்கி தீபாவளி மலர் - 1999**

ஆ-10.

# உபதேசம்

அன்று வெள்ளிக் கிழமையாதலால், வழக்கத்திற்கு அதிகமான கூட்டம். கையில் பூவுடன் சிலரும், அர்ச்சனைத் தட்டுக்களுடன் சிலரும், பெரிய மாலைகள், பன்னீர் பாட்டில்கள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு சிலருமாக மக்கள் கூட்டம், அந்த சாமியார் இருந்த திக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் கையில் இருந்த ஆராதனைப் பொருட்கள், அவர்களின் பொருளாதார வசதியைவிட அவர்கள் சுமக்கும் பிரச்னைகளின் கனபரிமாணத்தையே காட்டின. நோய் தீர வேண்டும் என்று வந்திருப்பவர்கள் கரங்களில் அர்ச்சனைத் தட்டுக்கள்; புரமோஷன் வரவேண்டும் என்று பிராத்திப்பவர்கள் கைகளில் பெரிய மாலைகள். பன்னீர் பாட்டில்கள், எலுமிச்சம் பழங்கள்; அரசியல்வாதிகளுக்கே இதுவரை மாலை போட்டுப் பழகிய அவர்கள், இப்போது அந்த சாமியாரிடம் வந்திருப்பதுபோல் தோன்றியது. 'பிக்னிக்' சுவைக்காக வந்திருந்தவர்கள்போல் தோன்றிய சிலர் 'இங்கிலிஷில்' பேசிக் கொண்டே, வெறுங்கையோடு நின்றார்கள். அந்த வரிசையில் நின்ற கார்த்தியின் சுருட்டைத் தலையையும், அதன் 'ஸ்டைலை'யும் 'டபுள் நிட்' ஃபாரின் ஆடைகளையும் பார்ப்பவர்கள், அவை வியாபித்திருந்த அந்த மேனிக்குள் பக்தியும் வியாபித்திருக்கும் என்று நினைக்க முடியாது. அவன் கையில் பத்து பைசா கற்பூரம் மட்டும் இருந்தது.

சாமியார், சிலருக்கு விபூதியை எடுத்து நெற்றியில் பூசினார்; சிலருக்குக் கையில் கொடுத்தார். சிலரைத் தாங்களாகவே எடுத்துக் கொள்ளும்படி சைகை செய்தார். அவரால் நெற்றியில் விபூதியிடப்படுபவர்கள் அதிர்ஷ்டக் காரர்கள் என்பதும், அவர்களைத்தான் சாமியாருக்கு அதிகமாகப் பிடித்திருக்கிறது என்பதும் மக்களின் எண்ணம். ஆகையால் கார்த்தி உட்பட அனைவரும், அவர் கையில் நெற்றியில் விபூதி வாங்கவே விரும்பினார்கள்.

சாமியார் வீராசனத்தில் உட்கார்ந்திருந்தார். குறைந் த பட்சம் எண்பது வயது இருக்கும். ஆண்டுக்கணக்கில் அந்த இடத்திலேயே உட்கார்ந்து இருந்ததால், கால்கள் செயலி ழந்து போனதுபோல் தோன்றின. அவர் குடிகொண்ட இடம், அந்த குக்கிராமத்தில் ஒரு சிறு திண்ணை. அவர் தலைக்கு மேல் முருகன் படமும், சிவலிங்க படமும் மாட்டப்பட்டிருந்தன. ஒரு பூனைக்குட்டி அவர் மடியில் புரண்டு கொண்டிருந்தது. சாமியாரின் முகத்தைப் பார்த்தால், பிரபஞ்சத்தையே பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். தந்தை ஈ.வே.ரா-வைப் போல் தங்க நிறத்தில் மேனி விளங்க, தாடி வெள்ளி ஜரிகைபோல் பளபளத்தது. கும்பிடுபவர், கும்பிடாதவர் அத்தனை பேரையும் பற்றிக் கவலையற்றவராய், வேண்டுதல்-வேண்டாமைக்கு இலக்கணம்போல் திகழ்ந்த அவரைப் பார்த்தாலே பாவங்கள் பொடியாகும். இனம் காண முடியாத ஒருவித பேரமைதி அவரைச் சூழ்ந்து நின்றது. எவராவது அவர் காலைப் பிடித்து முத்தமிடும்போதும் சரி, முன்னால் நின்று தோப்புக்கரணம் போடும்போதும் சரி, அவர் எதையோ ஒன்றை ஊடுறுவி ஆராய்வதுபோல் மேற்கூரையைப் பார்ப்பார். மொத்தத்தில், நிர்குணனான இறைவன், இதைவிட ஒரு சிறந்த மகானைப் படைத்திருக்க முடியாது என்ற ஞானவுணர்வுதான் ஒருவருக்கு ஏற்படும்.

வரிசை நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தத்தம் குறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சாமியார், 'நல்லது போய் வாங்க', 'சரி' என்ற இரண்டு

வார்த்தைகளைத்தான் உச்சரித்துக் கொண்டிருந்தார். அவர் அருகே ஒரு தூணைப் பிடித்துக் கொண்டிருந்த ஜடாமுடி சிஷ்யர், மக்களைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார். சிலர் கொடுத்த பழ வகைகளை, சாமியார் வாங்கிக் கொண்டார்.

கார்த்தி, சாமியாரை நெருங்கிக் கொண்டிருந்தான். உடலெங்கும் பக்தி பரவ, அலைப் பிரவாகத்தில், கனவுலகில் சஞ்சரிப்பவன்போல் நகர்ந்தான். இளமையிலேயே அவனுக்கு ஒரு தெய்வ வழிபாடு. சினிமாவுக்குப் போவதும், சிகரெட் பிடிப்பதும் இளைஞர்களுக்கு 'டைவர்ஷ'னாக இருக்கையில், அவன் பக்தியை, இறை உணர்வை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டதால், அவனுக்கு, 'ஒரு போக்கானவன்' என்ற பெயரும் கிடைத்தது. அவனைப் போல் நல்ல வேலையில் அமர்ந்திருக்கும் இளைஞர்கள், மேல் பதவிக்குப் போவது போலவும், வீட்டில் இரண்டு 'ஆர்டர்லிகள்' இருப்பது போலவும் கற்பனையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போது, அவனோ, பழனி கோவிலில்தான் உட்கார்ந்து இருப்பது போலவும், சிதம்பரத்தில், ஆடலரசன் நர்த்தனம் புரிவதை, தான் கண்டு களிப்பது போலவும் பாவித்துக் கொள்வான். ஆகையால், மனிதனும் தெய்வமாகலாம் என்பதற்கு உதாரணமாகத் திகழும் அந்த மகானைப் பார்ப்பதற்காகவே, அவன் சென்னையில் இருந்து வந்தான்.

சித்திக்கும், முக்திக்கும் கருவூலமாக விளங்கும் அந்த மகானின் ஞானப் பாற்கடலில் ஒரு குவளையை மொண்டு கொள்ள மனமில்லாதவர்களாய், அவரால் எப்படி இத்தகைய தெய்வீக நிலைக்கு உயர முடிந்தது என்பதை அறிய எண்ணமில்லாதவர்களாய், பக்தகோடிகள் தத்தம் அற்ப கஷ்டங்களை அந்தப் பற்றற்ற ஞானியிடம் கூறிக் கொண்டிருப்பதைப் பார்த்து, கார்த்திக்கு, அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டது.

கார்த்தி, சாமியாரின் முன்னால் போய் நின்றான். கற்பூரத்தை ஏற்றிவிட்டு, அவரது பாதத்தை தொட்டு

வணங்கிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டான். ஆண்டவனே அவதரித்ததுபோல் காட்சியளிக்கும் ஞானச் செம்மலே... நான் ஆண்டவனை மறக்காமலிருக்கவும், உமது ஞான சாகரத்தில் ஒரு ஒளித்துளி என் மீது படவும் அருளும்' என்று மானசீகமாக வேண்டிக்கொண்டு கண்களைத் திறந்தான். சாமியார் கிழக்குத் திக்கை நோக்கி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பிள்ளை பெண்டாட்டி உத்தியோக விவகாரங்களையே கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட சாமியார், தன்னைப் புரிந்து கொண்ட அடையாளச் சின்னமாக புன்னகைப்பார் என்று நினைத்திருந்த கார்த்திக்கு, அவர், அவனோடு சம்பந்தப் படாதவர்போல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தது என்னவோ போலிருந்தது. மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, கையில் இருந்த வாழைப் பழத்தை அவரிடம் நீட்டினான். மற்றவர்களிடம் வாங்கிக் கொண்டு அருகே வைத்துக்கொள்ளும் அவர், இப்போது கார்த்தியிடம் வாங்கிய பழத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்தார். இது போதாதென்று சாமியார், இன்னோர் அடி கொடுத்தார். எல்லோருக்கும் நெற்றியில் திருநீறிட்ட அவர், கார்த்தியை விபூதி எடுத்துக்கொள்ளுமாறு 'சைகை' செய்தார். கார்த்தி செயலற்று நின்றபோது, பின்னால் வந்தவர்கள் நகரச் சொன்னார்கள். கார்த்தி வரிசையில் இருந்து வெளியே வந்தான். பின்னால் வந்தவர்களுக்கு சாமியார் நெற்றியில் திருநீறு இட்டுக் கொண்டிருந்தார். கார்த்திக்கு உடலெல்லாம் ஆடியது. பாவிகளை ரட்சிக்க இயேசுவைப் போல் உட்கார்ந்து உட்கார்ந்து இரண்டு கால்களும் செயலி யக்கம் இல்லாமல் கிடக்க, உலகத்திற்காகத் தன்னையே பலி கொடுக்கும் இந்த மகான், ஏன் அவனை 'மாற்றாந்தாய் மனப்போக்கில்' நடத்துகிறார்?

எப்படியாவது சாமியாரின் கையாலேயே விபூதி வாங்கி விடுவது என்ற வைராக்கியத்துடன் மீண்டும் வரிசையில் வந்து நின்றான். பழைய தெம்போ, தன்னம்பிக்கையோ இல்லை. சாமியாரின் போக்கு, அவனுக்கு ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

வரிசை நகர்ந்து கொண்டிருந்தது. திடீரென்று நான்கு பிரமுகர்கள் காரில் வந்து இறங்கினார்கள். அவர்களை உள்ளூர் மணியக்காரர் வரவேற்றார். ஐந்து பேருமாக, நேராக சாமியாரிடம் வந்தார்கள். நகர்ந்து வந்த மக்கள் வரிசை நிறுத்தப்பட்டது. குறுக்குவழி ஆசாமிகளுக்காக, மக்கள் கூட்டம், நிறுத்தப்பட்டு நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் கார்த்திக்கு எரிச்சலுக்கு மேல் எரிச்சல் ஏற்பட்டது. இங்கேயுமா இன்புளுயன்ஸ்?

நால்வரில் ஒருவர், சாமியாரைத் தொட்டுக் கும்பிட்டார். உடனே மணியக்காரர், சாமியாரைப் பார்த்து, "சாமீ! இவருக்கு... இன்கம்டாக்ஸ் தகராறாம். நீங்கதான் அருள் செய்யணும்" என்றார். உடனே சாமியார், "தீர்த்து வைக்கிறேன்" என்றார்.

"இவருடைய மனைவி... மெட்ராஸ்ல வேலை பாக்குறாங்க... இவரையும் மெட்ராஸுக்கு மாத்த... சாமி... அருள் பண்ணணும்."

"நல்லது... மாத்தறேன்."

"சாமி... இவரு முனிஸிபாலிட்டி சேர்மன்... பணத்தைக் கையாடினதா போலீஸ்ல வழக்குப் போட்டிருக்காங்களாம்... நீங்கதான்..."

"நல்லது, கவனிக்கிறேன்..."

நால்வரும் எந்த வேகத்தில் வந்தார்களோ, அந்த வேகத்தில் போய்விட்டார்கள். கார்த்திக்கு, 'பக்தர்கள்' மீது ஏற்பட்ட கோபம், இப்போது சாமியார் மீது திரும்பியது. 'நல்லது, போய் வாங்க' என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையுமே பேசாத அவர், அந்த நால்வரிடமும் மணியக்காரர் சிபாரிசின் பேரில், என்னமாய்ப் பேசுகிறார்! இவர் எந்தவகைச் சாமியார்?

கார்த்தி, பின்னார் நின்றவர்களால் நகர்த்தப்பட்டு சாமியாரின் முன்னால் நிறுத்தப்பட்டான். என்னதான்

சாமியாரை நிந்தித்தாலும், அவர் பார்வை பட்டதும், அவனுக்கு ஒருவிதப் பரவசம் ஏற்பட்டது. ஆனால், இந்தமுறையும் அவன் கொடுத்த வாழைப்பழத்தை, சாமியார் அவனிடமே திருப்பிக் கொடுத்தார். பலருக்கு நெற்றியில் விபூதியிட்ட அவர் கரங்கள், கார்த்தியை விபூதியை எடுத்துப் பூசிக் கொள்ளுமாறு சைகை செய்தன. கார்த்தி, திருநீறை எடுத்துக் கொள்ளாமலே வெளியேறினான். சாமியாரைத் திகிலுடன் பார்த்தான்.

சாமியார், மௌனமாக மற்றவர்களுக்கு, திருநூறு அளித்துக் கொண்டிருந்தார். கூட்டத்தினர் கார்த்தியை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். ஏதாவது பயங்கரமான பாவம் செய்திருப்பான்! அதனால்தான் சாமியார் அவனிடம் பழங்களை வாங்கிக் கொள்ளவும் இல்லை; விபூதி கொடுக்கவுமில்லை... வரிசையில் நின்ற ஒவ்வொரு பக்தரும், தன்னையே பெருமையாகப் பார்த்துக் கொண்டார்கள். அதே நேரத்தில், கார்த்தியை மாதிரி தங்களுக்கும் சாமியார் கையை விரித்து விடுவாரோ என்ற திகிலும் இருந்தது. அதற்கு ஈடு கட்டுவதுபோல், "இந்த மகானுக்கு... இருநூறு வயசிருக்கும்... இந்த இடத்திலேயே... முப்பது வருஷமா... இருந்தது இருந்தபடியே இருக்கார்... கூடுவிட்டுக் கூடு பாயுற வல்லமை உள்ளவர்" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். "இங்க... வரும்போதாவது மனசு சுத்தமா இருக்கணும்... சாமியார் எல்லாத்தையும் கண்டு பிடிச்சிடுவார்" என்றார் ஒருவர்-கார்த்தியை நோட்டம் விட்டுக்கொண்டே.

கார்த்தி, உடலெல்லாம் பற்றி எரிய சோர்வாக, அருகே இருந்த ஒரு தோப்பில் வந்து உட்கார்ந்தான். அவன் நெஞ்சமெல்லாம் நிராசை வியாபித்தது. இதற்காகவா, இத்தனை கஷ்டப்பட்டு வந்தான்? எல்லாவற்றையும் படைத்து, தன்னையே தானாகப் படைத்துக் கொண்ட இறைவனை பைபிளிலும், குரானிலும், பகவத் கீதையிலும் அவன் தேடிக் கொண்டிருக்கிறான். உண்மையையே கடவுளாக ஆராதிக்கிறான். தெய்வச் சந்நிதிகள் தோறும்

சென்று, இன்னதென்று புரியாத பிரபஞ்ச தத்துவத்தை, அதை ஈன்றெடுத்த இறைவனின் அருள் எண்ணம் காண, அடைகாக்கும் உணர்வுகளை அடக்கி, உணர்வுகளை உள்ளடக்கிய பேருணர்வுக்குள், பிறப்புக்களை அறுக்கும் பெரும் பரபரப்புக்குள், ஏகன்-அநேகன்-இனியவனான, மாயப் பிறப்பறுக்கும் மாயாவியைக் காண முடியா விட்டாலும், அவனின் அருட்துளி மேவும் பொருட்டு, ஆன்மாவைப் பிரபஞ்சமெங்கும் மானசீகமாகப் பறக்க விடும் அவனுக்கு, அருள்பாலிக்க அந்தச் சாமியார் மறுத்து விட்டார், அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இன்கம்டாக்ஸ் தகராறுக்கும், உத்தியோக மாற்றத்திற்கும் தீர்வு காண வந்த பேர்வழிகளை மனதார வரவேற்று, வாயாற வாழ்த்தி வழியனுப்புகிறார். இவர் என்ன சாமியார்? இத்தனை சந்தர்ப்பங்களிலும், அவர்மீது கோபம்தான் வருகிறதே அன்றி வெறுப்பு வரவில்லையே, ஏன்?

கார்த்தி சிறிது நேரம் குழம்பிப்போய் உட்கார்ந்தான். தலை கனத்தது. இதயம் அடித்துக் கொண்டது. தோப்பில் இருந்து கொண்டே சாமியாரை வெறித்துப் பார்த்தான். அவனை அறியாமலே, அவனுள் ஒரு வைராக்கியம் பிறந்தது. சாமியாரிடம் மானசீகமாக வாதாடினான்.

'குறுக்குவழிப் பக்தர்களின் எத்து வழிக்கும் இணைந்து போவது போல் தோன்றும் உங்கள் ஞானவழி எனக்குப் புரியவில்லை. இறைவனை நிஷ்காமமாகத் தொழும் என்னிடம், நீங்கள் காட்டிய அலட்சியமும் எனக்குப் புரிபடவில்லை. நதிமூலம், ரிஷி மூலம் காண முடியாது. ஆனால் ஒன்று. இறைவனை, எந்த மகானும் மொத்தமாகக் குத்தகை எடுக்கவில்லை. உங்கள் மூலம் இறைவனைக் காண்பதற்காக நான் முயற்சித்தது தவறுதான். உங்களைப் போல் நானும் மனிதன்தான். நானே நேரடியாக இறைவனை அணுகலாம்; அணுக வேண்டும்; அணுக முடியும். •உங்கள் மூலம் குறுக்குவழியில் இறைவனின் அருள்பாலிப்பை நான் நாடியது தவறு என்பதைப் புரிந்து

கொண்டேன். நான், நானாகி - அந்த நானே சூன்யமாகி, சூன்ய சுக்கிலத்தில் சுற்றி வரவேண்டும். நீங்கள் இந்த உலகத்தில் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய திருவண்ணாமலை, சிதம்பரம், பழனி, வடலூர், நாகூர், வேளாங்கண்ணி முதலிய தெய்வத் திருத்தலங்களைத் தரிசிப்பதற்கு உங்கள் சிபாரிசு எனக்குத் தேவையில்லை.

"நீங்கள் பெரியவர்தான்; ஆனால் பரம்பொருளை விடப் பெரியவராக இருக்க முடியாது. நீங்கள் சித்தர்தான்; ஆனால் பரசித்தின் முன்னால் நீங்களும் நானும் அசித்துக்கள். உங்கள் உருவத்தின் வழியாக அந்த அரூபத்தைக் காண நினைத்தது தவறுதான். என் உருவத்தையே ஒடுக்கி, உணர்வுகளை உள்ளடக்கி, சத்யச் சிறகுகள் மூலம் பரம்பொருளை புரிந்து கொள்வேன். இது சத்தியம். சத்தியவான் தோற்கலாம்; ஆனால் சத்தியம் தோற்காது. நீங்கள் காட்டிய வித்தியாசம், உங்கள் ஞானத்திற்கே மூலனான ஆண்டவனின் அருள்பாலிப்பில் இருக்க முடியாது; நான் வருகிறேன்....'

கார்த்தி எழுந்தான். சிறிது தூரம் நடந்து, சாமியாரையே வெறித்துப் பார்த்தான். அவரிடம் அவனுக்கிருந்த 'லவ்-கேட்' எனப்படும் வெறுப்பன்பை அவன் உணர்ந்து பார்த்தான். சாமியார், பக்தர்கள் கொடுத்த வாழைப்பழங்களை வாங்கிக் கொண்டும், கைநிறையத் திருநீறு எடுத்து, அவர்கள் நெற்றி நிறையப் பூசிக்கொண்டும் இருந்தார். தன்னை அறியாமலே கரங் குவித்து அவரை வணங்கிவிட்டு, கார்த்தி திரும்பிப் பார்க்காமலே வேகமாக நடந்தான். எந்த இடைத்தரகரும் இல்லாமல் பிரபஞ்ச ரகசியத்தை அறிய முடியவில்லை என்றாலும், அணுக முடியும் என்ற சுய உபதேசம் அவனுள் உருவானது.

*ஆனந்த விகடன் - 1977*

# அம்மாவைத் தேடி...

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில், மூன்று நோயாளிகள் மரண அவஸ்தை தாங்காமல் முனங்கிக் கொண்டே புரண்டு கொண்டிருந்தார்கள். டாக்டர்களுக்கு அவர்களின் முடிவின் முடிவு தெரியும். அவர்களுக்கும், தங்கள் அந்திம காலத்தின் அடையாளம் புரியும்.

ஸ்பெஷல் வார்டில் படுத்துக் கிடந்த மாஜி டெப்டி கலெக்டர் மயில்நாதன், தான் ஏழு வயதுச் சிறுவனாக இருக்கும்போது ஏற்பட்ட அவஸ்தை, இப்போது மீண்டும் வந்திருப்பதை உணர்ந்தார். அப்போது அவர் அம்மா அவரருகே கண்ணீர் சிந்த அமர்ந்து, உடம்பைப் பிடித்துவிட, அவர் - அந்தப் பையன், அவள் மடியிலே தலைவைத்து அரற்றினான். காலமான அந்த அன்னையிடம் இப்போது போகவேண்டும் என்று அவர் துடித்தார்.

நான்கைந்து கட்டில்களில் ஒரு கட்டிலில் ஒருக்களித்துப் படுத்துக் கிடந்த மிராசுதார் தங்கச் சாமிக்கும் அதே எண்ணம். "நான் சொன்னேனே... மழையிலே நனையாதன்னு... கேட்டியா" என்று சொல்லி, தன்னைத் தோளில் வைத்துக் கொண்டு வைத்தியரிடம் ஓடிய அந்த அம்மாவிடம் போக வேண்டும் என்று, முற்றிப்போன ஆஸ்துமாவில் வற்றிப்போன தங்கச்சாமி தவித்தார்.

இன்னொரு வார்டில் கீழே ஒரு பாயில் புரண்டு கொண்டிருந்தாள் சுந்தரி. அவளுக்குப் பால் வியாபாரம். என்ன நோய் என்று டாக்டர்கள் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சிக்கு ஆயத்தங்கள் செய்யும்போதே, ஒன்றைக் கண்டுபிடித்து விட்டார்கள். மரண நெருக்கத்தை அவளும் புரிந்து கொண்டாள். கட்டிய புருஷன் எட்டிப் பார்க்கவில்லை. பெற்ற பிள்ளைகள், ஒப்புக்கு வந்தார்கள். அவள் அம்மா இருந்தால்... அந்த அம்மா, அவள் ஆறு வயதுச் சிறுமியாக இருந்தபோது, எப்படியெல்லாம் முத்தம் கொடுப்பாள்! அந்த அம்மாவை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்று அவளும் துடித்தாள்.

துடித்தவர்களின் இதயத் துடிப்பு அடங்கியது. ஆன்மாக்கள் பிரிந்தன. சுக்கில உடம்போடு, அந்த மூவரும் மேலே போனார்கள். இவர்களோடு, பூமியின் பல பகுதிகளிலிருந்து பல ஆன்மாக்கள் சேர்ந்து கொண்டன. அத்தனை ஆன்மாக்களும் அளவிட முடியாத பிரபஞ்சத்தை அளவெடுப்பதுபோல், பறந்தன. பூமிக்கு மேலே குறிப்பிட்ட வட்டத்திற்கு வந்ததும் பெரும்பாலான ஆன்மாக்கள் அங்கேயே முடங்கின. அதற்கு மேல் அவற்றால் செல்ல முடியவில்லை. ஆனால் தவ வலிமையும், புண்ணிய பலமும் கொண்ட ஆன்மாக்களும், பரம்பொருளை அனுதினமும் மறவாமல் வாழ்ந்தவர்களின் ஆன்மாக்களும், ஒழுக்கத்தை விழுப்பமாகக் கொண்டு, நெறியோடு வாழ்ந்து நேர்மையுடன் சிறந்த நாத்திகவாதிகளின் ஆன்மாக்களும், வைணவர்களால் 'ஸ்ரீ வைகுண்டம்' என்றும், சைவர்களால் 'சிவலோகம்', சமண பௌத்தர்களால் 'நிர்வாணம்' என்றும் கூறப்படும் பிரபஞ்ச மையத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

பூமிக்கு மேலே ஒரு கட்டத்தில் தேங்கிப் போன ஆன்மாக்களில், ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் காலமான மூன்று ஆன்மாக்களும் இருந்தன. இருட்டுக்கும் வெளிச்சத்திற்கும் இடைப்பட்ட அல்லது அவை இரண்டாகக் கலந்த பகுதி அது. அத்தனை ஆன்மாக்களும்

ஆறேழு வயதுச் சிறுவர்களாக, சிறுமிகளாக அவதாரம் எடுத்திருந்தன. அத்தனையும் தத்தம் அன்னையரைத் தேடிக் கொண்டு, 'அம்மா.... அம்மா..' என்று அழுதன. அவற்றிற்கு தூரத்தே, தத்தம் அன்னையினர் தெரிவதுபோல் ஒரு பிரமை. அன்னையை அடையாளம் காண அத்தனை பேரும் முண்டியடித்தனர்; முடியவில்லை.

மாஜி டெப்டி கலெக்டர் மயில்நாதன், ஏழு வயதுப் பாலகனாய் உருமாறி, "என் அம்மா... என் அம்மா... நீ ஒரு வில்லேஜ் உமன்... நான் பார்க்கிற ஃபிகரில் நீ மிஸ்ஸாகிறியே... எங்கேயம்மா இருக்கிறே?" என்று புலம்பினார்.

மாஜி மிராசுதார் தங்கச்சாமி, "அம்மா, உன்னைக் காணுமே... நான் வந்துட்டேன், ஓடி வா... வந்து என்னை இடுப்பில் எடும்மா... எடும்மா" என்று அரற்றினார்.

சுந்தரி, இப்போது ஆறு வயதுச் சிறுமியாக வடிவெடுத்து, தூரத்தே தெரிந்த உருவைப் பார்க்க முண்டியடித்தாள்.

அவள் முன்னால் நின்ற ஏழு வயதுச் சிறுமியின் தலை, அவளைப் பார்க்க முடியாமல் தடுத்தது. சுந்தரி, அம்மாவைப் பார்க்க முடியாத கோபத்தை அவள்மீது காட்டினாள். அவளின் தலையைத் தட்டிக் கொண்டே, "ஒத்தும்மே... என் அம்மாவப் பார்க்கணும்... அய்ய" என்றாள்.

தலையில் தட்டப்பட்ட ஏழு வயதுச் சிறுமி, வார்த்தையால் பதிலடி கொடுத்தாள்.

"என்னாமே... என்னைபத்தி இன்னா நினைச்சிக்கீற... நான் வந்து எம்பட்டு காலமாறது... இன்னும் என்னோட ஆத்தாவ பார்க்கல... நீ தம்மாத்துண்டு நேரத்தில வந்துட்டு பார்த்துடலாமுன்னு நினைக்கிற.... படா கில்லாடிதான்."

சுந்தரிக்கு, அம்மாவைப் பார்க்க முடியாது என்ற எண்ணம் அழுகையைக் கொடுத்தது. கேவிக்கேவி

அழுதாள். அவளுக்கு 'டாவு' காட்டிய சிறுமிக்குக் கருணை பிறந்தது.

"அழாதேமே... உன் ஆத்தா பேரு என்ன... ஊரு என்ன, சொல்லு கண்ணு?" என்றாள்.

"என்னோட அம்மா பேரு பூவம்மா... கொத்தாரச்சாவடில மீன் வித்துக்கினு இருந்தா... பொட்டுன்னு பூட்டா..." என்றாள் சுந்தரி.

ஏழு வயதுச் சிறுமிக்கு வியப்புத் தாங்க முடியவில்லை.

"அடீ... நான்தாண்டீ ஒன் ஆத்தா. நானும் என் ஆத்தாவை தேடிக்கினு இருக்கேன்...."

சுந்தரிக்கு, தன் அம்மாவை ஏழு வயதில் பார்த்தது, இனிப்பைத் தரவில்லை. அவள், பொய் சொல்வதாக - தன்னைத் தேற்றுவதற்கு அவள் கண்ட உபாயமாகக் கருதி, முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள். அவள் அம்மா - ஏழு வயதுச் சிறுமி பூவம்மா, அவளைப் பற்றிச் சிந்திக்காமல், தன் அம்மாவையே தேடும் வேலையில் ஈடுபட்டாள்.

அத்தனை ஆன்மாக்களும், அன்னையை நினைத்ததால் குழந்தைகளாயின. ஆனால், குழந்தைகளாக நிற்கும் தத்தம் அன்னையரை அவர்களால் அடையாளம் காண முடியவில்லை.

அத்தனை ஆன்மாக்களும், "அம்மா... அம்மா...' என்று அழுதன; "எங்கேம்மா இருக்கிறே, எங்கேம்மா" என்று புலம்பின; "வாம்மா... வாம்மா..." என்று வாடின; "தாயே... தாயே..." என்று கதறின.

திடீரென்று, அத்தனை ஆன்மாக்களையும் மேல் நோக்கி புவிஈர்ப்பு விசை போன்ற பிரபஞ்ச ஈர்ப்பு இழுத்துக் கொண்டே சென்றது. சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ என்று புரியாமல், ஆன்மாக்கள் புலம்பின.

ஆனாலும் அந்த திசையற்ற பயணத்தில் சொர்க்கம் என்றோ, நரகம் என்றோ இருக்கமுடியாது என்று அனுமானித்தவை போல் சில பத்தாம் பசலியற்ற ஆன்மாக்கள் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

திடீரென்று, அவர்கள் முன்பு ஒரு ஜோதி. சூடில்லாத நெருப்புப் பிரவாகம், குளிருக்கு இதமான ஜோதி.. அடிமுடி தெரியாத ஒளிவடிவம். காலமற்ற காலஜோதி. அதில், கோடி கோடி அண்டங்களும், அந்த அண்டங்களில் கோடாதி கோடி சூரியன்களும், பேரண்டங்களும் மின்னின. அண்டங்கள் ஆடின. பேரண்டங்கள் குலுங்கின. அதன் பிரபஞ்சமார்பில் கருணை சமுத்திரங்கள் சுரந்தன. சூனியமும், சூட்சியமும் கொண்டது போன்ற பேரொளி. அண்டங்களை உருவாக்கியும், அவை அத்தனையையும் ஒரு அணுப்பிண்டத்தில் அடைத்து வைத்தும், பிரபஞ்ச நடனமாகவும் மௌடீகமாகவும், தோற்றம் காட்டும் ஜோதி. அருட்பெருஞ்ஜோதி. ஆதியோ அந்தமோ அற்ற ஜோதி.

இதன் அருமை புரியாது, அத்தனை ஆன்மாக்களும் "அம்மா வேண்டும்.... என் அம்மா வேண்டும்...." என்று தனித்தனியாய் கூக்குரலிட்டன. அவ்வளவுதான்.

அந்த ஒளிப்பிரவாகம், டெப்டி கலெக்டரும் ஏழு வயதுப் பையனுமான மாஜி மயில்நாதனுக்கு, 'கிராமத்துப் பெண்ணாக' - அவர் அம்மாவைப்போல் காட்சியளித்தது. மாஜி மிராசுதார் தங்கச்சாமிக்கு, தடயம் போட்ட தாயாகக் காட்டியது. பால்கார சுந்தரிக்கு, மீன்காரப் பூவம்மாவானது. அத்தனை ஆன்மாக்களுக்கும் அவரவர் தாய்போல் காட்சியளித்தது.

ஆன்மாக்கள் முண்டியடித்து, தத்தம் அன்னையரை நெருங்கின. ஒவ்வோர் ஆன்மாவும், தன் அன்னை ஒருத்திதான், அங்கே இருப்பதுபோல் நினைத்து நெருங்க நெருங்க, அந்த அகிலாண்ட ஜோதி, ஆணோ, பெண்ணோ, அலியோ, ஒளியோ வெளியோ, அதுவோ.

இதுவோ என்பவைகளுக்கெல்லாம் மூலமாகவும், அப்பாற்பட்டும் தோற்றம் காட்டும் அந்த ஜோதி, ஆன்மாக்களுடைய அன்னையர் உருவங்களாகக் காட்சியளித்துக் கொண்டே இருந்தது. அந்த ஆன்மாக்கள் கண்கொள்ளும் வரை காட்சி காட்டியது. பின்னர் -

ஒவ்வொரு ஆன்மாவிற்கும், ஒவ்வொரு தாயாக காட்சி அளித்த அதே தாய், மீண்டும் பேரண்டப் பேரொளி பிரளய சக்தியானது.

ஆன்மாக்களுக்கு, அநேகமாக புரிந்திருக்கலாம்.

**ஆனந்த விகடன், 7-3-1976**

# வீட்டுக் கணக்கும்...
# ஆகாயக் கணக்கும்...

"நானும் ரெண்டு நாளாய் பார்க்கேன்... நீங்க சாமி கும்பிடலியே! ஆபிஸ்ல ஏதும் பிரச்சினையா ஒருவேள ஒங்க சாமிகளாலகூட தீர்க்க முடியாத விவகாரமா?"

படுக்கையறையில் இருந்து எழுந்ததும் முகம்கூட கழுவாமல், நேராய் சாமியறைக்குப் போய் ஒரு சல்யூட் அடிப்பவர், குளித்து முடித்ததும் அதே அறைக்குள்போய், பக்தியின் உச்சாணியில் நின்று, சாமி கும்பிடுகிறவர். அப்படிப்பட்டக் கணவன், அந்த அறையைத் திரும்பிப் பாராமல் இருப்பதில், கோலவடிவுக்கு ஆச்சரியமேயன்றி பயமல்ல. இன்னும் சொல்லப்போனால், ஒரு வகையில் மகிழ்ச்சி. ஒருநாளில் தொண்ணூற்று ஒன்பது சதவீதமாவது, ஆசையால் தன்னிடம் தோழமையுடன் பழகுகிறவர். இந்த சாமியறையில் இருந்து வெளிப்படும் வரைக்கும், அவளிடம் சிடுசிடுப்பாய் இருக்கிறவர். கடந்த இரண்டு நாட்களாக, தோழமைப் பாசம் நூறு சதவிகிதமானது. இரண்டு நாள் நிறைவாக இருந்தவளுக்கு, இன்று லேசான அச்சவுணர்வு. சாமிகளை விட்டு விட்டதற்காக அல்ல, விடுவதற்கான காரணம்? இயல்பிலேயே நேர்மையாகவும், வெளிப் படையாகவும் உள்ள அவருக்கு, அலுவலக விவகாரம், விகாரப்பட்டிருக்குமோ என்ற அச்சம். அதற்கு ஏற்றாற் போல், மோவாயை நீட்டி வைக்கிறார். தனக்குத்தானே ஏதோ பேசிக் கொள்கிறார்.

"நான் கேட்கேமில்ல? ஆபீஸ் பிரச்னையை என்கிட்டே சொன்னால் நானும் ஒரு யோசனை சொல்வேனே.... சொல்லி இருக்கேனே."

பொன்னம்பலம், மனைவியின் கண்களை நேருக்கு நேராய் பார்த்தார். பின்னர் அந்த நேர்பார்வையை, அவளின் பாதாதி கேசம் முதல், செங்குத்தாயும் குறுக்கும் நெடுக்குமாயும் படரவிட்டார். ஒருகாலத்தில், அத்தனை சாமுத்திரிகா லட்சணங்களையும் கொண்டவளாய், கண்களை ஏற்ற இறக்கமாய் நிலைநாட்டி, தன்னை கிறக்கமாய் பார்த்து, கிறக்கடித்தவள். வாலைப் பருவத்தின் வாளிப்புடன், அவளது பல்லொளி, இவரது கண்களை கூச வைக்கும். அந்தக் கூச்சத்தில், அவர் தனது கண்களைத் தாழச் செய்யும்போது, அவள் மாராப்பை சரிப்படுத்தி, ஒரு அதட்டுப் போட்டு அவரைச் சரிப்படுத்துவாள். எப்படியெல்லாமோ, அந்த உருவத்தை ஆராதிக்கிறார். ஆனால் அந்த உருவமல்ல, இந்த உருவம். கிழடுதட்டி குடை சாயப் போகும் வண்டி. அன்று ஒயிலாகத் தெரிந்த நடையழகு, இன்று நொண்டியடிப்பாய் தெரிகிறது. ஒடுங்கிப்போய் பனங்கொட்டையாய் மெலிந்து போனது. கண்கள், முத்தெடுத்த சிப்பிகளாய், அந்த முயற்சியில் உடைபட்டவைகளாய் தோன்றுகின்றன. ஆனாலும் அவள் மீது கொண்ட காதல் தேய்மானம் ஆகவில்லை. அந்த உருவத்தை ஆராதிப்பது போய், அவளின் உள்ளொளி, அவருக்கு கண்ணொளியாகிறது. உருவ ரசனை, அருவ ஆராதனையாகிவிட்டது....

பொன்னம்பலத்திற்கு சிறிது சிறிதாய் தெளிவு ஏற்பட்டது. இல்லறத்தின் இன்றியமையா, உருவ வழிபாடு, அருவ ஆராதனையானது போல்தான் அவரது இறை வழிபாடும். இது பக்தியின் பரிணாம வளர்ச்சி சந்தேகமில்லை.

ஆ!!

"ஒங்களத்தான். ஏதாவது பேசுங்களேன். ஒங்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லன்னாவது சொல்லுங்களேன். ஏன் அப்படி புதுசா பார்க்கது மாதிரி பார்க்கிங்க?"

பொன்னம்பலம், அவளை புதுசாத்தான் பார்த்தார். அவளை முப்பதாண்டுகளுக்கு மேல் கண்டவருக்கு, இப்போது அவளுள் ஒன்றைக் கண்டுபிடித்த தோரணை. அவள், ஒரு கோளறு பதிகமாகவே தோன்றினாள். அவளை விளக்கமாய் பார்த்துப் பார்த்து, தன்னுள்ளும் விளங்க வைத்தார். அவள் முகம் நோக்கி, அந்த முகம் வழியாய் பிடறியை ஊடுருவி, அந்தப் பிடறிக்குப் பின்னால், கடந்த கால நிகழ்ச்சிகளை கொண்டு வந்தார்.

செந்தூர்க் கடல் தோன்றுகிறது. அப்போது அந்த கடல் அவருக்கு முருகனை ஆராதிக்கும் விஞ்சைக் கடலாய் தோன்றியது. இப்போது வெறுங்கடலாய் காட்சி தருகிறது. முருகன் சிலையைக் கும்பிட முன்வாங்கிய அலைகள், இப்போது அப்படிக் கும்பிட மனமில்லாமல், பின் வாங்குகின்றன. அன்றைய சூரசம்கார கடல்வெளி, மணல் பரப்பாகிறது. தேரிகள் திட்டுகளாகின்றன. முந்தாநாள் வரை, மனைவி மீது எரிச்சலூட்டிய அந்த கடலும் கடலோரமுமான பழைய நிகழ்ச்சிகள், ஞானசாகரத்தின் வெளிப்பாடுகளாகின்றன. அந்த வெளிப்பாடுகளில் அவர் மனம், கால் நிமிடம் பின் சென்று, உடனடியாய் நிகழ்ச்சிகளின் சாம்பலான நினைவுகளாகின்றன.

இந்தப் பொன்னம்பலத்தையும், அப்போதையை புதுமனைவியான இந்தக் கோலவடிவையும், அவள் பாட்டி, முடிச்சு போட்டு ஒன்றாக்குகிறாள். இவரது இடுப்பு மடிவேட்டித் துணியும், அவளது மாராப்பு முனையும், முடிச்சு வட்டமாகின்றன. கடலுக்குள் போகத் தயங்கும் இவளை, பாட்டிதான் கணவன் பக்கமாய் ஒரு தள்ளலும்,

கடலின் பக்கமாய் இன்னொரு தள்ளலுமாய் வேகப்படுத்தி ஏவிவிட்டாள். ஒரே கூட்டமயம். ஒவ்வொருத்தரும் தத்தம் இயல்புக்கு ஏற்ப, கடல் முனைப் பரப்பில் நடமாடுகிறார்கள். அலைகளை மிதித்து நடப்பவர்கள், மிதிக்காமல் தாவுகிறவர்கள், அலை மறித்து நிற்பவர்கள், முங்கி எடுக்கிறவர்கள், நிலத்தில் எப்படியோ அந்தக் கடல்பரப்பில் அத்தனைப் பெண்களும் அச்ச, மட, நாணத்தோடு அல்லாடுகிறார்கள்.

இந்தப் பொன்னம்பலத்திற்கு, வைகுண்ட சாமிக்குப்போல் தோன்றிய விஞ்சைக் கடல், கோல வடிவிற்கு, தேனிலவுக் கடலாய் காட்சியளிக்கிறது. கணவனின் இடுப்பைக் கிள்ளுகிறாள். முதுகில் குத்துகிறாள். விலாவில் இடிக்கிறாள். பொன்னம்பலம் அதிர்ந்து போகிறார். முருகனைப் பற்றிய நினைவு வரவேண்டிய சமயத்தில், 'அந்த' நினைப்பை வருவிக்கிறாளே'' என்று மனைவியை கோபமாய் பார்க்கிறார். அந்தக் கோபம், தாபமானபோது, முருகா முருகா என்று கன்னத்தில் தப்பளம் போடுகிறார். அவள் முந்தானைக்குள் சிக்கிய வேட்டிச் சொருகை நீட்டிக் கொள்கிறார். குடும்பப் பாங்கான பெண்போல், விலகி நடக்கிறார்.

குளித்து கோவில் பக்கம் போனபோது, பாட்டி, தட்டுப் பழத்தை நீட்டுகிறாள். உடனே இந்தக் கோலவடிவு, எங்களுக்கும் சேர்த்து நீ கும்பிட்டு வா பாட்டி. நாங்க இங்கேயே பாராக்கு பார்க்கோம்ணி என்று பாட்டியை, முருகன் கோவிலின் வெளிப்பிரகாரத்தின் முதல் படியில் இறக்குகிறாள். பாட்டியைவிட, பொன்னம்பலமே ஆழமாய் திடுக்கிடுகிறார். ஒனக்கு கோயில் குளத்துல நம்பிக்கை இல்லையா?" என்று பிரமை தட்டிக் கேட்கிறார். இவள், ஆமாம் என்பதற்கு முகத்தை அபிநயமாக்கிவிட்டு, ஏதோ

ஒரு சக்தி இருக்கலாம். ஆனால் இப்படி வேலும் மயிலுமாய் ரெண்டு பொண்டாட்டிகளோட ஒரு கடவுள் இருக்க முடியாது. இருக்கவும் கூடாதுணி என்கிறாள். முடியாது என்றபோது முகத்தை இறுக்குகிறாள். குலதெய்வமான உதிரமாடன் கோவிலில் பூக்காட்டிப் பார்த்தபிறகே திருமணத்திற்கு இணங்கிய பெற்றோரின் பிள்ளையான புது மாப்பிள்ளை, பேத்தியைத் திட்டிவிடக் கூடாதே என்பதற்காக, பாட்டிதான், கோலவடிவின் காதைத் திருகிய படியே திட்டித் திட்டிக் கத்தினாள். பேர மாப்பிள்ளையைப் பார்த்து, “எல்லா விஷயத்துலயும் கெட்டிக்காரி. ஆனால் இந்த கோவில் சங்கதில மட்டும் இவள் கூறு கெட்ட கூவை. சின்ன வயசுல இருந்தே இவளுக்கு சாமிங்கன்னா வேப்பங்காய். போகப் போக இவள சரியாக்கிடலாம்” என்று மன்றாடாத குறையாய், மாப்பிள்ளை முறுக்கை மனதில் கொண்டு, விண்ணப்பித்தாள். அப்போதும் கோலவடிவு விடவில்லை! “திருத்தணுமுன்னு வந்தால் நான்தான் திருத்தணும். இவர்தான் திருந்தணும்!” என்றாள்.

என்றாலும் பாட்டியின் வற்புறுத்தலில் இவள், பொன்னம்பலத்துடன் போனாள். கோவிலின் கருவறைக்கு முன்னால் பக்கவாட்டில் மனைவியுடன் நின்ற பொன்னம்பலம் வடிவேலனைக் கோபித்துக் கொண்டார். படித்த பெண்.... அதுவும் பௌதிகப் பட்டதாரி. பி.எஸ்.ஸி. பி.டி. பள்ளிக்கூடத்து ஆசிரியை. எல்லா ஆசிரியைகளையும் மாதிரி, கிணற்றுத் தவளையாகவும் இருப்பாள், கைநிறைய சம்பளமும் வாங்குவாள் என்று என்னை நம்ப வச்சு, கழுத்த அறுத்திட்டியேடா முருகா! இது எதுல போய் நிற்கப் போகுதோ? இதோட நிற்கட்டும் முருகா இதோட.....

பொன்னம்பலம் முன்நிகழ்வுகளை உதறிவிட்டு கோலவடிவு மீதான பார்வையை, அவள் வாய்ப் பக்கம் கொண்டு வந்தார். அந்த வாய் அன்று பேசிய

வார்த்தைகளை, மனதிற்குள் இருந்து மூளைக்கு ஏற்றுமதியாக்குகிறார். "திருத்தணும்முன்னு வந்தால் நான்தான் திருத்தணும். இவர்தான் திருந்தணும்." இந்தப் பேச்சுக்கு முப்பது வயதாகிறது. புழு, பூச்சியாய் பரிணமிப்பதுபோல், இப்போது இதுவே தீர்க்க தரிசனமாகிவிட்டது.

பொன்னம்பலம் தன்னுள் ஏற்பட்ட மாற்றத்தை உள்வாங்கியபடியே அவளை மானசீகக் குருவாகப் பார்த்தார். சவ்வாது மலை அனுபவத்தை, அண்டகோடி நட்சத்திர சாட்சியாக விளக்கப் போனார். அதற்காக, அவளை மாணவத்தனமாக ஏறிட்டுப் பார்த்தார். இதற்குள் வாசல் மணியோசை... சிலிண்டர் பையன் மூக்கை நுழைத்தான். அந்தம்மா தலைவாசல் பக்கம் வந்தாள்.

தனித்துவிடப்பட்ட பொன்னம்பலத்திடம் புதிய தெளிவு. மனைவியின் நிதர்சன செயல்பாடுகளே, அவருக்கு போதிமரக் கிளைகளாயின. திட்டவட்டமான முடிவோடும், கம்பீரமாக சாமியறைக்குள் நுழைந்தார். ஒரு போராளியாய் எதிர்பார்வையை, எதிரிப் பார்வையாய் போட்டார். சின்னஞ் சிறிய அறை. மூன்றடி தூக்கியில் சுவரோடு இணைக்கப்பட்ட பளிங்குக்கல் செவ்வகத் தளம். நகைகள் லாக்கருக்குப் போனதால் வேலையற்றுப் போன நகைப் பெட்டி, கல் தளத்தின் சரிபாதியில் சுவரோரமாய் உள்ளது. அதில் வலது பக்கம் உடுப்பி கிருஷ்ணன், இடது பக்கம், வைணவப்படி ஆதிசேசனாய் கருதப்படும் சுப்பிரமணியர். நடுப்பக்கம் தர்மஸ்தலாலிங்கம். கர்நாடகத்தில் பணி புரியும்போது வாங்கியது. இவை மூன்றும் ஒன்றாய் சேர்ந்த படம். இடது பக்கத்துச் சுவரில் குழல்வாய் மொழியம்மன், குற்றால நாயகியை, குற்றாலத்திலேயே வாங்கினார். வலதுப்பக்கத்துச் சுவரில் அய்யப்பன், தளத்திற்கு மேலேயுள்ள சுவரில் முருகனும், பழனி முருகனும்,

தொங்கினார்கள். சுவர் முனைகளில் ஒன்றில் திருப்பதி ஏழுமலையான், மறுமுனையில் சரஸ்வதி அம்மன், கருஞ்சிலையும் வீணையுமாய் தோன்றும் கலைவாணி. நகைப்பெட்டியின் ஒரு விளிம்பில் சின்னஞ்சிறு பிள்ளையார்பட்டி பிள்ளையார் படம். இன்னொரு விளிம்பில் எருமைத் தலையில் கால் பதித்த துர்காதேவி... நடுவில் சேவலை முன்னிறுத்திய இன்னொரு முருகப்படம்.

அந்தப் படங்களை கிண்டலும், கேலியுமாகத்தான், பொன்னம்பலம் பார்த்தார். அந்தப் படங்களின் புராணக் கதைகளை முகம் சுழித்து நினைவுபடுத்தினார். ஏவுகணைக் காலத்தில் வேல்பிடித்த முருகனா... அணுவாயுத காலத்தில் திரிசூல நாயகியா... தாயைப் போல் பெண் கேட்ட பிள்ளையார். எந்தப்படத்தை முதலில் எடுக்கலாம்?

பொன்னம்பலத்தின் கரங்கள் இரண்டும் இடுக்கிகளாகி முருகப் படத்தை கௌவப் போயின..., ஆனாலும் பாம்பாய் நீண்ட கரங்கள், கௌவ மறுத்தன.... கையாடி காலாடி, அவர் உடலெல்லாம் ஆடியது. மனசாட்சி ஆடி ஆடி ஆட்டுவித்தது. முப்பதாண்டு கால சிநேகிதப்படங்கள். அவரிடம் பேசாமல் பேசியவை. இவர், அந்தரங்கமாய் உரையாடிய படங்கள். சாதாரண சட்டம் போட்ட படங்கள் அல்ல... கடல்போல், மலைபோல், செம்மாந்து திகழ்பவை....

பொன்னம்பலம், தன்னை தேற்றிக் கொண்டார். இந்தப் படங்களை எடுக்க ஏற்படும் தயக்கம், முப்பதாண்டு கால மன மயக்கத்தின் பின்விளைவு. சிறைச்சாலையில் இருந்து விடுதலை அடைகிற கைதி, அவனது கொட்டடியையும், கூட இருப்பவர்களையும் எப்படி கால் நகர்த்தாமல் பார்ப்பானோ... கண்ணலம்ப, நோக்குவானோ- அப்படிப் பட்ட தயக்கம். அனாலும் அவன் மீண்டும் அந்த கொட்டடிக்குப் போகமாட்டான். அவனுக்காவது, அது, ஊன விடுதலை.... இவருக்கோ.... ஞான விடுதலை.

பொன்னம்பலம், இடுப்பளவு முருகபடம், திருமணகாலத்தில் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட செண்டிமென்டில் அல்லாடி அதைவிட்டு விட்டு கீழே குனிந்து சுவர் மூலையோடு மூலையாய்க் கிடந்த திருப்பதி ஏழுமலையான் படத்தை கையகப்படுத்தப் போனார். அதற்காக நீண்ட வலதுகரம், இடதுகரத்தோடு பின்னிக் கொண்டது. இது வெறும்படமா. வெத்துவேட்டா. குபேரனிடம் கடன்பட்டு, ஏழுமலைக்கு கழிவிரக்கமாய் வந்தவர் திருப்பதி ஆண்டவன் என்பது நம்ப முடியாத புராணப் புளுகு. ஆனால், இது வாங்கப்பட்ட பின்னணி, பொன்னம்பலம் நினைவு கூர்ந்தார். அவருக்கு பெங்களூரில் இருந்து, அவர் விரும்பியபடி சென்னைக்கு மாற்றல் வந்த சமயம் பல்வேறு நியாயமான காரணங்களுக்காக, கணிசமாய் கடன்பட்டிருந்தார். சாட்சி இல்லை, ஆனாலும் வாங்கிய கடனை அடைக்காமல் போக மனமில்லை. டில்லி மேலிடத்திற்கு பத்தாயிரம் ரூபாய் முன் பணம் கேட்டு, விண்ணப்பித்து விட்டார். பணம் கிடைக்க மூன்று மாத காலமாகும். அதற்குள் சென்னைக்கு, இன்னொருத்தன் போயிடுவான். காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாகும். அவர் தனக்குள்ளே குமைந்து கொண்டிருந்தபோது-

ஒரு நண்பர் அவரை ஆள்துணையாக திருப்பதிக்கு கூட்டிப் போனார். அதிகாலை மூணு மணியளவில் சரஸ்வதி தேவி மகாவிஷ்ணுவிற்கு வீணை இசைப்பதாகக் கருதப்படும் பிரும்ம முகூர்த்த காலத்தில், கோவிலின் உட்பிரகாரத்திற்குள் சென்றவர், நண்பருடன் கவிழ்ந்து பார்த்த ஏழுமலையான நிமிர்ந்து பார்க்கிறார். பணமுடையால் ஏற்பட்ட நடைமுறையைச் சொல்லிச் சொல்லி விண்ணப்பிக்கிறார். பின்னர் வெளியேறுகிறார். கோவில் மதில் சுவர்ப்பக்கம், ஒரு நிர்வாகப் பொறியாளர்.

சென்னைத் தோழர். நீண்ட உரையாடலுக்குப் பிறகு, தனது பிரச்சினையை ஏதேச்சையாய் சொல்கிறார். உடனே அவர் "நீங்க ஹெட்-ஆப் ஆபீஸ். அதாவது அலுவலகத் தலைவரா" என்கிறார். இவர், மேலும் கீழுமாய் தலையாட்டியதும் அவர், அலுவலக சாஸ்திரங்களில் ஒன்றை விளக்குகிறார். ஒரு அலுவலகத் தலைவர் தனக்கு டிரான்ஸ்பர் வரும்போது, தனக்குத்தானே முன்பணம் சாங்ஷன் செய்யலாமாம்.

அலுவலகம் வந்த பொன்னம்பலம் இந்த விதி தெரியாத நிர்வாக அதிகாரியைச் செல்லமாகக் கோபிக்க, அவர் பிராயச்சித்தமாய், அப்போதே பத்தாயிரம் ரூபாய்க்கு காசோலை எழுதி, இவரிடம் கையெழுத்து வாங்குகிறார். காலையில் சேங்ஷன், மாலையில் பணம். மறுநாள் பிருந்தாவன் ரயில். வெறும் ரெயிலல்ல.... பிருந்தாவனத்து கிருஷ்ணனே இவரை ஏற்றி வந்தான்.... இந்த படத்தையா வீசி கடாசுவது... அவர் கரங்கள் சேவலை முன்னிறுத்தி, மயில் மேல் பட்டும் படாமலும் சாய்ந்த முருகன்படம் நோக்கி போகின்றன... பொன்னம்பலம் தடுமாறுகிறார். அரசுக்கு எதிராக, நண்பர்களின் ஆலோசனைகளையும் மீறி நீதி மன்றத்துக்குப் போகும் வழியில், ராமலிங்க அருளாளரால் பாடப்பட்ட சென்னை கந்த கோட்டத்திற்குப் போய் உள்ளே இருக்கும் திருக்குளத்தில் முதற்படியில் இறங்கி சேவல் கூவ வேண்டும் என்கிறார். உடனடியாய் கூவுகிறது.... வெற்றிச் சங்காய் முழங்குகிறது. நீதிமன்றத்தில் வெற்றி... இந்த சிந்தனையில் 'இன்னொரு சிந்தனை கண்ணாடியில் முருக தரிசனம் கண்ட வள்ளலாரே, உருவ வழிபாட்டை உதறவில்லையா?

பொன்னம்பலத்தின் இருகரமும் மீண்டும் நீள்கின்றன. நிமிடமாய் நீண்டவை வினாடியாய் சுருங்குகின்றன. மூளைக்கு, மனம் முட்டுக் கட்டை போடுகிறது.

இந்த இரண்டுமற்ற ஏதோ ஒன்று, அந்த சவ்வாது மலைக்குச் சாபமிடுகிறது. அவரை, அந்த மலைப்பகுதிக்கு மனோ வேகத்தில் அனுப்பி வைக்கிறது. அங்கு ஏற்பட்ட அனுபவ நிகழ்ச்சிகளை இழுத்துக் கொண்டு திரும்ப அழைத்துக் கொண்டு வருகிறது. நெஞ்சைச் சாடும் நினைவுச் சாம்பல்களை உயிர்ப்பிக்கிறது.

பொன்னம்பலம், அரசுப் பணிமுறையில், காவலூர் விண்மீன்கள் ஆய்வு மையத்திற்குச் சென்றார். வேலூருக்கு மேற்கே நூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சவ்வாது மலைப்பகுதியில் உள்ள இந்த நிலையத்தின் நிதி நிலை பற்றி ஆய்வு செய்ய அனுப்பப்பட்டார். கொடைக்கானல் போல் கொடூரமான பள்ளத்தாக்குகளையோ, நீலகிரி மலைபோல் ஊசிவளைவுகளால் பூச்சாண்டி காட்டாமல், சமவெளி போலான மலைவெளி... சின்னச் சின்ன ஓணான் செடிப்புதர்கள்.

தேக்குமரங்கள் வெட்டப்பட்டு, இப்போது அவற்றின் வேர்களும் தோண்டப்பட்ட குழிகள், குயில்களின் பதுங்கும் பொந்துகளான மலைமுகடு. காட்டில் தொலைந்துபோன மலைக்கிராமங்கள். குளிராமலும், வெம்பாமலும் நிதானப்பட்ட வெப்பநிலை. ஆங்காங்கே வனத்துறையின் பெண்காவலர்கள், குறிப்பாக மலைஜாதி இளம்பெண்களின் கண்களில் கராத்தே பார்வை. நாயைப் போன்ற கீரிகளின் நடமாட்டமும், கழுதைப் புலியைப் போன்ற செந்நாய்களின் குவியல்களும், மண்டிக் கொண்ட இடம். மற்றபடி எந்தவித கொடுங்கோன்மையும் இல்லாத கன்னிமை கழிந்தாலும், இன்னும் கற்பழிக்கப்படாத மலைத்தொகுதி.

பொன்னம்பலம், மகேந்திரா ஜீப்பில் போய் சேர்ந்தபோது இருட்டி விட்டது. அந்த நிலையம் ஒரே இருள் மயக்கத்தில் கிடந்தது. குடியிருப்பு வீடுகளில்கூட

விளக்குகள், ஜன்னல் கதவுகளால் சிறையிடப்பட்டன. மின்மினிப் பூச்சிகள் மட்டும், ஒளிப் பொட்டுக்களாய் வலம் வந்தன. நுழைவாசலில் நிற்கும் காவற்படையின் ஒரு காவலருடன், ஜீப்பின் மங்கிய வெளிச்சத்தில், விருந்தினர் விடுதிக்குப் போனவர், தற்செயலாய் ஆகாயத்தைப் பார்த்தார். பார்த்தவர் பார்த்தவர்தான். தோள் கண்டார் தோளே கண்டார் நிலைமைதான். மூன்று நிமிட இடைவெளிக்குப் பிறகு விழியாடாமல் நிலைத்த கண்களை பக்கவாட்டில் படர விட்டார். "எம்மாடி" என்று தனக்குத்தானே சொல்லியபடி நின்ற இடத்தில் நின்றபடியே சுற்றிச் சுற்றி வந்தார். பூமிக் கோளத்தைப்போல், தன்னைத்தானே சுற்றினார். கால்களே அச்சாக, குதிகாலில் நின்றும், கால்களை நிமிர்த்தியும் வளைத்தும் ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்தார். கால் சுற்றும், கண் சுற்றும் ஒருமுகப்பட்டன. தலைமுகட்டின் பள்ளத்தாக்கான வாய் அகலப்பட்டது. இரண்டு கரங்களும் தலைக்கு மேல் போயின.....

பொன்னம்பலம் ஆகாயத்தை சல்லடையாக்கிய நட்சத்திரங்களை கண்கள் சல்லடையாகும்படி பார்த்தார். பிரமை கலையவில்லை. சுயம் திரும்பவில்லை. ஆகாயம் முழுவதும் அப்பி நிற்கும் விண்மீன்கள். கண்களின் கொள்ளளவிற்கு அடங்காதவை. அளப்பரியவை. அனந்தங்கோடி நெருப்புச் சூரியன்கள். எல்லையற்ற விசும்பில், கண்முட்டும் பகுதிவரை பாகம் பிரித்த பங்காளிக் கற்கள். இடையிடையே உள்ள ஆகாய வெளியையே விழியாய் கொண்ட விஸ்வ துண்டங்கள். பிற பகுதிகளில் மின்மினிப் பூச்சிகளாய் தோன்றும் அத்தனை நட்சத்திரங்களும், அந்த ஆகாய பரப்பில் கோபுர கலசங்களாய் மின்னுகின்றன. நிலவிற்கு நிற்க இடம் கொடுக்காத ஒளி உருளைகள். அத்தனையும் கூப்பிடு தொலைவில் ஒரு பாறையிலோ அல்லது மரத்திலோ ஏறினால் பிடித்து விடலாம் அல்லது பிடிபட்டு விடலாம்

என்பது போன்ற நெருக்கம். ஒரு பாவனை. அந்த விஸ்வேஷ்வரத்தை வைத்தகண் வைத்தபடி பார்த்தவர், ஒரே சமயத்தில் அநேகமானார். அநேகமாக அவரே ஆகாயமாகி, அவை பிரசவித்த நட்சத்திரங்களானார். அப்போது பார்த்து, அந்தக் குலவுபேரண்ட தொகுதியில் இருந்த அவரை ஒரு குரல் இழுக்கப் பார்த்தது. முடியாது போகவே தொட்டுப் பார்த்தது. அதுவும் இயலாமல் போகவே, தட்டிப் பார்த்தது.

பொன்னம்பலம், வீறிட்டுக் கத்தினார். பொதுவாக, ஒருவர், ஒன்றுடன் ஒன்றும்போது, அவருக்கு தேள் கடித்தாலும் உறைக்காது. அல்லது ஒரு பூவை எறிந்தாலும் அலறிப் புடைப்பார்என்ற மனோ ரசவாதத்தை உணர்ந்தவர்போல், அவரைத் தொட்டவர், அவரை ஆசுவாசப் படுத்தினார். பின்னர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

''என்னோட பெயர் குப்புசாமி. இந்த அப்ஸர்வேட்டரியில், ஒரு விஞ்ஞானி.... ஒங்களை மரியாதை நிமித்தம் பார்க்க வந்தேன்."

பொன்னம்பலம், அவரை நெடுநாள் பழகியவர்போல், முகம் பார்க்காமலே அப்படிப் பார்க்க வேண்டுமென்றே தோன்றாமலேயே கேட்டார்.

"இந்த மாதிரி பெரிய பெரிய நட்சத்திரங்களை எங்கேயும் பார்க்கலே. ஒவ்வொன்றும் பத்து கிலோ தேறும் போலுக்கே."

"நீங்கள் வெயிட் அன்ட் மெஷர்" ஆபீஸ்ல வேலை பார்த்திருப்பீங்கன்னு நினைக்கேன். பரவாயில்ல. இந்த நட்சத்திரங்கள் எல்லா இடங்களிலும் காணப்படுவது மாதிரிதான் இங்கேயும் தெரியுது. ஆனால் இங்கே திட்டமிட்ட இருள்மயம். சமவெளியில் மின்சார விளக்குகளை உள்வாங்கிய கண்களுக்கு மேலே தொங்கும்

நட்சத்திரங்களை, உடனடியாய் உள்வாங்க முடியாது. இங்கே இருளைப் பார்த்து பழக்கப்படும் மனிதக் கண்களுக்கு, நட்சத்திரங்கள் உள்ளது உள்ளபடியாய் தெரியுது."

"கொஞ்சம் விளக்கமாய் - என் சிற்றறிவுக்கு ஏற்ற வகையில்...."

"என் சிற்றறிவுக்கு ஏற்ற வகையில்தான் என்னால் சொல்ல முடியும்..."

"மன்னிக்கணும். இந்த ஆகாய விஞ்ஞானத்தில் நான் ஒரு பாமரன். இப்ப கூட அமாவாசை எப்படி வருது. பௌர்ணமி எப்படி வருதுன்னு துல்லியமாய் தெரியாது. அதனால..."

"புரியும்படியாய் சொல்ல முயற்சிக்கேன். மனிதனுடைய கண்களின் கொள்ளுமானத்தில் ஆறாயிரம் நட்சத்திரங்கள் அகப்படும். அதோ வலது பக்கம் ஸ்பியராய்-அதான் செவ்வக உருளையா தோணுதே, அது நம் மில்கி கேலேக்ஸியில் ஒரு கை. அதோ தெரியுதே அது இன்னொரு கை. பிரபஞ்ச சாகரத்தில் ஒரு துளியான நமது சூரியன், அந்த பால்வழி அண்டத்தில் உள்ள கோடிக் கணக்கான நட்சத்திரங்களில் ஒரு சராசரி நட்சத்திரம். ஒளியின் வேகம், விநாடிக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் மைல். சூரியனிடமிருந்து பூமிக்கு ஒளிவர நாலரை நிமிடங்கள்.

இப்படி பல்வேறு நட்சத்திரங்களில் வெளிப்படும் ஒளி... நமது பூமிய எட்டுவதற்கு கோடி கோடி ஆண்டுகளும் எடுத்துக் கொள்கின்றன.... இவை ஒளி ஆண்டுகள்... அதாவது விநாடிக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் கிலோ மீட்டர் என்பது ஆகாயத்தில் ஒரு குறைந்த பட்ச தூரம். இதுவே அறுபது விநாடிகளில் அறுபது தடவை ஊடுருவி, இருபத்து நான்கு மணிகளில், பயணமாகி, அந்தப் பயணம்,

முந்நூற்று அறுபத்தைந்து தடவை பாய்ந்தால் ஒரு ஒளியாண்டு... கிலோ மீட்டர் கணக்கில் டென் டு தி பவர் ஆப்...”

“வேண்டாம் ஸார். நினைத்தே பார்க்க முடியல.”

“ஒளி வேகத்தைவிட மனோவேகம் வேகமானது. அப்படிப்பட்ட மனதாலும் அளப்பரியது பிரபஞ்சம்... இதில் காலத்துளியும், தூரத்துளியும் ஒன்றாகின்றன.... அதோ தெரியுதே நட்சத்திரம்... அதன் தோற்றம் ஒரு மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு முன்பிருந்த தோற்றம். கோடி கோடி நட்சத்திரங்களை உள்ளடக்கிய மண்டலங்கள்.... அவற்றை மடியில் தாலாட்டும் கோடானுகோடி மண்டல அடுக்குகள்.... இப்படி அனந்தகோடி. அண்ட அடுக்குகளை கொண்டது பிரபஞ்சம். அதற்குப் பிறகு சூன்யம். இப்போது எங்களுக்கு தெரிய வருவது, இப்படி கோடிக் கணக்கான பிரபஞ்சங்கள் இருக்கலாம் என்று. கோளங்கள் நட்சத்திரங்களைச் சுற்றி, தத்தம் வகிடுகளில் சுழல்கின்றன. இங்கே ஒன்றித்துப் போன காலமும் தூரமும் அற்றுப்போகின்றன. காலம், மகாகாலம், சூனியத்தில் காலாவதியாகிறது. எப்போது காலத்தைக் கணக்குச் சிறையில் பூட்டாமல் இருக்கோமோ, அப்போதுதான் ஒருத்தருக்கு மெய்யான விடுதலை கிடைக்கும்.

“நாம், காலத்தை கிழமைகளாக்கி, நிமிடங்களாக்கி, நிமிடங்களை விநாடிகளாக்கி காலச்சிறையில் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்கிறோம். காலமற்ற நினைவே சித்து.... நினைவற்ற காலமே ஞானம். இதை ஆராதிப்பதே, சித்தி, புத்தி, பக்தி ஆகியவற்றை கடந்த நித்தியம்.”

“சாமி.... இதுக்குமேலே என்னால தாங்காது. என் பக்தி ஒரு மூடபக்தி.”

"ஒங்க மூடத்தனத்தை.... தப்பு தப்பு... அப்பாவித்தனத்தை நெற்றியில் பார்த்துட்டுத்தான் பிரபஞ்ச தத்துவத்தை விளக்கினேன். குவளை நீரை, கடலாய் நினைக்கும் எறும்பான ஒங்களை தற்காலிக தத்தளிப்பில் இருந்து... நித்தியத்திற்கு கரையேற்றவே விளக்கினேன்."

பொன்னம்பலம் அந்த மனிதரை நிமிர்ந்து பார்த்தார். நைந்து போன சாதாரண வேட்டி. புனியன் போடாத தொளதொளப்பான சட்டை. இந்த லட்சணத்தில் கைதட்டிச் சிரித்தார். அந்த சிரிப்பு பைத்தியத்திற்கும், ஞானத்திற்கும் வரப்பான வினோதச் சிரிப்பு. சிறிது நேரம் சிரித்து, முடித்துவிட்டு.... பொன்னம்பலத்தின் பிரமிப்பைக் கலைப்பதுபோல் பேசினார்...

"இந்த பூமிக் கோளம் தோன்றிய நாளில் இருந்து ஆன்மீகத் தேடலுக்கு, இரண்டு விழிகள் கிடைத்தன. ஒன்று மெய்ஞானம். இன்னொன்று விஞ்ஞானம். மெய்ஞானத்தை மதம் சிறையிலிட்டது. ஆனால் விஞ்ஞானத்தை அதன் ஏவலாளிகளான எங்களைப் போன்ற ஆகாயக் கணக்கர்களை யாராலும் சிறையிட முடியாது."

"இதையெல்லாம் என்கிட்டே ஏன் சொல்றீங்க....?"

"காரணம் இருக்கு. தீர்க்க வேண்டிய கணக்கும் இருக்குது. விடையும் கிடைக்குது. இப்படிப்பட்ட பிரபஞ்சத்தில். காளை வாகனத்தில் சிவன் இருப்பாரா? ஒரு அரக்கனுக்கு வரம் கொடுத்து விட்டு பயந்து பேடியாய் திரிவாரா? எல்லையற்ற பிரும்மத்தை படைத்த அல்லா கெட்டவர்களை நரகமிட்டு நல்லவர்களுக்காய் சொர்க்க மிட்டு அங்கே ஒருவரின் நல்லியல்புக்கு ஏற்ப கைபடாத மலர், கைபட்ட மலர் என்று படைக்கப்பட்ட பெண்களை, காமம், துலங்க வைப்பாரா? இயேசு என்பவர் பரிசுத்த ஆவிக்கும் கன்னிமேரிக்குமாய் பிறந்தவராம். நம்பணுமாம்

அவரை நம்பியவருக்கு சொர்க்கமாம். நம்பாதவர்க்கு நரகமாம். ஒங்க வேள்வித்தீயோ மெழுகுவர்த்தியோ ஒரு விநாடியின் கோடிப்பிரமாண ஒளிப்பாய்ச்சலுக்கு நிகராகுமா? மகாவிஷ்ணு கருடனில் பறக்காராம்.... அவர் மருமகன் மயிலில் ஏறுகிறாராம். மருமகனோட அப்பனுக்கும், ரெண்டு பொண்டாட்டிங் களாம். இவங்க நம்ம கடவுள்களாம். வாட் இஸ் திஸ் நான்சென்ஸ்? சொல்லுங்க..."

"நான் எதையும் சொல்றாப்போல இல்ல. நான் என்ன செய்யணுமுன்னு சொல்லுங்க."

"பொய்க் கடவுள்களை விடுங்க. மனிதன் படைத்த கடவுள்களையும், அவர்களின் வாகனங்களையும், சிலுவையையும், பிறைநிலாவையும், திரிசூலத்தையும், உதறுங்கள். பிரபஞ்சத்தை ஆராதிங்க. கோடிக்கணக்கான நட்சத்திரங்களுக்கு இடையே உலா வாங்க. பசுமாட்டை வணங்காமல், பால்வழி மண்டலத்தை பாடுங்கள். பிரபஞ்ச ஆலயத்தின் அனந்தங் கோடி ஒளிப் பிரகாசத்தில் ஒரு ஒற்றை அகல்விளக்காய் ஒளிருங்கள். அப்போது பக்தியால் தரிசான மனோ நிலத்தில் ஞானம் விளையும். சரி சாப்பாடு ரெடி. வாங்க. அறைக்குள்ளே போகலாம்."

பொன்னம்பலம், அந்த ஆகாயக் கணக்கரை, ஒரு மனிதராகப் பார்க்காமல், மகாத்மாவாகப் பார்த்தார். ஒருவேளை கிரகத்தின் சித்தரோ... புத்தரோ... வித்தரோ... எவரோ. வித்தியாசமானவர்... பொன்னம்பலம் அங்கேயே திருநீறை அழித்தார். வரும் வழியில் திருவாலங்காய் என்ற சிவதலத்தில் பூசியது. அந்த விபூதியை அழித்த கரங்களை, ஆகாயத்தை நோக்கித் தூக்கியபடியே, பிரபஞ்சக் காலடியைக் கும்பிட்டார். மறுபிறவி எடுக்க, மரிக்காமலே புதுப்பிறவி எடுத்தார். எடுத்ததாக நினைத்தார்.

இப்போதோ, அதே அந்த பொன்னம்பலம், நினைவுகளின் சுடு சாம்பல் போலானார். மனசாட்சி சுமையாய் கனத்தது. நம்ப முடியாத அனுபவங்களுக்கும் நம்பக்கூடிய பகுத்தறிவுக்கும் இடையே இழுபறியானார். அந்தப் படங்களை எடுக்கவும் முடியவில்லை. நீடித்துவிடவும் மனமில்லை. எடுத்த எடுப்பிலேயே புலித்தோல் நிற இருக்கையில் உட்காருகிறவர். நின்ற கோலமானார். அந்த சமயத்தில், கோலவடிவு வியப்போடு உள்ளே வருகிறாள். அந்த சாமியறைக்கு மட்டுமல்ல அதன் திசை நோக்கிக் கூட எட்டிப் பார்க்காதவள்.

"ஏன் இப்படி பித்துப் பிடித்து நிற்கீங்க...?"

பொன்னம்பலம் குழந்தையாய் ஒப்பிக்கிறார்.

''இந்தப்படங்களை எடுத்திடலாமுன்னு தீர்மானிச்சுட்டேன் கோலம். ஏன்னா ஒவ்வொரு படத்துக்குப் பின்னாலயும் இருக்கிற புராணக் கதைகள் சின்னத்தனமாயும், சில சமயம் அருவெறுப்பாயும் இருக்கு.... சவ்வாது மலையில்.... ஒன்கிட்ட சொன்னேனே பிரபஞ்ச காலடித் தரிசனம்... அந்த தரிசனத்திற்கு, பிறகு இந்தப்படங்களை எடுக்க நினைத்தேன். ஆனாலும் எடுக்க முடியல. காரணம் ஒவ்வொரு படத்துக்கும் பின்னணியான அனுபவம் என்னை வாழ வைத்தவை. எப்போதும் தீமையிடம் சரணடையாமல் நிற்க வைத்தவை. எனக்கு ஒரே குழப்பமாய் இருக்குது கோலம். நீதான் வழிகாட்டணும் கோலம்."

பொன்னம்பலம் மனைவியின் தோளில் தலை சாய்த்தார். அவள் தோளில் வாயுரச ஏதேதோ பேசினார்.

கோல வடிவு, அவர் முகத்தை நிமிர்த்தினாள். கைகளால் முகத்திற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

அவளுக்குள்ளும் புது ஆன்மீகத் தேடல். நாத்திகையான நானே சில சமயத்தில், "அடக்கடவுளே", என்கிறேனே... அதே கோணத்தில்தான் இவருக்கும். இவருக்கு இந்த படங்கள் ஆன்மீகத் தேடல் என்ற அல்ஜிப்ரா பிரிவின் எக்ஸ், ஒய் மாதிரி. ஒரு தொலைக்காட்சிப் பெட்டியில் நிகழ்ச்சிகள் எப்படி தோன்றுகின்றன என்கிற விஞ்ஞானப் பாடம்... பெரும்பாலோர்க்கு தெரியாததுதான். ஆனால் ரிமோட் கண்ட்ரோலில் எந்த எண்ணை அழுத்தினால் எந்த மாதிரியான நிகழ்ச்சிகள் வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். இவருக்கும் தெய்வப்படங்கள் எனப்படுபவை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் காட்சிகளே... தொடர்பியல் விஞ்ஞானமல்ல... போலியற்ற அறியாமை. அதுவே அவருக்கு தெளிவைக் கொடுக்கும் மெஞ்ஞானம். அந்தம்மா, கணவரின் தோளில் கை போட்ட ஔவையார் பிராட்டியானார்.

"இந்த படங்கள நீங்க எடுக்க வேண்டியதில்லை... ஏன்ன? நீங்க இந்தப் படங்களை தெய்வசக்தியாய் நினைக்காமல், இவற்றின் வழியாய் அந்த சக்தியைப் பார்க்கீங்க... ஒங்களோட ராமன் கபீரின் ராமன் அதாவது வில்லேந்திய ராமனல்ல. சீதையை காட்டுக்கு அனுப்பிய ராமனும் அல்ல. அதற்கும் மேலான ராமன். அருவத்தை உருவப்படுத்துகிறீர்கள் அவ்வளவுதான்."

"நமது தேசியக் கொடி வெறும் துணிதான்....!"

ஆனால் அதற்கு இருக்கும் சக்தி... அரசுக்கே கிடையாது... பாரத மாதா... படத்தில் இருப்பதுபோல் இருக்கிறாளா... தமிழ்த்தாய் என்று, பெண்ணனங்கு ஒருத்தி இருக்கிறாளா! ஆகக்கூடி, கூட்டிக் கழித்துப் பார்த்தால், இந்தப் படங்கள், ஒங்களுக்கு கடவுளின் உருவங்கள் அல்ல... உருவகங்கள்... பூமத்திய ரேகை ஒரு கற்பனைக் கோடுதான்..

ஆ. 12.

ஆனால் அந்தக் கோட்டை வைத்துத்தானே பயன்பாட்டு விஞ்ஞானம் உருவாயிற்று... அதனால்தான் நீங்க இந்தப் படங்களை எடுக்க வேண்டிய அவசியமில்ல... இப்போது இருப்பது போலவே நீங்க ஒரு ஆத்திக நாத்திகராய் இருந்தாலே போதும்...'

பொன்னம்பலம், மனைவியை மார்புடன் ஆரத் தழுவுகிறான். அவளோ, தன் பள்ளிக்கூடத்து மாணவனைப்போல், அவரை பெருமிதத்துடன் பார்க்கிறாள். பின்னர், அவர் நிலைக்கு இறங்கியவள், தன் நிலைக்கு ஏறிக் கொள்கிறான். ஆனாலும் வாஞ்சையோடு சொல்கிறாள்.

“சரி... பழைய பூக்களை எடுங்க... நான்... கொல்லைப்புறம் போய், ஒங்களுக்காக... பூக்களை பறிச்சுட்டு வாரேன்...'

கோலவடிவு, புதிதாய், முதல் தடவையாக பூக் கொய்யச் செல்லும் செயல்பாட்டைப் பற்றிக்கூட மனம் உள் வாங்காமல், பொன்னம்பலம், அந்தப் படங்களை கூச்சத்தோடு பார்க்கிறார். அவற்றின் மாறாத புன்னகை கண்டு, இவர் விம்முகிறார். ஏங்கி ஏங்கி அழுகிறார்... அழுதபடியே, கைதூக்குகிறார்... செங்குத்தாக தூக்குகிறார்.

சதங்கை – 1998

# ஒன்றிப்பு

என் மனம் முழுவதும், காக்கா மயமானது. கால் முழுவதும் நடைமயமானது. கேட்க வேண்டிய காதுகளே 'கா... கா...' என்று உரத்துப் பேசின. கண்கள்கூட அப்படித்தான்..... முன்னால், தன்பாட்டுக்குப்போன ஒரு பூக்காரப் பெண்ணின் கொண்டைகூட, ஒரு காக்கா போலவே தோன்றியது. அந்தச் சமயம் பார்த்து என்னை உரசிக்கொண்டு போன ஒரு தள்ளுவண்டியின் கழிசல் கம்பிகள்கூட காகத்தின் நகக்கால்களாய் தோற்ற மாற்றம் காட்டின. ஆங்காங்கே ஆகாயத்தில் வட்டமடித்தும், கடைகண்ணிகளின் முன்னால் லாவகமாய் குதித்துக் குதித்து நகரும் காகங்கள், நான், பல்லாண்டுகளுக்கு முன்பு, காகக்கும்பலால் கொத்திக் குதறப் படும் மனிதர்களை சித்தரிக்கும் ஒரு ஆங்கில திரைப்பட நினைவை அங்கேயே நடக்கப்போகும் நிகழ்ச்சிகளாய் உருவகப்படுத்தின.

நான் காதுகளுக்கு மானசீகமாய் தாளிட்டு, நடந்தேன். மனம் போன போக்கில் கால்கள் போகாமல், அவை தானாக உடம்பை இழுத்துக் கொண்டு போயின. மூலச் சென்னையின் கிழக்கெல்லையான அடையாறு முனையில் மாட்டுத் திமிங்கலம் போன்ற பாலத்தில் ஏறி, மறுபக்கம் இறங்கினேன். எவ்வளவு தூரம் நடக்க வேண்டுமோ, அவ்வளவு தூரம் திரும்பி நடக்க வேண்டும் என்று வழக்கமாய் எச்சரிக்கும் மூளைகூட காக்கை வசமானது. இதுவும், தன் பங்கிற்கு, அகத்தில் குத்திக் கொண்டிருந்தது.

இப்படிக் குறிப்பிடுவதால், நான், 'காக்கா போபியா'வில் சிக்குண்ட மனநோயாளி என்று அர்த்தமல்ல. தண்ணீருக்குள் கூட தடம் பதிக்கும் வல்லமை கொண்டவன் நான் என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். மனம் என்பது, நெருப்புபோல், எதையாவது பற்றி நிற்கக்கூடியதே அன்றி, தனித்து நிற்பதல்ல என்பதை உணர்ந்தவன். அனாவசியங்களில் பதியும் மனதை, ஆரோக்கியங்களில் திருப்பி விடுகிறவன். ஒரு விவகாரத்தை, அடி முதல் நுனிவரை அலசிப்பார்க்கிறவன். அதனால்தான் இந்த காக்கா விவகாரத்தை நினைத்தபடியே நடக்கிறேன். இது புதை மண்ணாகி விடக்கூடாது என்பதற்காக திறந்தவெளியில் நடந்து மனதை திறந்து பார்க்கிறேன்.

நான் சுயமாய் கட்டிய வீடு. பெங்களூரில் இருந்து பதினைந்தாண்டுகளுக்கு முன்பு, இதே இந்த சென்னை வீட்டின் தளத்தில் நானே நட்ட தென்னங்கன்று. இன்று, வளர்வது தெரியாமலேயே வளர்ந்து, இப்போது இரண்டாவது மொட்டை மாடித்தளத்தின் எல்லைப்புரச் சுவரில் உராய்ந்தபடியே அதற்கும் மேலோங்கி நிற்கிறது. ஆனாலும் என் வீட்டில் - என் தென்னையில் கூடு கட்டியிருக்கும், இரண்டு காகங்கள், என்னை குறிவைத்து அடிக்கின்றன. கால்களை மடித்தோ அல்லது நீட்டியோ தலையில் குட்டுகின்றன. மோதிர குட்டல்ல.... நகக்குட்டு. அதேசமயம், இதே மொட்டை மாடிக்கு 'அவள்' துணிமணிகளை காயப்போடவும் அந்தக் காலத்து மகாராணிபோல் மொட்டைமாடித் தேரில் நின்று அக்கம்பக்கம் பார்ப்பதற்காகவும் பொழுதுக்கு இருபது தடவையாவது வருகிறாள். இவளை இந்த காகங்கள் ஏறிட்டுப் பார்ப்பதில்லை. நான், அருட்பெருஞ்ஜோதி கேசட்டுகளை போடும் டேப்ரிகார்டரில், நான் இல்லாத சமயத்தில் 'காதலா காதலா' வகையறாப் பாடல்களை போட்டு ரசிக்கும் என் மகனையோ, பாடப்புத்தகத்தைப் படிப்பதாக பேர் பண்ணிக்கொண்டு, மொட்டை மாடியை

சுற்றிச்சுற்றி வரும் என் மகளையோ, இந்த இரண்டு காகங்களும் சிநேகிதமாய்த்தான் பார்க்கின்றன. இவர்களையாவது தெரிந்த முகங்கள் என்று, அவை நட்பு பாராட்டுவ்தாக வைத்துக் கொள்ளலாம். ஆனால், முன் பின் முகமறியாத என் மைத்துனன் ஊரில் இருந்து வந்திருக்கிறான். வயிறு முன்னோக்கியும், கால்கள் பின்னோக்கியும் போனவன். கழுகை நவீனமாக வரைந்து அதற்கு 'முத்து' என்று பெயரிடலாம். அந்தமுத்து இந்த மாடிக்கு பல தடவை வருகிறான்; போகிறான். அவனையும் இந்த காகங்கள் கண்டு கொள்வதில்லை. குறைந்த பட்சம், ஒரு கத்துக்கத்தி எச்சரிக்கைக்கூட விடுப்பதில்லை. அப்படியானால் இந்த காக்காக்களுக்கு இளைத்துப் போன கோழிக்குஞ்சு நான் மட்டுந்தானா....?

காக்காக்களுக்கு மட்டுமல்ல..... இந்த காக்கா மூலமாய் குடும்பத்திற்கும் இளைத்துப் போய்விட்டேன். 'நீங்க கறுப்பா இருக்கிகளா.... போதாக்குறைக்கு இரண்டு கைகளையும் வளைத்து இடுப்புல கொசுவத்த சொருகுகிறமாதிரி சொருகுகிறீகளா அதனால, உங்கள, குஞ்சுகள பிடித்துத் தின்ன வந்த ராட்சச பறவையா நம்ம வீட்டு காகங்க நினைக்குதுங்க' என்று 'அவள்' கைதட்டிச் சிரிக்கிறாள். அது என்ன நம்ம வீட்டுக் காகங்கள்? என் மகன் என்னடாவேன்றால், அவன் தொலைக்காட்சியில் ஆட்டம் போடுவதற்கு ஆடையலங்காரம் செய்ய பணம் கொடுக்காததை மனதில் வைத்துக் கொண்டு, 'காக்கா இருக்கிறத பகிர்ந்து கொள்ளும் பறவை. அதுக்கு கஞ்சர்களை பிடிக்காது' என்கிறான். நல்ல வேளை.... இர் போட்டுப் பேசினானே. இவன் கிடக்கட்டும்.... என் மைத்துனன் ஊருக்குப் போனதும் 'என்னோட ஆபீஸர் அத்தானை காக்காய்ங்க காலால அடிச்சு வாயால கொத்துதுக' என்று எதுகை மோனையாய் பிரச்சாரம் செய்யப்போகிறான். இந்த விளையாட்டுப் பேச்சு, என் மகளுக்காக நான் மேற்கொண்டிருக்கும் மாப்பிள்ளை வேட்டைக்கு குந்தகமாயிடும். காக்கா அடிப்பது

சனீஸ்வரன் அடிப்பது மாதிரியாம்.... எந்தவீட்டில் பெண் எடுத்தாலும் எடுக்கலாம்.... ஏழரைநாட்டுச் சனி பிடித்த வீட்டில் எடுக்கக் கூடாது என்று மாப்பிள்ளை வீட்டார் அடம்பிடிக்கப் போகிறார்கள்.

இப்படிப்பட்ட, இக்கட்டான சிக்கலில் இந்த காகங்கள் என்னை ஏன் சிக்க வைக்கின்றன? இவ்வளவுக்கும் நான் மென்மையானவன். கலகலப்பாக பேசுகிறவனே தவிர, காரியவாதி அல்ல. இப்பேர்ப்பட்ட என்னை, இவை ஏன் அப்படித் தாக்குகின்றன? என் மனைவியை, ஒரு குட்டு குட்டிவிட்டு, என்னை ஒன்பது தடவை குட்டியிருந்தாலும், அந்த மகிழ்ச்சியில் இந்த துக்கத்தை கரைத்திருப்பேன். ஆனால் என்னை மட்டுமே தனிப்படுத்தி குட்டுகின்றன. குடைகின்றன.

இன்றைக்கோ, இந்தத் தாக்குதல் உச்சத்திற்கு போய்விட்டது. கடந்த இரண்டு நாட்களாக வெளியூரில் திரிந்து விட்டு, நேற்றிரவு, பன்னிரெண்டு மணிக்குத்தான் வீடு திரும்பினேன். இந்த மாடியறையில் பேண்ட் சட்டையோடு தூங்கிப்போனேன். ஆனாலும் காலையில் ஆறுமணிக் கெல்லாம் எழுந்து, அறையில் இருந்து வெளிப்பட்டேன். இந்த காக்கைகளின் நினைவே இல்லாமல், முதல் மாடியிலுள்ள குடும்பத்தாருடன் காபி சாட்சியாய் சங்கமிக்க மொட்டை மாடித் தளத்தில் ஐந்தாறு எட்டுக்கள் போட்டிருப்பேன். அப்போது -

திடீரென்று தலைக்கு மேல் கால் முளைத்த கரிக்கட்டை ஒன்று எங்கிருந்தோ ஏவுகணையாய் பாய்வதுபோல் தோன்றுகிறது. நான் தற்காப்பாக, கரங்களை தலைக்கு கவசமாக்குவதற்கு முன்பாகவே, உச்சந்தலை பிய்த்தெடுக்கப்பட்டது போன்ற வலி.... இரண்டு நகக்கால்கள், தலையை உழுது, ரத்தக்கோடுகளால் வரப்பு கட்டியது போன்ற பிராண வலி.... வலது கையை தூக்கி தலைக்குள் விரல் விட்டு துழாவி, வெளியே எடுத்தால் ஆள்காட்டி விரலில் சிவப்புக் கசிவு.... நான்

கோபங்கோபமாய் நிமிர்ந்து பார்த்தேன். எதிர் வீட்டு மண்தளத்தில் முளைத்து, இந்த மாடிக்குள் எட்டிப் பார்க்கும் மாமரக்கிளையின் ஒரு கொப்பில், அப்பா காக்காவோ, அம்மா காக்காவோ ஆடியும் ஆட்டுவித்தும் என்னை ஓரம் கட்டி பார்க்கிறது. இன்னொன்றோ, என் வீட்டுத் தென்னைமர உச்சியில், அம்பாய் வளைந்த ஒரு ஓலையை இரண்டாய் வகிடெடுக்கும் மஞ்சள் மட்டையில் கால்களை இடுக்கிபடியே 'இந்த குட்டுப் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா' என்கிற பாணியில் பார்க்கிறது. நான் அதிர்ச்சியுற்று நிற்கிறேன். அந்தத் தென்னையை நெருங்காமல், மாடிப்படிகளிடம் போக முடியாது.

வெட்கத்தை விட்டுச் சொல்வதென்றால், நான் ஒரே ஓட்டமாய் ஓடி, மாடிச் சுவர் முகப்பிற்கு மகுடம் போலான கம்பிச்சுருள் விளக்கில் கைபதித்து, கீழே ஒரே தாவாய்த் தாவினேன். அதற்குள் இன்னொரு அடி... நெத்தியடி என்பார்களே.... நிசமாவே அதுதான்.

நடந்ததையும் - இப்படி நடக்கப்போவதையும் காக்காமயமான என் சிந்தனையில் திணித்தபடியே, நான் நடந்து கொண்டே போனேன். பழைய மாம்மல்லபுரச் சாலைக்கு வந்து விட்டேன். அந்தச் சாலையின் ஒரு பக்கம் வெட்டிப்போட்ட பள்ளங்களும், கொட்டிப்போட்ட மேடுகளும், பொதுப் பணித்துறையின் கூடாரங்களுமாய் ஒரு பாலைவனம் ஏற்பட்டிருந்தது.

மறுபக்கமோ, பச்சை முக்காடு போட்ட அசோக மரங்களும் இருபக்கமும் கிளைகளை வில்லாய் வளைத்துப் பிடித்த வாகை மரங்களும், நாகலிங்க பூக்களை உதிர்க்கும் மரங்களுமாய் சாலை பசுஞ்சோலையாய் திகழ்ந்தது: இவற்றின் நிழல் குடையில் நடந்து ஒரு வளைவிற்கு வந்தேன். அதன் ஓரத்தில் ஒரு வேப்ப மரம்.... சாலை ம்றியல் செய்யப்போவது போன்ற தாவரக் குண்டன். இதன் உச்சியில் கவுணாய் வளைந்த இரட்டைக் கிளையின் மூலக்

குகையில் ஒரு கூடு. ஏழை வீட்டு குச்சி வீடு மாதிரி.... இதன் ஒரு கிளையின் உச்சியில் ஒரு காகம் பரமசாதுவாய் கால் கவ்வி கிடந்தது. எப்படியோ என்னை பார்த்து விட்டது. நானும் அதைப் பார்த்து விட்டேன். அது எப்படி எழுந்ததோ..... எம்பிப் பறந்ததோ... தெரியாது.... என் தலையில் இரும்புக் கம்பியான அதன் கால்கள் தடம் பதித்தன. அடித்தது வலிக்கும் முன்பே, அந்தக் காகம் எப்படிப் பறந்தது என்பதும் தெரியவில்லை. ஏறிட்டுப் பார்த்தால் ஒரு டெலிபோன் கம்பத்தில் குந்தியபடியே மீண்டும் என்னை குறிபார்க்கிறது.

என் ஆச்சரியம், அதிர்ச்சியானது. வீட்டுக் காகங்களாவது என்னை தாக்குவதில் ஒரு நியாயம் இருக்கலாம். இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த காக்கா தாக்குவது அசல் அநியாயம். அதோ ஒருத்தர் கைகளை வீசிப்போட்டு நடக்கிறார். எதிர்ப்படும் சைக்கிளுக்கு எந்தப் பக்கம் வழிவிடுவது என்று புரியாமல், பழுத்துப்போன ஒரு மூதாட்டி அசல் பெண்குவின் பறவை போல் காலாட்டி கையாட்டி தள்ளாடித் தள்ளாடி நடக்கிறாள். ஒரு வாலிபன், அந்த வேப்பமரத் தூணில் முதுகைச் சாய்த்து, இருபக்கக் கிளைகளிலும் கை விரித்து சிலுவையில் அறையப்பட்டவன் போல், யாருக்கோ, எவளுக்கோ வழிமேல் விழிபோட்டுக் சாய்ந்து கிடக்கிறான். கட்டிடத் தொழிலாளர்கள் சரம்சரமாய் போகிறார்கள். வீட்டுக்கார ,வேலைப்பெண்கள், ஐந்தாறு காக்கா குஞ்சுகளை உள்வாங்கும் தூக்குப் பைகளோடு போகிறார்கள்.... வருகிறார்கள்.

அந்த வேம்பின் அடிவாரத்தில் நிறுத்தப்பட்ட ஒரு டிரக்கு வண்டியில் காக்கி டவுசர் போட்ட ஒரு நடுத்தர வயது ஆசாமி, ஒருச்சாய்த்து படுத்திருக்கிறார். இந்த காகத்திற்கு இவர்கள் எதிரியாகத் தெரியவில்லை. நான் மட்டுந்தான் இதற்கு எதிரியாம். ஒருவேளை, இது, என்

வீட்டுக் காகமாக இருக்குமோ. அங்குள்ள ஆண் காக்கா, இந்த காகத்தை சின்ன வீடாய் அல்லது கூடாய் வைத்திருக்குமோ.... அல்லது என் வீட்டுக் காகங்கள், இந்த சுற்று வட்டார காக்கைச் சமூகத்திடம் நான் பொல்லாதவன் என்று பொய்ப் பிரச்சாரம் செய்திருக்குமோ....

என் பித்துக்குளித்தனத்தை நம்ப வேண்டும். குறைந்,தது அரைமணி நேரமாவது, அந்த வளைவு பகுதியில் அங்குமிங்குமாய் போக்கு காட்டி நின்றேன். எந்த வழிப்போக்கரையாவது அந்தக் காகம், என்னைக் குட்டியது மாதிரி ஒரு குட்டுக் குட்டியிருந்தால், நான் மகிழ்ந்து போயிருப்பேன். அரைமணி கடந்து முக்கால் மணி யானாலும், நான் நினைத்தது நடக்க வில்லை. ஒருவேளை இந்தக் காகம், என்னை ஆள் மாறாட்டமாக அடித்திருக்கும் என்றும் நினைத்தேன். அந்த நினைப்பை நிரூபிப்பதற்காக, அந்த வேப்ப மரத்திற்கு முன்னாலும் பின்னாலும் நடந்து நடந்து, வட்டமிட்டேன். வட்டமிட்டு வட்டமிட்டு நடந்தேன். 'போகும்போது எதுவும் நேரவில்லையென்று திருப்தியோடு திரும்பும் போது, த்லையில் இரண்டு நகக்கால்கள் இறங்குகின்றன. ஊசியை உச்சத்தலையில் பாய்ச்சியது போன்ற வலி.

என்றாலும், நான் மாறி மாறி நடக்கிறேன். அந்தக் காகமும் மாறிமாறி தாவித்தாவி அடிக்கிறது. எனக்கும் அதற்கும் ஒரு வைராக்கியப்போட்டி நடக்கிறது. இதில் எனக்கு, ஒருகால் வெட்டு..... ஒரு நகக்கீறல்... ஒரு இறக்கை அடி..... இறுதியில் இந்த மூன்றும் சேர்ந்த மூர்க்கத்தனமான தாக்குதல் கூட்டம் வேடிக்கையாய் திரளப்போன சமயம். போதாக்குறைக்கு டிரக் வண்டியில் படுத்துக் கிடந்த டவுசர்க்காரரர் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். அவர் சிரித்த சிரிப்பில் நான் பறவை விரோதி மட்டுமல்ல.... ஒரு சமூக விரோதி என்பதுமாதிரியான தோரணை.

நான் தோல்வியை ஒப்புக் கொண்டு, சிறுமைப்பட்டு, என்னை நானே தாழ்ந்து நோக்கி, வேறு வழியில் திரும்பி நடந்தேன். எந்தக்காக்கையும் அடித்தால் அடிக்கட்டும்

என்பதுபோல், தலையை நிராயுதபாணியாக வைத்தபடியே, கையொடுங்கி காலொடுங்கி நடக்கிறேன். காகங்களின் புறத் தாக்குதலை விட, அகத் தாக்குதலே அதிகமாய் வலித்தது. நானும் மனிதனே. எந்த உயிரையும் இம்சிக்காத சராசரிக்கும் மேலான மனிதன். ஒருத்தர், வயிற்றை, பிறஉயிர்களுக்கு சுடுகாடாய் ஆக்கக் கூடாது என்ற உயிர்த்திரள் பேணும் தாவர சங்கம நேயத்தால் வள்ளலார் பக்கம் வந்தவன். அவர் விரித்த கடையின் சேவகன். உயிர் உணவான அசைவ உணவை விட்டவன். இப்படிப்பட்ட நானா இந்த காகங்களுக்கு வில்லன்?

நான், வழிமாறி நடந்தாலும், அந்தப் பக்கமும் கடைகண்ணிகள். கண்ணாடி குவளைகளுக்குள் நீருற்றுப் போல் எழும் பல்வேறு பழரச பாய்ச்சல் கடை... கண்ணாடி மாடங்களில் கண்சிமிட்டும் மிட்டாய் கடை.... தள்ளுவண்டியில் மினுங்கும் விதவிமான பழங்கள்... தெருவோர புத்தகக் கடை... கானாப் பாடல்களை ஒலிக்க வைக்கும் கேசட் கடை... திருமண மண்டபம் அதன் இருபக்கமும் பூக்கடைகள்... மண் பிள்ளையாருக்கு ஜிகினா ஆபரணங்களை ஒட்டும் பெண்ணுக்கு மத்தியில் மண்டிக் கிடக்கும் பிள்ளையார் சிலைகள்... இவற்றிற்கு ஊடாக நடக்கிறேன். ஒரு பலசரக்குக் கடையில், பொரிகடலைப் பொட்டலம் தென்படுகிறது. உடனே, என் மனதில் ஒரு பொறி. இந்த கடலைகளை வீசி, என் வீட்டுக் காகங்களை கவர வேண்டும். நான் அவற்றின் நண்பன் என்பதற்கு, இந்த உணவுப் பொட்டலம் சாட்சியாக வேண்டும். அந்தக் காகங்கள் என்னுடன் நட்பு பாராட்டுவதை பார்த்ததும் கைதட்டிச் சிரித்த 'அவள்' மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டும்.

நான் புத்துயிர் பெற்றவனாய் நடக்கிறேன். சிறுமை பெருமையாகிறது. அசம்பாவிதப் பயம் பெருமித கம்பீரமாகிறது. 'கா... கா... காக்கா அண்ணாவே நீங்கள்' என்று கலைஞரின் பராசக்திப் பாடலை முணு முணுத்தபடியே, வீட்டுப்படிகளில் ஏறி முதல் மாடிக்கு

முதுகு காட்டி, மொட்டை மாடிக்குத் தாவுகிறேன். நின்ற இடத்திலேயே நின்று சுற்று முற்றும் பார்க்கிறேன். வீட்டுக் காகங்கள், என்னை அடையாளம் கண்டதுபோல், காததிர கத்தியபடியே பறந்தோடி வருகின்றன. பகைப் பார்வையாய் பார்க்கின்றன. நானோ, அவற்றின் அறியாமைக்காக சிரித்தபடியே, கடலைப் பொட்டலத்தைப் பிரித்து உள்ளே இருந்ததை குவியல் குவியலாய் தரையில் போடுகிறேன். காகங்கள் நிதானப்படுகின்றன. நான் நிற்கும் வரை கடலைகளை நெருங்காது என்ற அனுமானத்திலும், காக்காபிமானத்தில் வெற்றி பெற்ற பெருமிதத்திலும், எனது அறையை நோக்கி நடந்தபோது-

திடீரென்று, தலை, சுழல்கிறது. முடிக்கற்றையால் கபாலம் இழுபட்டு மூளை பிசிங்கியதுபோன்ற பிரமை நிமிர்ந்து பார்க்கிறேன். முன்பெல்லாம் ஒரு கா்கம் தாக்கும் இன்னொன்று வேடிக்கைப் பார்க்கும் இப்போதோ, அந்த இரண்டும் ஒருசேர்ந்து, மீண்டும் தாக்கப்போவதுபோல், என் தலையைச்சுற்றிப் பறக்கின்றன. தலையில் ஒரு குட்டு.... பிடறியில் ஒரு கீறல்.... நான் தலையை நிமிர்த்தினேன். உடனடியாய் அதை குனித்துக் கொண்டேன். இல்லை என்றால், என் கண்கள் இரண்டும், அந்த காகங்களின் கால் இடுக்கிற்குள், சின்னஞ்சிறு முட்டைகளாக சிக்கியிருக்கும். ஒருவேளை இந்த காகங்கள் அவற்றை கொத்திக்கூட தின்றிருக்கலாம். நான் நிரந்தர குருடாகியிருக்கலாம். இன்றைக்கு கண்கள் தப்பிற்று. நாளைக்கு எப்படியோ.... ஒருநாள் போல் ஒருநாள் இருக்காது...

என் நினைப்பும் நடப்பும், என்னை உக்கிரப் படுத்துகின்றன. வக்கிரப்படுத்துகின்றன. என் நட்பு அதே பரிணாமத்தில் பகையாகிறது. சிரிப்பு, சினமாகிறது. பார்வைக் குளிர்ச்சியில் நெருப்பேறுகிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறேன். ஐந்தடி நீளமுள்ள ஒல்லிக் கம்பிகள் வரிசைப் படுத்தப்பட்டு கீழே கிடக்கின்றன. இந்த மாடியை கட்டியபின், மிச்ச மீதமான கம்பிகள். இவற்றில் ஒன்றை

எடுத்து, அந்தக் காகங்கள் வட்டமடிக்கும் திசையை நோக்கி ஓங்கினேன். ஓங்கி ஓங்கி அங்குமிங்குமாய் ஆடவிட்டேன். மேல்நோக்கியும், சாய்வாகவும், பக்க வாட்டிலும் சிலம்பு போல் சுற்றினேன். கோரதாண்டவமாய் அங்குமிங்குமாய் சுழன்றேன். ஒரு காகம், கம்பி முனையின் ஒரு சென்டி மீட்டர் இடைவெளியில் தப்பித்துக் கொண்டது. இப்போது அந்தக் காகங்களுக்கு பயம் பிடித்து விட்டது. அங்குமிங்குமாய் ஆகாயத்தில் சிதறிப்பறந்தன. குய்யோ முறையோ என்று கூச்சலிட்டன. கூட்டிற்கு மேலாய் பறப்பதும், அதை துறப்பதுமாய் வானில் சஞ்சரித்தன. அப்படியும், என் கோபம் தீரவில்லை. ஈட்டி பிடித்த வீரன்போல், அந்தக் கம்பியை தூக்கிப் பிடித்தபடி, அந்தத் தென்னை உராயும் விளிம்புச் சுவரைநோக்கி ஓடினேன். உள் மூச்சை வெளி மூச்சாக்காமலேயே, அந்தக் கம்பியை மேலே தூக்கி, அந்தக் கூடு இருக்கும் தென்னையின் உச்சியில் மாறிமாறி குத்தினேன். கள்ளாளி காகங்கள்தான். தென்னையில் அடிமுதல் நுனிவரை ஒன்றாய் குனிந்து, சில்லாடைகளால் சுற்றப்பட்ட இரண்டு ஓலைகளின் உட்குவியலில் கூட்டை வைத்திருக்க வேண்டும். கூடு தெரியவில்லை. அந்த உச்சியில் எங்கேயும் இல்லாததால் அது அங்கேதான் இருக்கும் என்ற அனுமானத்தில் கம்பியை நீட்டி, எக்கி எக்கி தென்னை உச்சியின் பக்கவாட்டுப் பகுதியில் இடித்தேன்.. குடைந்தேன்.... குத்தினேன்.

தென்னை ஓலைகளின் முதுகெலும்பான மட்டைகள் ஒடிந்து கம்பிக்கு வழிவிட்டன. சில்லாடைகள் சிதைந்தன. நீண்ட நெடிய மஞ்சள் துண்டாய் குறும்பல்களை சுமந்த அந்த தென்னையின் கற்பப் பைகளில் பல, துண்டுபட்டு துவண்டு விழுந்தன. வயது வராத தேங்காய்களுக்கு காவலாளிபோல் கொக்காய் வளைந்த சில்லாட்டைகள் சிதறிவிழுந்தன. ஆகமொத்தத்தில், நான் இடித்த இடியில், தென்னை மரமே குலுங்கியது. ஓலைகள் ஒன்றோடு ஒன்று

உரசி உரசி, சத்தமிட்டன. வீசிய வீச்சில் ஒரு சில ஓலைகள் இரண்டாய் மடிந்தன. குத்திய குத்தில் லேசான முனங்கல்கள்... காக்காய் குழந்தைகளோ என்னமோ... எதுவாகவும் இருந்து விட்டுப் போகட்டும். இந்த ரவுடிக் காகங்களை இன்றைக்கு இரண்டில் ஒன்று பார்த்தாக வேண்டும்.....

இதற்குள், இந்த காகத்தம்பதியின் அவலக் குரல்கேட்டு, அத்தனைக் காகங்களும், அந்த இடத்திற்கு மேலாய் குவிந்தன. ஆகாயமே கறுப்பு மயமானது. 'கா... கா...' என்று ஒவ்வொரு காவையும் தனிப்படுத்தி ஒலி யாக்கும் காகங்கள், இப்போது, அந்த தனித்துவத்தை காவு கொடுத்து, காக்காவாய்க் கத்தின... இறக்கைகளால் மாரடித்தன. அலகுவாய்களால் ஒப்பாரி இட்டன. சரணம் சரணம் என்பதுபோல் சாய்ந்து பறந்தன. கூலிக்கு மாரடிக்கும் சில காகங்கள், தத்தம் கூடுகளுக்கு திரும்பிப் பறந்து, அங்கே குஞ்சுகளுக்கு ஆபத்தில்லை என்று உணர்ந்து, மீண்டும் திரும்பி வருவதுபோல் ஆகாயத்தில் காக்கா போக்குவரத்து.... சின்னச்சின்ன கறுப்பு போர் விமானங்கள், பறப்பதுபோன்ற சூழல். சில காகங்கள், என் தலைக்கு குறிவைத்து பயமுறுத்தின. அந்தக் கம்பி நீண்டதும், பயந்து பறந்தன. நானும் விடவில்லை. காகங்களுக்கு இடையே ஒரு சுற்றும், தென்னையின் ஓலை முடி தலைக்குள் ஒரு சுற்றுமாய் மாறி மாறி, கம்பியோடு சுற்றினேன். அந்தக் கம்பி கரத்தின் தொடர்ச்சிப் போலவும், கரம் அந்தக் கம்பியின் அடிவாரம் போலவும் ஆகிப்போன வேளை. என் தலையை சுற்றிய காக்காக்களின் இருள் வட்டம் சிதைந்து கொண்டிருந்த நேரம். அந்தத் தென்னைமரம், தலையிழந்து, முண்டமாய் நிற்கப்போகிற கட்டம்...

ஒரு கரம், கம்பிபிடித்த என் கரத்தை பிடித்திழுக்கிறது. நான் உதறிய உதறலில் அந்த கரத்திற்குரிய உருவம் கீழே விழுந்து, என் கால்களை கட்டிப்பிடித்து

அந்தப் பிடியின் ஆதாரத்தாலேயே எழுந்து, குதிகாலில் நின்று, என் கையை பின்புறமாக வளைக்கிறது. பழக்கப்பட்ட கரம்தான். பஞ்சைப்போல் மென்மையான கரம், இப்போது இரும்புக் கரமாய் உடும்புப்பிடியாய் உருமாறாமலேயே குணமாறி பிடிக்கிறது.... 'அவள்'தான். கத்துகிறாள்.

'உங்களுக்கு என்ன பைத்தியமா? கூட்டுக்குள்ள இருக்குற குஞ்சுகளுக்கு ஆபத்து வந்துடுமோ என்கிற பயத்துலதான், காக்கா உங்கள பயமுறுத்துது. இது பிள்ளை விளையாட்டு.... குஞ்சுக பெருசாயிட்டா அப்புறம் அதுங்க யாரோ... நீங்க யாரோ. இப்படி அராஜகம் செய்தால், உங்களுக்கும் இந்த காக்காவுக்கும் என்ன வித்தியாசம்? அக்கம் பக்கம் ஆட்கள் எட்டிப் பார்க்கிறாங்க.... எல்லாரையும் விட்டுட்டு, உங்கள மட்டும் இந்தக் காக்காயிங்க அடிக்குதுன்னா... உங்கக்கிட்டயும் எதாவது கோளாறு இருக்கலாம். இத நினைச்சுப் பாருங்க. கார்க்கில் போர் வீரன்னு நினைப்பா?' பாவம்.... வாயில்லாப் பிராணிங்க. இதுங்களா உங்களுக்கு எதிரி? நல்ல கூத்து.

'அவள்', இன்னும் ஆத்திரம் அடங்காமல் என்னை வெறித்துப் பார்க்கிறாள். முப்பதாண்டு கால பெரிய புராண தாம்பத்திய வாழ்க்கையை, திருக்குறளாய் சொல்லி விட்டாள். அதாவது அவளுக்கும் நான் கோளாறு பிடித்தவன்.... ஒருவேளை ஜீவகாருண்யத்தில் அப்படிப் பேசியிருப்பாளோ? என்ன கோளாறு என்னிடத்தில்? நான் நல்லவன் அல்லவோ?

நான், அவளையும் அந்தக் காக்கைக் கணக்கில் சேர்த்துவிட்டு, கம்பியை கீழே எறிய வேண்டும் என்ற சுரணை கூட இல்லாமல் என் அறைக்குள், திரும்பினேன். ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். 'பேசாம இந்த காகம் நம்ம தென்னையில கூடு கட்டியிருக்கலாம்' என்று பெண்டாட்டியை தினமும் அடிக்கும் எதிர்வீட்டுக்காரன்

அதே பெண்டாட்டியிடம் அங்கலாய்ப்பது திறந்திருக்கும் ஜன்னல் வழியாக என் காதுகளில் ஏறுகிறது. அவள் சொன்னது மாதிரி கூட்டம் வேறு கூடியிருக்கிறது. அனைவரும் தெரிந்தவர்கள். அவர்களுக்கு என்னுள் உள்ள ஒரு கசடனை அடையாளப் படுத்திவிட்டேனோ, அப்படி என்ன நான் கசடன்? கசடனேதான்.

திடீரென்று ஞானோதயமோ.... எதோ ஒன்று சிந்தனையில் உதயமாகிறது. மனம் சிறுவயதுக்கு திரும்புகிறது. அப்போது எனக்கு எட்டுவயது இருக்கலாம். கிராமங்களில் சிறுவர்களோடு சிறுவனாய் திரிகிறேன். சிறுவர்களில் ஒரு பிரிவினர் பொன்வண்டுகளை தீப்பெட்டிக்குள் அடைத்து அவற்றிற்கு கொடுக்காப்புள்ளி இலைகளை வெட்டிப்போட்டு வளர்க்கப் பார்ப்பார்கள். காடுகளில் கிடைக்கும் பூணிக்குருவிகளையோ வால் குருவிகளையோ குஞ்சுநிலையில் பிடித்து, மூங்கில் கூடைகட்டி, அவற்றை ஆசையோடு வளர்ப்பார்கள். இன்னொரு பிரிவினர், ஓணான்களை சுருக்குக் கயிறுகளால் பிடித்து, தரையோடு தரையாய் இழுத்து அலைக்கழிப்பார்கள். காடு கழனிகளில், எலி வேட்டைக்குப் போவார்கள். மரங்களை உலுக்கி, கீழே விழும் அணில்களை, நாயிடம் விடுவார்கள். இந்த வகையில், நான் இரண்டாவது வகைச் சிறுவன்.

ஒரு தடவை, ஊர்க்கிணற்றை ஒட்டியிருந்த தென்னையில் ஏறி, காக்காய் முட்டைகளை எடுக்கப் போகிறேன். முட்டைகள் முற்றி குஞ்சுகளாகி, நான் உலுக்கிய உலுக்கலில் முப்பதடிக்குக் கீழே விழுந்து சிதைகின்றன. நான் அச்சச்சோ போட்டபடியே கீழே இறங்கப் போகிறேன். உடனே, இரண்டு காகங்கள் குற்றுயிரும், குலை உயிருமாய் கிடக்கும் குஞ்சுகளுக்கு இடையே தவித்தபோது, ஊர்க்காகங்கள் அத்தனையும் ஒன்று திரண்டு, என்னை கொத்துகின்றன. தலையில் அடிக்கின்றன. மாறி மாறி தாக்குகின்றன. எனக்கும் கோபம்


வருகிறது. ஒரு கையை மரத்தில் சுற்றியபடியே, இன்னொரு கையால் கிட்டே வரும் காகங்களை அடிக்கப் போகிறேன். கைகளை மாற்றி மாற்றி அவைகளை நோக்கி வீசுகிறேன். விரல்களே ஆயுதங்களாய் கூர்மைப்படுகின்றன. ஒரு காலைச்சுற்றி வைத்துக் கொண்டு மறுகாலை தூக்கி அங்குமிங்குமாய் ஆட்டுகிறேன். இந்த வீச்சில் கீழே கூட விழுந்திருப்பேன். அதுவரை, 'இவனுக்கு வேணும் என்று சத்தமிட்ட தாய்க்குலம், தோண்டிக் கயிறுகளை வீசிவீசி, அந்தக் காகங்களை துரத்தி, என்னை காப்பாற்றுகிறார்கள்.

நான், இப்போது என்னையே பரிசீலனை செய்கிறேன். என்னுள்ளே, எனக்குத் தெரியாமலேயே ஒரு குண்டனோ, முரடனோ, மூர்க்கனோ, பிறநலம் பேணாத கசடனோ, இருக்கிறான். அவனை என்னாலும் அடையாளம் காணமுடியவில்லை. ஆனால் இந்த காகங்கள் எப்படியோ அடையாளம் கண்டிருக்கலாம். உயர் கல்வியாலும், பரந்து விரிந்த அனுபவத்தாலும், பண்பட்டது போன்ற பழக்க வழக்கத்தாலும், வயது முதிர்ச்சியாலும், திரைபோடப்பட்ட என்னுள் ஒளிந்திருக்கும் அந்தப் பொல்லாத கசடன், சிறிது நேரத்திற்கு முன்பு வெளிப் பட்டது போல், எப்போது வேண்டுமானாலும், வெளிப் படலாமோ.... அப்படி வெளிப்பட்டு நல்லானாய் நடிக்கும் என்னை சுற்றுமுற்றும் பொல்லானாய் காட்டலாமோ... இவனை எப்படி வெளியேற்றுவது?

நானும், மனமும் ஒன்றாகி, அந்த ஒன்று, ஓரணு உயிராய், பல்மிருகமாய், மக்கள் வெள்ளமாய், பூவாய், பூச்சாய், புழுவாய், மரமாய், கொடியாய், மலையாய், அனந்தங்கோடி பேரண்டங்களாய் பரந்து விரிந்த பிரபஞ்ச சங்கமத்திடம் ஒன்றுவது, ஒரு தீர்வாக இருக்கலாமோ?

ஓம்சக்தி–தீபாவளி மலர், 1999

ஆகாயமும் பூமியுமாய்... என்ற இந்த சிறுகதைத் தொகுப்பு முன்னைய தொகுப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இது ஒரு ஆன்மீகத் தேடல் முயற்சி. அதேசமயம், இந்தத் தொகுப்பு ஒரு முற்போக்கான முயற்சியா என்று என்னை வழிப்படுத்த வேண்டியது, முப்பதாண்டு காலமாக, இலக்கியத்தில் என்னை நிலை நிறுத்தி வரும் வாசகத் தோழர்களின் பொறுப்பாகும்.



என்னுடைய அறுபதுகளின் கல்லூரிக் காலத்தில், கவிஞர் கண்ணதாசனின் பத்திரிகையில் இப்படி எழுதிய கவிதையின் உரை விளக்கமே இந்தத் தொகுப்பு.

**பிறப்பாம் அன்னையவள்**
**பிள்ளையினை முத்தமிட**
**இறப்பாம் தந்தையவன்**
**என்பிள்ளை என்றுரைக்க**
**கடவுள் இது கண்டு**
**கால உருக்கொண்டு**
**இடத்தே கிடந்தபிள்ளை**
**இருவருக்கும் சொந்தமென்றான்.**

**இறப்பும் அத்தீர்ப்பால்**
**இப்படி வந்துவிடும்**
**மீதமின்றி எடுப்பதில்லை**
**மீதி என்ற பேச்சில்லை**
**சமமாய் வருவதில்லை**
**சமத்துவத்தை மறப்பதில்லை**
**தன்னை நினைப்போர்க்கு**
**தன்னை நினைப்பூட்டும்.**

**- சு. சமுத்திரம்**